

முத்துலட்சுமி ராகவன்

# எண்ணியிருந்தது ஈடேற...

முதல் பாகம்

# முத்துலட்சுமி ராகவன்

## எழுதிய

# எண்ணியிருந்தது ஈடேற...

## முதல் பாகம்



லட்சுமி பாலாஜி பதிப்பகம்

68/37, ஸ்ரீராம் பேட்டை தெரு,

சி.ஐ.டி நகர், தி.நகர்,

சென்னை - 600 035

அழைக்க : 95669 42486

மின்னஞ்சல் :bchandar24@yahoo.com

Website : www.muthulakshmiraghavan.com

# நூல் விவரப் பட்டியல்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | எண்ணியிருந்தது ஈடேற... 1 |
| நூலாசிரியர் | : | முத்துலட்சுமி ராகவன் |
| நூல் உரிமை | : | எழுத்தாளருக்கு |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | : | முதற் பதிப்பு, ஜனவரி 2017 |
| தாள் | : | 11.6 Kg புக் பிரிண்ட் |
| நூல் அளவு | : | 1 X 8 கிரவுன் |
| பக்கங்கள் | : | 400 |
| விலை | : | ரூபாய் 200.00 |
| பதிப்பகம் | : | லட்சுமி பாலாஜி பதிப்பகம்<br>68/37, ஸ்ரீராம் பேட்டை தெரு,<br>சி.ஐ.டி நகர், தி.நகர்,<br>சென்னை - 600 035<br>செல் : 95669 42486 |

# முக்கிய அறிவிப்பு

இந்தக் கதை எனது சொந்தக் கற்பனையில் உருவானது. இதன் பதிப்பிற்கான உரிமையை லட்சுமி பாலாஜி பதிப்பகத்திற்கு மட்டுமே தந்திருக்கிறேன்.

இதைத் தழுவி தொலைக்காட்சி தொடர்களையோ. திரைப் படத்தையோ எடுத்தாலும் இணையதளத்தில் என் அனுமதியின்றி வெளியிட்டாலும் நான் சட்ட பூர்வமான நடவடிக்கையை மேற்கொள்வேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

*இப்படிக்கு*

*முத்துலட்சுமி ராகவன்*

# ஆசிரியர் கடிதம்

**எ**ன் பிரியத்துக்குரிய வாசக... வாசகிகளே...!

'Love and Love Only'

எட்டுபாக நாவலை ஆரம்பிக்கும் முன்பு நான் தீர்மானித்த விஷயம் இதுதான்.. இந்த எட்டு பாக நாவலையும் ஆக்ரமிக்கப் போவது காதல் மற்றும் காதலின் தொடர்பான ஊடல், கூடல், மோதல், சேர்தல் மட்டும்தான்.. அந்த முடிவோடுதான் இரண்டு வரிக் கதைக் கருவை அமைத்தேன்.. என் மனதில் அதை எடுத்தேன்.. எழுத ஆரம்பித்திருக்கிறேன்.. எட்டு பாக நாவலாக அது விரிந்து ஓடும்..

இந்தக் கதையில் காதல் மட்டும்தான்.. காதலைத் தவிர வேறு இல்லை.. ஆங்காங்கே ஒருங்கிணையும் சம்பவங்களும் பாத்திரங்களும் கதையின் போக்கில் செண்டிமெண்ட்களை அள்ளித் தெளித்தாலும் ரொமான்ஸ் மட்டுமே முதன்மையாக நிற்கும்.

ஏன் இப்படி என்று கேட்டால் அது அப்படித்தான் என்பதே என் பதிலாக இருக்கும்.. ஒன்பது பாக நாவலை உணர்ச்சி

மயமான குடும்ப செண்டிமெண்டுடன் சொல்ல இருக்கிறேன்.. பத்து பாக நாவலைப் பற்றியும் அதற்கடுத்து கொடுக்கப் போகும் இருபது பாக நாவலைப் பற்றியும் அந்தத் தருணத்தில்தான் யோசிக்க வேண்டும்..

ஆதலினால்.. காதல் சொல்லும் எட்டு பாக கதையை என் வாசக, வாசகியர்க்கு கொடுத்து விட எண்ணம் கொண்டதில் பிறந்ததுதான் இந்த முழுநீளக் காதல் கதை..!

எண்ணியிருப்பதை ஈடேற்றும் கதைக்களமாக நம் இந்தியத் திருநாட்டின் கேரள மண்ணைத் தேர்ந்தெடுத்திருக்கிறேன்.. பச்சைப் பசேலென்ற தேயிலைப் பாத்திக்களின் நடுவே இயற்கையுடன் கலந்து வாழும் கேரளத்து மக்களிடையே ஒளிந்து கொள்ள ஓடிக் கொண்டிருக்கிறாள் நம் கதையின் நாயகி நந்தினி..!

சேர நாட்டின் ரவிவர்மனின் குலத் தோன்றல்களில் ஒரு தோன்றலில் வம்சா வழியில் வந்தவனாய்... ரவிவர்மனின் அனைத்து குணாதிசியங்களையும் தன்னிடத்தில் கொண்டவனாய்.. கண்டிப்பும் கறாருமான ரவிச்சந்திரன் நம் கதையின் நாயகனாய் நந்தினிக்கு அடைக்கலம் கொடுத்து அழைத்துச் சென்று கொண்டிருக்கிறான்..

இவர்கள் இருவரும் பயணிக்கும் மங்களூர் எக்ஸ்பிரஸ் சென்னையிலிருந்து கிளம்பி கேரளாவின் ‘கோழிக் கோடு’ நகரத்திற்கு சென்று கொண்டிருக்கிறது.. இந்தப் பாகம் முழுவதும் மங்களூர் எக்ஸ்பிரஸ்ஸில் அவர்கள் பயணிக்கும் கதை மட்டுமே இருக்கும்.. கோழிக்கோடில் இறங்கிய பின்பு அடுத்து அவர்கள் செல்லப் போகும் இடங்களையும், நடக்கப்போகும் சம்பவங்களையும் மற்ற பாகங்கள் விவரிக்கும்..

இது எனது 140வது கதை.. 160வது கதையாக ஒன்பது பாக நாகவல் 180 வது கதையாக பத்து பாக நாவல்...

எனது 200 வது கதை இருபது பாக நாவலாக வெளி வரும்.. இதற்கு இறைவனின் ஆசிர்வாதத்தை வேண்டி நிற்கிறேன்.. உத்தேசம் என்னிடம் இருக்கலாம்.. அதற்கான உடல்நலத்தை அருளும் வரம் இறைவனிடம் இருக்கிறது..

இறைவன் வரம் கொடுத்து எனது 200 -வது கதையை 20 பாக நாவலாக எழுதி விட்டால் போதும்.. சொன்னதைச் செய்து விட்டேன் என்ற ஆத்மதிருப்தி எனக்குள் வியாபிக்கும்..

எனது இறுதி மூச்சில் அந்த ஆத்ம திருப்தி நிலைத்திருக்க ஆண்டவன் அருள் புரிய வேண்டும்.

இப்போது எனது 140 நாவல்களில் பாக நாவல்களை மட்டும்

வரிசைப் படுத்திக் கொடுக்கிறேன்..

1. தீயாக உனைக் கண்டேன் - அதிக பக்கங்களுடன் கூடிய ஒரு பாக நாவல்

2. போர்க்களத்தில் ஓர் பூவிதயம் - இரண்டு பாக நாவல்

3. என்னவென்று நான் சொல்ல - மூன்று பாக நாவல்

4. மைவிழியே! மயக்கமென்ன..? - நான்கு பாக நாவல்

5. அம்மம்மா.. கேளடி தோழி..! - ஐந்து பாக நாவல்

6. எங்கிருந்தோ ஆசைகள் - ஆறு பாக நாவல்

7. ஏழு ஸ்வரங்கள்..! - ஏழு பாக நாவல்

8. எண்ணியிருந்துத ஈடேற - தற்போது எழுத ஆரம்பித்திருக்கும் எட்டுபாக நாவல்

தீயாக உனைக் கண்டேன் நாவல் மொரிஷியஸ் தீவை கதைக் களமாக கொண்டது.. சஸ்பென்ஸ், காதல் இரண்டும் கலந்த நாவல்..

எனது இரண்டாவது கதையான ‘போர்க்களத்தில் ஓர் பூவிதயம்’ பெயருக்கேற்றதைப் போல தீவிரவாதி ஒருவனைத் தெரியாமல் காதலித்து விட்ட மென்மையான பெண்ணைப் பற்றியது.. இது ஒரு த்ரில்லர் ஸ்டோரி..

‘என்னவென்று நான் சொல்ல..?’ மூன்று பாக நாவலாக வெளிவந்தது.. எனது ‘நட்சத்திரக் கதை’ இது என்று சொல்லலாம்.. இப்போது கையில் எடுத்திருக்கும் ‘லவ் அண்ட் லவ் ஒன்லி’ என்ற ஃபார்முலாவைத்தான் அப்போதும் கையில் எடுத்தேன்.. அந்த நாவல் ‘சான்ஸே இல்லை..’ என என்னாலும் எனது வாசக, வாசிகியராலும் பாராட்டப்பட்ட ஒரு நாவல்.

‘மை விழியே மயக்கமென்ன..?’ கதையை நான்கு பாக நாவலாக அறிவித்த போது என்னவென்று நான் சொல்ல கதையின் தாக்கத்தை அக்கதையில் என் வாசக, வாசகியர் எதிர் பார்த்தார்கள்.. ஆனால் இக்கதை வேறு திசையில் பயணித்தது.. எதிர்பாரத திருப்பங்களுடன் கூடிய இக்கதையில் துப்பறியும் நாவல்களின் சாயல்கள் நிறைய உண்டு..

‘அம்மம்மா கேளடி தோழி..!’ கதை காதலுக்கு அடுத்து வரும் குடும்ப வாழ்வை மையமாகக் கொண்டது..

தாய்மையின் மன்னிப்பு.. மாமியாரின் அரவணைப்பு.. நாத்தனாரின் கோபம், அதற்கடுத்த தோழமை.. கணவனின் பாசம்.. சுற்றத்தாரின் பங்களிப்பு என அனைத்து அம்சங்களையும் தன்னகத்தே கொண்ட கதை..

‘எங்கிருந்தோ ஆசைகள்..’ எனது மதுரை மாநகரின் பெருமையை பறைசாற்றுவது.. மதுரையை கதைக் களமாக கொண்டது.. இதன் ஆறு அட்டைப் படங்களின் பின் பக்க அட்டைப் படங்களை மதுரை மாநகரின் கோவில்களும், நாயக்கர் மஹாலின் உள்புறத் தோற்றங்களும், அழகர் ஆற்றில் இறங்குவதும் அலங்கரித்தன.. இக்கதையை மண்ணின் மனத்தோடு ரசித்து எழுதினேன்..

‘ஏழு ஸ்வரங்கள்..’ கதையின் லெவலே வேறு.. முற்றிலுமாக இது வேறு ஒரு கேட்டகிரி.. இதற்காக நான் உருவாக்கி வைத்திருந்த கதை களவாடப்பட்டது.. அதைப் பற்றி விவரிக்க நான் விரும்பவில்லை.. ‘க க போ..’ என அனைத்தையும் கடக்க விரும்புகிறேன்.. விரல் நீட்டிக் குற்றம் சாட்டுவதை விட நீ என்னவோ செய்து கொள் என்று என் வழியில் பயணிக்கவே விரும்புகிறேன்.. ஏழு ஸ்வரங்கள் ‘சரிகமபதநி’ என்ற எழுத்துக்களை முதல் எழுத்துக்களாகக் கொண்டு..

‘சந்தம் தந்த சொந்தம்..’ - பல்லவர்

‘ரிதம் அற்ற ஸ்வரம்..’ - சோழர்

‘கடல் கடந்த வணிகம்..’ - பாண்டியர்

‘மனம் கண்ட வைரம்..’ - சேரர்

‘பதம் கொண்ட அறம்..’ - நாயக்கர் ஆட்சி, குமார கம்பண்ணா..

‘தனம் நிறைந்த பாரதம்..’ - ஆங்கிலேயர்

‘நிழல் ஆட்ட யுத்தம்..’ - நிகழ் காலம்

ஏழு தலைப்புக்களைக் கொண்ட கதைகளாக வெளிவந்தது.. ஏழு கதைகளும் தனித்துப் படித்தால் தனிக் கதை.. ஒன்றாக வரிசைப் படுத்திப் படித்தால் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்ட ஒரே கதை.. இதில் ஏழாவது ஸ்வரமான ‘நிழல் ஆட்ட யுத்தம்’ முதல் கதையிலிருந்து பயணித்தது.. காஞ்சியை கதைத் தளமாக கொண்ட இக்கதையை எழுதி முடித்து வெளியிட்ட பின்புதான் நான் காஞ்சிபுரத்திற்கு முதன் முதலாகப் போனேன்.. அதுவரை நான் காஞ்சிக்குப் போனதில்லை..

# எண்ணியிருந்தது ஈடேற... 1

ஏழு ஸ்வரங்கள் கதை என் வாழ்நாளின் சாதனை என்றே நான் நினைக்கிறேன்.. சரித்திரக் கதைகளை என் பாணியில் எழுதும் சவால் எனக்குப் பிடித்தமானதாக இருந்தது.. எனது இயல்பை மாறிப் பயணிக்கும் கதை வெற்றி பெறுமா இல்லையா என்று யோசிக்காமல் மலையுச்சியிலிருந்து தலைகீழாகப் பாய்வதைப் போன்றதொரு முடிவை எடுத்துத்தான்.. இக்கதையை படைத்தேன்.. இந்தக் கதைக்காக இரண்டு வருடங்களை நான் செலவளித்தேன் என்று சொன்னால் அது மிகையாகாது.. நிறைய விவரங்களை சேகரித்தேன்.. காஞ்சியின் ஆட்சியாளர்களின் ஆட்சிக் காலத்தை வரிசைப் படுத்திக் கதையை வகுத்தேன்.. முதல் இரண்டு ஸ்வரங்களின் கதைகளுக்கு ‘கல்கி’ அவர்களின் சிவகாமியின் சபதத்தையும்.. பொன்னியின் செல்வனையும் எடுத்துக் கொண்டு என் பாணியில் அவற்றை ஒரு பாக நாவலாக கொண்டு வந்தேன்..

என் வாசக வாசகியர் என்னை ஏமாற்றவில்லை.. ‘ஏழு ஸ்வரங்கள்’ வெற்றி பெற்றது.. இனியொரு கதையை இது போல கொடுக்கப் போவதில்லை.. நான் கொடுத்த கதைகளிலும் இனிக் கொடுக்கப் போகும் கதைகளிலும் இதற்கு ஈடு இணையில்லை..

இப்போதைய எட்டு பாக நாவல் காதலுடன் முகப்புக் கவிதைகளின்றி வெளி வரும்.. கவிதைகள் கூட காதலின் ஓட்டத்திற்கு இடையூறு செய்து விடக் கூடாது என்ற எண்ணமே காரணம்.. முதல் முதலாக எனது பாக நாவல்களில் முகப்புக் கவிதை வரிகளில்லாமல் வருகின்ற நாவல் இந்த ‘எண்ணியிருந்தது ஈடேற..’ நாவல்..

அடடே..! டிரெயினுக்கு டைம் ஆச்சு.. வாங்கப்பா.. நந்தினி, ரவிச்சந்தினோட நாமும் டிரெயினில் தொற்றிக்கலாம்.. தடக்.. தடக்.. தடக்....

**- நட்புடன்**

**முத்துலட்சுமி ராகவன்**

# அத்தியாயம் 1

**சா**லையிலிருந்து பார்த்தபோது தூரமாகத் தெரிந்த செஞ்சிக் கோட்டை நந்தினியை 'வா'வெனக் கண்சிமிட்டி அழைப்பதைப் போல இருந்தது.. சில நிகழ்வுகளும் காட்சிகளும் கண்முன் தோன்றுவது எதை நோக்கியோ நம்மை இழுத்துக் கொண்டு போவதைப் போல இருக்கும்.. செஞ்சிக் கோட்டையைச் சாலையில் இருந்து நந்தினி பார்த்தபோது அதைப் போலதான் தோன்றி வைத்தது..

சாலையில் ஆரம்பித்து மலையுச்சியில் இருந்த கோட்டையின் முடிவு வரை படிகளின் இருபக்கமும் கட்டப்பட்டிருந்த கோட்டைச் சுவர் வளைந்து நெளிந்து மலைப் பாதையை உணர்த்த முயன்று கொண்டிருந்தது..

அந்தக் கோட்டைச் சுவர் நந்தினியிடம் எதை உணர்த்த முனைகிறது..? தஞ்சையின் காவேரிக் கரையில் பிறந்து வளர்ந்தவளுக்கும் மலை நாட்டுக்கும் என்ன சம்பந்தமிருக்கப் போகிறது..? செஞ்சிக் கோட்டையின் மலைப்பாதை நந்தினி எதை உணர்ந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறது..?

"என்னடி அப்படிப் பார்க்கிற..?"

தோழியை சந்தேகத்துடன் பார்த்தபடி தோளைத் தட்டினாள் உத்ரா..

“ஒன்.. ஒன்.. ஒண்ணுமேயில்லையே..”

எனது தந்தை அலமாரிக்குள் இல்லை என்ற ரீதியில் கைகளை விரித்தாள் நந்தினி..

“நீ சும்மாயிருந்தாக்கூட நம்பியிருப்பேன்.. இப்படி ஆக்டிங் கொடுத்தா நம்பவே மாட்டேன்.. என்ன விஷயம்ன்னு சொல்லு..”

“அது வந்து உத்ரா.. அந்தக் கோட்டையிருக்கில்ல.. கோட்டை..”

“ஆமா.. இருக்கு.. ரொம்பக்காலமா.. நீயும், நானும்.. ஏன் நம்ம தாத்தா, பாட்டி பிறக்கிற காலத்துக்கு முன்னாடியிருந்தே இங்கேதான் இருக்கு.. அதைப்பத்தி உனக்கென்ன..?”

அவளுக்கென்ன என்று நந்தினிக்குச் சொல்லத் தெரியவில்லை.. அந்தக் கோட்டை என்னை ‘வா,வா’ என்று அழைக்கிறது என்று சொன்னால் அவ்வளவுதான்.. நீ கோட்டையைப் பார்த்துக் கொடியை நடவேண்டாம் என்று

சொல்லி கைப்பிடியாய் அவளுடைய வீட்டுக்கு அழைத்துப் போய் விடுவாள்..

அப்படி நடந்து விடக் கூடாது என்று வாய்க்கு இறுக்கமான தாழ்ப்பாளைப் போட்டு விட்டுப் படியேற ஆரம்பித்தாள் நந்தினி..

“நீ சரியாய் இல்லைடி.. என்கிட்டயிருந்து ஏதோ ஒண்ணை மறைக்கிறன்னு டவுட்டாவே இருக்கு..”

நந்தினியைத் தலை முதல் கால் வரை ஆராய்ச்சியாய் பார்த்தபடி புருவங்களைச் சுருக்கினாள் உத்ரா..

“வில் போல அழகா இருக்கிற புருவத்தை ஏண்டி படுத்தி எடுக்கிற..? அதான் ஒண்ணுமில்லேன்னு சொன்னேனில்ல..”

“ஏதோ இருக்குன்னு எனக்குத் தோணுதே..”

“உனக்குத் தோணறதுக்கெல்லாம் நான் பொறுப்பாக முடியாதுடி..”

உத்ராவின் கண்களை நேரடியாகப் பார்ப்பதைத் தவிர்த்து மலையுச்சியிலிருந்த கோட்டையைப் பார்த்தபடி படியேறினாள் நந்தினி.. தோழியின் மனதில் என்ன

இருக்கிறது என்று தெரியாமல் பற்பலவாறு யூகித்தபடி நொடிக்கொரு முறை தோழியை உற்றுப் பார்த்தாள் உத்ரா..

உத்ராவின் துளைக்கும் பார்வையில் சங்கடமுற்ற நந்தினி..

"ஏண்டி குரங்கே என்னைப் போய் சைட்டடிக்கிற..? சைட்டடிக்கனும்னு நினைச்சா அதோ முன்னால போறானே.. உன் கற்பனை ஹீரோவைப் போல உயரமா, மேன்லியா, ஹேண்ட்சம்மா இருந்து வைக்கிறானே.. அவனை சைட்டடி.." என்று கடுகடுத்தாள்..

அவள் சுட்டு விரலை நீட்டி அவர்களுக்கு முன்னால் படியேறிக் கொண்டிருந்தவனைக் காட்டிய அதே நேரத்தில் அந்த நெடியோன் திரும்பிப் பார்த்துத் தொலைத்தான்..

அவனைச் சுட்டிக் காட்டிக் கொண்டிருந்த நந்தினியைப் பார்த்தவன் வியப்புடன் புருவங்களை ஏனென்று கேட்கும் பாவனையில் உயர்த்தினான்..

பதறிப்போய் விரலை மடக்கிக் கொண்ட நந்தினி.. "உன்னால்தாண்டி அவன் என்கிட்ட சமிக்ஞை காட்டறான்.." என்று அதற்கும் உத்ராவைக் காரணம் காட்டி சண்டையிட்டாள்..

“நல்லாயிருக்கே கதை.. வழியோட போறவனை நீ கை காட்டினா அவன் என்னன்னு சமிக்ஞை காட்ட மாட்டானா..? உனக்கு அவனைச் சைட்டடிக்கனும்னு மனசுக்குள்ள ஆசையிருக்கு.. அதனால கை காட்டிட்டு பழியை என்மேல போடறியா..?” உத்ரா வரிந்து கட்டிக் கொண்டு பதிலுக்கு சண்டையிட்டாள்..

“என்னது..? அவனை சைட்டடிக்கனும்னு என் மனசுக்குள்ள ஆசையிருக்கா..? பட்டமாடி கட்டற..?”

நந்தினி நெஞ்சைப் பிடித்துக் கொண்டு அப்படியே நின்று விட்டாள்.. இருக்கும் பிரச்னைகள் போதாது என்று இது என்ன புது பிரச்னை..?

“ஆமாம்.. உன் மனசிலதான் ஆசையிருக்கு.. அதுக்கு இப்ப என்னாங்கிற..?” அலட்சியமாக உதட்டைச் சுழித்தாள் உத்ரா..

“இந்த அஷ்டகோண அழகு காட்டறதையெல்லாம் உன் அழகு அத்தான்கிட்ட வைத்துக்க.. என்கிட்ட வேண்டாம்.. மனசு போல மாப்பிள்ளை கிடைச்சிட்டத் திமிருடி உனக்கு..” பொருமினாள் நந்தினி..

“இப்படிக் கண் வைத்து வயிறெரியவா என் நிச்சயதார்த்தத்துக்கு கிளம்பி வந்த..? இது தெரியாம எனக்காக என் ஃபிரண்ட் தஞ்சாவூரில இருந்து வந்திட்டாளேங்கிற பகுமானத்தில நானிருக்கேன்.. நல்லாத்தாண்டி வாழ்த்த வந்திருக்க..”

“பகுமானம் எனக்கா இல்லை உனக்கா..? உன் நிச்சயதார்த்தத்தில கலந்துக்க வந்தவளைப் பார்த்து சைட்டடிக்க வந்தவன்னு கதை கட்டி விடறது யாராம்..? நீதானே..”

“இங்கே பாரு.. நானா எதையும் சொல்லலை.. நீதான் அவனைப் பார்த்து உ…யரமா, மே..ன்லியா.. ஹே…ண்ட் சம்ம்மா.. இருக்கிறான்னு சொன்ன.. மனசுக்குள்ள ரசிக்காமலா இப்படியெல்லாம் அவனை வர்ணிச்சிருப்ப..?”

உத்ரா உரக்கச் சொன்னாள்.. நந்தினி பதறிப் போய் முன்னால் சென்று கொண்டிருந்தவனைப் பார்த்தாள்.. வேகமாகப் படியேறிக் கொண்டிருந்தவன் நந்தினியின் விரல் சுட்டிக் காட்டலில் வேகம் குறைந்து இரண்டு படிகளுக்கு முன்னால் போய் கொண்டிருந்தான்.. தோழிகள் ரகசியம் பேசினாலே அவன் காதுகளில் விழுந்து வைக்கும்

அருகாமையில் உத்ரா உரக்கப் பேசினால் அவன் காதுகளில் விழுந்து வைக்காதா..?

‘கேட்டுட்டானா..?’ நந்தினி விரல்களை உதறினாள்.. ஒரு மார்க்கமாக நந்தினியை ஊடுறிவி அவன் பார்த்த பார்வை உத்ரா சொன்னதை அவன் கேட்டு விட்டான் என்பதை ஊர்ஜிதம் செய்தது..

‘அடப் போடா..’ என்று நொந்து போனாலும் அவன் பார்வையில் முகம் சிவந்து தொலைத்தாள் நந்தினி..

“இது வேறயா..?” விஷமாகக் கேட்டாள் உத்ரா..

“வாயை மூடிக்கிட்டுப் பேசாம வாடி.. எனக்கு வர்ற ஆத்திரத்தில படியில உருட்டி விட்டுட்டு எனக்கென்னன் தஞ்சாவூருக்குப் பஸ் பிடித்துப் போனாலும் போயிருவேன்..”

“அடிப்பாவி..! இப்பத்தான் நிச்சயதார்த்தம் முடிஞ்சிருக்கு.. கல்யாணத் தேதியைக் குறிச்சிட்டாங்க.. ஒரு மாசத்தில கல்யாணம்டி.. நான் கல்யாணப் பொண்ணுடி..”

“உன் பெருமையை விடவே மாட்டியே..”

“ஃபர்ஸ்ட் ஃபர்ஸ்ட்டா எங்க ஊருக்கு வந்திருக்கிறவ..”

“ஃபர்ஸ்ட் ஃபர்ஸ்ட்டா..?”

“முதன் முதலாங்கிறதை அப்படிச் சொன்னேன்டி..”

“முதன் முதலா வந்தா நீ என்ன வேணும்னாலும் சொல்வியா..? இருக்குடி உனக்கு..”

“தேவைதாண்டி எனக்கு.. முதன் முதலா எங்க ஊருக்கு வந்திருக்கிறவ ஊரைச் சுத்திப் பார்க்க ஆசைப் பட்டியேன்னு என் அத்தான்கூட சினிமாவுக்குப் போகிற புரோகிராமைக் கேன்சல் பண்ணிட்டு உன்கூட செஞ்சிக் கோட்டையைப் பார்க்கக் கிளம்பி வந்தேன் பாரு.. அதுக்குத்தான் நீ என்னை மலையுச்சியில இருந்து உருட்டிவிடப் பார்க்கறியா..? மனச்சாட்சி இல்லாதவளே..”

“அதை நீ சொல்லாதே.. உனக்கிருக்கிற வெங்கலத் தொண்டைக்கு நீ ரகசியம் பேசினாலே ஊருக்கெல்லாம் கேட்கும்.. இந்த லட்சணத்தில அவனை நான் வர்ணிச்சதை சவுண்டா ஒப்பிக்கிறயேடி சவுண்டு சரோஜா.. அங்கே பாரு.. அவன் அதைக் கேட்டுட்டு என்னை சைட்டடிக்க ஆரம்பிச்சுட்டான்..”

அவன் அதைத்தான் செய்து கொண்டிருந்தான்.. இரண்டு படிகள் இடைவெளி விட்டு ஏறிக் கொண்டிருந்தவன் ஒரு

படியாய் அதைக் குறைத்து நந்தினியை அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்தான்..

“இப்போப்பாரு.. ஒரு படி முன்னால போறவன், நின்னு நம்மகூடச் சரிக்குச் சரியா ஜாயின் பண்ணி படியேற ஆரம்பிப்பான்..” நந்தினி உத்ராவின் காதுகளில் கிசுகிசுப்பாக ஆருடம் சொன்னாள்..

நந்தினி சொன்னபடிதான் நடந்தது.. அவன் வேகம் குறைத்து அவர்களுடன் இணைந்து படியேற ஆரம்பித்தான்.. மறக்காமல் நந்தினியைப் பார்த்தும் வைத்தான்..

“ஏய்.. நீ சொன்னதைப் போல ஜாயின் அடிச்சிட்டாண்டி..”

உத்ரா வெங்கலத் தொண்டையைத் திறக்க, நந்தினி தலையில் அடித்துக் கொண்டாள்.. அதை அவன் சுவராஸ்மாகப் பார்வையிட்டதில் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்..

‘இவன் வேற.. நானிருக்கிற மனநிலை தெரியாம சைட்டடிக்க வந்துட்டான்.. வழியைப் பார்த்துக்கிட்டாப் போய்த் தொலையறானா..?’

நந்தினிக்கு அலுப்பாக இருந்தது.. வேறொரு தருணமாக இருந்திருந்தால் அவனது ஆர்வப் பார்வையில் கிளர்ச்சி கொண்டிருப்பாள்.. அவள் மனதில் பூ மலர்ந்திருக்கும்.. குயில் பாடியிருக்கும்..

இப்போதுதான் அப்படியில்லையே.. மலைபோன்ற பாரம் அவள் மனதில் ஏறி பாரமாக அழுத்துகிறதே.. அதன் கனம் தாங்காமல்தானே அவள் செஞ்சிக்கு கிளம்பி வந்திருக்கிறாள்..?

“உத்ரா என்னோட பெஸ்ட் ஃபிரண்டும்மா..”

“இருக்கட்டுமே.. கல்யாணத்துக்குப் போய் நின்னாப் போதாதா..? நிச்சயத்துக்குப் போகனுமா..? மண்டபத்தில நிச்சயம் நடந்தாலும் பரவாயில்லை.. உன் அப்பாவும், நானும் காரை எடுத்துக்கிட்டு உன்கூட வந்துட்டு வந்துருவோம்.. அப்படியில்லாம வீட்டில நிச்சயம் பண்றாங்க.. நீ என்னன்னா ரெண்டு நாள் தங்கறதைப் போலப் பிளான் போடற.. தனியாப் பஸ் பிடிச்சுப் போகனும்ன்னு வேற அடம் பிடிக்கிற.. இது நல்லாயில்லைம்மா.. அப்பாவுக்குப் பிடிக்காது..”

நந்தினியின் தாயான வெண்ணிலா தடுத்துப் பார்த்தாள்.. விட்டுக் கொடுக்காமல் நந்தினி அடம் பிடித்ததில் பஞ்சாயத்து மேகநாதனிடம் போனது.. அவர் மகளைக் கூர்மையாகப்

பார்த்து வைத்தாள்.. மகளின் மனதில் என்ன திட்டம் இருக்கிறதென்று தூண்டித் துருவுவதைப் போல அவர் பார்த்த பார்வையில் நந்தினி நடுங்கிப் போனாள்..

மேகநாதன் கண்டிப்பானவர்.. நந்தினி சிறுபிள்ளைத்தனமாக இருக்கிறாள் என்று வெண்ணிலாவைத் திட்டித் தீர்ப்பார்.. அவரின் ரோதனையிலிருந்து தப்பிப்பதற்காவே தஞ்சையில் படிக்காமல் சென்னையின் அண்ணா யுனிவர்சிட்டியில் சேர்ந்து பி.டெக் படித்து முடித்தாள் நந்தினி.. தந்தையின் கட்டுப்பாடில்லாத கல்லூரி வாழ்க்கை அவளுக்கு உற்சாகத்தைத் தந்தது.. சிறகை விரித்துச் சுதந்திர வானில் பறந்து கெ ாண்டிருந்தவள் கூட்டுக்குத் (வீட்டுக்கு) திரும்பும் நாளும் வந்தது..

‘அதுக்குள்ள படிப்பு முடிஞ்சிருச்சா..?’

தலையில் கை வைத்தபடி வீட்டுக்குத் திரும்பிய வளுக்கு அடுத்த அதிர்ச்சி காத்திருந்தது..

“ஹை.. உனக்குக் கல்யாணம்க்கா..”

உற்சாகமாக வரவேற்றான் நந்தகுமார்.. பிளஸ்-டூ படிக்கும் தம்பியால் மட்டும் எப்படி இத்தனை உற்சாகமாக

இந்த வீட்டில் வளைய வர முடிகின்றது..? என்று பொறாமைப் பட்டாள் நந்தினி..

‘உற்சாகப்படாம என்ன செய்வான்..? பெண் பிள்ளைகளை அதட்டி வளர்க்கனும்.. ஆண் பிள்ளைகளை ஊர் சுற்ற விட்டு வளர்க்கனும்.. அப்போதுதான் ஆண்பிள்ளைகள் உலகத்தைத் தெரிந்து புரிந்து கொள்ள முடியும்ன்னு அப்பா திருவாக்கு சொல்லியிருக்காரே.. கண்டிசனெல்லாம் எனக்குத்தான்.. கால்கட்டும் எனக்குத்தான்.. இவனுக்குத்தான் எதுவுமில்லையே.. அப்புறம் ஆடாம என்ன செய்வான்..?’ நந்தினியின் வயிறு எரிந்தது..

மேகநாதன் அப்படித்தான் சொன்னான்.. பெண் பிள்ளைகள் வீட்டு வாசல் படியைத் தாண்டாமல் பத்திரமாக வீட்டுக்குள் சிறையிருக்க வேண்டும்.. அவர்கள் பாதுகாக்கப் பட வேண்டியவர்கள்.. இத்யாதி.. இத்யாதி.. என்று அவர் அடுக்கும் காரணங்களில் பெண் என்பவள் ரத்தமும் சதையுமான மனுஷியா இல்லை உயிரில்லாத ஜடப் பொருளா என்ற சந்தேகம் நந்தினிக்கு வந்து விடும்..

மூச்சு முட்டும் வீட்டுச் சூழலை விட்டுத் தப்பிக்கும் மார்க்கமாக படிப்பையும் அதன் மூலம் கிடைக்கும்

வேலையையும்தான் அவள் நம்பியிருந்தாள்.. அதைத் தகர்ப்பதைப் போல அவள் படிப்பை முடித்த மறுநாளே அவளது கல்யாணப் பேச்சு ஆரம்பித்து விட்டது..

“என்னடா சொல்ற..?” திகிலானாள் நந்தினி..

“ஐய்யே.. என்ன எக்ஸ்பிரஷன்க்கா இது..? பேய் படத்தைப் பார்க்கிறதைப் போல முழிக்கிற..? உனக்குக் கல்யாணம்க்கா.. இதுக்கு நீ சிரிக்கனும்..” என்றான் நந்தகுமார்..

“சிரிப்பு வரலையேடா குமாரு..” பரிதாபமாக சொன்னாள் நந்தினி..

ஐயோ.. பரிட்சை முடிஞ்சிருச்சே.. வீட்டுக்குப் போகனுமே என்று தலையில் இடி விழுந்தைப் போல வீட்டுக்கு வந்தவளுக்கு அடுத்த இடி காத்திருக்க வேண்டுமா..?

இப்படி இடிமேல் இடி விழுந்தால் அவள் பாவம் என்ன செய்வாள்..? விதி அவளிடம் கருணை காட்டியிருக்கக் கூடாதா..? இன்னும் சிறிது காலத்திற்காவது அவளை சுதந்திரமாக இருக்க விட்டிருக்கலாமே.. அவளது வாழ்க்கை இப்படித்தான் இருக்க வேண்டுமென்று அவளது பெற்றோர் தீர்மானித்து விட்டார்களே.. அதன்படிதான் அவள் வாழ

வேண்டுமா..? அவளது வாழ்வு இப்படியிருக்க வேண்டும் என்று நிர்ணயிக்கும் உரிமை அவளுக்கில்லையா..?

“சேதி தெரியுமாக்கா..? உனக்கு வரப் போகும் மாப்பிள்ளை மேல்சாவனிஸ்ட்டாம்.. கண்டிஷன் போட்டுப் பெண்களை கதறடிக்கிறதில நம்ம அப்பாவைத் தூக்கிச் சாப்பிட்டுருவாராம்.. எப்புடி..?”

நந்தகுமார் வீசிய அணுகுண்டில் துகள் துகளாகச் சிதிலமாகி சிதறிப் போனாள் நந்தினி.. அப்படியொரு வாழ்வையா அவள் வாழ வேண்டும்..?

# அத்தியாயம் 2

**ந**ந்தினியின் மனதிலும் கனவு இருந்தது.. வரப்போகும் கணவனைக் குறித்த எதிர்பார்ப்பு இருந்தது.. அவன் இப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்ற கற்பனை இருந்தது.

அழகான, கம்பீரமான ராஜகுமாரன் ஒருவன் குதிரையில் வந்து அவளைத் தூக்கிக் கொண்டு போக வேண்டும் என்று அவள் ஆசைப்பட்டாள்..

அந்த ஆசைக் கனவுகளின் மொத்த உருவமாய், இதோ அவளருகில் ஒருவன் படியேறிக் கொண்டிருக்கிறான்.. ஆசையுடன் அவளைப் பார்க்க வேறு செய்கிறான்..

இருந்தும் என்ன பண்ண..?

நந்தினியின் மனதில் ‘ஆயிரம் இருந்தும், வசதிகள் இருந்தும்..’ என்ற நிராசையான பாடல் வரிகள் ஒலித்தன.

“குதிரை சப்தம் கேட்கிறதைப் போல இருக்கில்ல..?” நந்தினியைப் பார்த்தபடி உத்ராவிடம் அவன் கேட்ட கேள்வியில் நந்தினிக்குத் தூக்கி வாரிப் போட்டது.

'என் மனசில இருக்கிறது, இவனுக்கு எப்படித் தெரிஞ்சது..?'

விழிகளை விரித்தவளை உன்னிப்பாகப் பார்த்தவனிடம்..

"எனக்கொன்னும் கேட்கலையே.. ஏண்டி உனக்குக் கேட்டுச்சா...?" என்று தலையாட்டி மறுத்தபடி நந்தினியிடம் கேள்வி கேட்டாள் உத்ரா..

"உனக்கே கேட்காதப்பா எனக்கு மட்டும் கேட்டிருமா..?" முறைத்தாள் நந்தினி..

அவளது முறைப்பைப் பொருட்படுத்தாமல் இதமாக அவன் சிரித்தான்... பதிலுக்குச் சிரிக்காமல் நந்தினி முகத்தைத் திருப்பிக் கொள்ள.. சிரிப்பதா வேண்டாமா என்ற குழப்பத்தில் ஆழ்ந்தாள் உத்ரா..

தோழிகளின் பதில் சிரிப்பை எதிர்பார்க்காமல் அவன் பேச்சைத் தொடர்ந்தான்..

"பொன்னியின் செல்வன் கதையைப் படிக்கிறப்பக் காதில் குதிரைகளின் குளம்படிச் சப்தம் கேட்டுமாம்.. அது போலதான் எனக்கும் செஞ்சிக் கோட்டைக்கு வந்திருக்கிறதாலே

தேசிங்குராஜாவின் நீலவேணிக் குதிரையோட கனைப்புச் சத்தம் கேட்டதோ.. என்னவோ..”

“உங்களுக்கு நீலவேணிக் குதிரையைப் பத்தித் தெரியுமா..?”

தனது ஊரின் சரித்திர நினைவுச் சின்னமான செஞ்சிக் கேட்டையைப் பற்றி அவனுக்குத் தெரிந்திருக்கிறது என்பதில் உடனடியாக அவனுடன் நட்பு பூண்டாள் உத்ரா..

உயர்ரக ஜீன்ஸும், சட்டையும், கண்களில் கூலிங் கிளாஸுமாக இருந்தவன் இந்திப்பட ஹீரோவைப் போல இருந்து தொலைக்கிறான் என்று நந்தினியின் மனம் ஜொள்ளியது.. அவனைப் பார்த்தால் மனதுக்குள் சலனம் ஏற்படும் என்று அவனைப் பார்க்காமல் படிகளைப் பார்த்தபடி ஏறினாள்.. அவனோ விடுவேனா என்பதைப் போல நந்தினியின் முகத்தையே ஆவலுடன் பார்த்தான்.

“தெரிந்ததினாலதான் மும்பையில இருந்து ஃபிளைட் பிடிச்சு செஞ்சிக்கு வந்திருக்கேன்..” என்றான் அவன்..

“ஓ.. நீங்க மும்பைக்காரரா..?” என்றாள் உத்ரா..

'அதான் இந்திப்பட ஹீரோ போல இருக்கான்..' நந்தினி ஓரக்கண்ணால் அவனைப் பார்த்தாள்..

அதை அவனும் பார்த்து விட்டதில் நந்தினியின் முகம் சிவந்தது.

"மும்பையில் பிஸினெஸ் இருக்கு.. சொந்தமா ஃபிளாட் இருக்கு.. பட்.. நான் மும்பைக்காரனில்லை.."

நந்தினியைப் பார்த்தபடி விவரம் சொன்னான் அவன்.. இந்த விவரங்கள் அவளுக்கானதுதான் என்பதை அவன் பார்வை சொல்லாமல் சொல்லியதில் தவித்துப் போனாள் நந்தினி..

"யார் எங்கேயிருந்தா உனக்கென்னடி.. பேசாம வரமாட்டியா..?" தவிப்பை மறைக்கத் தோழியை அதட்டினாள்..

'அப்படியா..? நான் எங்கேயிருந்தாலும் உனக்கென்று மில்லையா..?' அவனது விழிகள் கேட்டான்..

நந்தினி தடுமாறினாள்.. அவளைக் காந்தம் போலக் கவர்ந்திழுத்த அந்த வசியக்காரனின் வசியத்தில் மயங்கிப் போனது அவள் மனம்.. அதை மறைக்க யத்தனித்தவளாய்..

‘ஆமாம்.. அப்படித்தான்.. எனக்கொன்றுமில்லை தான்..’ என்று வெட்டும் விழிப்பார்வை பார்த்தாள்..

‘ஊஹூம்..?’ நம்பாத பாவனையுடன் அவன் சிரித்துக் கொண்டான்..

“சும்மாயிருக்கயா..? சார் வெளியூர்க்காரர்... எங்க ஊர் செஞ்சிக் கோட்டையைப் பார்க்கப் ஃபிளைட் பிடிச்சுப் பறந்து வந்திருக்கார்.. உன்னைப் போல வந்த இடத்தில கோட்டையைப் பார்த்துட்டுப் போனாப் போகுதுன்னு சுற்றிப் பார்க்கவரலை..” உத்ரா சண்டைக்கு வந்தாள்..

“விடுங்க.. அவங்க ஏதோ மூட் அவுட்டில இருக்கிறாங்க போல..” அவன் சிபாரிசுக்கு வந்தான்..

அதற்கும் உன் சிபாரிசை நான் கேட்டேனா என்ற ரீதியில் முறைத்து விட்டு விலகி நடக்க ஆரம்பித்தாள் நந்தினி..

சிறுபிள்ளையின் சேட்டைகளை ரசிக்கும் முகபாவனையுடன் அவளை ரசித்து அவன் பார்த்ததில் அவளது நெஞ்சம் பொங்கியது.. இப்படிப் பார்க்காதே என்று மறுகினாள்..

‘உன் பார்வையை ரசித்து எதிர்பார்வை பார்க்கும் நிலையில் நானில்லை.. எனக்கான காதலனைத் தேடும் சுதந்திரம் என்னிடமிருந்து பறிக்கப்பட்டு விட்டது.. வீட்டின் நான்கு சுவர்களுக்குள் முடக்கிப் போடப் போகிறார்கள்.. தற்காலிகமாகத்தான் இந்த விடுதலைக் காற்றை சுவாசித்துக் கொண்டிருக்கிறேன்... ஓரிரு நாள்களில் திரும்பியாக வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில்தான் செஞ்சிக்கு வந்திருக்கிறேன்... தஞ்சைக்கு திரும்பி விட்டால் எனது சிறகுகளை முறிப்பதற்கான ஆயத்தங்கள் ஆரம்பமாகிவிடும்... அதன் பின்னர் சுதந்திரவானில் சிறகடிப்பதைப் பற்றி நினைத்துக்கூடப் பார்க்க முடியாது..’

அடிபட்ட குழந்தையின் வலியை நந்தினியின் முகம் பிரதிபலித்தது.. அவனது கூரியபார்வை அதை ஆராய்ந்தது.. அவனது புருவங்கள் முடிச்சிட்டன.. அந்த முடிச்சை அவிழ்க்கும் உத்தேசமில்லாதவளாய் நந்தினி படியேறுவதிலேயே கவனமாக இருந்தாள்..

“செஞ்சி.. அழகான பெயர்..!”

நந்தினியைப் பார்த்தபடியே அவன் ஜொள்ளியது நிச்சயமாக செஞ்சியெனும் பெயரின் அழகைப் பற்றியதில்லை

என்பதை விரல் சுவைக்கும் கைக்குழந்தைகூடச் சொல்லி விடும்..

பக்கியிலும் பக்கியான உத்ராவுக்குத்தான் அது புரியவில்லை.. செஞ்சிவாசியான அவள் அகமகிழ்ந்து போனாள்..

“தேங்க்ஸ்.. நிறையபேர் இதை இஞ்சின்னு சொல்லி வைப்பாங்க.. அப்பல்லாம் எனக்குக் கட்டையைத் தூக்கி அவங்க மண்டையில நாலு போடு போடனும்னு ஆவேசமா இருக்கும்..”

“நல்லவேளை.. என் தலை தப்பிச்சது..”

வரிசைப்பற்கள் தெரிய அவன் சிரித்தான்.. சிரிக்கும் போது அவன் அழகு கூடுவதை உணர்ந்தாள் நந்தினி.. இளம் பெண்கள் மோகிப்பதற்கு ஏதுவாக இருந்தது அவன் சிரிப்பு... அவன் சிரிக்கும்போது அழகாக இருப்பதை உணர்ந்திருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள் நந்தினி.. இதுவும் ஓர் வலைவீச்சாக இருக்கலாம்.. பெண் மனதில் சலனத்தை தூண்டுவதாக இருக்கலாம்.

‘இவனுக்கென்ன.. சிரிச்சு மயக்கிட்டுப் போயிருவான்.. அதுக்கப்புறம் இவனை நினைச்சு ஏங்கித் தொலைக்கனும்.. தேவையா..?’

தேவையே இல்லை எனத் தீர்மானித்தாள் நந்தினி.. சிரித்துக் கொண்டிருந்தவனை உக்கிரமாகப் பார்த்தாள்.. காலையிளம் பனியின் குளுமையோடு தென்றலாக மனம் வருடியவளின் கோபத்தில் அவன் திகைத்துப் போனான்.. என்ன செய்தேன் என்று கேள்வி கேட்கும் தினுசில் அவனது புருவங்கள் உயர்ந்து இறங்கின..

‘இம்சை பண்ணாதேடா.. எனக்கும் உனக்கும் என்ன இருக்குன்னு இந்த அழிச்சாட்டியம் பண்ற..?’

அவனைச் சுட்டு விரலை நீட்டிச் சுட்டிக் காட்டி விட்ட தவறை நினைத்து நொந்தபடி நாக்கைத் துருத்தி அரட்டினாள் நந்தினி.. அவன் விழிகளில் பல்ப் எரிந்ததில் இது வேலைக்கு ஆகாது என்று அரட்டுவதை நிறுத்தி விட்டு மலையேற்றத்தில் கவனமானாள்.. அவனோ அவள்மீது மட்டும் கவனமானான்..

‘‘இலங்கையில் ராமனுக்கும், ராவணனுக்கும் யுத்தம் நடந்தப்ப ராவணனோட மகன் இந்திரஜித் விட்ட அம்பில லட்சுமணன் மூர்ச்சையாகிட்டார்.. அவரைக் குணப்படுத்த

பர்வத மலையில இருந்து மூலிகையை பறிச்சுட்டு வரப்போன அனுமார் பர்வத மலையையே பேர்த்து எடுத்துட்குப் போனாராம்.. அப்படிப் போனப்ப அவர் கையிலிருந்த பர்வத மலையிலிருந்து ஒரு பகுதி விண்டு கீழே விழுந்துச்சாம்.. சிரஞ்சீவியான அனுமார் கையிலிருந்து விழுந்த மலைத் துணுக்கு என்பதால் 'சிரஞ்சீவி' மலைன்னு அதைச் சொன்னாங்களாம்.. காலப் போக்கில் அது 'செஞ்சி'ன்னு மாறிப் போச்சாம்.." செஞ்சியின் பெயர்க் காரணத்தை விவரித்தாள் உத்ரா..

"இண்ட்ரெஸ்டிங்.." என்றான் அவன்..

"இந்த மலையுச்சியில் இருக்கிற ராஜகிரி கோட்டைக்குள் இருக்கிற செஞ்சியம்மன் கோவிலோட பெயரில் 'செஞ்சி'ன்னு இந்த ஊரைக் கூப்பிட்டாங்கன்னும் சொல்லுவாங்க.." அடுத்த கதையைச் சொன்னாள் உத்ரா..

"ஈஸிட்.." என்றவன் மலையுச்சியில் தெரிந்த கோட்டையைப் பார்த்து விட்டு..

"அதுதான் ராஜசிரிக் கோட்டையா..?" என்றான்..

"ஆமாம்.." பெருமையுடன் சொன்னாள் உத்ரா.. அவர்களிருவரின் இணக்கமான பேச்சில் நந்தினிக்குப் பற்றிக்

கொண்டு வந்தது.. ஏனோ.. உத்ரா அவனுடன் சகஜமாகப் பேசுவதில் அவளுக்குப் பிடித்தம் வரவில்லை..

“நீயென்ன கைடா..?” உத்ராவிடம் வெடுவெடுத்தாள்..

‘பொறாமை..?’ அவன் கண்கள் வினவின..

‘ஒரு ‘மை’யும் இல்லை..’ சுட்டெரிப்பதைப் போல் அவள் பார்த்தாள்..

உத்ராவிடம் அவன் பேசினால் நந்தினி எரிச்சலாகிறாள் என்பதை கண்டு கொண்டவன் உற்சாகமாகி விட்டான்.. அதுவரை நந்தினியை பார்வையிட்டபடி படியேற ஏதுவாக இருக்கிறது என்பதற்காக உத்ராவிடம் வாய் வளர்த்தவன் படுதீவிரமாக கதை பேச ஆரம்பித்து விட்டான்.. அதில் நந்தினியின் கடுப்பு கூடியது..

“வெல்.. தேசிங்குராஜாதான் செஞ்சிக் கோட்டையைக் கட்டினாரா..?” ஆர்வத்துடன் கேட்பதைப் போல முகத்தை வைத்துக் கொண்டான் அவன்..

நீலவேணிக் குதிரையைப் பற்றித் தெரிந்து வைத்திருப்பவன் இதைத் தெரிந்து கொள்ளாமலா செஞ்சிக்

கோட்டையைப் பார்க்க விமானம் பிடித்து பறந்து வந்திருப்பான்..?

இதை உத்ராவுக்கு யார் சொல்வது..? பிறந்த ஊரின் பெருமையைக் காது கொடுத்துக் கேட்க ஒருவன் கிடைத்து விட்ட மகிழ்வில் அவள் சளசளக்க ஆரம்பித்து விட்டாள்..

“இல்லை சார்.. ஆனந்தக் கோனார்ன்னு ஒருத்தர் இந்த மலையில ஆடு மேய்த்துக்கிட்டு இருந்தாராம்.. அந்த வழியாப் போன இவரோட கட்டுச் சோத்தைக் கொடுத்துப் பசியாறச் சொன்னாராம்.. பசியாறின முனிவர் போகிற போக்கில இங்கே புதையல் இருக்குதுன்னு கை காட்டி விட்டுப் போனாராம்.. அதை எடுத்த ஆனந்தக் கோனார் கட்டின கோட்டைதான் இந்தச் செஞ்சிக் கோட்டை.. அவரை ‘ஆனந்தக் கோன்’ அப்படின்னு வரலாறு சொல்லுது சார்..”

“யார்கிட்டடி சொல்லுச்சு..? உன்கிட்டயா..?” நடுவே புகுந்தாள் நந்தினி..

“அடேங்கப்பா.. தஞ்சை பெரிய கோவிலைப் பத்திச் சொல்லறப்ப மட்டும் வரலாறு அதைச் சொல்லுது.. வரலாறு இதைச் சொல்லுதுன்னு அள்ளி விடுவ... செஞ்சிக்

கோட்டைன்னா மட்டும் கிண்டல் வருதா..?” உஷ்ணமானாள் உத்ரா..

“பாதியிலே கதையை விடலாமா.. நீங்க கதையைக் கண்டினியு பண்ணுங்க..”

இடை மறித்து உத்ராவின் கோபத்திலிருந்து நந்தினியைத் தப்புவித்தான் அவன்.. நன்றி சொல்லாமல் அவனைக் கோட்டையிலிருந்து குப்புறக் கவிழ்த்துத் தள்ளி விடுவதைப் போலப் பார்த்து வைத்தாள் நந்தினி.. அவன் சிரித்துக் கொண்டான்..

“பின்னாளில தேசிங்கு ராஜா கைக்கு இந்தக் கோட்டை வந்த பின்னாலதான் பிரபலமாச்சு சார்..”

“தேசிங்கு ராஜாவோட ஃபாதர் மராட்டிய சிங் சிவாஜியோட கேப்டன்தான..?”

“ம்ம்ம்.. தேசிங்கு ராஜாவோட குதிரை நீலவேனி.. அதன் நினைவா நீலாம்பூண்டி கிராமமே இருக்கு சார்..”

“ஓ..”

அவன் உதடுகளைக் குவித்தபடி நந்தினியைப் பார்த்தான்.. அவள் ஒற்றைவிரலை உயர்த்தி அந்தப் பக்கம்

பார் என்று எச்சரித்தாள்.. அவன் கண்களில் மின்னல் வந்தது.. நந்தினிக்குள் கோபம் வந்தது..

“தேசிங்கு ராஜா வட இந்தியாவோட ராஜபுதனப் பரம்பரையைச் சேர்ந்தவர்.. இவரோட வாளுக்கு மாலை போட்டு மனைவியானவர் ராணிபாய்.. பார்க்காமலே காதல் செய்த காதல் கோட்டை படம் போல பார்க்காமலே கல்யாணம் செய்து கொண்ட ஹீரோ, ஹீரோயின் வாழ்ந்த இடம் இந்த ‘செஞ்சிக் கோட்டை’ சார்..”

“வெல்டன்..”

உத்ரா ரசித்துக் கதை சொன்ன விதத்தை மனம் விட்டுப் பாராட்டினான் அவன்.. அது உண்மையான பாராட்டு என்பதில் நந்தினிக்குள் வெடுவெடுப்பு உண்டானது.. அதன் வெம்மையில் முகம் சுளித்தாள்..

“தேசிங்கு ராஜா அரங்கனை வணங்கி உத்தரவு கேட்காம எந்தக் காரியத்தையும் செய்ய மாட்டாராம் சார்.. முகலாயரோட போர் செய்யப் புறப்பட்டப்ப செஞ்சிக் கோட்டையில இருக்கிற அரங்கநாதரோட கோவிலுக்குப் போய் உத்தரவு கேட்டாராம்.. அரங்கன் உத்தரவு கொடுக்கலையாம்.. முன் வைத்த காலை பின் வைக்கக்

கூடாதுன்னு அரங்கனின் உத்தரவை மீறி தேசிங்கு ராஜா யுத்தத்திற்கு கிளம்பிட்டாராம்.. அதில் கோபமான அரங்கன் முகம் திருப்பிக்கிட்டாராம்..” கண்கள் ஜொலிக்கச் சொன்னாள் உத்ரா..

“இப்பவும் அரங்கனின் சிலை முகம் திருப்பிய போஸில்தான் இருக்கிறதா..?” வியப்புடன் அவன் கேட்டான்..

“ஆமாம் சார்.. அரங்கனின் கோவிலுக்கு அரண்மனையில இருந்து சுரங்கப்பாதை இருக்கு..”

ராஜகிரிக் கோட்டையான செஞ்சிக் கோட்டையை அவர்கள் நெருங்கி விட்டார்கள்.. கோட்டையில் நின்றபடி சாலையைப் பார்த்தார்கள்.. வளைந்து நெளிந்து சாம்பல் வண்ண ரிப்பன் போலத் தெரிந்தது சாலை..

“இது காதல் கோட்டை..!”

நந்தினியைப் பார்த்தபடி சொன்னான் அவன்.. நந்தினி பெருமூச்சு விட்டாள்.. அரைத்த மஞ்சளின் நிறத்தைக் கொண்டிருந்தவளின் முகத்தில் சோகம் அப்பயிருந்தது.. அலாதியான அவளது அழகில் அவன் மனம் லயித்தது.. ஆழ்ந்த சிந்தனையுடன் அவளிருந்தாள்.. அது எதற்காக என்று அவன் யோசித்தான்.

# அத்தியாயம் 3

“**தே**சிங்கோட மனைவி ராணிபாய் தேசிங்கோட வாளுக்கு மாலை போட்டு மனைவியாகிட்டாலும் ஆறு மாத காலமா பிரிஞ்சுதான் இருந்தாங்களாம்.. அதுக்கப்புறம்தான் வந்தாங்களாம்..”

கோட்டைக்குள் நடந்தபடி சொன்னாள் உத்ரா.. கூடவே நடந்த நந்தினியின் விழிகள் அலைபாய்ந்து சுற்று முற்றும் பார்த்தன.. அவளையே அவதானித்தபடி வந்த அவனின் புருவங்கள் சுருங்கின.. எதற்காக அவள் அலைபாய்கிறாள் என்று அவனுக்குப் புரியவில்லை..

நந்தினியைப் போன்ற அழகான பெண்ணின் மனது அலைபாய்வதற்கான காரணம் ஒன்றே ஒன்றாகத்தான் இருக்க வேண்டும்.. அதுதான் காதல்..

நந்தினி காதலிக்கிறாளா என்ன..?

அதைப்பற்றி அறிய வேண்டுமானால் நந்தினியிடம் தான் பேசியாக வேண்டும்.. அதற்கு வழியின்றி உத்ரா கதையைத் தொடர்ந்து கொண்டிருந்தாள்..

“அரங்கனோட உத்தரவை மீறி யுத்தத்திற்குப் போன தேசிங்கு ராஜா திரும்பி வரவேயில்லை.. தோற்றுப் போய் உயிரை விட்டு விட்டார்.. யுத்தத்தில் அவரைக் கொன்னுட்டாங்க.. சந்திரகுப்தனுக்கு சாணக்கியன் போல தேசிங்கு ராஜாவுக்கு அரங்கன் ஆலோசனை சொன்னார்.. அவர் கேட்கல..”

உத்ரா விட்ட பெருமூச்சில் அவளை உறுத்துப் பார்த்த நந்தினியின் விழிகளில் நெருப்புப் பொறி பறந்தது.

“கிடக்கிறதையெல்லாம் விட்டுட்டு கிழவியைத் தூக்கி மனையில வைக்கப் போன கதையா கதை பேசிக்கிட்டு இருக்காதடி..” என்று வெடித்தாள்.

‘கிழவின்னு யாரைச் சொல்றா..?’ உத்ராவுக்கு சந்தேகம் வந்து விட்டது..

அவளுக்கு சற்று ஒற்றை நாடி.. அதனால் அவளை நந்தினி ‘கிழவி’யென்ற செல்ல.. இடுகுறிபெயர் கொண்டு கடுப்படிப்பது வழக்கம்..

‘என்னைத்தான் சொல்றா..’ உத்ராவின் கண்கள் சிவந்து விட்டன..

# எண்ணியிருந்தது ஈடேற... 1

சிவந்த கண்களுடன் அவள் நந்தினியுடனான யுத்தத்திற்கு அறைகூவல் விடுக்கத் தயாரானாள்..

அது என்ன அவளை நந்தினி கிழவியென்று அழைப்பது..? தனியாக இருக்கும்போது கிழவியெனச் சொல்லியிருந்தாலும் பரவாயில்லை.. இந்திப்பட ஹீரோ போல ஒருவன் அருகிலிருக்கிறான்.. உத்ராவுடன் கதை பேசிக் கொண்டிருக்கிறான்.. அவன் முன்னால் அவளை கிழவியென்று சொல்லி வைத்தால் அவளின் இமேஜ் என்னவாது..? என்னதான் திருமணம் நிச்சயிக்கப்பட்ட பெண் என்றாலும் அவளும் பெண்தானே.. அவளுக்கென்று ஒரு மனம் இருக்கிறதுதானே.. அந்தப் பெண்மனம் என்ன பாடுபடும் என்பதை நந்தினி ஓர் நொடியாவது நினைத்துப் பார்த்தாளா..? இன்று பேசும் இதே வாய் நாளை உத்ராவின் வருங்கால கணவனின் முன்னாலும் அவளைக் கிழவியென்று சொல்லாது என்று என்ன நிச்சயம்..?

நினைத்துப்பார்க்கவே நெஞ்சம் நடுங்கியது உத்ராவிற்கு.. இதை வளரவிடக்கூடாது என்று தீர்மானித்தாள்.. முதல் கோணல் முற்றிலும் கோணல் என்பதைப் போல மனைவியாக வரப்போகிறவளின் முகத்தோற்றத்தைப் பற்றிய மதிப்பீடு உத்ராவின் வருங்காலக் கணவன் மனதில் பதிந்து

விடாதா..? அவள் என்ன செய்வாள்..? நந்தினி ‘கிழவி’யென்று அழைத்தால்

தாங்கிக் கொள்ளலாம்.. கணவன் அப்படி அழைத்தால் தாங்கிக் கொள்ள முடியுமா..?

“யாருடி கிழவி..?” பதிலுக்கு உத்ராவும் வெடித்தாள்.. எங்கே நீதான் கிழவியென்று ‘அவன்’ முன்னால் சொல்லி விடுவாளோ என்ற பயம் உத்ராவின் மனதை ‘வதக்.. வதக்..’கென்று வதைக்கத்தான் செய்தது.. நல்ல வேளையாக அப்படியேதும் நடந்து விடவில்லை.. எரிச்சலுடன் இருந்த நந்தினி..

“நான்தான் கிழவி..! போதுமா..?” என்று பொரிந்தாள்..

‘அப்பாடி..! என்னைச் சொல்லலை..’ ஆசுவாசமானாள் உத்ரா..

“நாம எதுக்கு வந்தோம்.. நீ என்ன பண்ணிக்கிட்டு இரக்கே.. கோட்டையைச் சுத்திக் காட்ட வந்தா எனக்குத்தான் நீ கைடு வேலை பாக்கனும்.. மத்தவங்களுக்கெல்லாம் கைடு வேலை பாத்துக் கதை சொல்லிக்கிட்டு இருக்கியே.. அதைத்தான் சொன்னேன்..” நந்தினி உத்ராவை விட்டு விட்டு அவனைச் சுட்டெரிப்பதைப் போல பார்த்து வைத்தாள்..

“பாரதி பாடிய சுட்டும் விழிச் சுடர்தான் கண்ணம்மாங்கிற பாட்டுத் தெரியுமா..?” அவன் தேசிங்கு ராஜாவை விட்டு விட்டு பாரதியின் பாட்டுக்குத் தாவினான்.

“பாரதியோட பாட்டைத் தெரியாம இருக்குமா சார்..? அவரோட கவிதைகள்ன்னா எனக்கு அவ்வ்வ்.. ளோவ்.. பிடிக்கும்..” அளந்தாள் உத்ரா..

‘அடிப்பாவி..’ என்ற பார்வை பார்த்தாள் நந்தினி..

‘கவிதைன்னா கிலோ என்ன விலைன்னு கேட்ப.. இவன்கிட்ட மட்டும் எப்படியெல்லாம் புளுகற..? பாரதி உன்னை மன்னிக்கவே மாட்டாருடி.. அவர் உயிரோட இல்லைங்கிற தைரியத்தில பேசற..’

கொதித்துப் போன நந்தினிக்கு புறமுதுகு காட்டி நின்று கொண்டாள் உத்ரா.. அவன் கவிதை தெரியுமா என்றுதானே கேட்டான்.. கவிதை சொல் என்றா கேட்டான்..? ஆமாம், தெரியும் என்று சொல்லா விட்டால் பாரதி கோபித்துக் கொள்ள மாட்டாரா..?

“உங்க ஃபிரண்டுக்கு சுட்டும் விழிச் சுடர் கண்கள்தான்.. ஒப்புக்கறேன்.. அதுக்காக என்னைச் சுட்டெரிக்கிறதைப் போலவே பார்க்கனுமா என்ன..?”

“அதுதானே..?”

அவன் நந்தினியை வம்பிழுக்கிறான் என்பதில் உற்சாக மத்தளம் கொட்டினாள் உத்ரா.. நந்தினியின் முகத்தில் கடுகு வெடித்தது.. எல்லாம் இவள் கொடுக்கும் இடம் என்று உத்ராவை நொந்து கொண்டாள்..

அவள் இருக்கும் நிலைமையில் எவனோ ஒரு ஹீரோ மூஞ்சிக்காரனிடம் இஞ்சி தின்ற மானைப் போல சரசம் பேச முடியுமா..?

“துப்பாக்கிதான் கையில இல்லையாம்.. மத்தபடி மிலிடிரி கம்மாண்டர்தானாம்.. காலையில டாண்ணு ஆறு மணிக்கெல்லாம் எழுந்துக்கனுமாம்..”

“என்னது..?”

கல்லூரி நாள்களில் எட்டு மணிக்கும் மற்ற விடுமுறை நாள்களில் பதினொரு மணிக்கும் எழுந்து பழக்கப்பட்ட நந்தினி அதிர்ந்து போனாள்.. விடிகாலைத் தூக்கம் மன்மதனைப் போலக் கண்சிமிட்டி அவளை மயக்கத்தில் ஆழ்த்தி விடுமே.. அப்பேற்பட்டத் தூக்கத்தை அவள் தியாகம் செய்ய வேண்டும் என்று அவளுடைய தம்பி சொல்கிறானே.. இல்லாவிட்டால் துப்பாக்கியால் சுட்டு விடுவானாமே..

“நிஜம்மாவே அந்த ஆளு ‘கன்’ வைச்சிருக்கானாடா..?”

“இல்லாம இருக்குமா..? ஆள் கொழுத்த பணக்காரனாமே.. கன் இல்லாம எப்படியிருப்பான்..”

“கொழுத்த பணக்காரன் எதுக்காகடா நம்ம வீட்டில பெண் எடுக்க வர்றான்..? நாம பணக்காரங்கதான்.. கொழுத்த பணக்காரங்கன்னு சொல்ல முடியாதே.. ஊரில அவனுக்கு வேற பெண்ணா கிடைக்கலை..?”

“தஞ்சாவூரில கிடைக்காதே.. ஏன்னா.. அவரோட அம்மா பிறந்தது இந்த தஞ்சாவூரிலதானாம்..”

“அதுக்கு..? நான்தான் கிடைச்சேனா..?”

“நீதானே கிடைச்சாகனும்..? அவரோட அம்மா நம்ம அம்மாவுக்கு நாலுவிட்ட மாமன் மகளாம்.. எப்படின்னு வரைபடம் போட்டு வரைந்து காட்டவா..?”

“இருக்கிற இம்சை போதாதுன்னு உறவுமுறை வரைபடத்தை விளக்க ஆரம்பிச்சேன்னு வைய்யி.. கொன்னுருவேன்..”

“அஃது.. அந்த பயம் மனசில இருக்கனும்.. அதனால என்ன ஏதுன்னு விளக்கம் கேட்காம நான் சொல்லறதை மட்டும் கேளு..”

“சொல்லித் தொலை..”

“உனக்கு மட்டும் இது லீவு நாளில்லக்கா.. எனக்கும் லீவு நாள்தான்.. என்னைத் தொலையச் சொன்னேன்னு வைய்யி.. ஆஹான்னு காலையிலேயே வீட்டை விட்டுத் தொலைஞ்சு ஊரையெல்லாம் சுத்திட்டு ஜாமத்திலதான் வீடு வந்து சேருவேன்.. எப்படி வசதி..?”

“ஊர் சுத்தி..! எனக்குன்னு தம்பியா வந்து பொறந்திருக்கு..”

“உன் தலையெழுத்து அப்படி.. இல்லேன்னா அம்மாவோட பால்யகால சிநேகிதியான நாலுவிட்ட மாமா மக கட்டினா உன் மகளைத்தான் என் மகனுக்கு கட்டி வைப்பேன்.. நீயும் நானும் சம்பந்திகளாகனும்.. வேற இடத்தில நீ பெண்ணைக் கட்டி வைக்கக் கூடாதுன்னு சத்தியம் செய்து சத்தியமும் வாங்கியிருப்பாங்களா..?”

“என்னடா சொல்ற..?”

“அப்படியே பிளாக் அண்ட் வொயிட் சினிமாவைப் பார்க்கிற மாதிரியே இருக்கில்ல..?”

“ஆமாண்டா குமாரு..”

“எப்படி இந்தக் குமாரோட வொர்க்..? டே அண்ட் நைட்டா அம்மாவோட சேலை முந்தானையைப் பிடிச்சுச் சுத்தி பிளாஷ்பேக் மேட்டரையெல்லாம் கேதர் பண்ணி வைச்சிருக்கேனில்ல..?”

“தீயாய் வேலை செஞ்சிருக்கடா குமாரு..”

“இதைத்தான் தம்பியுடையார் கல்யாணத்துக்கு அஞ்சார்ன்னு சொல்லுவாங்க..”

“இல்லையேடா குமாரு.. இதை வேற மாதிரி தம்பியுடையான் படைக்கு அஞ்சான்னுல்ல சொல்லுவாங்க..”

“அது அண்ணனுக்கு.. இது அக்காவுக்கு.. இப்ப உனக்கு உன் கல்யாணம் எப்படி நிச்சயமாச்சுங்கிற விவரம் தெரியனுமா.. வேணாமா..?”

“தெரியனும்டா.. தெரியனும்.. வேண்டாம்ன்னு எப்படிடா சொல்லுவேன்..?”

“அப்ப உன் திருவாயை மூடிக்கிட்டு நான் சொல்லறதை மட்டும் கேளு..”

அக்காவையே அதட்டினான் நந்தகுமார்.. ‘நேரம்டா’ என்று நொந்து நூடுல்ஸ்ானபடி தலையை ஆட்டி வைத்தாள் நந்தினி.. காலம் இப்படி மாறுமென்று அவள் கனவா கண்டாள்..? வாழ்க்கை பெரும் பாரமாக அவள் தலையில் ஏறி அமர யத்தனிக்கும்போது தம்பிகாரனின் கால்கள் என்றாலும் அவள் தாள் பணிந்துதானே ஆக வேண்டும்..

“பார்த்தியாடா குமாரா.. இப்படியொரு சத்தியத்தைப் பண்ணித் தொலைச்சிருக்கிறதைப் பத்தி நாம பிறந்ததில இருந்து ஒரு வார்த்தைகூடச் சொல்லாம இந்தம்மா மறைச்சு வைச்சு மெயின்டெயின் பண்ணியிருக்காங்க.. பார்த்தியா..?”

“நினைப்பு இருந்தாத்தானே சொல்லியிருப்பாங்க..? அப்பாவுக்கே இது தெரியாதாம்.. நீ நம்மைச் சொல்ல வந்துட்ட.. சின்ன வயசிலேயே அம்மாவோட நாலு விட்ட மாமன் குடும்பம் நொடிச்சுப் போயிருச்சாம்..”

“அப்படித்தான் போகனும்..” சாபம் விட்டாள் நந்தினி.

“உன் சாபத்துக்குப் பவரே இல்ல.. நொடிச்சுப் போன மாமன் குடும்பம் தஞ்சாவூர்ல இருந்து புலம் பெயர்ந்து

கன்யாகுமாரியில குடியேறிருச்சாம்.. அதுக்கப்புறம் அந்த மாமன் குடும்பம் என்ன ஆச்சு.. ஏது ஆச்சுன்னு யாருக்கும் தெரியாதாம்.. அந்த மாமனுக்கு ஒற்றை மகள்தானாம்.. கொஞ்ச நாள்வரை அம்மா சிநேகிதி ஞாபகமா அழுதுகிட்டே இருப்பாங்களாம்.. பாவாடை சட்டை பருவத்திலே பிரிஞ்ச சிநேகிதியை பாவாடை தாவணி பருவத்திலே படு சுத்தமா மறந்துட்டாங்களாம்.. எப்படியாப்பட்ட நட்பு பார்த்தியா..” கேலியாக கேட்டான் நந்தகுமார்..

‘இவன் இருக்கானே..’ நந்தினிக்குச் சிரிப்புத்தான் வந்தது..

நந்தகுமாரின் வயதுக்கு அதிகப்படியான விவரத்தோடு அவன் இருந்தான்.. சிரிக்காமல் எதையும் பேசி வைப்பான்.. ஆழ்ந்த சிந்தனையிலிருப்பவனிடம் ஏண்டா என்று கேட்டால்..

“ஞானத்தேடலில் இருக்கிறேன்.. டிஸ்டர்ப் பண்ணாதே..” என்று பில்ட்-அப் காட்டுவான்..

“ஐய்யே.. உன் மூஞ்சிக்கு ஞானத் தேடல் வேறயா..? உனக்கெல்லாம் அது செட் ஆகாதுடா..” என்பாள் தம்பியைச் சரியாக கணித்து வைத்திருக்கும் நந்தினி..

தம்பியின் மீதான அவளது கணிப்பு நூற்றுக்கு நூறு மெய்யானது என்பதை நிரூபணம் செய்வான் நந்தகுமார்.

“அதாகப்பட்டது அக்கா.. என்னோட ஞானத்தேடல் ஒரு மார்க்கமானது.. சன்யாசத்துக்கும் இதுக்கும் ரொம்பத் தூரம்..”

“அதான் தெரியுமே.. நீ ஒரு மார்க்கமானவன் கூட இல்லடா குமாரு.. பல மார்க்கமானவன்..”

“அஃது.. என்னைப் பத்தித் தெள்ளத் தெளிவா புரிஞ்சு வைச்சிருக்கிற.. ஐ அட்மைர் யு..”

“உன்னோட அட்மைரைத் தூக்கி உடப்பில போட்டுட்டு உன் ஞானத்தேடல் என்ன தேடல்ன்னு சொல்லித் தொலை..”

“தேடலில் தொலைவதாகத்தான் உத்தேசித்திருக்கிறேன் அக்கா.. இப்போ இல்ல.. இன்னும் ரெண்டு வருஷம் கழிச்சு..”

“அதையேண்டாத் தள்ளிப் போடற..? இப்பவே தேடலை ஆரம்பிக்க வேண்டியதுதானே..? இந்த வருஷத்தில நாள் நல்லா இல்லையா..?”

“நீ சின்னப் பெண்..”

“யாரு..? நானு..? சின்னப் பொண்ணு..? நீ மகாப் பெரியவன்..?”

“யெஸ் மைடியர் சிஸ்டர்.. உனக்கு விவரம் பத்தாது.”

“இப்போச் சொன்ன பாரு.. இதை கல்வெட்டில பெறிச்சு வை.. அதைப் பார்த்தாவது அப்பா மலையிறங்கட்டும்..”

“அது மட்டும் நடக்கவே நடக்காது அக்கா.. உன்னைப் பொருத்தவரை நம்ம அப்பா மலையுச்சியில்தான் குடியிருப்பார்..”

“தடியா..! உன் வாயில நல்ல வார்த்தையே வராதா..? இந்த லட்சணத்தில இவன் ஞானத்தைத் தேடப் போறானாம்.. அதுவும் ரெண்டு வருஷம் கழிச்சாம்.. ஏண்டா..?”

“அப்போத்தான் ஞானத்தேடல் வசமாகும் சகோதரி..”

“உனக்கெல்லாம் ஞானம் வந்து.. ம்ஹூம்..”

“அதாவது அக்கா.. ஒருத்தியைக் காதலிச்சு விதிவசத்தாலே அவளுக்கே தாலியைக் கட்ட வேண்டி வந்திருச்சுன்னா அவளுக்குப் புருஷனாகலாம்..”

“ஆஹா..! என்ன ஒரு கண்டுபிடிப்பு.. நீ அறிவாளிடா தம்பி..”

“ரொம்பப் புகழாதே.. கூச்சமாயிருக்கு.. இன்னும் கேளு.. அதுவே பனிரெண்டு பேரைக் காதலித்து பதிமூனாவதா ஒருத்தியைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா ஞானியாகலாம்.. நான் ஞானியாக விரும்பறேன்.. அதுக்கு ஞானத் தேடலை ஆரம்பிக்கனும்னா இன்னும் ரெண்டு வருஷம் போகனும்.. அதான் செட்டாகும்..”

“அடப்பாவி.. உருப்படுவியாடா நீ.. உன்னையெல்லாம் தண்ணி தெளிச்சு பேச விட்டுட்டு.. தேமேன்னு இருக்கிற என்மேல அப்பா ஹிட்லர்த்தனத்தக் காமிக்கிறாரே.. இதை என்னன்னு சொல்றது..?”

இப்படித் தமக்கையைத் தலையில் அடித்துக் கொண்டு புலம்பவைப்பவன்தான் நந்தகுமார்..

# அத்தியாயம் 4

“மறந்து போனவங்க அப்படியே மறந்து தொலைச்சிருக்க வேண்டியதுதானேடா..? எதுக்காகடா இப்ப நினைச்சுப் பார்த்தாங்க..?” ஆற்றாமையுடன் கேட்டாள் நந்தினி..

அவளுடைய அம்மாவின் மலரும் நினைவுகள் நந்தினிக்கு அல்லவா குழி பறித்துக் குப்புறத் தள்ளியிருக்கின்றன..!

“நீ வேற.. நம்ம அம்மாவுக்கு ஒண்ணும் மலரும் நினைவுகள் மலரலை.. அவங்கதான் அப்பாவைக் கல்யாணம் பண்ணி நம்ம ரெண்டு பேரையும் பெத்து வளர்த்து ஆளாக்கிற கோராமையில பக்கத்து வீட்டு அக்கப் போர்களில ஆர்வம் காட்டற அம்மாவா மாறிப் போயிட்டாங்களே.. இதில இவங்களுக்கு நினைவுகள் மலர்ந்திட்டாலும்.. கழுதையில..”

நந்தகுமார் நொடித்தான்.. வெண்ணிலா அப்படித்தான் ஆகியிருந்தாள்.. மகநாதனின் அடக்குமுறைக்கு ஆட்பட்டு வீட்டுச் சிறையில் இருப்பவளுக்கு அக்கம் பக்கத்தில் யார் இருக்கிறார்கள்.. எவர் இருக்கிறார்கள் என்று தெரியாமல்

தலை வெடித்து விடும் போல ஆகி விட்டது.. அவளுக்கு ஆற்றாமை ஆற்றாமையாக வரும்.. ஒன்றுக்கு இரண்டு பிள்ளைகளைப் பெற்று வைத்தும் அக்கம் பக்கம் என்ன நடக்கிறது என்று விவரம் சேகரித்து வந்து சொல்லத் தெரியாத மக்காக இருக்கிறார்களே என்று நொந்து போவாள்..

நந்தினியாவது அக்கம் பக்கத்து வீடுகளைக் கண்டு கொள்ள மாட்டாள்.. நந்தகுமார் அப்படியில்லை.. அக்கம் பக்கத்து வீடுகளில் மட்டுமல்ல.. தஞ்சையிலிருக்கும் ஒட்டு மொத்த வீடுகளிலும் என்ன நடக்கிறது என்பதை தெரிந்து வைத்திருப்பான்..

“எப்புடிடா..?” என்ற நந்தினியின் வியப்புக்கு..

“ஒவ்வொரு ஏரியாவிலும் ஒரு ஃபிரண்டு இருக்கானில்ல..?” என்று காலரைத் தூக்கி விட்டுக் கொள்வான்..

அவற்றைத் தாயிடம் ஒப்பிக்க மாட்டான்.. வெண்ணிலா எதையாவது கேட்டால் எனக்குத் தெரியாதும்மா என்று சாதித்து விடுவான்.. ஒரு செய்தியைச் சொன்னால் அதைக் கேட்டு விட்டுப் போகாமல் ஏன், எதற்கு என்று ஆயிரம் துணைக் கேள்விகள், கோடி துணைக்குத்துனை கேள்விகள்

என்று கேட்டு மகனை ஒரு வழியாக்கி விடுபவள் வெண்ணிலா என்பதால்தான் அந்த சாதுர்யமான தப்பித்தல்..

“அம்மாவுக்கு வெண்ணிலான்னு பேர் வைச்சிருக்கக் கூடாதுக்கா.. கேள்வியின் நாயகின்னு பேர் வைச்சிருக்கனும்..” என்பான்..

இப்படி பெற்ற பிள்ளைகள் தகவலை ஒலி பரப்பாமல் இருட்டடிப்பு செய்து வைத்திருக்கும் துக்கத்தை அகற்றவென்று வந்து வாய்த்தவள்தான் பக்கத்து வீட்டு பாக்கியம்..!

வெண்ணிலாவுக்கான செய்திகளை ஒலிபரப்புவது அவள்தான்.. அக்கம் பக்கத்து வீடுகளின் விவரங்கள் மட்டுமல்லாமல் அக்கம் பக்கத்து தெருக்களில் இருக்கும் வீடுகளில் நடக்கும் விவரங்களைக் கூடச் சேகரித்து வந்து வெண்ணிலாவிடம் ஒப்பித்து விடுவாள்..

“நம்ம ஏரியாவோட ஒட்டு மொத்த இன்ஃபர்மேஷனையும் பக்கத்து வீட்டு பாக்கியமக்கா மொத்த லீஸுக்கு எடுத்திருக்கிறதினால எனக்குன்னு ஒரு புது நியூஸ்கூட மிஞ்சறதில்லக்கா..” என்று நந்தினியிடம் காண்டாவான் நந்தகுமார்..

இப்படிச் செய்திகளை ஒலிபரப்பும் பாக்கியத்தின் பிராண சிநேகிதியாக மாறிப் போயிருந்த வெண்ணிலாவுக்கு பால்யகால சிநேகிதியைப் பற்றிய மலரும் நினைவு எங்கேயிருந்து வருமாம்..?

“மலரும் நினைவு மனசில வரலைக்கா.. நேரிலேயே வந்திருச்சு..” புதிர் போட்டான் நந்தகுமார்..

“நேர்ல வந்திருச்சா..?” விழித்தாள் நந்தினி..

“இப்படி மொச்சக் கொட்டக் கண்ண வைச்சுக்கிட்டுத் திருதிருன்னு முழிக்காதே.. பார்க்கவே பயமா இருக்கு..”

“அப்படியாடா சொல்ற..?” சந்தோஷமானாள் நந்தினி..

“அவன் பெண் பார்க்க வர்றப்ப இப்படி முழிச்சுப் பார்க்கவா..? இந்தப் பொண்ணு வேணாம்ன்னு ஓடிப் போயிருவானில்ல..?”

“பேராசைப் படாதே.. நடக்காது..”

“ஏண்டா நடக்காது.. உன் ஊத்தை வாயை மூடிக்கிட்டுச் சும்மாயிரு.. வாயை வைக்கிறான்..”

“என் ஊத்தை வாயை மூடினாலும் நீ அவன் கையில மாத்து வாங்கப் போறது மட்டும் மாறவே மாறாதுக்கா..

ஏன்னா அவன் உன்னைப் பொண்ணுப் பார்க்க வரப் போறதில்ல.. போட்டோவைப் பார்த்தே தலையை ஆட்டிட்டானாம்.."

"குமாரு.."

இடிந்து போய் விட்டாள் நந்தினி.. அவன் மட்டும் அவள் போட்டோவைப் பார்த்து விட்டால் போதுமா..? அவள் அவனுடைய போட்டோவைப் பார்த்துச் சம்மதம் சொல்ல வேண்டாமா..?

"அந்த அளவுக்கு வந்துட்டியா..?" கர்ஜித்தார் மேகநாதன்..

நடுங்கிப் போய் விட்டாள் நந்தினி.. என்னவோ அவள் கேட்கக் கூடாத ஒன்றைக் கேட்டு விட்டதைப் போல தாம், தூமெனக் குதித்தார் அவளுடைய தந்தை..

"நான் கீறின கோட்டை என் பெண் தாண்ட மாட்டான்னு பெருமையடிச்சுக்கிட்டு இருக்கேன்.. மேகநாதன் அப்படித்தான் பெண்ணை வளர்த்து வைச்சிருக்கான்னு இந்த ஊரும் உலகமும் நினைச்சுக்கிட்டு இருக்கு.."

இந்த ஊருக்கும் உலகத்துக்கும் வேறு வேலையே இல்லையா என்றிருந்தது நந்தினிக்கு.. சுயமரியாதை, சுயசிந்தனை, சுய விருப்பம் என்று சுயத்தோடு அவள் வளர்ந்து நின்றிருக்கிறாள்.. மேகநாதன் வளர்க்க நினைத்தைப் போல 'சுயம்' இல்லாத அடிமையாக வளர்ந்து நிற்கவில்லை என்பதை அவர் அறிவாரா..?

மேகநாதன் அறியாமல்தான் இருந்தார்.. அவரது பேச்சுக்கு மகள் மறுபேச்சுப் பேசிவிடக்கூடாது என்ற அடக்கு முறையுடன்தான் இருந்தார்.. ஆத்திரத்தின் உச்சத்தில் இருந்தார்..

"பெத்தவங்க பாத்து வைச்சிருக்கிற மாப்பிள்ளைக்குக் கழுத்தை நீட்டறதுதான் நல்ல மகளுக்கு அடையாளம்.. அதை விட்டுட்டு போட்டோவைப் பார்த்துட்டுத்தான் சம்மதம் சொல்லுவேன்னு சொல்லுறியே.. எங்கேயிருந்து வந்துச்சு இந்த தைரியம்..?"

தைரியம் என்ன வாசல் தேடியா வந்து சேரும்..? மனதில் வாசம் செய்யும் தைரியத்தைப் பற்றி மேகநாதனிடம் யார் சொல்வது..? ஆனாப்பட்ட நந்தகுமாரே முடியாது என்று மறுத்து விட்டான்..

“பாருக்கா.. உனக்குத்தான் அப்பா ஹிட்லர்.. எனக்கு ஃபிரண்ட்.. ஃபிரண்ட்ஷிப்பைக் கெடுத்துக்கிற வேலையை நான் பண்ண மாட்டேன்..”

“டேய்.. நான் உன் அக்காடா..”

“அதுக்கு..? எனக்கும் அப்பாவுக்கும் இருக்கிற ரிலேஷன் ஷிப்பில வெடி வைச்சுக்கச் சொல்றியா..? நல்லாயிருக்கே.. அவர் என் அப்பா..”

தம்பியும் கை விட்டு விட்டானே என்று சோர்ந்து போனாள் நந்தினி.. எங்கேயோ தொலைந்து போன சிநேகிதி எப்படித் திரும்பி வந்தாள்..? எப்போது திரும்பி வந்தாள்..

“இது பேச்சு.. உனக்கு விவரம் வேணும்னாக் கேளு.. மூட்டை மூட்டையா அவிழ்த்து உன் முன்னாலே கொட்டிப் பரத்தறேன்.. அதை விட்டுட்டு அப்பாவை எதிர்த்துக் குரல் கொடுக்க மட்டும் சொல்லாதே.. அப்பேற்பட்ட புரட்சி வீரன் நானில்லை..”

“சுயநலக்காரா..”

“இல்லேன்னு யார் சொன்னது..? நான் பொது நலவாதின்னு எப்போவாச்சும் பீலா விட்டிருக்கேனா..? ஐ ஆம் எ செல்ஃபிஷ்மேன்..”

“உன்னைக் கட்டையில அடிச்சாத்தாண்டா என் மனசு ஆறும்.. நீயெல்லாம் என் உடன் பிறப்பு..! தூ..”

“துப்புறதா இருந்தா தனியா இருக்கிறப்ப துப்பு.. எதிர் வீட்டு பாமா என்னோட கிளாஸ்மேட்.. அவ பார்க்கிறப்ப துப்பி வைச்சேன்னு வைய்யி.. என் இமேஜ் டேமேஜாகிரும்..”

“டேய்ய்..”

“ரொம்பத்தான் சவுண்ட விடாதே.. இப்ப என்ன உனக்கு..? அந்த மனுஷன் ‘கன்’ன வைச்சிருந்தாலும் சவுண்டு பார்ட்டியாச்சே.. கோடிஸ்வரன்.. படா பிஸினெஸ் மேன்.. கட்டிக்க உனக்குக் கசக்குதா..? கொஞ்சூண்டு பணமிருக்கிற நம்ம அப்பாவே அடாவடி பண்றாரு.. அவன்கிட்டயோ கோடிக்கணக்கில பணமிருக்கு.. சரக்குன்னா பெல்ட்டாலே விளாசத்தான் செய்வான்.. கோபம் வந்தா ‘கன்’னெடுத்து கை, காலில சுடத்தான் செய்வான்.. நீதான் என்கிட்ட வாயடிக்கிறதைப் போல அவன்கிட்டயும் வாயடிக்காம

வாயை அடக்கிக்கிட்டு அடங்கிப் போகனும்.. யு ஸீ.. ஆப்டர் ஆல் யு ஆர் எ வுமன்..! ஹ..”

முடிந்த அளவுக்கு வெறுப்பை ஏற்றினான் நந்தகுமார்.. அவன் வேடிக்கையாக மிரட்டினாலும் அவன் பேச்சில் உள்ள உண்மை நந்தினியைச் சுட்டது.. என்னதான் இன்ஜினியரிங் படிப்பை படித்திருந்தாலும் அவள் ஒரு பெண்..! பிளஸ் டூ பரிட்சை எழுதியிருக்கும் நந்தகுமார் எனும் ஆண்பிள்ளையின் பக்கத்தில் கூட அவளால் நிற்க முடியாது.. அவனது வானளாவிய உரிமை அவன் ஆண்மகன் என்பதினால் அவனுக்கு வழங்கப் பட்டிருக்கிறது.. வாழ்க்கை முழுவதும் சேர்ந்து வாழப் போகிறவன் யார் என்பதை அறியும் அடிப்படை உரிமைகூட நந்தினி பெண் என்பதால் அவளுக்கு மறுக்கப் பட்டிருக்கிறது..

‘குமாரோட கல்யாண விஷயத்தில அப்பா இப்படி நடந்துக்குவாரா..?’ தனக்குள் கேட்டுக் கொண்டாள் அவள்.

நிச்சமாக நடக்காது.. நந்தகுமாரின் விருப்பத்தை மதித்து அவனைப் பெண் பார்க்க அழைத்துப் போவார்கள்.. அவன் விரும்பாத பெண்கள் நிராகரிக்கப்படுவார்கள்.. அவன்

விரும்பும் பெண் கிடைக்கும் வரை தேடுதல் வேட்டை நடக்கும்..

நந்தினி மட்டும் என்ன பாவம் செய்தாள்..?

**‘பெண்ணென்று பூமிதனில்**

**பிறந்து விட்டால் - மிகப்**

**பீழை இருக்குதடி தங்கமே தங்கம்..’**

பாரதியின் பாடல் வரிகள் அவள் மனிதல் ஓடின.. அவள் அடிமைத்தளையை அறுத்து எறியத் துடித்தாள்..

**‘மாட்டை வசக்கித் தொழுவினில்**

**மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே**

**வீட்டினில் எம்மிடம் காட்ட வந்தார் - அதை**

**வெட்டி விட்டோமென்று கும்மியடி..’**

மனதில் ஒலித்த பாடலின்படி செயல்பட முடியாமல் அயர்ச்சி அவளை ஆட்கொண்டது.. மறுக்கப்படும் உரிமைகளை நினைத்து மருகினாள் நந்தினி..

“கன்யாகுமரிக்குப் பிழைக்கப் போன அந்த நாலு விட்ட மாமன் நல்லாப் பிழைக்க ஆரம்பிச்சுட்டாராம்.. அவரைப்

போல பெரிய பணக்கார இடத்தில இருந்து சம்பந்தம் தேடி வந்துச்சாம்.. அன்னியத்திலதான் பெண் கொடுக்கனும்னு அவரு தீர்மானிச்சுட்டாராம்.. கஷ்டப்பட்ட காலத்தில கை கெடுக்காத சொந்த பந்தத்த மகளோட கல்யாணத்துக்குக் கூடக் கூப்பிடக் கூடாதுன்னு மனசில வென்ஜன்ஸ் வைச்சுக்கிட்டு தஞ்சாவூருப் பக்கம் தலை வைச்சுக் கூடப் படுக்காம மகளோட கல்யாணத்த தாம் தூம்ன்னு சிறப்பாய் பண்ணி வைச்சுட்டாராம்..

“அப்புறம் ஏண்டா இந்தப் பக்கம் தலை வைச்சுப் படுத்தாங்க..?”

“அவரா தலை வைச்சுப் படுத்தார்..? அவரோட மகதானே சுற்றுலாவுக்கு கிளம்பி வந்து உன் கல்யாணத்தை நிச்சயம் பண்ணிட்டுப் போயிருக்காங்க..?”

“கன்யாகுமரியில இருந்து தஞ்சாவூரைச் சுத்திப் பார்க்க வந்தாங்களா..?”

“நல்லாயிருக்கே.. நமக்குத்தான் கன்யாகுமரி டூரிஸ்ட் ஸ்பாட்.. அவங்களுக்கு அவங்களோட ஊர்.. சுற்றுலான்னா குடியிருக்கிற ஊரை விட்டுட்டு மத்த ஊரைத்தான் சுற்றிப் பார்க்கனும்ங்கிறது எழுதப்படாத விதிக்கா.. நாம சுற்றுலா

கிளம்பினாத் தஞ்சாவூரையா சுற்றிப் பார்க்கிறோம்..? அதோட அவங்க ஒண்ணும் கன்யாகுமாரியில இல்ல.. அவங்க ஹஸ்பெண்டோட ஊரில இருக்காங்க..''

‘‘அவங்க எந்த ஊரில இருந்தா எனக்கென்னடா..?''

‘‘அப்படியெல்லாம் சொல்லப்படாது.. நாளைக்கு நீ வாழப்போகிறது அந்த ஊரிலதான்ங்கிறதை மறந்திராதே..''

‘‘நான் மறந்தாலும் நீ மறக்க மாட்டியே..''

‘‘உன் தம்பின்னு எதுக்கு இருக்கேன்..''

‘‘இப்படிக் கடுப்பேத்தத்தான் இருக்க.. வேற எதுக்கு இருக்கே.. அவங்க சுற்றுலா வந்த கதையை கண்டினியூ பண்ணு..''

‘‘தஞ்சைன்னாலே பெரிய கோவில்தானே நினைவுக்கு வரும்..? அவங்க பெரிய கோவிலுக்கு வந்திருக்காங்க.. நம்ம அம்மாவும் பக்கத்து வீட்டு பாக்கியமக்காவும் அடுத்த தெருவில இருக்கிற பிள்ளையார் கோவிலுக்குப் போய்விட்டு வர்றதா அப்பாவுக்கு போக்குக் காட்டிட்டுப் பெரிய கோவிலுக்குப் போயிருக்காங்க..''

‘‘இதையெல்லாம் அப்பா ஏன்னு கேட்க மாட்டாராடா..?''

“தெரிஞ்சாத்தானே கேப்பார்..? நீயும்தான் படிக்கப் போகிறேன்னு சென்னைக்கு ஓடிட்டு தலைமறைவா ஊர் சுத்தின.. உனக்கொரு நியாயம்.. அம்மாவுக்கு ஒரு நியாயமா..?”

“நியாயஸ்தண்டா நீ..”

“அஃது.. தஞ்சை பெரிய கோவிலுக்கு நிகழ்கால சிநேகிதியோட போன நம்ம அம்மா பால்யகால சிநேகிதியைச் சந்திச்சுட்டாங்க..”

“அப்புறம்..?”

“அப்புறமென்ன..? பாய்ஞ்சு நாலு விட்ட மாமன் மகளை அம்மா கட்டிக்க.. அவங்க பதிலுக்கு அம்மாவைக் கட்டிக்கன்னு ஆரம்பிச்சது அவங்க மகனுக்கு உன்னைக் கட்டிக்கிறதில வந்து முடிஞ்சிருக்கு..”

“எனக்கு மட்டும் ஏண்டா இப்படியெல்லாம் நடக்குது..?”

“நிறைய டி.வி சீரியல்களப் பாத்தா இந்த டயலாக்தான் வரும்..”

“குமாரு..”

“பின்னே என்னக்கா..? ஏற்கனெவே வீட்டில ஓடிக்கிட்டு இருக்கிற சீரியல் போதாதா..? நீ வேற ஆரம்பிக்கனுமா..?”

“அப்பா எப்படிடா இதுக்கு ஒப்புக்கிட்டாரு..”

“நீ வேற.. பக்கத்து தெரு பிள்ளையார் கோவிலுக்குப் போறேன்னு சொல்லிட்டுப் போன பொண்டாட்டி கப்பல் மாதிரி வெளிநாட்டுக் காரில வந்து இறங்கினதும் அவங்க சொல்லாமக் கொள்ளாம பெரிய கோவிலுக்குப் போனதையே ஒப்புக்கிட்டவரு இதை ஒப்புக்க மாட்டாரா..? அந்தம்மா வேற பட்டும் வைரமுமா ஜொலிக்கிறாங்க.. அவங்க பொண்ணு அதைவிட அழகா அப்சரஸ் மாதிரி இருக்கு.. ஆனா என்ன ஒரு காலக் கொடுமைன்னு பார்த்தேன்னா நீயும் அதுவும் ஒரே வயசாம்.. ம்ஹூம் எனக்கு எட்டாக் கனி..” நந்தகுமார் பெருமூச்சு விட..

“உனக்கு உன் பிரச்னை..” என்று தம்பியை மொத்தினாள் நந்தினி..

# அத்தியாயம் 5

“**வா**ராது வந்த விருந்தாளியை செமத்தியாக் கவனிக்கனும்னு வடையும் கேசரியுமா வீடே நெய் வாசனையில மூழ்குச்சு.. அவங்களை மாடி ரூமில தங்க வைக்கனும்னு அப்பா பறப்பாப் பறந்தார்.. என் ரூமையும் சேர்த்துக் கை வைச்சார்.. மத்தவங்கன்னா பொங்கியிருப்பேன்.. மலர் டீச்சர்ங்கிறதினால பொங்கலை..”

“மலர் டீச்சரா..?”

“அந்தம்மாவோட பொண்ணுக்கு நான் வைச்ச பேரு அது..”

“என் வயசுன்னு சொன்ன..?”

“சைட்டா அடிச்சேன்..? ஒரு பிரியம்தான்..”

“உதைபடப் போறேடா..”

“உன்கிட்டயா..?”

“ஊஹூம்.. அப்பாகிட்ட.. ஒருநாள் இல்லேன்னா ஒருநாள் அவர்கிட்ட நீ மாட்டி அடி வாங்கனும்.. அதைக் கண்குளிர நான் பார்க்கனும்.. அப்பத்தான் என் மனசு ஆறும்..”

“உன் மனசு ஆறவே ஆறாது.. அதை ஹண்ட்ரெண்ட் பெர்சென்ட் ஷ்யூரா நான் சொல்லுவேன்.. அப்பாவாவது அரட்டலோடு நிறுத்திக்குவார்.. ஆனா உனக்கு மாலையிடப் போகிற மணாளன் இருக்காரே.. பெல்ட்டாலேயே விளாசி பின்னிப் பெடலெடுத்திருவாராம்..”

‘நிஜமாத்தான் சொல்றானா..?’

தம்பியின் முகத்தை உற்றுப் உற்றுப் பார்த்தாள்.. அவன் கண்களில் பொய்யில்லை.. அவளுக்கு குளிர்காய்ச்சல் வருவதைப் போல இருந்தது.. தம்பியின் முன்னால் பயத்தை வெளிப்படுத்திக் கொள்ளும் மனமின்றி..

“நீ கண்ட..” என்று வீம்பாகச் சொன்னாள்..

“கண்ணால கண்டாத்தான் சொல்லனுமா..? காதாலே கேட்டாலும் சொல்லலாம்..” கித்தாய்ப்பாக சொன்னான் நந்தகுமார்..

“காதாலே கேட்டயா..?”

“ஆமா..”

“யாருடா இந்த அரிய பெரிய தகவலைச் சொன்னது..?”

“வேற யாரு.. எல்லாம் அம்மாவோட சிநேகிதான்.. மகனோட கோபத்தைப் பத்திப் படு பெருமையாப் பீற்றிக்கிட்டாங்க.. கடவுள்தான் நம்மை மறுபடியும் சந்திக்க வைத்திருக்காரு வெண்ணிலா.. உன்னைப் பார்க்கிற வரைக்கும் நீயும் நானும் சம்பந்திகளா ஆகனும்னு நாம செய்துக்கிட்ட சத்தியத்தைப் பத்தி மறந்தே போயிட்டேன் பார்த்தியா.. அதை நினைவு படுத்தத்தான் உன்னை என் கண்ணிலே காட்டியிருக்காருன்னு உருகிப் போயிட்டாங்க்கா..”

அப்படி மாமன் மகளின் கண்களில் பட்டு பால்யகால சத்தியத்தை நினைவு படுத்தி விட்டத் தாயை நினைத்து கோபத்துடன் நம்பியாரைப் போலக் கைகளைப் பிசைந்தாள் நந்தினி..

“இந்த அம்மாவை என்னடா செய்யலாம்..?” என்று அங்கலாய்த்தாள்..

“இது உன் பிரச்னை.. என்னடா செய்யலாம்னு என்னை கூட்டுச் சேர்க்காதே.. செட்டி நாட்டில பிறந்தவங்க.. தஞ்சையை மணக்க வைக்க வாக்கப்பட்டு வந்தவங்க.. அவங்க கைச்சமையலுக்கு இந்த நந்தகுமார் அடிமை..!

அதனால என்னையும் அம்மாவையும் எதிரிகளா கோர்த்து விடனும்ங்கிற கனா மட்டும் கண்ட விடாதே..”

“உனக்கு நாக்குத்தான் முக்கியம்.. இந்த அக்கா முக்கியமில்லைல்ல..?”

நந்தினி கண்கலங்கியதைத் தாங்க முடியாமல் உருகிப் போன நந்தகுமார்..

“நீ முக்கியமில்லைன்னு யார் சொன்னது..? உன்னோட அட்டச் சோம்பேறித்தனத்துக்கு அந்த ஆள்கிட்ட தினமும் பெல்ட்டடி வாங்குவேன்னுதான உண்மையைப் போட்டு உடைச்சுக்கிட்டு இருக்கேன்..?” என்று நியாயம் கேட்டு கலவரப்படுத்தினான்.

“ஏதாச்சும் வழி சொல்வேன்னு பார்த்தா நீ புளியைக் கரைச்சு ஊத்தறதிலேயே குறியாய் இருக்கியேடா..” நந்தினியின் கண்கள் பொங்கின..

அழுதழுது நான்கு கைக்குட்டைகளைச் சொட்டச் சொட்ட நனைத்து விட்ட தமக்கையை பரிதாபத்தடன் பார்த்தான் நந்தகுமார்.. உனக்கு வரப் போகும் கணவன் கண்ட்டிப்பானவன்.. எதிலும் ஒரு நேர்த்தி இருக்க வேண்டும் என்று நினைப்பவன்.. கோபம் வந்து விட்டால் பெல்ட்டால்

விளாசிப் பின்னிப் பெடலெடுப்பவன்.. துப்பாக்கியைத் தூக்கிச் சுட்டுத் தள்ளி விடுபவன்.. அடக்குமுறையில் கை தேர்ந்தவன்.. உனது சுதந்திர மனப்பான்மைக்கும் அவனுக்கும் காத தூரம்.. வாழ்க்கையை இலகுவாக வாழ நினைக்கும் உன்னால் அவனுடன் ஒருநாள்கூடக் குப்பை கொட்ட முடியாது என்ற விவரங்களைத்தான் அவனால் பிட்டுப் பிட்டு வைத்துத் தமக்கையின் முன்னால் கடை பரப்ப முடிந்தது.. அதிலிருந்து தப்பிக்கும் மார்க்கத்தைக் கண்டு சொல்ல முடியவில்லை..

“என்னை என்னதான் செய்யச் சொல்ற..? அம்மா பலாகரம் செய்யற கேப்பில வந்தவங்களுக்கு போரடிக்காம இருக்கனும்னு போட்டோ ஆல்பத்தைத் தூக்கிக் கையில கொடுத்துட்டுப் போயிட்டாங்க.. அவங்க அதில இருக்கிற உன் போட்டோக்களைப் பார்த்து ஆஹா.. ஊஹோன்னு பாராட்டி உன் அழகை மெச்சிப் பத்துப் பதினைந்து போட்டோக்களை உறுவி வைச்சுக்கிட்டாங்க..”

“எதுக்காம்டா..?”

“வேற எதுக்கு..? அந்த மிலிட்டிரி மேன்கிட்ட காட்டத்தான்..”

“இந்த அம்மா வேணும்னே சதி பண்ணியிருக்காங்கடா..”

“புத்திசாலி மம்மி..! என்னமா பிளான் பண்ணியிருக்காங்கன்னு பாரு.. பெண் பார்க்க வர்ற வேலையை மிச்சம் பண்ணிட்டாங்க.. கம்மாண்டர் உன் போட்டோவைப் பார்த்ததுமே கிளீன் போல்டாம்.. நிச்சயம் கூட வேணாம்.. டைரக்டா கல்யாண மேடைக்கே போயிரலாம்ன்னு கல்யாணநாள் பார்க்கச் சொல்லி கிரின் சிக்னல் கொடுத்துட்டாராம்..”

அவன் பச்சைக் கொடியை ஆட்டி விட்டால் போதுமா..?

நந்தினி ஒப்புக் கொள்ள வேண்டாமா..?

அவளது விருப்பத்தைக் கேட்க வேண்டுமென்று நினைக்காத முகம் தெரியாத அந்த கல் நெஞ்சக்காரனை மனமார வெறுத்தாள் நந்தினி.. அவனைத் திருமணம் செய்து வாழ்வதை விடத் தற்கொலை செய்து கொள்வது சாலச்சிறந்தது என்று முடிவுக்கு வந்தாள்..

அதை நந்தகுமாரிடம் சொல்லி விட முடியாது.. தமக்கை தற்கொலை செய்து சாவதை விட.. அந்தக் கல்நெஞ்சக்காரனிடம் பெல்ட் அடி வாங்கிக் கொண்டு வாழ்ந்து

விடட்டும் என்ற முடிவுக்கு அவன் வந்து விடுவான்.. அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா என்று அனைத்து உறவினர்களுக்கும் பண்பலை இல்லாமலே தகவலைப் பரப்பி விடுவான்.. அதன் பின்னால் நந்தினி எத்தனைதான் பாடுபட்டாலும் தற்கொலை என்ற வார்த்தையை நினைத்துக் கூடப் பார்க்க முடியாது..

மனதிலிருப்பதை மறைத்து நடிக்க ஆரம்பித்தாள் நந்தினி.. வேறு வழியின்றி கட்டாயத் திருமணத்தை ஏற்றுக் கொள்பவளைப் போல முகத்தை வைத்துக் கொண்டாள்..

"என் விதி இப்படியாடா ஆகனும்..?" என்று மூக்கை உறிஞ்சி வைத்தாள்..

நந்தகுமாருக்கு இரக்கமாகத்தான் இருந்தது.. மேகநாதனும் வெண்ணிலாவும் நல்ல மனநிலையில் இருக்கும் போது பேசிப் பார்த்தான்.. நந்தினிக்கு விருப்பமில்லாத திருமணத்தை நடத்தி வைக்க வேண்டாமென்று அவனால் ஆன மட்டும் சொல்லிப் பார்த்தான்.. அவர்கள் மசிய மாட்டேன் என்று சொல்லி விட்டார்கள்.. அத்தோடு விட்டாலும் பரவாயில்லையே..

நந்தினியின் சார்பாக பேசி விட்டானென்று நந்தகுமாரையும் வறுக்க ஆரம்பித்து விட்டார்கள்..

“லூஸாடா நீ..?” மேகநாதன் பல்லைக் கடித்தார்..

‘இது ஒண்ணுதான் பாக்கி..’ நந்தகுமாரன் நொந்தகுமாரனானான்..

“என்னப்பா இப்படிச் சொல்கிறீங்க..?”

“வேற எப்படிச் சொல்லச் சொல்ற..? உன் அக்காதான் விவரம் கெட்டத்தனமா பேசுதுன்னா நீ அதுக்கு மேல இருக்கறியே.. உன்னைப் புத்திசாலின்னு நினைச்சேன் குமாரு..”

‘தத்தி’யாகி விட்டாயே என்று மேகநாதனின் பார்வை சொல்லாமல் சொன்னதில் புத்திசாலிப் பட்டத்தைத் தக்க வைத்துக் கொள்ள தன் திருவாயை இறுக மூடித் தாழ்ப்பாளை போட்டு விட்டு ஜகா வாங்கியவன், தகப்பனாரிடம் நாட்ட முடியாத வெற்றிக்கொடியை தாயாரிடம் நாட்டி விடலாமென்று அங்கே போனான்..

பால்ய கால சிநேகிதியான நான்கு விட்ட மாமன் மகளின் சம்பந்தம் முறிந்து விடக் கூடாது என்பதில் படு முனைப்பாக இருந்த வெண்ணிலா மகனை வெளுத்து வாங்கி விட்டாள்..

“அக்காவுக்கு அருமையான சம்பந்தம் தேடிப் பிடிச்சுக் கொண்டு வரத்தான் துப்பில்லை.. தானா வந்திருக்கிற சம்பந்தத்தை இறுக்கிப் பிடிச்சுக்கனும்ங்கிற துப்பாவது இருக்கனுமா, வேணாமா..?”

“அம்..மா..மா..மா..”

“தானா வந்திருக்கிற சம்பந்தத்த தடியால அடிச்சுப் பற்றிவிடத் துடிக்கிற தம்பிய இப்போத்தாண்டாப் பாக்கறேன்.. அவளே மனசு மாறிட்டா.. நீயேண்டா குட்டையைக் குழப்பனும்னு துடியாய் துடிக்கிற..?”

இந்தப் பழி தேவைதானா என்று நந்தகுமார் ஊர் சுற்றப் போய்விட்டான்.. தம்பியினால் எந்த ஆனியையும் பிடுங்க இயலாது என்று நந்தினிக்குத் தெரியும்தான்.. இருந்தாலும் ஏதேனும் ஒரு சிறு மாற்றம் நிகழ்ந்து விடாதா என்ற நப்பாதை அவள் இதயத்தின் மூலையில் ஒட்டியிருந்தது.. அதுவும் நிராசையாகி விட்டக் காலக்கொடுமையில் அவள் மனதொடிந்து குமுறினாள்.

பிடிக்காத திருமணத்திலிருந்து தப்பிக்க என்னதான் வழி என்று தலையைக் குடைந்து குடைந்து யோசித்தாள்.. தோழிகள் வீட்டுக்கு ஓடி விடலாம் என்றால் அவள் எங்கு சென்றாலும் அங்கே தேடி வந்து அழைத்து வந்து விடுவார்கள்.. அதற்கு தோழிகளின் பெற்றவர்கள் ஆதரவு தெரிவிப்பார்கள்.. நந்தினியால் தோழிகளுக்கு இடர் விளையக் கூடும் என்பதால் அந்த யோசனையைத் தவிர்த்தாள்..

தற்கொலைதான் சரியான முடிவு என்ற இறுதி முடிவுக்கு வந்தவளுக்கு அதை எப்படிச் செயல் படுத்துவது என்றுதான் தெரியவில்லை..

தஞ்சையில் தற்கொலை செய்து கொண்டால் கூடவே தம்பியும் பெற்றவர்களும் தற்கொலை செய்து கொள்ளும் அபாயம் நேர வாய்ப்பிருக்கிறது.. அவள் செத்து விடுவேன் என்று பயமுறுத்திய போது..

“சாவதா இருந்தாக் குடும்பத்தோட சேர்ந்து செத்துப் போகலாம்.. வா..” என்று விஷப் பாட்டிலும் பாயாசக் குண்டாவுமாக குடும்பத்தினரைக் கூட்டி வைத்து உட்கார்ந்தவர்தான் மேகநாதன்..

என்ன சொன்னாலும் திருமணம் தடைபடாது என்று ஆகிவிட்ட பின்னால் எதையும் பேசாமல் ஆழச் சிந்திக்க ஆரம்பித்தாள் நந்தினி..

தற்கொலை செய்து கொள்ள வேண்டும்.. ஆனால் அது தற்கொலையாக இல்லாமல் விபத்து போலத் தெரிய வேண்டும்.. காவேரியில் மூழ்கி விடலாமா என்று யோசித்தாள்.. காவேரிக் கரையின் இக்கரையிலிருந்து நீச்சலடித்துக் சென்று அக்கரையைத் தொட்டு விட்டுத் திரும்பும் நீச்சல் போட்டியொன்று அந்த வட்டாரத்தில் நடந்தது.. போட்டியில் கலந்து கொண்ட நந்தினி மற்றவர்கள் ஆற்றின் பாதித் தூரத்தைத் தொடுவதற்குள் அக்கரையைத் தொட்டுத் திரும்பி முதல் பரிசை வென்று விட்டாள்..

அவள் ஆற்றில் மூழ்கிச் செத்தாள் என்று சொன்னால் ஈயும் குருவியும் கூட நம்பாது..

‘வேற என்னதான் செய்வது..?’

தீவிரமாக அவள் யோசித்துக் கொண்டிருந்த போதுதான் அவளைக் கடை தேற்றவென்று செஞ்சியிலிருந்து உத்ராவின் செல்ஃபோன் கால் வந்தது..

“ஏய்ய்.. எனக்கு மேரேஜ் பிக்ஸ் பண்ணியிருக்காங்கடி..”

உத்ராவின் குரலில்தான் எத்தனை உற்சாகம்..! அது போன்ற சந்தோஷம் நந்தினிக்கு ஏன் வரவில்லை..?

நந்தினிக்கும்தான் திருமணம் நிச்சயமாகியிருக்கிறது.. உத்ராவைப் போல அவளால் குதூகலிக்க முடிய வில்லையே..

"அதுக்கு என்னை என்னடி செய்யச் சொல்ற..?" எரிந்து விழுந்தாள்..

"என்னடி ஆச்சு..?" மறுமுனையில் உத்ரா திகைத்தாள்.

"ஒண்ணுமில்ல.. இங்கே குமாரோட சின்னச் சண்டை.. அதான்.. மூட்-அவுட்டில இருக்கேன்.." சமயோசிதமாகப் பொய் சொல்லிச் சமாளித்தாள் நந்தினி..

"அவ்வளவுதானே.."

நிம்மதியான உத்ராவுக்கு பகிர்வதற்கு நிறையச் செய்திகள் இருந்தன.. அவளுக்காக நிச்சயம் செய்யப் பட்டிருக்கும் மாப்பிள்ளை வெளிநாட்டில் வேலை பார்க்கிறான்.. பார்ப்பதற்கு வசீகரமாக இருக்கிறான்.. பெண் பார்க்க வந்தபோது அவளுடன் தனியே பேசினான்.. அவன் விருப்பங்களும் இவள் விருப்பங்களும் ஒரே அலைவரிசையில் பயணிக்கின்றன.. இவளைப் பூப்போலப் பார்த்துக் கொள்வான்

என்று உறுதியளித்திருக்கிறான்.. இவளை வெளியே அழைத்துப் போக அனுமதி வாங்கி சென்னைக்கு அழைத்துச் சென்றான்.. அங்கே கடலலையில் கால் புதைய நின்று மனம் விட்டுப் பேசினார்கள்.. அவளுக்காக வாங்கி வைத்திருந்த தங்க ஆரத்தை அவள் கழுத்தில் போட்டு விட்டு.. அவளை நேசிப்பதாகச் சொன்னான்.. இருவரும் விரல் கோர்த்து திரும்பி வந்தார்கள்.. தினமும் இவளுடன் மணிக் கணக்கில் செல்ஃபோனில் பேசுகிறான்.. இவள் நினைவாகவே இருப்பதாகச் சொல்கிறான்.. இவளுக்கும் அப்படித்தான் இருக்கிறது.. எப்போது திருமண நாள் வரும் என்ற ஏக்கத்துடன் காத்திருக்கிறாள்..

“ஆல்ரெடி எனக்கு விசாவும், பாஸ்போர்ட்டும் இருக்குடி.. கல்யாணமானதும் வெளிநாட்டுக்குப் பறந்திருவேன்.. கமிங் வெனெஸ்டே எங்கேஜ்மென்ட்.. மன்த் எண்ட்டில மேரேஜ்.. நந்தினி, நீ கட்டாயம் என் மேரேஜ் எங்கேஜ்மென்டுக்கு வரனும்டி.. செஞ்சியில எங்க வீட்டிலதான் நடத்தறதா இருக்கோம்.. உன்கிட்ட நிறையப் பேசனும்டி.. அவரைப் பத்திச் சொல்லனும்..”

‘இவ்வளவு நேரமும் உன் அவரைப் பத்தித்தானேடி காதில ஜவ்வு கிழிஞ்சு ரத்தம் கொட்டற அளவுக்குப் பேசின..?’

கடுப்பாக இருந்தது நந்தினிக்கு.. அதே தருணத்தில அவளது தலைக்குள் காலிங்பெல் அடித்து வைத்தது..

‘உத்ரா இருக்கிறது செஞ்சியாச்சே.. செஞ்சியில கோட்டையிருக்குன்னு சொல்வாளே.. அதைச் சுத்திப் பார்க்கலாம் வான்னு கூப்பிட்டுக்கிட்டுப் போயி கால் தடுக்கிச் சரிகிறதைப் போல விழுந்த வைச்சுட்டா பிராப்ளம் சால்வ்டு.. அது ஆக்ஸிடெண்டுன்னு சாட்சி சொல்ல உத்ரா இருப்பா.. இதுதான் கரெக்ட் வே..’

“அதுக்கென்னடி.. வந்துட்டாப் போச்சு.. எனக்கும் செஞ்சிக் கோட்டையைப் பார்க்கனும் போல ஆசையாத்தான் இருக்கு.. அப்பாம்மாகிட்டப் பர்மிஷன் வாங்கிட்டுக் கிளம்பி வர்றேன்..” என்று சொல்லி விட்டாள்..

பெற்றவர்களிடம் அனுமதி கேட்பது அத்தனை சுலபமானதாக இருக்காது என்றுதான் நந்தினி நினைத்தாள்.. அவள் நினைத்ததை ப் போலவே வெண்ணிலா தடை போட மேகநாதனிடம் பஞ்சாயத்துப் போனது.. அவர் மகளை கூர்மையாகப் பார்த்து விட்டு அனுமதி வழங்கிவிட்டார்..

# அத்தியாயம் 6

‘**அ**ப்பாவா..?!’

செஞ்சிக் கோட்டையின் உச்சியில் நிற்கும் அந்த நேரத்திலும் மேகநாதன் அனுமதி வழங்கி விட்டதை நம்ப முடியாமல் மனதுக்குள் ஆச்சரியப்பட்டுப் போனாள் நந்தினி.. தந்தையின் மனநிலையைக் கணிப்பது கடினம் என்று அவளுக்குத் தோன்றியது.. வெண்ணிலாகூட மனம் இரங்கி விடுவாள்.. மேகநாதன் இரக்கப்பட மாட்டார்..

இருந்தும் எப்படி அவளைச் செஞ்சிக்கு அனுப்பச் சம்மதம் சொன்னார்..?

எப்படியோ இருந்து விட்டுப் போகட்டும்.. அவள் செஞ்சிக்குக் கிளம்ப அவர் அனுமதி கொடுத்து விட்டார்.. அவளும் செஞ்சிக்கு வந்து விட்டாள்.. இனி ஆக(?!) வேண்டியதை அவள் யோசித்துச் செயலாற்றியாக வேண்டும்.

உத்ராவும்.. அந்த ஹீரோவும் கோட்டையைப் பற்றி பேசிக் கொண்டிருக்க.. விலகி நடந்தவள் பாறை விளிம்பிலிருந்து எட்டிப் பார்த்தாள்.. படு பாதாளமாக தெரிந்த தரையைப் பார்த்தவளுக்குத் தலை சுற்றியது.. கண்களை

இறுக மூடியபடி குதிக்கப் போனவளை இழுத்துப் பிடித்து ஓரம் கட்டினாள் உத்ரா.. பக்கத்தில் அவன்... படு ஆச்சரியமாக இவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்..

“நினைச்சேண்டி குரங்கே.. இதைப் போல லூசுத்தனமா எதையாவது செய்யனும்னு பிளான் போட்டுத்தான் செஞ்சிக்கோட்டைக்கு வந்திருக்கேன்னு அப்பவே நினைச்சேன்..”

“இல்லைடி உத்ரா.. கால் தடுக்கி விட்டு..”

“யார்கிட்டக் காது குத்தற..? உன் தம்பி எல்லாக் கதையையும் சொல்லிட்டான்.. உனக்கு மேரேஜ் ஃபிக்ஸ் ஆகியிருக்காமே.. உனக்குப் பிடிக்கலையாமே.. செத்துடுவேன்னு மிரட்டினாயாமே..”

“அதுடி உத்ரா..”

பக்கத்தில் துளைக்கும் பார்வையுடன் அவன் நின்றதில் முகம் சிவந்து தடுமாறினாள் நந்தினி..

“ஓ.. பிடிக்காத மேரேஜ்ல இருந்து எஸ்கேப் ஆக சூசைட் பண்ணிக்கப் பார்த்தாங்களா..?” வியப்புடன் கேட்டான் அவன்..

“ஷட்-அப்.. திஸ் இஸ் நன் ஆஃப் யுவர் பிஸினெஸ்..” பிடிபட்டவளாக படபடத்தாள் நந்தினி..

“ஏங்க.. என் கண் முன்னாடியே கோட்டையில இருந்து குதிக்கப் போனீங்க.. இதில தலையிடாம விலகிப் போடான்னு சொன்னா எப்படிங்க என்னால விலக முடியும்..?”

இரு பொருள்பட அவன் பேசுவதைப் போலத் தோன்றியது நந்தினிக்கு.. அடுத்தடுத்த அவனது கேள்விக்குப் பதில் சொல்லப் பிடிக்காதவளாக பாறை விளிம்பை விட்டு நகர்ந்து கோட்டைக்குள் விரைந்து விட்டாள் நந்தினி..

“ஐ ஆம் ஸாரி.. அவ மைண்ட் டெப்ரஷனில இருக்கா.. நான் அவகூட இருந்தாகனும்..” தோழியை பின்தொடரப் போனாள் உத்ரா..

“ஜஸ்ட் எ மினிட்..” அவன் குரல் உத்ராவைத் தடுத்து நிறுத்தியது..

“வாட்..?” அவள் தேங்கி நின்றாள்..

“நிஜமாகவே அவங்களுக்கு மேரேஜ் பிக்ஸ் ஆகியிருக்கா..?”

அவன் குரலில் தெரிந்த ஏதோ ஒன்றில் அவனை ஏற இறங்கப் பார்த்த உத்ரா..

“நீங்க அவளைப் பார்த்து கால் மணி நேரம்கூட ஆகியிருக்காதுன்னு நினைக்கிறேன்..” என்று முகம் சுளித்தாள்..

“கண்டதும் காதல்ன்னு கேள்விப்பட்டதில்லையா..?” சிரித்தான் அவன்..

“நீங்க எப்படியோ எனக்குத் தெரியாது.. அவள் கண்டதும் காதலிக்கிற ரகமில்லைங்கிறது மட்டும் எனக்குத் தெரியும்.. ஸோ.. ப்ளீஸ் டோண்ட் டிஸ்டர்ப் அஸ்..” முகத்தில் அடிப்பதைப் போலச் சொன்னாள் உத்ரா..

அதனால் எல்லாம் அவன் பாதிக்கப்பட்டதைப் போலத் தெரியவில்லை.. அவளிடம் பேச்சை வளர்ப்பதிலேயே குறியாக இருந்தான்.. அவனது கண்கள் காந்தம் போல் உத்ராவை ஈர்க்கப் பார்த்ததில்..

“அவளைப் போல எனக்கும் மேரேஜ் பிக்ஸ் ஆகியிருக்கு.. அவளுக்குத்தான் அவளோட மேரேஜில் இஷ்டமில்லை.. எனக்கு அப்படியில்லை.. எப்போக் கல்யாண நாள் வரும்ன்னு காத்துக்கிட்டு இருக்கேன்..” என்றாள்..

“வாழ்த்துக்கள்..” என்றான் அவன்..

“கூடுதலா ஒரு இன்பர்மேஷன்.. என்னோட வுட்பி.. ஜிம் பாடியோட இருப்பார்.. ஓங்கியடிச்சா ஒன்றரை டன் தேறும்..”

“எனக்கு வேணாங்க..” ரசித்துச் சிரித்து உத்ராவின் விரோதத்தை உடைத்தான் அவன்.. உத்ராவும் சிரித்து விட்டாள்..

“சும்மா ஃபிரண்ட்லியா பேச வந்தா இப்படி பயமுறுத்தறீங்க.. உங்களைப் பத்தின இன்பர்மேஷனைக் கேட்டா என் உடம்பு தாங்காதுன்னு தோணுது.. உங்க ஃபிரண்டைப் பத்தின இன்பர்மேஷன்களச் சொல்லுங்களேன்.. ப்ளீஸ்..” சிரிக்கும் கண்களுடன் கேட்டான்..

“என் வுட்-பி யாவது ஜிம் பாடியோட போட்டுத் தாக்கறதோட விட்டிருவார்.. அவளோட வுட்-பி எலும்பை எண்ணிட்டு கன்னெடுத்துச் சுட்டுத் தள்ளிருவார்.. பரவாயில்லையா..?”

“கன்னெடுத்துச் சுட்டுத் தள்ளிருவாரா..? பாவம்ங்க அவங்க.. பூப்போல இருக்காங்க.. பொசுக்கித் தள்ளரவர்கூட எப்படிங்க வாழ்வாங்க..?”

“அதை அவ பார்த்துக்குவா.. நீங்க உங்க வழியைப் பாருங்க..”

வெடுக்கென்று சொன்னாள் உத்ரா.. அவன் முகம் மாறியது.. அடுத்து வாய் திறந்தால் கடும் பின் விளைவுகள் ஏற்படக் கூடும் என்பதைப் போல உத்ரா பார்த்த பார்வையில் அவன் ஊமையாகிப் போனான்.. அவன் வாய்க்குப் பூட்டு போட்டு விட்டு நந்தினியைத் தேடிப் போனாள் உத்ரா..

கோட்டையின் உள்ளே ராணிகளின் அந்தப்புரத்தில் இருந்த தூண்களில் ஒன்றின் மீது சரிந்து அமர்ந்திருந்தாள் நந்தினி.. நிராசையுடன் சூன்யத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தவளைப் பார்த்த உத்ராவின் மனம் குமுங்கியது.. சிரிப்பும், பேச்சும் விளையாட்டுமாக நான்கரை வருடங்களை உத்ராவுடன் கழித்த நந்தினியா இவள்..?

தோழியின் பக்கத்தில் கால்களை மடித்து மண்டியிட்டு அமர்ந்து அவள் தோள் தொட்டு அசைத்தாள் உத்ரா..

“நந்தினி..”

இரக்கத்துடன் அழைத்த தோழியை ஏறிட்டுப் பார்த்த நந்தினியின் பார்வையில் வெறுமை அப்பியிருந்தது..

“என்ன காரியம் பண்ணப் பார்த்தடி..?” மனம் தாளாமல் கேட்டாள் உத்ரா..

“என்னை வேற என்னதாண்டி பண்ணச் சொல்ற..?”

நந்தினியின் உதடுகள் துடித்தன..

“வாழ்க்கை வரமா இருக்கனும் உத்ரா.. சாபமா இருக்கக் கூடாது.. வாழ்க்கையை வாழ்க்கையாய் வாழனும்.. இல்லேன்னா செத்துரனும்.. இதுதான் காத்திருக்குதுன்னு தெரியாம இருந்தாக்கூடப் பரவாயில்லை.. தெரிஞ்சிருச்சு.. தெரிஞ்சே தண்டவாளத்தில தலையைக் கொடுக்கச் சொல்றியா..? அதுக்கு இது தேவலை..”

“பாவி..! சாகத்துணிஞ்சிட்டயேடி.. சாகிற வயசா உனக்கு..?” ஆத்திரத்துடன் நந்தினியை நான்கு போடு போட்டாள் உத்ரா.. மனம் ஆறவில்லை..

“நீ கோட்டையைச் சுத்திப் பார்த்து கொடியை நாட்டினது போதும்.. கிளம்பு.. கிளம்பு..”

தோழியின் கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாக இழுத்துக் கொண்டு போனாள் உத்ரா.. திட்டமிட்ட காரியம் நிறைவேறவில்லையே நந்தினி ஆற்றாமை கொண்டாள்..

தஞ்சைக்குத் திரும்பி விட்டால் கெட்டி மேளம்தான்.. தற்கொலை முயற்சியை நினைத்துப் பார்க்கக் கூட முடியாது..

‘கட்டக் கடைசியில் அந்தக் கம்மாண்டரிடம் மாட்டிக்கிட்டு பெல்ட் அடி படனுமா..?’

உத்ராவின் கையை உதறிவிட்டு எங்காவது பிய்த்துக் கொண்டு ஓடி விடலாம் போல இருந்தது நந்தினிக்கு..

அவள் மனதைப் படித்ததைப் போல நந்தினியின் கையை இறுக்கிப் பிடித்த பிடியை தளர்த்தாமல் படிகளில் விசைந்து இறங்க ஆரம்பித்தாள் உத்ரா..

‘‘ஹலோ.. அதுக்குள்ள கோட்டையைப் பார்த்துட்டிங்களா..?’’

அந்த ‘அவன்’ தான் கேட்டான்.. இவர்களின் வரவை எதிர்பார்த்ததைப் போல படிகளில் காத்திருந்தான்..

‘‘நாங்க இந்த ஊர்க்காரங்க சார்.. எப்ப வேணும்னாலும் கோட்டையைச் சுத்திப் பார்த்துக்குவோம்... நீங்க அப்படியில்லை.. கோட்டையைப் பார்க்க ஃபிளைட் பிடிச்சு வந்திருக்கீங்க.. எங்ககிட்டப் பேசி டயத்தை வேஸ்ட் பண்ணாம கோட்டையைச் சுத்திப் பார்க்க போங்க சார்..’’

அவனிடம் காட்டிய இணக்கத்தை மறந்து கறாராகப் பேசினாள் உத்ரா..

“என்னங்க.. யாரோ போலே பேசறிங்க..?” வியப்புடன் கேட்டான் அவன்..

“நீங்க யாரோதானே சார்..? சொந்தமா..? நட்பா..?” எரிச்சலுடன் கேட்டாள் உத்ரா..

“உள்ளூர்க்காரங்க நீங்க.. கோட்டையைச் சுத்திப் பார்க்ககூட இருந்தா தோதுன்னு நினைச்சேன்..” அவன் ராகம் இழுத்தான்..

“எனக்குத் தோதுப் படாது சார்..” உத்ரா பட்டுக் கத்தரித்தாள்..

“ஓகே.. ஓகே.. லீவ் இட்.. நீங்க டென்ஷன் ஆக வேணாம்.. எப்படியிருக்காங்க உங்க ஃபிரண்ட். .? நார்மலாயிட்டாங்களா..?”

உத்ராவை விட்டு நந்தினியின் மீது அவன் பார்வை தாவியது.. வெகுநாள் பழகியவனைப் போல அவன் குசலம் விசாரித்த விதம் நந்தினியின் மனதை உறுத்தியது.. தேவையில்லாமல் அவன் உரிமை எடுத்துக் கொள்கிறான்

என்ற கோபம் அவள் மனதில் மூண்டது.. உத்ராவுக்கும் அந்த கோபம் வந்திருக்க வேண்டும்..

“அவளுக்கென்ன சார்.. நல்லாத்தான் இருக்கா..? நார்மலா இருக்கிறவளை நார்மலா அகிட்டாளான்னு கேள்வி கேட்டா என்ன அர்த்தம்..? போங்க சார்.. வேற வேலை ஏதாச்சும் இருந்தாப் பாருங்க.. நாங்க போகனும்..”

அதற்கு மேலும் அவன் முகத்தைப் பார்த்துப் பதில் சொல்லிக் கொண்டிருக்காமல் தோழியை இழுத்துக் கொண்டு படியிறங்கி விட்டாள் உத்ரா.. சாலையை மிதித்துத் திரும்பிப் பார்த்த போது அவன் மலையுச்சியில் நின்றபடி இவர்களைப் பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது..

உத்ராதான் திரும்பிப் பார்த்தாள்.. நந்தினி திரும்பவில்லை.. இந்த உலகத்தைப் பற்றிய பிரக்ஞை இல்லாதவளைப் போல அவள் செயலற்று தொய்ந்திருந்தாள்..

‘மயக்கம் கியக்கம் போட்டிருவாளோ..’

பயத்துடன் நந்தினியை காருக்குள் தள்ளி தானும் புகுந்தாள் உத்ரா.. மழை மேகம் சூழ்ந்திருந்தது..

‘மழை வரப் போகுது.. இவன் கோட்டையை விட்டுக் கிழே இறங்காம நிற்கிறான்..’

உத்ரா கோட்டையைப் பார்த்தாள்.. அவன் வேகமாக படியிறங்கிக் கொண்டிருந்தான்.. உத்ராவுக்கு நிம்மதியாக இருந்தது.. என்னதான் முகத்திலடித்ததைப் போலப் பேசிவிட்டாலும் அவன் அவளுடைய ஊரிலிருக்கும் சரித்திரகால நினைவுச் சின்னத்தைப் பார்க்க வந்திருக்கிறான் என்பதே அவன்மீது ஒரு பிணைப்பை ஏற்படுத்தியது..

கார் கிளம்பியதும் அவனை மறந்து விட்டாள்.. நந்தினி இப்படியிருக்கிறாளே என்ற கவலை அவள் மனதை சூழ்ந்து கொண்டது.. அவள் வீட்டுக்கு விருந்தாளியாக வந்திருப்பவளைப் பத்திரமாகத் திருப்பி அனுப்பியாக வேண்டுமே என்று தவியாய் தவித்தாள்..

வீட்டின் போர்டிகோவில் கார் நிற்பதற்கும் ‘சடசட’ வென மழை வருவதற்கும் சரியாக இருந்தது..

‘நல்லவேளை.. நனையலை..’ என்ற நினைவோடு நந்தினியை உசுப்பி வீடு வந்து விட்டது என்பதை உணர்த்தி கைத்தாங்கலாய் காரை விட்டு இறக்கி விட்டாள்..

வீட்டுக்குள் போன போது உத்ராவின் அம்மா சப்தம் போட்டுக் கொண்டிருந்தாள்..

“விருந்தாடி வந்தா விருந்தை மட்டும் மென்னுட்டுப் போகனும்.. என் வீட்டுக்கதையை மத்தவங்க வீட்டில போய் மென்னு துப்பாதீங்க..”

துணுக்குற்றாள் நந்தினி.. அவளைத்தான் உத்ராவின் அம்மா சொல்கிறாளோ என்று பயந்து போனாள்..

“உன்னையில்லைடி.. நீயா எங்க வீட்டுக் கதைகளை ஊர் வீட்டில போய் மென்னு துப்பின..?” அதட்டினாள் உத்ரா..

“அது இல்ல உத்ரா.. உன் வீட்டுக்கு விருந்தாளியா வந்துட்டு சூசைட் அட்டெண்ட் பண்ணப் பார்த்தேனே.. அதைச் சொல்றாங்களோன்னு பயந்துட்டேன்..” மென்று விழுங்கினாள் நந்தினி..

“புறணி பேசினவங்களுக்கே இந்த அர்ச்சனைன்னா.. சூசைட் அட்டெண்ட் பண்ணப் பார்த்த உனக்கு என் ன மண்டகப்படி நடக்கும்ன்னு நினைச்சுப் பாரு.. எங்கம்மா பார்க்கத்தான் ஜென்டில் லேடி..! பிரச்னைன்னு வந்துட்டா பக்காக்கேடி.. அவங்க கிட்ட மாட்டாம எஸ்கேப் ஆகிற வழியைப் பாரு..”

தாயின் பார்வையில் பட்டு விடாமல் நந்தினியை அகற்றிக் கொண்டு போய் விட வேண்டும் என்று படாத பாடுபட்டு நழுவப் பார்த்தாள் உத்ரா.. வீட்டில் நிறைந்திருந்த உறவினர் கூட்டத்தின் மறைவில் அவர்கள் நகர்ந்து கொண்டிருந்த போது..

“உத்ரா..” என்று அவர்களை கண்டு பிடித்து விட்டாள் அகிலா..

“அம்மா..” வராத சிரிப்பை வலிய வரவழைத்துக் கொண்டு ‘ஈ’யென பற்களைக் காட்டியபடி நின்று விட்டாள் உத்ரா..

“இந்தா இருக்கிற கோட்டைக்குப் போயிட்டு வர இம்புட்டு நேரமாடி..? கல்யாணப் பெண்ணுங்கிற நினைப்பு மனசில இருக்கா இல்லையா..?” மகளைக் காய்ச்ச ஆரம்பித்தாள் அகிலா..

“அம்மா.. இது அநியாயம்.. கோட்டைக்குப் போனவங்க இவ பண்ணி வைச்ச வேலையிலே வாசலோட திரும்பிட்டோம்.. இதுக்கே நேரமாச்சுன்னு சொல்றீங்களே.. இதுவே நாங்க கோட்டையை ஆற, அமர சுத்திப் பார்த்துட்டுத் திரும்பி வந்திருந்தா என்னெல்லாம் சொல்வீங்க..?”

ஆகிலாவின் அநியாயக்குற்றச்சாட்டிற்கு பதில் சொல்லும் வேகத்தில் உத்ரா வாய் விட்டு விட்டாள்.

“இவ பண்ணி வைச்ச வேலைன்னு எதைச் சொல்ற..? நந்தினி அப்படி என்ன பண்ணித் தொலைச்சா..?”

அகிலா மிகச் சரியாக பாயிண்டை கேட்ச் பிடித்து விட்டாள்..

‘கடவுளே..! இவங்க சும்மாவே ஓடற தண்ணியில ஒன்பது சுளுக்கெடுப்பாங்களே.. இது தெரிஞ்சிருந்தும் வாய் விட்டு மாட்டிக்கிட்டேனே.. இவ பண்ணி வைச்ச வேலையை அம்மாகிட்டச் சொன்னா அவ்வளவுதான்.. வீடு ரெண்டுபட்டிரும்..’

நடுங்கிப் போனாள் உத்ரா.. நந்தினி அவளைவிட நடுங்கிக் கொண்டிருந்தாள்.. சொந்த வீட்டில் திட்டு வாங்கலாம்.. தோழியின் வீட்டில் திட்டு வாங்குவதா..?

# அத்தியாயம் 7

**‘எ**தில்தான் சொதப்புவது என்றில்லையா..?’

தன்னைத்தானே மனதுக்குள் திட்டிக் கொண்டிருந்தாள் நந்தினி.. தற்கொலைக்கு முயற்ச்சிப்பது என்பது என்ன சாதாரண விஷயமா..? ஒரு தடவை சொதப்பி அகப்பட்டு விட்டால் மறுபடியும் அதை முயற்ச்சிப்பதைப் பற்றி நினைத்துக் கூடப் பார்க்க முடியாதே.. கட்டுக்காவல் அதிகமாகி விடுமே..

‘ரிகர்சல் பார்த்திருக்கனும்..’ அபத்தமான சிந்தனை தோன்றியது..

தாண்ட முடியாத அகழி முன் மாட்டிக் கொண்டால் அறிவார்ந்த சிந்தனைகள் தோன்றாது.. அபத்தமான சிந்தனைகள்தான் தோன்றி வைக்கும்.. பிரச்னையின் பிரம்மாண்டம் அறிவை மழுங்கடித்து விடும்..

நந்தினிக்குக் கண்ணைக் கட்டிக் கொண்டு வந்தது.. நிற்க முடியாமல் உடல் தொய்ந்தது.. உத்ராவின் மீது சாய்ந்தாள்.. கிடைத்தது வாய்ப்பு என்று அவளைத் தாங்கிப் பிடித்துக் கொண்ட உத்ரா..

“இதைத்தான் பண்ணி வைச்சுத் தொலைச்சாம்மா..” என்றாள்..

“இதைன்னா..?” அகிலா கழுத்தைச் சாய்த்துப் பார்த்தாள்..

‘பார்க்காதே.. பார்க்காதே.. ஹையைய்யோ பார்க்காதே..’

உத்ரா மனதுக்குள் பதட்டமாக பாடி வைத்தாள்.. அகிலா மகளின் பக்கத்தில் வந்து அவளைப் பார்க்காமல் நந்தினியைப் பார்த்து வைத்தாள்..

‘பிழைச்சேன்..’ உத்ராவின் சுவாசம் சீரானது..

“என்னடி இவ சீக்கு வந்த கோழியைப் போல சவங்கிக் கிடக்கிறா..?” அகிலா விசாரித்தாள்..

“என்னன்னு தெரியலைம்மா.. காய்ச்சல் போல இருக்கு.. கோட்டைக்குப் போக படியேறின களைப்பில மயக்கம் போட்டு விழுந்திட்டா.. முகத்தில தண்ணியைத் தெளிச்சு கோட்டையை இன்னொரு நாள் பார்த்துக்கலாம்.. இப்ப வீட்டுக்குப் போயிரலாம்ன்னு இழுத்துக்கிட்டு வந்துட்டேன்..” சமர்த்தாக பதில் சொன்னாள் உத்ரா..

“நல்ல காரியம் பண்ணினே.. மழை வேற ஊத்திக்கிட்டு இருக்கு.. கோட்டையில இருந்திருந்தா சொட்டச் சொட்ட நனைஞ்சிருப்பீங்க.. காய்ச்சல்கார உடம்போட மழையில நனைஞ்சிருந்தா என்ன ஆகிறது..? ஊரான் வீட்டுப் பெண்.. நம்மளை நம்பி விருந்தாளியா வந்திருக்குது.. பத்திரமா கவனிச்சு ஊருக்கு அனுப்பி வைக்கனும்.. மாடிக்குக் கூப்பிட்டுக்கிட்டுப் போயி படுக்க வை.. நான் சூடா காபி கொடுத்தனுப்பறேன்..”

அகிலா விசாரணையை நிறுத்தி விட்டு காபி கலக்கப் போய் விட்டாள்.. கலகலப்பும் கல்யாணம் வீட்டின் சந்தடியுமாக இருந்த சூழ்நிலையில் கலந்து சிரிக்க முடியாமல் தோழியைப் பற்றிய கவலை மனதில் அரிக்க அவளைத் தாங்கிப் பிடித்தபடி மாடிக்கு அழைத்துச் சென்றாள் உத்ரா.. படுக்கையில் படுத்ததும் உடலைச் சுருட்டிக் கண்களை மூடி விட்டாள் நந்தினி.. அவள் தூங்குகிறாள் என்று நம்பி அறையை விட்டுப் போகாமல் அங்கே கிடந்த சோபாவில் தோழியைப் பார்த்தபடியே சுருண்டு படுத்தாள் உத்ரா..

சூடான காபி வந்து விட்டது.. இடையில் எழுந்து கொள்ள முற்பட்ட நந்தினி உத்ராவைப் பார்த்ததும் வாலைச் சுருட்டிக் கொண்டு படுத்து விட்டாள்.. காபியைக் குடித்து விட்டுப் படு

என்று உத்ரா உலுக்கி எழுப்பியதில் எழுந்து உட்கார்ந்து ஜன்னலைப் பார்த்தாள்.. மழை கொட்டிக் கொண்டிருந்தது.. சூடான காபி மழையின் குளிருக்கு இதமாக தொண்டையில் இறங்கியது..

அறைக்குள் அடைந்து கிடக்க என்னவோ போல் மனதுக்கு புழுக்கமாக இருந்தது.. அறையை விட்டு வெளியே வந்தாள்..

“எங்கேடி போற..?” அவசரமாய் பின் தொடர்ந்தாள் உத்ரா..

திருமண நாளை நெருங்கிக் கொண்டிருக்கும் தோழியைப் பதட்டப்பட வைத்துக் கொண்டிருக்கும் குற்ற உணர்வுடன்..

“ஸாரி..” என்றாள் நந்தினி..

“உன் ஸாரி, சுடிதாரையெல்லாம் நான் கேட்கலை.. பயமுறுத்தாம இரு தாயே.. அது போதும் எனக்கு.. நீ செஞ்சு வைக்க இருந்த வேலையை நினைச்சா நெஞ்சே நடுங்குது.. என் வீட்டுக்குத் தெரிஞ்சா அவ்வளவுதான்.. உன்னை விட்டுட்டு என்னை ஒரு வழியாக்கிருவாங்க.. உனக்குப்

புண்ணியமாப் போகும் நந்தினி.. எதுவா இருந்தாலும் பேசி சரி பண்ணிக்கலாம்.. பொறுமையா இரு..”

“இது பேசி சரி பண்ற விஷயமில்லைடி..”

“அதுக்கு தற்கொலைதான் சொலுஷனா..? வேற வழி கண்டு பிடிக்கலாம் நந்தினி..”

“இருந்த ஒரு வழியும் சொதப்பிடுச்சே..”

“அடிச்சேன்னா பாரு.. உனக்கு நானிருக்கேன் நந்தினி.. ஏதாச்சும் யோசிக்கலாம்.. பினாத்தமா இரு..”

எதை யோசிப்பது..? மாற்று வழி என்ன இருக்கிறது..? அனைத்து வழிகளும் அடைபட்டு விட்ட நிலையில் மாற்று வழியை எங்கே அவள் தேடுவாள்..?

பால்கனியில் இருந்து பார்த்த போது காட்டாற்று வெள்ளம் போல சாலையில் மழைவெள்ளம் கரை புரண்டோடிக் கொண்டிருந்தது.. இன்னதென்று வரையறுக்க முடியாத புதுவித நிறத்துடன் இருந்தது மழைநீர்..

எங்கோ தூரத்தில் இடியிடிக்கும் சப்தம் கேட்டது.. மின்னல் வானில் தங்கக் கோடுகளாக தகதகத்து மின்னியது.. மாலை மயங்கிய அந்த இருள் வேளையில் வீதி

விளக்குகளையெல்லாம் ஊதி அணைத்து விட்டுப் போனது பெருங்காற்று..

ஊழிக் காற்றின் வெள்ளமாக ஊற்றிக் கொண்டிருந்தது மழை.. மின்சாரம் இல்லாவிடினும் இன்வெர்ட்டர்களின் உபயத்தினால் வீடுகள் தோறும் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன.. உத்ராவின் வீட்டுக் கொண்டாட்டத்தை மழையால் தடை செய்ய முடியவில்லை..

பால்கனியின் ஊஞ்சலில் அமர்ந்து மழையைப் பார்த்தாள் நந்தினி.. தள்ளிப் பெய்த மழையின் சாரல் வீச்சு அருவி வீச்சைப் போல அவள்மீது பட்டு நனைத்தது..

உத்ராவின் வீட்டு உற்சாகம் அவள் மனதை தொற்றவில்லை.. கோலாகலத்தில் பற்றற்றுப் போன துறவியின் மனநிலையில் அவளிருந்தாள்.. அழுது அழுது காய்ந்த சருகாக உலர்ந்திருந்தாள்..

தாரை தாரையாக நீர்த்திரையாய் கொட்டிக் கொண்டிருந்த மழையின் நடுவே துளைத்து நுழைந்தது அவள் பார்வை.. தோட்டத்து மரக்கிளையில் பறவையொன்று எவருக்காகவோ காத்திருப்பதைப் போல மழையில் நனைந்து கொண்டிருந்தது.. நடுங்கிக் கொண்டிருந்த அதன் விழிகள்

மழையின் குளிருக்கு இதமாக போர்த்திக் கொள்ளப் போர்வையை வேண்டின.. போர்வையுடன் அதன் பக்கத்தில் போனால் எப்படியிருக்கும் என்று உத்ராவிடம் கேட்டாள்..

“அபத்தமா இருக்கும்..” தயவு தாட்சண்யம் பார்க்காமல் முகத்தில் அடிப்பதைப் போல பதில் சொன்னாள்..

இதுபோன்ற பதில்களை உடனுக்குடனாக வழங்குவதில் உத்ராவுக்கு நிகர் உத்ராதான்.. வேறு எவரும் மிஞ்ச முடியாது என்ற அவளது தெனாவெட்டை..

“செஞ்சியில இல்லைன்னு சொல்லு..” என்று முறியடித்தாள் நந்தினி..

“அப்படின்னா..?”

“தஞ்சையில என் தம்பி இருக்கான்.. அவனோ ஒற்றைச் சொல்லுக்கு உன்னால இல்ல.. யாராலேயும் பதில் சொல்லிற முடியாது.. அப்பேற்பட்ட கில்லாடி அவன்..”

தம்பியின் நினைவில் அவள் மௌனமானாள்.. திரும்பவும் அவன் முகத்தைப் பார்க்க முடியுமா என்ற நிராசை அவளது நெஞ்சில் சூழ்ந்தது.. தஞ்சைக்குத் திரும்பினால் தம்பியைப் பார்க்கலாம் தான்.. தம்பியைப் பார்ப்பதோடு அது

நின்று விடாதே.. வெண்ணிலாவின் மாமன் மகளின் மகனைத் திருமணம் செய்து கொண்டு பெல்ட் அடி வாங்குவதில் போய் அது முடிந்து விடுமே..

“இந்தக் காலத்தில் பெல்ட் அடியா..? உன் தம்பி சும்மாக்காச்சும் பயமுறுத்தியிருப்பாண்டி.. மண்டூகம் மாதிரி புலம்பாதே.. ஹஸ்பெண்டைக் கைக்குள்ள போட்டுக்கிட்டா நாம பெல்ட்டைத் தூக்கி விளாசிரலாம்.. இதெல்லாம் ஒரு மேட்டரா..?” இலகுவாகச் சொன்னாள் உத்ரா..

“அவன் துப்பாக்கியும் வைத்திருக்கானாம்டி.. அவனோட அம்மாவும் தங்கையும் அவனோட கோபத்தைப் பத்திக் கதை கதையாச் சொன்னாங்களாம்..” நந்தினியின் உடல் நடுங்கியது..

“நீயெல்லாம் என்ஜினியரிங் படிச்சிருக்கேன்னு வெளியே சொல்லிராதே.. இப்படியாடி குலை நடுங்குவ.. பெல்ட்டாம்.. ரிவால்வராம்.. ஏண்டி இப்படி இருக்க..?”

“உனக்குப் புரியலை உத்ரா..”

நந்தினியின் விழிகளில் இருந்து கண்ணீர் பெருக்கெடுத்தது.. மழை பொழிவது நின்று போயிருந்தது.. மின்சாரம் வந்திருந்தது.. குளுமையான ஈரக்காற்று

பால்கனியிலிருந்து தோழிகளின் உடல்களை வருடிக் கொடுத்து குளிர்வித்துக் கொண்டிருந்தது...

சில்லென்ற அந்த சீதோஷ்ண நிலையில் உத்ராவின் நினைவு வருங்காலக் கணவனைத் தேடியது.. அவனைப் பற்றிப் பேச அவள் விரும்பினாள்.. அவனைப் பற்றிய நினைவுகளைப் பகிர்ந்து கொள்ள அவன் மீதான அவளது ஈர்ப்பு எத்தகையது என்பதை உணர்த்த என்று பெயரிட முடியாத நிறைய சங்கதிகளை நந்தினியிடம் கொட்டி விடத் துடித்தாள்..

நிர்க்கதியாய் நிற்பவளைப் போலக் கண்ணீரும் கம்பலையுமாக இருப்பவளிடம் உத்ரா என்னத்தைப் பகிர்ந்து கொள்வது..?

அகிலா வந்துவிடக் கூடாது என்ற அச்சத்துடன் மாடிப் படிகளை பார்த்துக் கொண்டாள்.. நந்தினியின் புலம்பலையும் கண்ணீரையும் அகிலா பார்த்து விட்டால் வேறு வினையே வேண்டாம்..

“இது கல்யாண வீடும்மா.. அந்த நினைப்பு உன் மனசில இருக்கா..?” என்று நந்தினியிடம் கேள்வி கேட்பதில் ஆரம்பித்து..

“ஏண்டி அறிவுகெட்டவளே..! உனக்கு இவ துணைப் பெண்ணா..? இல்லை, இவளுக்கு நீ துணைப் பெண்ணா..? இவ பின்னாடியே முக்காலியைத் தூக்கிக்கிட்டு அலையற..? இவ என்னடான்னா இது கல்யாண வீடுங்கிறதை மறந்து கண்ணீரும் கம்பலையுமா மூலையில உட்கார்ந்து மூக்கைச் சிந்திக்கிட்டு இருக்கா.. நீ மடியில போட்டு ஆறுதல் சொல்லிக்கிட்டு இருக்கிற.. நல்லாயிருக்குடி நீ கல்யாணம் பண்ணிக்கிற லட்சணம்.. உனக்குத் துணைப் பெண்ணா இருக்க வேற ஃபிரண்டே கிடைக்கலையா..? இவதான் கிடைச்சாளா..? இவ பக்கத்தில உட்கார்ந்ததுக்கிட்டு கண்ணீரைத் துடைச்சு விட்டுக்கிட்டு இருக்கத்தான் இவளை செஞ்சிக்கு வரச் சொன்னியா..? உன்னைக் கட்டிக்கப் போகிற மாப்பிள்ளை மட்டும் இதைப் பார்த்திருக்கனும்.. மகிழ்ந்து போயிருப்பார்..” என்று உத்ராவை விட்டு விளாசுவதில் வந்து முடித்திருப்பாள்..

“மெதுவா அழுடி.. வீட்டில இருக்கிற உறவுக்காரங்க காதில விழுந்து வைச்சிரப் போகுது..” நந்தினியின் அழுகையை அவளது கைகளிலும் கால்களிலும் விழுந்து அடக்க முயன்று தோற்றாள் உத்ரா..

“உன்னை யாருடி செஞ்சிக் கோட்டையில இருந்து விழுகப் போனவளோட கையைப் பிடிச்சுத் தரதரன்னு இழுத்துக்கிட்டு வரச் சொன்னது..? கண்டுக்காம விட்டிருந்தா அப்படியே போயிருப்பேனில்ல..? உனக்கும் இந்தக் கஷ்டம் இருந்திருக்காது..”

நந்தினியின் பொருமலில் உத்ராவின் மனம் புண்ணானது.. தோழி படும் துயரைக் காண அவளுக்குச் சகிக்கவில்லை..

“அடிச்சேன்னா பாரு..” கைகளை உயர்த்தினாள்..

“அடிடி.. அப்பாவும் இதைத்தான் செய்தார்.. என்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிறவனும் இதைத்தான் செய்யப் போறான்.. நீயும் உன் பங்குக்கு ஏதாவது செய்யனுமில்ல..? அடிச்சு நொறுக்கு..”

“என்னடி இப்படிப் பேசற..?”

மனம் தாளாமல் தோழியை மடியில் சாய்த்துக் கொண்டாள் உத்ரா.. என்ன செய்து நந்தினியின் கண்ணீரை நிறுத்துவது என்று அவளுக்குப் புரியவில்லை.. அடுத்தடுத்து தொடர்ந்து கொண்டிருந்த விம்மல்களில் குலுங்கிக் கொண்டிருந்த நந்தினியின் முதுகை ஆதரவாகத் தட்டிக்

கொடுத்தாள்.. நந்தினியின் விம்மல் நின்றபாடாயில்லை.. எதைச் சொல்லி நந்தினியைத் தேற்றுவது என்ற யோசனையில் ஆழ்ந்தாள் உத்ரா..

“சின்னக் குழந்தை போல பயந்து நடுங்கற நந்தினி..”

“என் பயமே வேற உத்ரா.. நீ பெல்ட்டால் விழுகிற அடியைப் பத்தியும், ரிவால்வரில வர்ற குண்டைப் பத்தியும் மட்டுமே பேசற.. அதுக்கு நான் பயப்படறேன்னு நினைக்கிற.. இல்லைடி.. என் சுயமரியாதை அழியப் போகுதேன்னு நான் பயப்படறேன்.. அடிமையைப் போல வாழவேண்டி வந்துருமோன்னு நடுங்கறேன்..”

“நந்தினி..?” உத்ரா திகைத்துப் போனாள்..

இது போன்ற ஒரு கோணத்தில் ஏன் அவள் நினைத்துப் பார்க்கவில்லை..? அவளது வருங்காலக் கணவனைப் பற்றிய இன்பமான நினைவுகளில் அவள் மூழ்கியிருக்கிறாளே.. அவன் பெல்ட்டால் அடிப்பவனாகவும் ரிவால்வரால் சுடுகிறவனாகவும் இருந்தால் அவளால் தாங்கிக் கொண்டு அவனைக் காதல் பார்வை பார்க்க முடியுமா..?

“நான் மனுஷியா இல்லை நான்கு கால் ஜீவனா..? பெல்ட்டாலே அடிச்சுத்தான் என்னைக் கன்ட்ரோலில்

வைச்சுக்கனும்னா அன்பு, பாசம், காதல் என்கிற இதெல்லாம் எதுக்கு உத்ரா..? அதெல்லாம் இருக்கிற இடம் தெரியாமல் காணாமல் போயிராதா..? அப்படிப்பட்ட வாழ்க்கை என்னை அவமானப்படுத்தும் உத்ரா.. என்மேலேயே எனக்கு மரியாதை இருக்காது.. இன்ஃபீரியாரிட்டி காம்ப்ளெக்ஸ் வந்திரும்.. அதுக்குப் பேசாம நான் செத்துப் போயிரலாம்..''

விக்கித்துப் போனாள் உத்ரா.. தான், தன் திருமணம் தன் காதல் உணர்வுகள் என்று தன்னிலேயே புதைந்து தோழியின் துயரத்தை அவள் புரிந்து கொள்ளாமல் இருந்து விட்டாளே..

''சாவுதான் பிரச்னைகளுக்கானத் தீர்வுன்னா இந்த உலகத்திலே யாருமே உயிருடன் இருக்க முடியாது.. பிரச்னைகள் இல்லாத மனிதர்களே இல்லை நந்தினி.. எல்லோருக்கும் அவங்கவங்க லெவலிலே பிரச்னைகள் இருக்கத்தான் செய்யும்.. அதை எதிர்த்து நின்று ஜெயிக்கிறதிலதான் வாழ்வின் தாத்பர்யமே அடங்கியிருக்கு.. நீ பிரச்னைகளைச் சந்திக்கப் பயப்படற கோழையில்லைடி.. எனக்கு உன்னைத் தெரியும்.. இதுக்கான மாற்று வழி என்னங்கிறதைப் பத்தி யோசிக்கலாம்.. இப்போதைக்கு இதை ஆறப்போடுடி.. உன் ஊருக்குத் திரும்ப இன்னும் மூணு நாள்

நடுவே இருக்கில்ல.. அதுக்குள்ள இதுக்கொரு வழியை நான் கண்டு பிடிக்கிறேன்.. என்னை நம்பு..”

வாய் வார்த்தையாகச் சொல்லாமல் மனதிலிருந்து சொன்னாள் உத்ரா.. தோழியின் வார்த்தைகளில் தைரியம் வரப்பெற்ற நந்தினி கண்ணீரைத் துடைத்தபடி எழுந்தாள்..

# அத்தியாயம் 8

இவள் என்னத்தைச் செய்யப் போகிறாள் என்ற எண்ணம் ஊடாடினாலும் எதையாவது செய்து விடுவாள் என்றுதான் நம்பினாள் நந்தினி.. உத்ராவின் குணம் அத்தகையது.. அவள் சொல்ல மாட்டாள்.. சொன்னால் சொன்னதைச் செய்து விடுவாள்..

அந்த நம்பிக்கையை அதிகப் படுத்துவதைப் போல மறுநாள் முழுவதும் செல்ஃபோனும் கையுமாகவே அலைந்தாள்.. வீட்டில் இருப்பவர்களுக்குத் தெரியாமல் மொட்டை மாடியிலேயே வாசம் செய்தாள்.. செல்ஃபோனில் ஆழ்ந்து விவாதித்தாள்.. அவள் முகபாவத்தைப் பார்க்கும் போது இந்தியாவையே புரட்டிப் போடப் போகும் அதி முக்கிய முடிவுகளை எடுத்துக் கொண்டிருப்பதைப் போல தோன்றி வைத்ததில் தன்னிலை மறந்து நந்தினிக்கு சிரிப்புச் சிரிப்பாக வந்தது.. பேசியபடியே நிமிர்ந்து பார்த்த உத்ரா புருவங்களை உயர்த்தி விழிகளால் என்னவென்று கேட்டாள்..

“ச்சும்மா..” வாய் பொத்தி ‘களுக்’ கென்று சிரித்து வைத்தாள் நந்தினி..

உத்ராவின் முகத்திலிருந்த தீவிர பாவம் மறைந்து சிரிப்பு பரவியது.. அவளது குரலிலும் சிரிப்புத் தொற்றியது மறுமுனையில் பேசிக் கொண்டிருந்த நபர் அதைப் பற்றி வினவியிருக்க வேண்டும்..

“இங்கே நந்தினிதான் சிரிப்பை மூட்டறா..” என்று செல்லமாக புகார் செய்தாள்.. “.....”

“அவ அப்படித்தான் சிரிப்பா.. தஞ்சாவூருக்கு போனா மட்டும் சிரிப்பை மறந்துருவா.. பாவம்..”

“.....”

“அதெல்லாம் பெர்ஃபெக்ட் கேர்ள்தான்.. என்ன ஒண்ணு.. இதைச் செய் அதைச் செய்ன்னு கமாண்ட் பண்ணினா பிடிக்காது.. தானாச் செய்யனும்னு நினைப்பா..”

உத்ரா தொடர்ந்து பேசினாள்.. அவள் பேசி முடிக்கும் வரை மொட்டை மாடியில் நீட்டிக் கொண்டிருந்த தென்னங்கீற்றை வருடிக் கொண்டிருந்த நந்தினி.. அவள் பேசி முடித்ததும்..

“யார்கிட்டடி என்னைப் பத்திக் கதை அளந்த..?” என்று கேட்டாள்..

“ஷட்-பி கிட்டத்தான்..” சிந்தனையுடன் சொன்னாள் உத்ரா..

“அடிப்பாவி..! என்னமோ ரொமான்ஸில கரை கண்டவ மாதிரி அவரைப் பத்திப் பேசினாலே கண்ணைச் செறுகிக்கிட்டுப் பேசுவ.. அவர்கூட செல்ஃபோனில பேசறப்ப மட்டும் என்னவோ செங்கிஸ்தானோட ஒப்பந்தம் போடறதைப் போல மூஞ்சியை வைச்சுக்கிட்டுப் பேசுவியா..? பாவம்டி அவரு..”

“பாவம்தான்.. என்ன செய்கிறது..? எனக்கு நீ வந்து ஃபிரண்டா வாய்ச்சிருக்கியே.. உன் முன்னால ரொமான்ஸ் வந்து தொலைக்கும்ங்கிற..?”

உத்ராவின் பதிலடியில் வாயை மூடிக் கொண்டாள் நந்தினி.. நிச்சயதார்த்ததில் கலந்து கொள்ள வருகிறேன் பேர்வழியென்று வந்து செஞ்சிக் கோட்டையிலிருந்து குதிக்க முயன்ற அவளால் வாயைத் திறந்து பேச முடியுமா..? உத்ராவாக இருக்கப் போய் அவள் வீட்டிலும், நந்தினியின் வீட்டிலும் அந்த தற்கொலை முயற்சியைப் பற்றி வாயைத் திறக்காமல் இருக்கிறாள்.. வேறு ஒருவராக இருந்தால் கதையே வேறு..

“ஸாரிடி உத்ரா..” வருத்தத்துடன் சொன்னாள் நந்தினி..

“நீ பண்ணி வைக்க இருந்த வேலைக்கு எத்தனை ஸாரி சொன்னாலும் போதாது.. உன் பக்கத்தில இருக்கிற நியாயத்தை நினைச்சுப் போனாப் போகுதுன்னு விடறேன்.. வினித் ஒரு ஐடியா சொல்றார்..”

வினித் உத்ராவை மணக்கப் போகும் மாப்பிள்ளை.. அவனது காதுகள் வரை நந்தினியின் தற்கொலை முயற்சி போய் விட்டதே என்று நந்தினி மனத்தாங்கல் கொண்டாள்..

“இதையெல்லாம் அவர்கிட்டச் சொல்லனுமா உத்ரா..?”

“சொல்லைன்னா எப்படி வழி கிடைக்கும்..? நானா எதையும் செய்ய முடியாது நந்தினி.. உன்னைப் போலதான் நானும்.. புரிஞ்சுக்க..” வெடுவெடுத்தாள் உத்ரா..

“இப்போ நான் என்ன சொல்லிட்டேன்னு கோவிச்சுக்கற..? சொல்லனுமான்னுதானே கேட்டேன்..? ஆமாம்.. சொல்லித்தான் ஆகனும்னு நீ சொன்ன அதுக்கென்னன்னு கேட்டுக்கப் போறேன்..” நந்தினி வெள்ளைப் புறாவை பறக்க விட்டாள்..

“இப்படியே மெயின்டெயின் பண்ணு..” எச்சரித்த உத்ரா வினித் சொன்ன ஐடியாவைப் பற்றி விவரித்தாள்..

“வினித்தோட ஃபிரண்டுக்கு ஃபிரண்டுக்கு ஃபிரண்டோட ஒண்ணு விட்ட அண்ணனோட ஃபிரண்டுக்கு ஃபிரண்டு பெரிய பிஸினெஸ் மேனாம்.. கேரளாவில ஏலக்காய் எஸ்டேட், தேயிலை எஸ்டேட், ரப்பர் பேக்டரி, சணல் பேக்டரின்னு எக்கச்சக்க பிஸினெஸ் இருக்காம்.. எல்லாத்தையும் கவனிச்சுக் கண்ட்ரோலில வைச்சுக்கிற மாதிரி ஜெனரல் மேனேஜர் போஸ்ட் வேண்டாம்.. பேசாம உன்னை அங்க வேலையில சேர்ந்துக்கச் சொல்கிறார்..”

“வேலையா..?”

‘ஆ’வென வாய் பிளந்தாள் நந்தினி.. இமைகளைக் கொட்டி விழித்தாள் அவளது விழிகளுக்கு முன்னால் விரல் சொடுக்கி கவனத்தை ஈர்த்த உத்ரா கைவிரல்களை விரித்து..

“என்ன்ன்ன்..ன..?” என்று ஒருதினுசாக வினவினாள்..

“இதையேண்டி நான் நினைச்சுப் பாக்கல..?”

“புத்தியிருந்தா நினைச்சுப் பார்த்திருப்ப.. நீதான் புத்தியை கடன் கொடுத்திட்டு உக்காந்திருக்கயே..”

“யாருக்குடி கொடுத்தேன்..? உனக்கா..”

“உன்கிட்டப் புத்தியைக் கடன் வாங்கினா விளங்கிரும்.. நான் உருப்பட்டாப்புலதான்.. இருக்கிற புத்தியே போதும்..”

“ஏண்டி என்னைத் திட்டற..?”

“நீ பண்ணி வைக்க இருந்த வேலைக்குக் கொஞ்சச் சொல்கிறயா..?”

“அதுக்காக அதையே சொல்லிக் காட்டுவியா..?”

“அடங்குடி.. இப்போ உன் முன்னால தப்பிக்கிறதுக்கு இருக்கிற வழி இது ஒண்ணுதான்.. என்ன சொல்ற..? அந்த வேலைக்குப் போறயா.. இல்லையா..?”

இல்லையென்று நந்தினியால் மறுக்க முடியவில்லை.. அதே சமயத்தில் முன்பின் தெரியாத அண்டை மாநிலத்தில் ஏதோ ஒரு பெயர் தெரியாத எஸ்டேட்டில் மலை பிரதேசத்தில் வேலைக்குப் போகிறேன் என்று ஒப்புக் கொள்ளவும் பயமாக இருந்தது.. அதை உத்ராவிடம் சொன்னபோது..

“ஒண்ணு இதுக்குப் பயப்படு.. இல்லைன்னா அதுக்குப் பயப்படு..” என்று சிடுசிடுத்தாள்..

“கோவிச்சுக்காதேடி உத்ரா.. பயமாயிருக்குடி..”

“பயந்தா வேலைக்கு ஆகாது நந்தினி.. நீ தெளிவா ஒரு முடிவை எடுத்துத்தான் ஆகனும்.. இது ஒண்ணுதான் உனக்கான ஒரே வழி.. கட்டாயக் கல்யாணத்தில இருந்து தப்பிக்கத் தற்கொலைதான் செய்துக்கனும்னு இல்லை..

தலை மறைவாகவும் இருக்கலாம்.. கொஞ்ச நாள் போனா நம்ம பொண்ணு திரும்பி வந்தாப் போதும்ன்னு உன் பேரண்ட்ஸே மனம் மாறிருவாங்க.. அப்ப நான் உனக்குத் தகவல் சொல்றேன்.. வேலையை ரிசைன் பண்ணிட்டுத் திரும்பி வந்திரு..”

உத்ரா சொல்வதைக் கேட்க இலகுவாகத்தான் இருந்தது.. அதை செயல்படுத்த வேண்டும் என்று நினைக்கும் போது மலைப்பாக இருந்தது..

“எப்படிடீ..?” நந்தினி குழந்தை போல விழித்தாள்.. உத்ராவுக்கு பாவமாகத்தான் இருந்தது.. என்ன செய்வது..? வேறு வழியில்லையே என்று கைகளை விரித்தாள்..

“நானும் வினித்தும் உனக்காக மூளையைக் கசக்கி யோசித்ததிலே இந்த வழிதான் கிடைச்சது நந்தினி.. உன்கிட்ட சொர்டிஃபிகேட்ஸ் இல்லை.. அதை எடுக்கனும்னா நீ

தஞ்சாவூருக்குப் போயாகனும்.. அப்படிப் போனா மாட்டிக்குவேன்னு சொல்ற..”

“ஆமாமாம்.. நிச்சயமா மாட்டிக்குவேன்.. என்னைக் கார்னர் பண்ணிக் கல்யாணம் வரைக்கும் கொண்டு போய் நிறுத்திருவாங்க..”

“அதுக்குத்தான் சொல்றேன்.. இந்த வேலையை ஒப்புக்கன்னு.. பாரு நந்தினி.. சென்னையிலோ, பெங்களூரில வேலைக்குச் சேரனும்னா உன் செர்டிஃபிகேட் தேவைப்படும்.. அட அதையாவது உன் தம்பி கிட்டத் தாஜா பண்ணிக் கடத்தச் சொல்லிரலாம்ன்னு வை.. நீ வேலை பார்க்கிற கம்பெனியை மோப்பம் பிடிச்சு உன் அப்பா தேடி வந்தாலும் வந்திருவார்..”

“கட்டாயம் வருவார்..” நந்தினியின் உடல் நடுங்கியது.. மேகநாதன் அப்பேற்பட்டவர்.. அது என்ன மாயமோ, மந்திரமோ தெரியாது.. அவரிடம் எதை மறைக்க வேண்டும் என்று நந்தினி ஒளித்து வைப்பாளோ அது மிகச் சரியாக அவர் கைகளில் அகப்பட்டு விடும்..

“என்ன இது..?” என்ற அவரது சிம்ம கர்ஜனையில் நந்தினியின் சர்வாங்கமும் நடுங்கி விடும்..

“உன் அப்பாவைப் பத்தித் தெரிஞ்சு வைத்திருக்கிறதினாலதான் சொல்றேன்.. கம்யூட்டர் என்ஜினியரிங் படித்த உன்னை ஐ.டி கம்பெனிகளிலதான் தேடுவார்.. கேரளா மலைகள் மேல தேட மாட்டார்.. அவருக்கு கால்வலின்னு நீதானே சொன்ன..”

“ஏண்டி.. கால்வலி இருந்தா மகளைத் தேட கேரளாப்பக்கம் வரமாட்டாருன்னு எப்படி நீ சொல்லலாம்..?”

“அறிவுக் களஞ்சியமே..! கேரளாவில நம்ம ஊர் மாதிரி காரும், பஸ்ஸும், ஆட்டோவுமா இருக்காது... எங்கே போகனும்னாலும் ஜீப்தான்.. சில இடங்களுக்கு ஜீப் போகாது.. முட்டி வலியைப் பத்தி யோசிக்காம மலையேறித்தான் ஆகனும்.. இப்பச் சொல்லு... அந்தப் பக்கமா உன்னைத் தேடிக்கிட்டு உன் அப்பா வருவாருங்கிற..?”

“வரவே மாட்டார்..”

நந்தினியின் முகம் ஒளிர்ந்தது.. அவளைத் தோளில் தூக்கி வளர்த்த தந்தையின் கைகளில் அகப்பட்டு விடாத இடத்தில் ஓடி ஒளிந்து கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப் பட்டு விட்டதை நினைத்து துயரம் வந்ததில் அவள் முகம் மறுபடியும் ஒளியிழந்து வாடியது.

அவள் முகத்தையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்த உத்ரா..

“இப்ப என்ன..?” என்றாள்..

“அப்பாவிடமிருந்து ஒளிந்து தப்பிக்கனும்னு நினைக்கறேனே.. அதை நினைச்சா மனசு வலிக்குதுடி..” நந்தினி அழுது விட்டாள்..

தோழியின் மன உணர்வுகளைப் புரிந்து கொண்ட உத்ரா..

“நீயென்ன வேணும்னா செய்யற..? உன்னைத் தேடி அவரை அலைய விடனும்னு உனக்கென்ன வேண்டுதலா இருக்கு..? சிச்சுவேஷன் இப்படி அமைஞ்சு போயிருச்சேடி..” என்று தேறுதல் சொல்லிச் சமாதானப் படுத்தினாள்..

நந்தினி சமாதானமாகவில்லை.. தந்தைக்கும், தாய்க்கும் துன்பம் கொடுக்கப் போகிற வருத்தம் அவள் மனதில் எழுந்தது..

“அப்பா நல்லவர்டி.. அதட்டுவாரே தவிர அடிக்க மாட்டார்.. அந்த அதட்டலில் அக்கறை இருக்கும்.. இது வேணும்னு எதையாவது மனசில நினைச்சுக்கிட்டு

அப்பாகிட்டக் கேட்கப் போவேன்.. எப்படின்னு தெரியாது உத்ரா.. நான் மனசில நினைச்சது அவர் கையில இருக்கும்.. எனக்காக வாங்கிட்டு வந்திருப்பார்..” நந்தினியின் விழிகள் நீரில் மின்னின..

“இப்பவும் அப்படித்தானோ என்னவோ.. உன் மனசுப் பிரகாரம்தான் கல்யாணத்தை ஃபிக்ஸ் பண்ணியிருக்காரோ என்னவோ.. ஒருதரம் உனக்காக ஃபிக்ஸ் பண்ணியிருக்கிற மாப்பிள்ளையை நேரில் பார்த்துப் பேசிப் பாரு நந்தினி.. எனக்கென்னவோ நீ தேவையில்லாம பயப்படறயோன்னுதான் தோணுது.. இப்பவும் லேட்டாகிறலை.. உன் வீட்டுக்குத் தெரியாம உன் தம்பிகிட்டப் பேசி அவரோட ஃபோன் நம்பரை வாங்கறேன்.. பேசிப்பாரு.. அதுக்கப்புறமா முடிவு பண்ணு..” உத்ரா ஆலோசனை சொன்னாள்..

“வேண்டவே வேண்டாம்..” பதறிப் போனாள் நந்தினி..

“அம்மா, அப்பா மனசு வருத்தப்படும்ன்னு இந்த அளவுக்கு யோசிக்கிறவ சூசைட் பண்ணிக்கனும்ன்னு நினைக்கலாமாடி..?”

“செத்த ஒரு நாள் வருத்தத்தோட போயிரும் உத்ரா.. அந்தச் சாவையும் ஆக்ஸிடெண்ட் போலச் சாகனும்ன்னு தான்

செஞ்சிக்கே வந்தேன்.. மலையுச்சியில கால் தடுக்கி விழுந்துட்டான்னு நினைத்துக்குவாங்க.. சாட்சிக்கு நீயும் இருப்பேன்னு நினைச்சேன்..''

‘‘வாயிலேயே போட்டிருவேன்.. பேசறா பாரு பேச்சு.. இதில இவளோட புத்திசாலித்தனத்தை நான் மெச்சிக்கனுமாம்.. திட்டத்தை விளக்கிச் சொல்றா.. பெத்தவங்க மனசு என்ன பாடுபடும்ன்னு நினைச்சுப் பார்த்திருந்தா இப்படிப் பேசியிருக்க மாட்டேடி.. எங்கேயிருந்தாலும் பெத்த பிள்ளை உயிரோட இருந்தாப் போதும்ன்னுதான் அவங்க மனசு நினைக்கும்.. அவங்க ஃபிக்ஸ் பண்ணியிருக்கிற மாப்பிள்ளையை உனக்குப் பிடிச்சிருந்தா கழுத்தை நீட்டு.. இல்லேன்னா போராடிப் பாரு.. அது முடியலைன்னா தலை மறைவா எங்கேயாவது கண்காணாத இடத்துக்குப் போயிரு.. அப்படிப் போகப் போகிறதை அவங்களுக்கு லெட்டர் மூலமா தெரியப் படுத்திரு.. நீ கல்யாணமே பண்ணிக்க வேணாம்.. எங்க மகளாகவே காலம் முழுக்க இருந்திரும்மான்னு அவர்களே கதறிக்கிட்டு உன் வழிக்கு வந்திருவாங்க.. அதை விட்டுட்டுத் தற்கொலை அது இதுன்னு பினாத்தினன்னு வைய்யி.. காபியில மயக்க மருந்தை கலந்து கொடுத்துட்டு உங்க அப்பாவுக்கு தகவல் அனுப்பி வர வைச்சு

தஞ்சாவூருக்கு உன்னை பார்சல் பண்ணி அனுப்பி வைச்சிருவேன்.. எப்படி வசதி..?’’

இதுதான் வசதி என்று சொல்ல முடியுமா என்ன..?

‘காபியிலே மயக்க மருந்தா..?’ நந்தினிக்கு திகிலாக இருந்தது..

‘இவள் செய்தாலும் செய்வாள்..’

அந்த வீட்டில் இருக்கும் வரை காபியே குடிக்கக் கூடாது என்ற முன் ஜாக்கிரதை முடிவை எடுத்தாள்.. எடுத்த முடிவை பதினைந்து நிமிடங்களுக்கு மேல் அவளால் காப்பாற்ற முடியவில்லை.. ‘கமகம’ வென்ற காபியின் வாசனை சமையலறையைத் தாண்டி, மாடிப் படிகளில் பயணித்து, மாடி ஹாலைத் தாண்டி, மொட்டை மாடிக்கு வந்து நந்தினியின் நாசியில் நுழைந்ததில் அவள் சங்கல்பத்தை மறந்து..

‘‘எங்கே காபி..? எங்கே காபி..?’’ என்று பறந்தாள்..

‘‘இருடி பறக்காதே..’’ என்று உத்ரா அவளை அமர்த்திப் பிடிக்க வேண்டியிருந்தது..

காபித் தம்ளர்கள் மொட்டை மாடிக்கு வந்து சேர்ந்ததும் உத்ராவை முந்திக் கொண்டு பாய்ந்து காபித் தம்ளரைக்

கைப்பற்றி உறிஞ்ச ஆரம்பித்தபோது நந்தினியின் மனச்சாட்சி..

‘இங்கே ஓர் வார்த்தை ஓர் சொல்லில் நிற்கும் நந்தினியென்ற மாணிக்கம் எங்கே தொலைந்து போனாள்..?’ என்று தேட ஆரம்பித்தது..

“இன்னைக்குப் பூராவும் யோசி நந்தினி.. ஈவினிங் வரைக்கும் டயம் எடுத்துக்க.. இதைவிடப் பெட்டரா உனக்கெதும் வழி தோணினாலும் சொல்லு.. அதை ஃபாலோ பண்ணலாம்..”

உத்ரா சொல்லி விட்டாள்.. நந்தினியின் தலை கிறுகிறுக்க ஆரம்பித்தது..

# அத்தியாயம் 9

**ந**ந்தினியும் ஆன மட்டும் யோசித்து விட்டாள்..

மூளையைக் கசக்கிப் பிழிந்து மண்டையை மொட்டைச் சுவரில் 'ணங், ணங்' கென்று மோதிப் பார்த்தாலும் மாற்று வழி ஏதும் தென்படவில்லை.. சுற்றிச் சுற்றித் தற்கொலை.. இல்லையென்றால் தலைமறைவு என்பதில்தான் வந்து நின்றது..

'தற்கொலைக்கு தலைமறைவு பெட்டர்..' என்று தோன்றினாலும் தெரியாத இடத்திற்குப் போக வேண்டுமே என்று பயமாக இருந்தது..

"வெளிநாட்டில் வேலை கிடைச்சா என்ன பண்ணுவ..?" என்று அதட்டினாள் உத்ரா..

"அது கம்பெனிடி.. இது கேரளா மலையில இருக்கிற எஸ்டேட்.." நந்தினி முணுமுணுத்தாள்..

"எல்லாம் ஒண்ணுதான்.. வெளிநாட்டுக் கம்பெனிக்கு சொர்டிஃபிகேட், விசா, பாஸ்போர்ட் லொட்டு லொசுக்குன்னு ஆயிரத்தெட்டு ஃபார்மாலிட்டிஸ் இருக்கு. . இங்கேன்னா

எதுவுமில்லை.. டிரெயினில ஏறினியா.. எஸ்கேப் ஆனயான்னு ஈஸியா தலை மறைவாகிறலாம்..”

“இருந்தாலும் பயமாயிருக்கு உத்ரா..”

“நீ பயப்படறதைப் போல நான் விட்டிருவேனாடி..? நீ இருக்கிற இடம் உன் வீட்டுக்குத்தான் தெரியாது.. எனக்குத் தெரியுமில்ல..?”

“ஆமாமில்ல..”

உத்ராவுக்குத் தெரிந்த இடத்திற்குத்தான் போகிறாள் என்பதில் நந்தினியின் பயம் கொஞ்சம் குறைந்தது.. அதை மேலும் குறைத்து அவளுக்குத் தைரியம் கொடுத்தாள் உத்ரா..

“வினித்துக்குத் தெரிந்த எஸ்டேட் முதலாளி கிட்டத்தான் வேலைக்குச் சேரச் போகிற.. அவர் நல்லா விசாரிச்சுட்டார்.. உன் ஃபிரண்டோட பாதுகாப்புக்கு நான் கேரண்டின்னு அவர் சொன்னதினாலதான் இந்த ஐடியாவையே நான் ஏத்துக்கிட்டேன்..”

“அப்படியா..? உன் வுட்-பியே கேரண்டி கொடுத்தாரா..? அப்பச் சரி.. நான் கேரளாவுக்குப் போறேன்..”

ஒருவழியாக நந்தினி ஒப்புக் கொண்டவுடன் திட்டத்தை எப்படி செயல்படுத்துவது என்று தோழிகள் இருவரும் கலந்து பேசினார்கள்..

“இங்கேயிருந்தே கிளம்பிருடி.. வினித் டிக்கெட் எடுத்து வைச்சுக்கிட்டுக் காத்திருப்பார்.. சென்னைக்குப் போயிரலாம்.. அங்கேயிருந்தே கேரளாவுக்கு டிரெயின் ஏறிரு..”

“சென்னைக்குப் போயிரலாம்ன்னா..? நீயும் கூட வருவியா..?”

“பின்னே..? உன்னைத் தனியாவா அனுப்பி வைப்பேன்..?”

உத்ராவின் அக்கறையில் மனம் நெகிழ்ந்த நந்தினி..

“தேங்க்ஸ் உத்ரா..” என்று தோழியின் கையைப் பிடித்துக் கொண்டாள்..

“இதுக்கெல்லாம் தேங்க்ஸ் சொல்லுவாங்களா..? இது என் கடமை நந்தினி.. கேரளாவுக்கே உன் கூட வந்திருப்பேன்.. கல்யாண சமயம் பாரு.. நான் வீட்டை விட்டு நகர முடியாது.. உன்னைத் தஞ்சாவூருக்குப் பஸ் ஏத்தி விட்டுட்டு திண்டிவனம் வரைக்குப் போய் மேக்கப் கிட்ஸ்

கொஞ்சம் வாங்கிட்டு வரப் போறேன்னு கதை சொல்லித்தான் சென்னைக்கு வந்தாகனும்..'' கவலையுடன் சொன்னாள் உத்ரா..

''இதுவே அதிகம்டி.. உன் கல்யாணத்தை மறந்துட்டு எனக்குப் பிடிக்காத கல்யாணத்தில இருந்து தப்பிக்க வழி சொல்ற பாரு.. இதுக்கே தௌசண்ட் டைம்ஸ் தேங்க்ஸ் சொல்லனும்..''

''பத்திரமா போயிருவேல்ல..''

''ம்ம்ம்.. உன் மனசு என் கூட இருக்கிறப்ப எனக்கென்ன பயம்..?''

தோழிகள் அணைத்துக் கொண்டார்கள்.. நந்தினியின் கண்ணீர் உத்ராவின் தோள்களை நனைத்தது..

''அழுகாதே..'' தோழியின் கண்ணீரை துடைத்து விட்டாள் உத்ரா..

''செஞ்சிக்கு நான் வந்த காரணமே வேற உத்ரா..''

''முட்டாள்தனமான காரணம்.. வெளியில் சொல்லிராதே..''

நந்தினி மௌனித்தாள்.. வானத்தைப் பார்த்தாள்.. மழை மேக மூட்டம் மாறாமல் கார் மேகங்கள் சூழ பயமுறுத்திக் கொண்டுதான் இருந்தது வானம்.. மழை வந்தாலென்ன என்று அவளுக்குத் தோன்றியது.. சொட்டச் சொட்ட நனைந்த பின்னால் மழைமீது பயம் வருமா என்ன..? இன்னும் கொஞ்சம்ன நனைந்து பார்க்கலாம் என்றுதானே தோன்றும்..?

மழைத்துளி விழுந்தது.. அவள் கையை நனைத்தது..

“உத்ரா..” என்ற அகிலாவின் அழைப்பில்..

“வந்துட்டேன்ம்மா..” என்று உத்ரா ஓடிவிட்டாள்..

நந்தினி தனித்து நின்றாள்.. அவளுக்குப் பழக்கமில்லாத தனிமை அவளை அச்சுருத்தியது.. வானத்தில் சூழ்ந்த கார்கால மேகங்கள் வெயிலை விரட்டி இருட்டைப் பரப்பின.. மழையிருட்டும் தனிமையும் ஒன்று சேர்ந்து ஆக்ரமித்ததில் மனதிலிருந்த தைரியம் அகல்வதைப் போல உணர்ந்தாள் நந்தினி.. கண்மூடி மழைநீரில் முகம் காட்டி நின்றாள்.. சடசடவென ஊசிகளாய் இறங்கிய மழைத்துளிகளில் அவளது முகம் நனைந்தது.

எதற்காக செஞ்சிக்கு வந்தாள் இப்போது என்ன செய்யப் போகிறாள் என்ற சூழ்நிலை மாற்றத்தில் அவளது மனம் அலைகடலில் துரும்பாக ஆடியது..

செஞ்சிக்குக் கிளம்பும்போது தஞ்சைக்கு திரும்பி வரக்கூடாது என்ற வைராக்கியத்துடன்தான் வந்தாள்.. ஆனால் கேரளாவுக்குப் போக வேண்டும் என்று வரவில்லையே..

அவள் வாழ்வுதான் எப்படியெல்லாம் மாறுகிறது..? மற்றவர்கள் அவள் வாழ்வை நிர்ணயிக்கிறார்களே.. விதியின் கைகளில் அவள் இன்னும் எங்கெல்லாம் உருண்டோட வேண்டியிருக்குமோ.. காலத்தின் கட்டாயம் அவள் மீது மட்டும் ஏன் திணிக்கப் படுகிறது..? மனம் போல் மாங்கல்யம் என்பது அவளுக்கு மட்டும் ஏன் மறுக்கப்பட்டது..

இதோ.. காத்திருக்கும் திருமண வாழ்வைப் பற்றிய கற்பனைகளில் மூழ்கி.. அதைப் பற்றிப் பேசும் போதே கன்னம் சிவக்கிறாளே உத்ரா.. அவளுக்கு இதைப் போல கட்டாயத் திருமணமா நடந்தப் படுகிறது..? இல்லையே.. பெண் பார்க்க மாப்பிள்ளை நேரில் வந்தான்.. அவளும் மாப்பிள்ளையைப் பார்த்தாள்.. தனித்துப் பேசினார்கள்..

விருப்பங்களைப் பகிர்ந்து கொண்டார்கள்.. உத்ராவுக்கு மாப்பிள்ளையைப் பிடித்துப் போய் விட்டது.. ஏனென்றால் வினித் அவளைப் போல படித்திருந்தான்.. வேலை பார்த்தான்.. கனிவகா இருந்தான்.. காதல் சொன்னான்.. முக்கியமாக அவன் கோபம் வந்தால் பெல்ட்டைக் கையில் எடுப்பதில்லை.. துப்பாக்கியைத் தூக்குவதில்லை..

‘உத்ரா கொடுத்து வைத்தவள்..’

நந்தினி பெருமூச்சு விட்டாள்.. நந்தினியின் பெற்றோரைவிட உத்ராவின் பெற்றோர் வசதி குறைவானவர்கள்.. ஆனால் பெற்ற மகளின் விருப்பத்துக்கு மதிப்புக் கொடுத்து அவளது மனதை மதித்து அவளது எண்ணம் போல மணவாழ்வை அமைத்துக் கொடுக்கப் போகிறார்கள்.. அவர்களை விட வசதியான பெற்றோருக்கு மகளாகப் பிறந்தும் நந்தினி பிடிக்காத திருமணத்திலிருந்து தப்பிக்க ஊர் விட்டு ஊர் ஓடப் போகிறாள்..

கொட்டிய மழைநீர் அவளது ஆடையை நனைத்து உடலில் படிந்து குளிரையூட்டியது..

“லூஸாடி நீ..?”

தலையில் அடித்தபடி கையில் குடையுடன் வந்து சேர்ந்தாள் உத்ரா.. புத்திசாலி என்று அவளிடம் பெயரெடுத்திருந்த நந்தினி இப்படிப் பட்டம் வாங்க வேண்டி வந்து விட்டதே என்று உதட்டைக் கடித்துக் கொண்டாள்..

“அம்மா பார்த்திருந்தா அவ்வளவுதான்... மழை பெய்யுதுன்னு தெரியுதில்ல.. கீழே இறங்கி வருகிறதுக்கென்ன..?”

தோழியை கடிந்த உத்ரா குடைக்குள் அவளை இழுத்தாள்.. விலகி நடந்த நந்தினி..

“அதான் முழுசா நனைஞ்சுட்டேனில்ல.. குடைக்குள்ள வந்தா என் ஈரம் உன்னையும் ஒட்டிக்கும்..” என்றாள்..

“ஒட்டினா ஒட்டட்டும்..”

பிடிவாதமாக தோழியைக் கட்டிக் கொண்டாள் உத்ரா.. நந்தினியின் மனதிலிருந்த தனிமை மறைந்தது.. இது எத்தனை நாள் என்ற ஏக்கம் பிறந்தது..

இரண்டு நாள்களில் அவள் கேரளாவுக்கு கிளம்பியாக வேண்டும்.. துணைக்கு யாருமில்லாமல் தனிமையிலே

கேரளத்து மலையின் எஸ்டேட்டில் காலத்தை கழிக்க வேண்டும்..

நந்தினியின் வீடு கலகலவென்று இருக்கும்.. மேகநாதன் ஜவுளிக்கடை வைத்திருந்தார்.. பக்கத்தில் காவேரிக்கரையில் பூர்விகக் கிராமம்.. தோப்பு, தோட்டமென்று கிராமத்தின் பண்ணையார் குடும்பத்தில் பிறந்தவர் என்பதால் வீட்டில் ஜனக்கட்டு அதிகமிருக்கும்..

பிள்ளைகளின் படிப்பு, ஜவுளிக்கடையென்று தஞ்சாவூருக்குக் குடி பெயர்ந்து விட்டாலும் மண்வாசனை மாறாதவர் அவர்.. தோப்பு, துரவைக் கவனிக்கக் கணக்குப் பிள்ளை உண்டு.. கிராமம் முழுவதும் உறவுக் காரர்கள் உண்டு.. தினமும் யாராவது ஒருவர் ஏதாவது காரணத்தைச் சொல்லி தஞ்சாவூரிலிருக்கும் மேகநாதனின் வீட்டில் தங்கி விட்டுப் போவார்கள்.. நந்தகுமார் அதை ‘படையெடுத்தல்’ என்றும் ‘முகாமிடுதல்’ என்றும் பூனை பெயர்களைச் சூட்டி வர்ணிப்பான்..

சென்னையில் படிக்கும் போது தோழிகளுடன் அறையைப் பகிர்ந்து கொண்டதால் அங்கும் தனிமை அவளை அண்டவில்லை..

அப்படி வளர்ந்தவள் கேரளாவிற்குத் தனித்துப் பயணிக்கப் போகிறாள்..

மழையில் நனைந்திருந்தவளை மிரட்டி உலர்வான துணிகளுக்கு மாற வைத்தாள் உத்ரா..

“காய்ச்சல் வந்துட்டா என்னடி பண்றது..” என்று அங்கலாயத்தவளிடம்..

“வந்தா நல்லதுதானே உத்ரா.. தானாய் போய் சேர்ந்துருவேனில்ல..? தற்கொலை பண்ணிக்கிட்டாத் தான்தப்பு.. தானாய் போய் சேர்ந்தா தப்பில்லைல்ல..” என்று விரக்தியுடன் சொன்னாள் நந்தினி..

“நினைத்துக்கிட்டு இரு..” தோழியின் முதுகில் கோபம் தீர மொத்தினாள் உத்ரா..

அக்கறையான அவளின் மொத்து நந்தினிக்கு வலிக்கவில்லை.. இதமாக இருந்தது.. இப்படிக் கேரளாவில் மொத்த யார் இருப்பார்கள் என்ற நினைவில் கண் கலங்கினாள்.. உத்ரா அடிப்பதை நிறுத்தி விட்டாள்..

“காய்ச்சல்ன்னு விழுந்துக்கிட்டா மேலே போய் சேர மாட்டேடி.. தஞ்சாவூருக்குப் போய் சேருவ..” என்று அறிவுறுத்தினாள்..

“எப்படியாம்..?”

“என் அம்மாவைப் பத்தித் தெரியுமில்ல.. உனக்குக் காய்ச்சல் வந்துட்டா ஊரார் வீட்டுப் பிள்ளையாச்சேன்னு பக்கத்தில நூறு பேரை காவலுக்கு உட்கார வைச்சுட்டு உன் வீட்டுக்குப் ஃபோன் போட்டிருவாங்க.. செஞ்சிக்கு வந்த இடத்தில மழையில நனைஞ்சு உனக்குக் காய்ச்சல் வந்திருச்சுன்னா அப்படியான்னு கேட்டுக்கிட்டு உன் அப்பா சும்மாயிருப்பாரா..?”

அடுத்த நொடியே காரை எடுத்துக் கொண்டு பறந்து வந்து விடுவார் என்ற நினைவில் துக்கம் நந்தினியின் தொண்டையை அடைத்தது..

கோபக்காரர்.. கண்டிப்பானவர் என்பதைத் தவிர்த்து மேகநாதனின் பாசத்தில் குறை சொல்ல முடியுமா..?

தஞ்சைக்குத் திரும்பினால் பிடிக்காத திருமணத்தில் மாட்டிக் கொண்டாக வேண்டும் என்பதில் தலையைத் துவட்டி,

உலர்ந்த ஆடைக்கு மாறி.. விகிஸ் ஆவி பிடித்து, என்று தற்காப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டாள் நந்தினி..

“இந்தாடி.. இதைக் குடிச்சா ஜல தோஷம் கிட்டக்கூட வராதாம்.. என் பாட்டி போட்டுக் கொடுத்தாங்க..”

அந்தக் கஷாயத்தின் நறுமணத்தில் நந்தினிக்கு வயிற்றைப் பிரட்டிக் கொண்டு வந்தது.. இருந்தாலும் மூக்கை இறுக்கிப் பிடித்துக் கொண்டு அதைக் குடித்து சாதனை செய்தாள் நந்தினி.. அவளின் அந்த அசாத்திய மனோ தைரியத்தைப் பாராட்டி மகிழ்ந்து போனாள் உத்ரா.. நந்தினி கேரளாவுக்குக் கிளம்புவதற்கான ஆயத்தங்களை உத்ரா ஆரம்பித்தாள்.. தடை சொல்ல முடியாத பயணத்தை எதிர்கொள்ள வேண்டிய நிர்பந்தத்திற்கு நந்தினி ஆளானாள்..

# அத்தியாயம் 10

**ம**ஞ்சள் தடவிய கல்யாணப் பத்திரிக்கைகள் கட்டுக் கட்டாக பூஜையறையில் அடுக்கப் பட்டிருந்தன.. உத்ராவின் தாய், தந்தையும் சொந்த பந்தங்களும் கண்மூடி வேண்டி முடித்ததும் கற்பூரம் ஊதுபத்தி கொளுத்தி வணங்கி விட்டு கல்யாண பத்திரிக்கைகளை எடுத்து வந்து ஹாலின் டீப்பாயில் பரப்பினார்கள்..

“முதல் பத்திரிக்கையை குல தெய்வத்துக்கு வைக்கனும்..”

ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.. மறுநாள் குலதெய்வக் கோவிலுக்கு கிளம்புவதென்றும் முடிவானது.. அதே நாளில் நந்தினியை கேரளாவுக்கு ரயிலேற்றி விட கிளம்பப் போவதாக உத்ரா தீர்மானித்தாள்.. நந்தினியின் மனம் நடுங்கியது..

“அம்மாவோட மைண்ட் ரிலாக்ஸா இருக்க விடக் கூடாது நந்தினி.. பரபரன்னு இருக்க வைக்கனும்.. ரிலாக்ஸா இருந்தா திண்டிவனத்துக்குப் போனவ திரும்பி வர இவ்வளவு நேரமான்னு திண்டிவனத்துக்கு ஆளை அனுப்பி என்னைத் தேட ஆரம்பிச்சுருவாங்க.. யார் கண்டது..? உன்னை

தஞ்சாவூருக்கு பஸ் ஏத்தி விட வேற யாரையாவது துணைக்கு அனுப்பிட்டு என்னை வீட்டிலே நிறுத்தினாலும் நிறுத்திரலாம்.. நல்ல வேளையா எங்க குலதெய்வம் நமக்குக் கை கொடுத்திருச்சு.. குலதெய்வக் கோவிலுக்குப் பத்திரிக்கை வைக்கக் காலையிலே கிளம்பிப் போனா நைட்டுத்தான் திரும்பி வருவாங்க.. மதியச் சாப்பாடு கோவிலில தயார் ஆகிரும்.. சாமி கும்பிட்டு, பந்தி பரிமாறி சாப்பிட்டு மரத்தடி நிழலில கால நீட்டி உட்கார்ந்து உறவு மொறை ஊர்களில நடந்திருக்கிற சங்கதிகளை கடை பரப்பி அசை போட்டுட்டு.. மெல்ல நகர்ந்து.. சொந்த பந்த வீடுகள்ல நடக்கிற சங்கதியில வந்து நின்னு பொறணி பேசி முடிக்கிறதுக்கும் வெய்யில் தணியறதுக்கும் சரியா இருக்கும்.. திரும்பவும் சாமி கும்பிட்டுட்டு கார்களில அடைஞ்சு பக்கத்து டவுனில காபி பலகாரம் மொக்கிட்டு இருட்டின பின்னாடி உள்ஸூ, புஸ்ஸூன்னு வீட்டுக்கு வந்து சேர்வாங்க.. நான் எங்கே போனேன், என்ன பண்ணினேன்னு கேக்கக் கூட அம்மாவுக்கு தெம்பு இருக்காது.. வயித்துக்கு எதையாச்சும் போட்டுட்டுத் தூங்கப் போயிருவாங்க.. நான் தப்பிச்சுருவேன்.."

உத்ரா சொல்லச் சொல்ல இதில் இத்தனை விவரங்கள் இருக்கிறதா என்றிருந்தது நந்தினிக்கு..

'இவதான் எத்தனை தெளிவா திட்டம் போடறா..!'

சென்னைக்கு போய் வருவதற்கே இவ்வளவு தூரத்துக்கு யோசித்து காய் நகர்த்துபவள், கேரளாவுக்கு நந்தினியை அனுப்ப எவ்வளவு யோசித்திருப்பாள்..? வினித்தை எத்தனை கேள்விகள் கேட்டிருப்பாள்..?

உத்ரா நந்தினியை பாதுகாப்பான இடத்திற்குத்தான் அனுப்பி வைக்கிறாள் என்ற நம்பிக்கை நந்தினியின் மனதில் வந்தது.. அந்த நெகிழ்ச்சியை அவளது விழிகள் பிரதிபலித்ததில்..

"என்ன்ன்..ன..?" என்றாள் உத்ரா சந்தேகமாக.. என்னவென்று உத்ராவிடம் சொல்லி விட முடியுமா..?

அப்படியென்றால் என்மீது நம்பிக்கை இல்லாமல்தான் தலையைத் தலையை ஆட்டிக் கொண்டிருந்தாயா..? இப்போதுதான் என்மீது உனக்கு நம்பிக்கை வந்ததா என்று பாய்ந்து விடுவாளே..

“ஒண்ணுமில்லடி.. ச்சும்மா யோசிச்சுக்கிட்டு இருந்தேன்..” நந்தினி மழுப்பினாள்..

“யோசிச்சியா..? நீ யோசிச்சா ஆபத்தாச்சே..” என்றாள் உத்ரா..

நந்தினியின் தற்கொலை முயற்சியை அவள் சுட்டிக் காட்டுவதைப் புரிந்து கொண்ட நந்தினி உதட்டைக் கடித்தபடி..

“அப்போ அது ஒண்ணுதான் பெட்டர் ஆப்ஷனா தோணுச்சு உத்ரா.. மாற்று ஆப்ஷன் தோணவே இல்லை..” என்று சொன்னாள்..

“முட்டாள்கள்தான் ஒற்றை ஆப்ஷனில தொங்கிக்கிட்டு இருப்பாங்க.. நீயென்ன முட்டாளா..”

“பிரச்னை வராதவரைக்கும் எல்லோருமே புத்திசாலிகள்தான்..”

“பேச்செல்லாம் தெளிவாப் பேசிரு.. செயல்ன்னு வர்றப்ப கோட்டை விட்டிரு..”

நந்தினியின் தலையில் சின்னக் குட்டு வைத்தாள் உத்ரா.. தலையைத் தடவியபடி பரிதாபமாக பார்த்த நந்தினியின்

தோற்றத்தில் மனம் கசிந்தவள் தோழியைக் கட்டிக் கொண்டாள்..

“முயல்குட்டி மாதிரி முழிக்கறியேடி.. பயப்படாதே.. வினித்துக்கு தெரிஞ்ச இடம்தான்.. நீ பத்திரமா வேலை செய்யலாம்..”

“ம்ம்ம்..”

“நீ கேரளாவுக்கு கிளம்பிப் போகிறதுக்கு முன்னாலே உன் அப்பாவுக்கு லெட்டர் எழுதி கொரியரில அனுப்பி வைச்சிரு..”

“ஐயையோ..”

“அதுக்குள்ள ஏண்டி அலறுகிற..? வெளிநாட்டில வேலை கிடைச்சிருக்கு.. நியுயார்க் போகிறேன்னு எழுது.. நம்ம சீனியர் சரோஜா நியூயார்க்கிலதான் வேலை செய்கிறாங்க.. மிமிக்ரியில அவங்க எக்ஸ்பர்ட்டுன்னு உனக்குத்தான் தெரியுமே.. நம்ம காலேஜில எந்த ஃபங்க்ஷன் நடந்தாலும் அவங்களோட மிமிக்ரி புரோக்ராம் ‘ஆட்’ ஆகிருமே.. அவங்கிட்ட விவரம் சொல்லி அவங்க ஃபோன் நம்பரை உன் ஃபோன் நம்பரா உன் பேரண்ட்ஸ்கிட்டக் கொடுக்கலாமான்னு கேட்டேன்.. ஓகேன்னு சொல்லிட்டாங்க.. ஸோ.. நீ ஸிம்

கார்டை மாத்திரு.. வேற ஸிம் வாங்கி வைச்சிருக்கேன்.. அதை யூஸ் பண்ணு.. உன்னோட ஃபோன் நம்பரா அவங்க நம்பரை லெட்டரில எழுதி அனுப்பிரு..”

“அப்புறம் என்ன ஆகும்..?”

“உன் வீட்டில இருந்து சரோஜா சீனியருக்குப் ஃபோன் போகும்.. அவங்க பிடிக்காத கல்யாணத்தை நிறுத்தின பின்னாலே இந்தியாவுக்கு வர்றேன்.. இல்லேன்னா வரவே மாட்டேன்னு சொல்லிருவாங்க..”

“இந்த ஐடியா வொர்க் அவுட் ஆகுமா உத்ரா..?”

“கட்டாயமா வொர்க் அவுட் ஆகும்.. லெட்டரில நீ தெளிவா எழுதிரு.. உன் மனசைச் சொல்லிரு.. சரோஜா சினியரோட ஃபோன் நம்பரை உன் ஃபோன் நம்பரா கோட் பண்ணிரு.. உன்னோட ஃபோன் நம்பரை மாத்தி வேற சிம் கார்ட் போட்டிரு.. லெட்டர் மட்டும் போதும்.. தப்பித் தவறி உன் புது நம்பரில இருந்து உன் அப்பாவுக்கு ஃபோன் பண்ணிராதே..”

“ஏண்டி..?”

“இது கூடத் தெரியலை.. நீயெல்லாம் கம்யூட்டர் என்ஜினியர்ன்னு வெளியில சொல்லிராதே..”

“ஓகே.. சொல்லலை.. ஏன்னு நீ சொல்லு..”

“அடி என் அரதப் புத்திசாலி ஃபிரண்டே..! உன் அப்பாவோ கெட்டிக்காரர்.. உன் ஃபோன் நம்பர டிரேஸ் பண்ணி நீ இருக்கிற இடத்த கண்டு பிடிச்சிர மாட்டாரா..?”

“கேரளாப் பக்கம் வர மாட்டார்ன்னு சொன்ன..?”

“கேரளாவுக்கு நீ போயிருப்பேன்னு யோசிக்க மாட்டார்ன்னு தான் சொன்னேன்.. பெங்களூர், சென்னை, ஹைதராபாத்துன்னுதான் தேடுவார்.. கேரளாப் பக்கம் தேட மாட்டார்ன்னுதான் சொன்னேன்.. நீ கேரளாவில இருக்கிறத உன் ஃபோன் நம்பர் காட்டிக் கொடுத்திருச்சுன்னா முட்டியைத் தடவிக்கிட்டு வீட்டிலே உட்கார்ந்திருப் பார்ன்னு சொல்லலை.. அவருக்குத்தான் முட்டி வலி ..! அவரோட ஆள் படை அத்தனைக்குமா முட்டி வலி..?”

ஆஹா.. என்று அயர்ந்து போனாள் நந்தினி.. இந்த உத்ராதான் எப்படியெல்லாம் யோசித்துத் தெளிவாக திட்டம் தீட்டுகிறாள்..!

“எப்புடிடீ..?” ஆனந்தப் பரவசமானாள்..

“அடங்கு..” ஒற்றைச் சொல்லில் நந்தினியின் பிரமிப்பை லட்சியம் பண்ணாமல் கடந்தாள் உத்ரா..

“ஆக.. நான் அப்பாகிட்டப் பேசவே கூடாதுங்கிற..”

நந்தினிக்கு ஏக்கமாக இருந்தது.. அவளுடைய அம்மா, அப்பா, தம்பி மற்றும் அப்பப்பா, அப்பம்மா, உற்றர் உறவினர், தஞ்சாவூர் கிராமம், காவேரிக்கரை என்று அனைத்தும் ஞாபகத்தில் வந்து நின்றதில் தேம்பி அழுக ஆரம்பித்தாள்..

“இப்ப என்ன அலுவலுக்கு கண்ணீரில கப்பல் விடற..?” உத்ரா பல்லைக் கடித்தாள்..

“என்னடி பேசற..? உனக்கென்ன.. உன்னோட அப்பா சும்மான்னு குடும்பத்தோட இருக்கிற.. நான்தானே குடும்பத்தை விட்டுட்டு தலை மறைவா ஓடறேன்..?”

“என்னைப் பாத்துப் பாத்து வயித்தெரிச்சல் படறதுக்குன்னே செஞ்சிக்கு வந்திருக்கிற.. உன்னை மாதிரி ஒருத்தி.. இல்லையில்லை.. நீ ஒருத்தியே போதும்.. இன்னொருத்தியை இந்த உலகம் தாங்காது.. நான் ‘நல்ல்ல்லல...லா’ வாழ்ந்திருவேண்டி..”

“உத்ரா..”

“என்னடி பிசாசே..?”

“கோபமா..?”

“இல்லை.. சந்தோஷம்..! உன்னால நான் படற டென்ஷன் இருக்கே.. என்னைப் போல கல்யாணப் பொண்ணு எவரும் இருக்க மாட்டா..”

நந்தினி மூக்கை உறிஞ்சினாள்.. கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.. பாவம் போல முகத்தை வைத்துக் கொண்டாள்.. உத்ரா அசைந்தே கொடுக்கவில்லை..

“இந்த பிலிமையெல்லாம் வேறு எங்காவது காட்டு..” என்று சொல்லி விட்டாள்..

“வேற என்னடி செய்யனும்..?”

வேறு வழியின்றி உத்ரா காட்டும் வழிக்கே வந்தாள் நந்தினி..

“அஃது.. இப்படியே மெயின்டெயின் பண்ணு.. உன் அப்பா சரோஜா சீனியரோட நம்பர டிரேஸ் பண்ணுவார்.. அது தெள்ளத் தெளிவா நியூ யார்க்குன்னு காட்டும்.. நீ நியூயார்க்கிலதான் இருக்கேன்னு நம்பிருவார்..”

“அப்போ சரோஜா சீனியர்தான் எங்க அப்பாவுக்கு மகளா..?”

“அவங்க அப்பாவுக்குத்தான் அவங்க மகள்.. உன் அப்பாவுக்கு நீதான் மகள்..! உன் வாய்ஸைப் போல மிமிக்ரி மட்டும்தான் பண்ணுவாங்க.. உங்கப்பா சொத்தில பங்கெல்லாம் கேட்க மாட்டாங்க..”

“நான் என்ன அப்படியா சொன்னேன்..?”

“நீ சொன்னாலும் சொல்லுவ.. யாருக்குத் தெரியும்..? நீ எந்த நேரம் எதைச் செய்வ.. எதைப் பேசுவன்னு ஒரு மண்ணும் தெரிய மாட்டேங்குதே..”

“விடுடி.. விடுடி..”

“இத்தனை கேள்வி கேட்கிறவ எஸ்கேப் ஆகிறதுக்கான திடத்தையும் போட்டிருக்கனும்.. அதையெல்லாம் விட்டிருவா.. தலை வலிக்க அதையிதை யோசித்து எந்த ஓட்டை உடைசலும் இல்லாம பிளான் பண்ணி டயாக்ரம் வரையாத குறையாச் சொன்னா இல்லாத நொட்டனைக் கேள்வியாக் கேப்பா..”

“அம்மா..! சாமி..! தெரியாத்தனமாக் கேட்டுட்டேண்டி..”

நந்தினி கன்னத்தில் போட்டுக் கொண்டதில் கோபம் குறைந்த உத்ரா பெருமூச்சுடன் தோழியைப் பார்த்தாள்..

"புரிஞ்சுக்க நந்தினி.. உனக்காக நான் ரிஸ்க் எடுக்கலாம்.. வினீத் ரிஸ்க் எடுக்கலாமா..? எனக்காக அவர் இந்த வேலையில் இறங்கியிருக்கார்.. உனக்கு மனசில்லைன்னு தெரிஞ்சா எதுக்காக உன் ஃபிரண்டை ஃபோர்ஸ் பண்றேன்னு என்னைத்தான் கோவிச்சுக்குவார்.. நீ மட்டும் சூசைட் அது இதுன்னு பயம் காட்டாம இருந்தேன்னு வை.. இந்தப் பிளானுக் கே வேலை இருக்காது.. உன்னைத் தஞ்சாவூருக்கு அனுப்பி வைத்துட்டு நிம்மதியா நானுண்டு, என் வினீத் உண்டு, எங்க கல்யாணம் உண்டுன்னு இருந்திருப்பேன்.. உன்கிட்ட மாட்டிக்கிட்டு முழிச்சிருக்க மாட்டேன்.. இந்தப் பாடு பட்டிருக்க மாட்டேன்.."

குற்ற உணர்வுடன் சங்கடப்பட்டாள் நந்தினி.. உத்ராவின் பக்கமிருந்த நியாயம் அவளுக்குப் புரிந்தது.. வேறு ஒருத்தியாக இருந்திருந்தால் என் கல்யாண நிச்சயத்துக்கு நீ வரவில்லையென்று நான் ஏங்கினேனா.. எதற்காக வந்து எனக்கு இடைஞ்சலை உண்டாக்குகிறாய் என்று தாளித்துக் கொட்டியிருப்பாள்.. தஞ்சாவூருக்குப் ஃபோன் போட்டு நந்தினியின் குடும்பத்தை வரவழைத்து உங்கள் வீட்டுப் பெண்

செய்வது நியாயமா என்று நிற்க வைத்துக் கேள்வி கேட்டிருப்பாள்.. நீங்களாச்சு.. உங்கள் வீட்டுப் பெண்ணாச்சு.. எங்களுக்கு இந்தத் தலைவலி வேண்டாம் என்று ஒப்படைத்திருப்பாள்..

உத்ரா அப்படிச் செய்யவில்லை.. நந்தினி செய்யவிருந்த வேலையில் ஆடிப் போய் விட்டாள்.. அவளைக் காட்டிக் கொடுக்காமல் அவளுடைய பிரச்னை தீர என்ன வழியென்று யோசித்து வழி காட்டுகிறாள்.. அதை கேள்வி கேட்காமல் ஏற்றுக் கொள்வதை விட்டு விட்டு நந்தினி குட்டையைக் குழப்பலாமா..?

“ஸாரிடி உத்ரா..” தோழியின் கையைப் பிடித்துக் கொண்டாள்..

“நீ சொல்கிற ஸாரிக்கு வேல்யூ இல்லைன்னு தௌசண்ட் டைம் நானும் சொல்லியாச்சு.. உன் மரமண்டையில ஏறுகிறதா இல்லை..”

குற்றம் செய்து விட்ட குழந்தை போல மலங்க மலங்க விழித்தாள் நந்தினி..

“சரி.. சரி.. பச்சைப் புள்ளை போல முழிக்காதே..” என்று மலையிறங்கினாள் உத்ரா..

“இந்த நம்பரில இருந்து யார்கிட்டயும் பேசக் கூடாதா..?”

“மண்டு.. மண்டு.. அப்படிச் சொன்னேனா..? என்கிட்டப் பேசு.. கேரளாவில உனக்குப் புதிதா அறிமுகம் ஆணவங்கக்கிட்டப் பேசு..”

“அவங்ககிட்ட நான் ஏன் பேசனும்..?”

“ஆரம்பிச்சுட்டியா..? உன் வீட்டாரைத் தவிர யார்கிட்ட வேணும்னாலும் பேசலாம்ங்கிறதைத்தான் அப்படிச் சொன்னேன்.. புதுசா யார்கிட்டயும் கிளை கொண்டாடச் சொல்லலை.. போதுமா..?”

“இப்படிப் படபடன்னு பேசாதேடி.. எனக்குப் படபடன்னு வருது..”

நந்தினி நெஞ்சைப் பிடித்து உத்ராவை அரள வைத்தாள்.. கேரளாவுக்கு கொண்டு செல்ல தேவையான உடைகள் இருக்கிறதா என்று உத்ரா விசாரித்தாள்..

“ஃபங்ஷன்ங்கிறதினால பத்துப் பதினைஞ்சு செட் டிரஸ்ஸ அடுக்கிக்கிட்டு வந்திருக்கேன்.. எல்லாமே காஸ்ட்லி ஸாரிஸ், சுடித்தார் செட்தான்.. ஜ்வல்ஸ் வேற இருக்கு..”

“இருக்கட்டும்.. நீ போகிற இடம் பத்திரமான இடம்தான்.. ஜ்வல்ஸுக்கு ஒண்ணும் ஆகாது.. வேற நைட்டிஸ் அது இதுன்னு நிறைய வேணுமே..”

“ஒரு வாரம் ஸ்டே பண்ற ஐடியா இருந்ததினால நிறைய அள்ளிப் போட்டுக்கிட்டுத்தான் வந்திருக்க கேண்டி.. இப்போதைக்கு இது போதும்..”

“இருந்தாலும் சென்னையில கொஞ்சம் பர்ச்சேஸ் பண்ணிக்கலாம் நந்தினி..”

“எதுக்குடி.. இருக்கிறது போதும்..”

“நீ போகிற இடம் கேரளாடி.. மலைபிரதேசம்.. கடை, கண்ணின்னு எதுவும் பக்கத்தில் இருக்காது.. தேவையானதை இங்கேயே வாங்கிக்கிறது பெட்ட ரில்லையா..?”

உத்ரா பேசப்பேச நந்தினியின் அடி வயிற்றில் கலவரம் மூண்டது.. அறியாத ஊருக்குப் போகப் போகிறாளே என்ற பயம் எழுந்தது.. அதை உத்ராவிடம் சொல்லாமல் மறைத்து தனக்குள் புதைத்துக் கொண்டாள்..

போதும்.. அவளால் அவளுடைய தோழிபட்ட தொல்லைகள் எல்லாம் போதும்... திருமண

நிச்சயதார்த்தத்திற்கு வருகிறேன் பேர்வழியென்று வந்து விட்ட அவளுடைய துயரச் சுமையைத் தூக்கித் தோழியின் தலைமீது சுமத்தி விட்டாள்.. அதிலிருந்து தோழியை விடுவித்து விட்டு அவள் அங்கிருந்து அகன்று விடவேண்டும்.. கண் காணாமல் எங்காவது போய் விடவேண்டும்.

# அத்தியாயம் 11

**கு**லதெய்வக் கோவிலுக்கு அங்காளி, பங்காளிகளுடன் போயித்தான் கல்யாணப் பத்திரிக்கையை வைக்க வேண்டும் என்ற நியதியை யார் வகுத்தார்களோ தெரியவில்லை.. உத்ராவின் வீட்டில் உறவு ஜனங்களின் கும்பல் அதிகமாகியிருந்தது..

கலவையான பேச்சுக்களும், சிரிப்புக்களும் படு சுவராஸ்யமாக காதுகளில் விழுந்தன..

“ம்ஹூம்.. மழை வெள்ளம் வந்தாலும் வந்தது.. கடை முழுக்க தண்ணி ரொம்பி ஏகப்பட்ட நஷ்டம் மாப்பிள்ள.. இன்னும் எழுந்த பாடா இல்ல..” என்று யாரோ ஒரு உறவினர் பக்கத்திலிருந்தவரிடம் சொல்லிக் கொண்டிருந்தார்..

“இங்கே பாருடா.. சொந்த கதையை சொல்றேன் பேர்வழின்னு இவன் நொந்த கதையைச் சொல்லிக்கிட்டு இருக்கான்..” என்று எங்கிருந்தோ மறைவாக ஒரு குரல் ஒலித்தது..

புலம்பிக் கொண்டிருந்தவளுக்கு வேண்டாத ஆள் போல.. புலம்பிக் கொண்டிருந்தவர் சுற்று முற்றும் பார்த்தார்.. எவரென்று கண்டு பிடிக்க முடியவில்லை..

“அட.. யாருய்யா அது..? என் பேச்சுக்கு எசப்பேச்சு பேசறது..?” என்று சவுண்டு விட்டும் பார்த்தார்..

கசகச பேச்சுச் சப்தத்தில் இவர் சப்தம் எடுபட வில்லை..

“சொந்த பந்த குடும்ப அரசியல்ல இதெல்லாம் சகஜம்டி..” கண்சிமிட்டிச் சிரித்தாள் உத்ரா..

நந்தினிக்கும் சிரிப்பு மூளத்தான் செய்தது.. உத்ராவின் குடும்பம் கார்களிலும் வேன்களிலும் நிரம்பி இந்தப் பக்கம் நகர்ந்த மறுநிமிடம் அவளும் உத்ராவும் சென்னைக்கு கம்பி நீட்டியாக வேண்டும்..

அந்த படபடப்பு மனதை அரித்து மயக்கத்தை வரவழைத்தது.. அதிலிருந்து விடுபட மற்றவர்களின் அரட்டையை வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்.. மனம் அதில் லயிக்கவில்லையென்றாலும் படபடப்பு சற்றுக் குறைந்தது..

உத்ராவின் அத்தை மகன்கள் என்று இரண்டு இளைஞர்கள் வந்திருந்தார்கள்.. இருவருமே திருமணமாகப்

போகும் மாமன் மகளை போட்டி போட்டு சைட் அடித்தார்கள்.. சொந்தத்தில் திருமணம் செய்து கொடுக்கக் கூடாதென்று கண்டு பிடித்துக் சொன்ன அறிவியலின் மீது கொலை வெறியாக இருந்தார்கள்..

“பாவம்டி..” அவர்கள் மீது பரிதாபப் பட்டாள் நந்தினி..

“பாவமா..? யாரு..? இவனுகளா..? நீ வேற.. இவனுக தெய்வீகக் காதலைப் பத்திக் கேட்டேன்னு வை.. இப்படிச் சொல்லமாட்ட..”

“நீ தப்பாப் புரிஞ்சுக்கிட்டு இருக்க உத்ரா..”

“சரியாப் புரிஞ்சுக்கனும்னா இவனுக பேசறதைக் கவனி.. அதுக்கப்புறமா பரிதாபப் படு..”

அந்த இளைஞர்களின் பேச்சுக் காதில் விழுவதைப் போல பால்கனியை ஒட்டி நந்தினியை நிற்க வைத்தாள் உத்ரா.. போர்டிகோவில் நின்று கொண்டிருந்தவர்களின் பேச்சுக்குரல் தெளிவாக காதுகளில் நுழைந்தது..

“என்னடா இப்பவே இப்படி வெய்யிலடிக்குது..” என்றான் ஒருவன்..

“மச்சினிச்சியை சைட் அடிக்கிறதைக் கண்டுக்கிட்ட பெண்டாட்டி போல உக்கிரமா இருக்குடா..” மற்றவன் வர்ணனை செய்தான்..

‘கேட்டுக்க..’ என்பதைப் போல பாவனை செய்தாள் உத்ரா.. உள்ளங்கையால் வாயைப் பொத்தின நந்தினியின் விழிகள் விரிந்தன..

“இதுக்கே அசந்தா எப்படி..? இன்னும் கேட்டுப் பாரு..” உத்ரா முணுமுணுத்தாள்..

“என்னடா அண்ணா.. கண்ணு சிவந்திருக்கு.. செம்மயா சரக்கடிச்சுட்டு மட்டையாகிட்டயா..?”

“இல்லைடா.. காலங்கார்த்தாலே தெருச் சண்டை.. தூக்கம் கெட்டுப் போச்சு.. காதுக்குள்ள சைரன் ஊதறதைப் போலக் கத்திக் கத்திச் சண்டை போடறாளுக.. எனக்கு வந்த கோபத்தில லெப்ட் அண்ட் ரைட் வாங்கிரனும்னுதான் எழுந்திருச்சுப் போனேன்..”

“ஒரு பிடி பிடிச்சிருப்பியே..”

“எங்கே..? சண்டை போட்டுக்கிட்டு இருந்தது எதிர்வீட்டு திவ்யாவும் பக்கத்து வீட்டு ரம்யாவும்.. வாயைத் திறக்க முடியும்ங்கிற..”

“அது முடியாதுதான்..”

நந்தினிக்கு சிரிப்பு வந்து விட்டது.. சிரிப்புச் சத்தம் கேட்டு விட்டால் இந்தியாவின் இளைய தலைமுறை அண்ணாந்து பால்கனியைப் பார்த்து விட்டு அலம்பல் காட்டி விடும் என்று ஒற்றை விரலை வாயில் வைத்து அமைதி காக்கும்படி சைகை செய்தாள் உத்ரா.. நந்தினி வாய் பொத்தி சிரிப்பை அடக்கிக் கொண்டாள்..

“ஊராடா இது..? ஒரு பிகர் கண்ணில படுதா..? இந்த ஊர் முன்னேறும்ங்கிற..?”

“எப்படி முன்னேறும்..? நானும் லோலோன்னு தெருத்தெருவாச் சுத்திப் பாத்துட்டேன்.. ஊருக்குள்ள தான் ஃபிகர் அகப்படலை.. செஞ்சிக் கோட்டையைச் சுத்திப் பாக்கன்னு எந்தப் பச்சைக் கிளியாவது பறந்து வந்திராதான்னு நொட்டை விட்டுப் பார்த்தேன்.. ஒண்ணும் தென்படலைடா..”

“வாட்.. நான்ஸென்ஸ்..? செஞ்சிக் கோட்டைக்கு ஒரு இஞ்சி இடுப்பழகி கூட வரலையா..?”

கேள்வி கேட்டவனின் தொனியில் நந்தினிக்கு புரையேறி விட்டது.. கண்களில் கண்ணீர் மல்க தள்ளிப் போய் சிரித்து விட்டு வந்தாள்.. கீழே பேச்சுக் குரல்கள் சம்பாஷனையைத் தொடர்ந்தன..

“நம்ம ஊர் ஆஸ்பத்திரியில பாம் வைச்சுட்டாங்களாம்டா..” “என்னது..?”

“அதுக்கேண்டா நீ அலறுகிற..? நம்ம சொந்தக்காரங்க யாரும் அட்மிட் ஆகியிருக்காங்களா..? எனக்குத் தெரிஞ்சு அப்படி யாரும் அங்கே அட்மிட் ஆகலையே.. நீதானே பைக்கில இருந்து விழுந்து கை, கால்ல சிராய்ப்புன்னு அங்கே போன வாரம் அட்மிட் ஆகியிருந்தே..? எனக்குத் தெரிஞ்சு சிராய்ப்புக்கெல்லாம் அட்மிட் ஆன ஆளு நீ ஒருத்தன்தாண்டா..”

“என்னத்த அட்மிட் ஆகி என்ன பிரயோசனம்.. ரெண்டே நாள்ல டிஸ்ஜார்ஜ் பண்ணிப் பத்தி விட்டுட்டாங்களே..”

“அதுக்கேண்டா இம்புட்டு வருத்தப்படற..?”

“அந்த ஆஸ்பத்திரியில ஒரு மலையாள நர்ஸ்.. ஒல்லியா, உயரமா, சிகப்பா அழகா இருக்கும்..”

“நினைச்சேண்டா.. நீ ஆஸ்பத்திரியில அடங்கிப் படுக்கிற ஆளில்லையே.. சின்னச் சிராய்ப்புக்கு இத்தனை அலட்டல் அலட்டறானே.. ஏதோ விஷயமிருக்குன்னு நினைச்சேன்.. நான் உன்னைப் பார்க்க வந்தப்ப அந்தப் பொண்ணு என் கண்ணில படலையே..”

“உன் தலையைக் கண்டதும் வேற வேலையைச் சொல்லி கண் மறைவா அனுப்பி வைச்சுட்டேன்..”

“இதில எல்லாம் செம விவரமா இருப்பியே..”

“உனக்குச் சித்தி மகனா பிறந்து தொலைச் சிட்டேனே.. விவரம் இல்லேன்னா பிழைக்க முடியுமா..?”

“அப்படிங்கிற..? அப்ப நீ அந்த கேரளத்துப் பொண்ண வல்லிய நேசிச்சு..?”

“ஒரு வகையில அப்படித்தான்..”

“சித்திக்குத் தெரிஞ்சா கட்டைய எடுத்து முதுகில சாத்துமேடா..”

ரசித்துச் சொன்னவனின் குரலில் மலையாள மஞ்சளழகியை நேசிப்பவனை மாட்டி விடும் உத்தேசம் அப்பட்டமாகத் தெரிந்தது.. கேரளத்து பைங்கிளிக்கு

மலர்கணை தொடுத்தவன் அது பற்றி அலட்டிக் கொள்ளவே இல்லை..

“ஸாரிடா அண்ணா... அம்மா கையில நான் அடிவாங்கனும்னு நீ காணற பகல்கனவு பலிக்காதுடா..” என்றான்..

“ஏண்டா பலிக்காது..?”

“நீ என்னைப் பத்தித் தப்பு தப்பா மாமா காதில போட்டு வைச்சதினாலதான் உத்ராவை எனக்குக் கட்டிக் கொடுக்க மாட்டேன்னு மாமா சொல்லிட்டார்ன்னு அம்மாகிட்டத் திரியைக் கொளுத்திப் போட்டு வைச்சிருக்கேன்டா.. என்னைப் பத்தி நீ எது சொன்னாலும் எடுபடும்ங்கிற..?”

“அடப்பாவி.. அதான் மாமா என்னை முறைச்சு முறைச்சு பார்க்கிறாரா..? உன் அம்மா நியாயம் கேட்டாச்சா..?”

“ஹா.. ஹா..”

“ரொம்பத்தான் சிரிக்காதே.. பல்லு சுளுக்கிக்கப் போகுது.. ஆல்ரெடி நானும் என் அம்மாகிட்ட இந்த பிட்டைத்தான் போட்டு வைச்சிருக்கேன்.. அவங்களும் மாமாகிட்ட நியாயம் கேட்டாச்சு..”

“அதான் என் மாமன் உக்கிரமா முறைக்கிறாரா..? ம்ஹூம்.. மொத்தத்தில உத்ரா எனக்கும் கிடைக்கல.. உனக்கும் கிடைக்கல..”

“எனக்குக் கிடைக்கலேன்னாலும் பரவாயில்லை.. உனக்குக் கிடைக்கக் கூடாதுடா..”

“மார் தட்டிக்கிட்டது போதும்.. எனக்கும் அதே எண்ணம்தான்.. ஏண்டா.. நம்மகிட்ட இல்லாத எது வினித் கிட்ட இருக்கு..?”

தாடையைத் தடவியவன் கேட்ட கேள்விக்கு..

“நேர்மை..” என்று பால்கனியிலிருந்து எட்டிப் பார்த்த உத்ரா பதில் சொன்னாள்..

அண்ணாந்து பார்த்த அத்தை மகன்களிடம் மாட்டிக் கொண்ட பதட்டம் துளியும் இல்லை.. அவர்கள் கடைந்தெடுத்த கல்லூளி மங்கன்கள் என்று உத்ரா சிலாகித்தாள்.. அவர்கள் அதைப் புகழ்ச்சியாக ஏற்றுக் கொண்டு காலரைத் தூக்கி விட்டுக் கொண்டார்கள்..

“கருமம்.. கருமம்..” தலையில் அடித்தபடி..

“வாடி போகலாம்.. இவனுக மலையாள அழகியையே விட்டு வைக்காதவனுக.. உன் மேல ஏரோ விட ஆரம்பிச்சுருவானுக..” என்று நந்தினியின் கையைப் பிடித்து இழுத்தாள்..

அவர்கள் அதைத்தான் செய்ய ஆரம்பித்திருந்தார்கள்.. ஒருவன் கூலிங்கிளாஸைக் கண்களில் மாட்டி போஸ் கொடுத்தான்.. மற்றவன் ரோமியோ போல தலை முடியைக் கோதி விட்டபடி தலை சாய்த்துப் பார்த்தான்..

“பக்காக் காமெடி பண்றாங்கடி.. சிரிப்புச் சிரிப்பா வருது..” என்றாள் நந்தினி..

“சிரிச்சுக் கிரிச்சு வைச்சிராதே.. அதை ரசிப்புன்னு நினைச்சிருவானுக.. ஜெகஜால கில்லாடிக.. ரொமான்ஸ் பண்ண ஆரம்பிச்சிருவானுக..”

உத்ரா செல்லமாக உதட்டைச் சுழித்தாள்.. வெளியே அத்தை மகன்களை மட்டக் கேவலமாக விமரிசித்தாலும் அவள் மனதுக்குள் அவர்கள் பண்ணும் அலம்பலை அவள் ரசிக்கிறாள் என்று நந்தினிக்குத் தோன்றியது.. அடாவடி பண்ணும் முறைப்பையன்களை ரசிக்காத முறைப் பெண்கள் உண்டா என்ன..?

“என்ன உத்ரா.. கல்யாணக்களை முகத்தில அப்பியிருக்கு. .

வினித்கூட ஃபோன்ல செம கடலை வறுக்கிற போல..”

உத்ராவின் பெரியம்மா பெண் கிண்டல் செய்தாள்.. முகம் சிவந்த உத்ராவைப் பார்க்க அழகாக இருந்தது.. நந்தினிக்குள் சன்னமான பொறாமை வந்தது... அவளுக்கு நிச்சயிக்கப்பட்ட மாப்பிள்ளை அவளைப் பெண் பார்க்க வந்து அவளிடம் தனிமையில் பேசி அவனைப் பிடித்திருக்கிறதா என்று அவளது விருப்பத்தைக் கேட்டு அவளை கௌரவப் படுத்தியிருந்தால் இப்போது உத்ராவின் முகத்தில் அப்பியிருக்கும் வெட்கம் நந்தினியின் முகத்திலும் அப்பியருக்குமே.. முகம் தெரியாத அவன் ஏன் நந்தினியை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை..?

“கல்பனா..”

உத்ராவின் பெரியம்மா மகளை அழைத்தபடி வந்தான் அவளது கணவன்.. கையில் ஒன்றரை வயதுப் பெண் குழந்தை பட்டு கவுனுடன் அழகாக சிரித்தது..

“மாமாதான் பிள்ளையைத் தூக்கிச் சுமக்கிற போர்ட்டரா..?”

உத்ரா கண் சிமிட்டினாள்..

உற்சாகம் வரும் போதெல்லாம் உத்ரா கண் சிமிட்டுவாள்.. இந்தக் கண்சிமிட்டலை நந்தினியிடமிருந்துதான் அவள் கற்றுக் கொண்டாள்.. கலகலப்பான நந்தினி அடிக்கடி கண்சிமிட்டுவாள்.. அந்த வழக்கம் அவளிடமிருந்து உத்ராவுக்கு தொற்றிக் கொண்டது..

கற்றுக் கொடுத்தவள் கண்சிமிட்டலை மறந்து நிற்க.. அவளிடமிருந்து அதைக் கற்றுக் கொண்டவள் நொடிக்கொரு முறை கண்சிமிட்டிக் கலகலத்துக் கொண்டிருந்தாள்..

கொழுந்தியாளின் சீண்டலில் கல்பனாவின் கணவன் கள்ளுண்ட வண்டானான்.. கண்கள் மின்ன..

“இல்லேன்னா உன் அக்கா சன்டேயில சாம்பார் சாதம் செஞ்சு போட்டு என்னைப் பழி வாங்கிடுவாளே..” என்று சிரித்தான்..

“சண்டேயில சாம்பார் சாதமா..? பிரியாணி கோவிச்சுக்காதா..?”

“அதை என்கிட்ட ஏன் கேட்கிற..? உன் அக்காகிட்டக் கேளு.. கோபம் வந்தா விதம் விதமா வயித்தில அடிக்கிறதில அவ டாக்டரேட் பட்டமில்ல வாங்கியிருக்கா..”

“சும்மா சொல்லாதீங்க அத்தான்.. எங்க அக்கா காபி போட்டா எட்டு தெருவுக்கு மணக்கும்..”

“மணக்கும், மணக்கும்.. வாசனைக்கென்னம்மா.. அதில எல்லாம் வஞ்சகம் பண்ண மாட்டா... காபியிலதான் சர்க்கரைக்குப் பதிலா உப்பைப் போட் டுக் கொடுத்திருவா..”

“உப்புக் காப்பியா..? ஹா.. ஹா.. உங்க கல்யாண வாழ்க்கை உப்புச் சப்பில்லாம இருக்கக் கூடாதுன்னு எங்க அக்கா எப்படியெல்லாம் காபி போட்டுக் கலக்கறாங்கன்னு மெச்சிப் போவீங்களா.. அதைக் குத்தம் சொல்றீங்க.. இல்லேக்கா..”

“சரியாச் சொன்ன உத்ரா.. உப்பும் சர்க்கரையும் ஒரே கலர்ல பக்கத்துப் பக்கத்து டப்பாவில இருந்தா வித்தியாசம் தெரியு தா..?” “அது எப்படித் தெரியும்..? ஆனாலும் அக்கா சால்ட் காபி போட்ட முதல் ஆள் நீங்கதான்.. ஹா.. ஹா..”

உத்ரா விழுந்து விழுந்து சிரித்தாள்.. நந்தினியின் பக்கத்தில் சிரிப்பைத் தொலைத்து விட்டு படு தீவிரமான

சிந்தனையுடன் இருந்தவள் மனம் விட்டுச் சிரித்ததில் நந்தினி நெகிழ்ந்து போனாள்.. இத்தனை சிரிப்பையும் சந்தோஷத்தையும் உத்ரா தன் மனதில் பூட்டி வைத்திருந்திருக்கிறாள்... தோழியின் துயரத்தில் தனது சந்தோஷத்தை மறந்திருந்திருக்கிறாள்... வாய்ப்புக் கிடைத்ததும் பூட்டு உடைபட்டு அணையுடைந்த வெள்ளம் போல அத்தனை சிரிப்பும் வெளியேறுகிறது..

உத்ராவின் சந்தோஷத்திற்கு தடை கல்லாக நிற்காமல் அங்கிருந்து வெளியேறி விட வேண்டும் என்று நந்தினி தன் மனதை திடப் படுத்திக் கொண்டாள்.. அவள் மனதிலிருந்த கொஞ்ச நஞ்ச தயக்கமும் ஓடி விட்டது..

கல்பனாவின் கணவன் எதையோ தேடுவதைப் போல சுற்று முற்றும் பார்த்தான்.. ஒன்று விட்ட சகோதரிகள் ஒருவரையொருவர் பார்த்துக் கைகளை விரித்தார்கள்..

“என்ன தேடறிங்க அத்தான்..?”

“முட்டிக்கிறதுக்கு மொட்டைச் சுவரு தெம்புடுதான்னு தேடறேம்மா..”

“அது நம்ம வீடுகள்ல இருக்காதே உத்ரா.. உன் அத்தானோட சொந்த பந்த வீடுகளில இல்ல இருக்கும்.. நம்ம

பக்க சொந்த பந்தமெல்லாம் கிரானைட் போட்ட வீடுகளையில்ல கட்டியிருக்கோம்..?”

“ஹ.. கிரானைட் சுந்தரி எதுக்காக தென்னைமர ஓட்டு வீட்டுக்காரன்மேல ஆசை வைச்சாளாம்..?”

கல்பனாவின் கணவன் சொக்கி பார்வை பார்க்க கிளீன் போல்டாகி வெட்கிச் சிவந்தாள் கல்பனா..

“ஸ்ஸ்.. சின்னப் பொண்ணுக முன்னாடி என்ன ரொமான்ஸ் வேண்டிக் கிடக்கு..”

கண்டிப்பதைப் போல குதூகலப்பட காதல் மனைவிகளால்தான் முடியும்..

# அத்தியாயம் 12

**க**டல்காற்று முகத்தில் படிந்தது.. பகல் நேரத்து மெரினா கடற்கரை சந்தடிகளில்லாமல் அழகான அமைதியுடன் ஆளை ஈர்த்தது.. சுள்ளென்று அடித்துக் கொண்டிருந்த வெயிலின் வெம்மை மழை மேகங்களால் மாறி இதமான குளிர் வெயிலாய் மேனியை வருடிக் கொடுத்தது.. கடல் நீரில் கால் பதிய நின்றிருந்தாள் நந்தினி.. சற்றுத் தொலைவில் எதற்காக சென்னைக்கு வந்திருக்கிறோம் என்பதை மறந்தவளாக வினித்தின் மார்பில் சாயாத குறையாக ஒட்டி உறவாடி பேசிக் கொண்டிருந்த உத்ராவுக்கான தனிமையைக் கொடுத்து தள்ளி நடந்தாள்..

வினித்துடன் விரல்கள் பிணைய நின்றிருந்த உத்ரா என்ன பேசிக் கொண்டிருந்தாள் என்று தெரியவில்லை.. வினித்தைக் கடித்துத் தின்று விடுவதைப் போல அத்தனை ஆசையுடன் பார்த்தாள்.. இது போன்ற காதல் எந்த ஆண்மகனின் மீதாவது தனக்கு ஏற்படுமா என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள் நந்தினி.. விடை கிடைக்கவில்லை..

வினித்தும் சும்மா இல்லை.. உத்ராவின் பார்வைக்கு சற்றும் குறையாமல் அவளை மேய்ச்சல் நிலம் போல பார்த்து வைத்தான்.. உத்ரா அவன் சட்டைக் காலரைப் பிடித்து இழுத்தபடி பேசினால் அவன் நொடிக்கொரு முறை அவளது மூக்கைக் கிள்ளி, காதைத் திருகி , நெற்றி வகிட்டில் முகத்தைப் பதித்து என்று சேஷ்டைகள் பலவற்றை செய்து கொண்டிருந்தான்..

காதலித்தால் இது போல எல்லாம் செய்ய வேண்டும் போல என்று நினைத்துக் கொண்டாள் நந்தினி.. அதுபற்றி அவளுக்கொன்றும் தெரியவில்லை.. அவளது பட்டறிவில் இதுபற்றி எதுவும் சொல்லப்படவில்லை.. முன்னே பின்னே காதலித்திருந்தால் தெரிந்திருக்கும்.. அவளுக்குத்தான் அதற்கான வாய்ப்புக் கிட்டவே யில்லையே.. பரிச்சயமில்லா காதல் உணர்வுகளைப் பற்றி அவளால் அவதானிக்க முடியவில்லை..

“ம்ப்ச்..”

“சும்மாயிருங்க..”

“நந்தினி இருக்கா..”

“நீங்க இருக்கீங்களே..”

இந்த நான்கு வார்த்தைகள்தான் மாறிமாறி நந்தினியின் காதுகளில் விழுந்தன.. நந்தினி இருப்பதற்கும் வினித்தை நீங்க இருக்கீங்களே என்று உத்ரா சொல்வதற்கும் என்ன சம்பந்தம் என்று ஒரு மண்துகளும் புரியாததினால் கடலலையை வெறித்தாள் நந்தினி..

'இன்று இங்கே.. நாளை எங்கோ..?'

அவளது மனம் கலங்கியது.. உத்ராவின் வீட்டில் உறவினர்களின் கலகலப்பான பேச்சுக்கு நடுவே இருந்த மனதிடம் கரைவதைப் போல இருந்தது.. நந்தினி கலவரமாக உணர்ந்தாள்..

இனியேதும் செய்ய முடியாது.. தஞ்சைக்குத் திரும்புவது ஒன்றும் பெரிய விஷயமில்லை.. உத்ராவிடம் சொன்னால் சந்தோஷப் பட்டுத்தான் போவாள்.. சரியான முடிவு என்று கை குழுக்கி வழியனுப்பி வைப்பாள்.. அங்கேதான் பிடிக்காத திருமணம் நந்தினிக்காக காத்திருக்கிறதே..

''போகலாமா நந்தினி..?''

வினித்துடன் கொஞ்சிப் பேசி முடித்து விட்டவளாக உத்ரா அழைத்தாள்.. நந்தினி திரும்பிப் பார்த்து தலையசைத்தாள்.. வினித் நட்புடன் சிரிக்க பதிலுக்கு சோகையாக சிரித்தாள்..

“பயப்பட வேண்டாம் சிஸ்டர்.. எனக்குத் தெரிந்த இடத்தில்தான் வேலைக்கு ஏற்பாடு பண்ணியிருக்கேன்.. நீங்க பத்திரமா இருக்கலாம்.. நம்பிக் கிளம்புங்க..”

வினித்தின் ஆறுதலான வார்த்தைகளில் நந்தினியின் மனக் கலவரம் சற்று குறைவதைப் போல இருந்தது.. மனக் கிலேசம் அகலாதவளாக தலையசைத்தவளின் விழிகளில் தெரிந்த மருட்சியில் வினித் உத்ராவைப் பார்த்தான்..

“ரொம்ப பயப்படறாங்களே உத்ரா..” என்றான்..

“ரெண்டு நாளா இந்தக் கதைதான்.. பட் நோ அதர் வே வினித்.. இவ தஞ்சாவூருக்குத் திரும்பிப் போக மாட்டேன்னு மல்லுக் கட்டறாளே..”

உத்ரா அலுத்துக் கொண்டாள்.. வினித் அவளின் கையைப் பற்றித் தட்டிக் கொடுத்ததில் தன்னால்தானே என்ற குற்ற உணர்வு நந்தினிக்கு வந்தது..

வினித் என்ன நினைப்பான்..? அவனது வருங்கால மனைவியின் மன நிம்மதி நந்தினியால் பாதிக்கப் படுகிறது என்றுதானே நினைப்பான்..?

“புது ஊருக்குத் தெரியாத மனுசங்க மத்தியிலே வேலை பார்க்கப் போகிறோமேங்கிற பயம்தான்... வேற ஒண்ணுமில்லை.. ஐ கேன் மேனேஜ்..” அவசரமாகச் சொன்னாள்..

வினித் நிமிர்ந்து பார்த்து புன்னகைத்தான்.. அவனுடைய புன்னகைக்கு என்ன அர்த்தம் என்று விளங்காமல் உதட்டைக் கடித்துக் கொண்டாள் நந்தினி.. ஏனோ உத்ராவிடம் அவளுக்கு இருந்த தோழியெனும் பற்றுதல் கலந்த உரிமை வினித்தின் முன்னால் விலகுவதைப் போலத் தன்னை அன்னியமாக உணர்ந்தாள்..

“டிரெயினுக்கு இன்னும் டைமிருக்கு நந்தினி.. உனக்குத் தேவையான திங்ஸை பர்ச்சேஸ் பண்ணிக்கலாமா..?”

உத்ரா கேட்டதற்கு தலையை அசைத்தாள்.. உத்ரா வினித்திடமிருந்து விலகி நந்தினியின் பக்கமாக நடந்தாள்.. நந்தினிக்கு அது ஆறுதலாக இருந்தது.. அத்தியாவசித் தேவைகள் என நினைத்த பொருள்களை யோசித்து யோசித்து நந்தினி சொல்ல உத்ரா அவற்றைத் தேர்வு செய்து கொடுத்தாள்.. பில் வந்தபோது வினித் பணம் கொடுக்கப் போனான்..

“வேண்டாம்.. என்னிடம் பணமிருக்கு..” அவசரமாக தடுத்து விட்டு பணத்தைக் கொடுத்தாள் நந்தினி..

“ஏண்டி.. அவர் உன் அண்ணன் போல.. பில்லை அவர் பே பண்ணினா என்னவாம்..” உத்ரா கோபித்துக் கொண்டாள்..

“அண்ணன் போல என்ன உத்ரா.. உன் ஹஸ்பெண்ட் எனக்கு அண்ணனேதான்.. செஞ்சிக்கு கிளம்பினப்ப கை நிறைய பணம் கொடுத்துத்தான் அப்பா அனுப்பி வைச்சார்.. உன் இஷ்டம் போல செலவழின்னு சொன்னார்... இப்பன்னு இல்லை.. எப்போதுமே அப்பா தேவைக்கு அதிகமாவே தான் பணம் கொடுப்பார்.. திடீர்ன்னு செலவு வந்திட்டா என்ன செய்வேன்னு கேட்பார்..”

தந்தையின் நினைவில் நந்தினியின் கண்கள் கலங்கின.. அதை வினித் பார்த்து விடக் கூடும் என்று அவசரமாக இமைகளைச் சிமிட்டிக் கண்ணீரைத் தடுத்தபடி உத்ராவிடம் சிரித்தாள்..

“உன் வீட்டில என்னைப் பர்ஸைத் தொட விட்டியா..? செலவே இல்லையேடி.. அப்பா கொடுத்த பணம் அப்படியே இருக்கு.. டிரெயின் டிக்கெட்டை அண்ணனே ரிசர்வ் பண்ணி

வைத்திருக்கார்.. இந்தச் செலவையாவது நான் செய்ய வேணாமா..?"

"எப்படிச் சமாளிக்கிறான்னு பாருங்க.."

தோழியின் தோள்களை அணைத்தபடி வினித்திடம் சொன்னாள் உத்ரா.. அவன் சிரித்தபடி தலையை ஆட்டி அதை ஆமோதித்தான்.. மதிய உணவுக்கு ஹோட்டலுக்குப் போனார்கள்.. உத்ராவுக்கு வேண்டியதை தேர்வு செய்து சொல்லச் சொல்லி மெனு கார்டை அவள் பக்கமாக தள்ளி வைத்தான் வினித்..

இது போல மாப்பிள்ளையை தேர்வு செய்யும் உரிமையை நந்தினியின் பக்கமாக மேகநாதன் நகர்த்தி விட்டிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்..?

தன்னிரத்தில் நந்தினி மூழ்கியிருக்க.. அவளுக்கு என்ன வேண்டுமென்று கேட்டு பதில் வராததினால் அவளது கைகளைத் தட்டினாள் உத்ரா..

"எந்த உலகத்தில் இருக்கேடி.."

"என்ன உத்ரா..?"

“ஐந்து நிமிசமா உனக்கு என்ன வேணும்னு கேட்டுக்கிட்டு இருக்கேன்.. அசையாம உக்காந்திருக்க..”

“ஐ’ம் ஸாரிடி.. ஏதோ நினைப்பில இருந்துட்டேன்..”

வினித் அவளையே பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற உணர்வில் தடுமாறினாள் நந்தினி.. உத்ரா இரக்கத்துடன் தோழியைப் பார்த்தாள்..

“ஸாரியெல்லாம் எதுக்கு..? எனக்கு உன் நிலைமை புரியுது.. என்ன புட் வேணும்னு சொல்லு..”

“ஏதாவது ஒண்ணு.. உனக்குப் பிடிச்சதை ஆர்டர் பண்ணு..”

நந்தினியின் முகம் பார்த்து எதையோ சொல்ல முயன்றாள் உத்ரா.. வினித் உத்ராவின் விழிகளுக்குள் பார்த்து மறுப்பாக தலையசைத்தான்.. அமைதியாகி விட்ட உத்ரா அவளுக்குப் பிடித்தமான உணவு வகைகளைச் சொன்னாள்... ஆர்டர் செய்து விட்டுக் காத்திருந்த வேளையில் நந்தினிக்கு ஆறுதலாக பேசிக் கொண்டிருந்தாள் உத்ரா.. வினித் அதில் தலையிடாமல் மௌனமாக கவனித்துக் கொண்டிருந்தான்..

# எண்ணியிருந்தது ஈடேற... 1

“உலகத்தோட எந்த மூலையில இருந்தாலும் செல்ஃபோன் நம்மை தொடர்பில வைத்திருக்கும் நந்தினி.. தினமும் நான் பேசுவேன்.. ஆஃப்டர் மேரேஜ் நானும் வினித்தும் உன்னைப் பார்க்க கேரளா வர்றோம்..”

“பரவாயில்லை உத்ரா.. உங்க ரெண்டு பேரையும் இந்த அளவுக்கு தொந்தரவு பண்ணியதே போதும்.. இனியும் எனக்காக உங்க டயத்தை ஸ்பெண்ட் பண்ண வேணாம்.. நீங்க ஹனிமூனுக்கு ஏதாவது ஒரு டூரிஸ்ட் ஸ்பாட்டுக்கு போகிறதுதான் பெட்டர்.. இந்த அளவுக்கு செய்ததே அதிகம்..”

“முட்டாள் மாதிரி பேசாதேடி.. அதிகம் கம்மின்னு அளவுகோல் பார்க்கிறா.. கேரளாவுக்கு ஹனிமூன் கொண்டாட வரக் கூடாதா..? அதுவும் டூரிஸ்ட் ஸ்பாட்தாண்டி.. கல்யாணம் ஆனவுடன் மறுவீட்டு விருந்து அது இதுன்னு சுத்திக்கூட்டமா இருக்கும்.. உன்னைப் பார்க்க வர முடியாது... ஹனிமூனுக்கு யாரும் சுத்தி வளைத்து ஒட்டிக்கிட்டு.. கூட வர மாட்டாங்க.. அந்தச் சாக்கில உன்னைப் பார்க்க ஓடி வந்திரலாம்ல்ல..”

உத்ராவின் கண்சிமிட்டலில் உயிர்த்தாள் நந்தினி.. கேரளாவில் அவள் தனியாக இருந்தாலும் அடிக்கடி உத்ரா

அவளைப் பார்க்க வருவாள் என்பதில் ஓர் பாதுகாப்பு உணர்வு அவள் மனதில் படிந்தது..

தான் இத்தனை பயந்தவளா என்ற கேள்வி அவள் மனதில் வந்தது.. யோசித்துப் பார்த்த போது அது உண்மை என்பது அவளுக்குப் புரிந்தது.. சுதந்திரம் வேண்டும் என்பதெல்லாம் சும்மா.. எப்போதும் கும்பலின் மத்தியில் பாதுகாப்பாக இருப்பதையே அவள் விரும்பியிருக்கிறாள்.. தனித்துப் பயணித்ததில்லை.. தனித்து இருந்ததில்லை என்ற உண்மை இப்போது விளங்கியது..

தஞ்சையில் மூச்சு முட்டுகிறது என்று சென்னைக்குப் படிக்கப் பறந்தவள் தனியே ஊர் சுற்றியதில்லை... விடுமுறை நாள்களில் தோழிகளுடன் வெளியே போனாலும் விளக்கு வைப்பதற்குள் ஹாஸ்டலுக்குத் திரும்பி விடுவாள்.. ஹாஸ்டலின் விதிமுறைகளை மதித்து நடக்கும் ஒரே மாணவி நந்தினி மட்டும்தான் என்று ஹாஸ்டல் வார்டன் மெச்சி மற்ற மாணவிகளின் காதுகளில் புகையை வரவழைப்பாள்... வயிற்றெரிச்சல் படும் தோழிகள் பகைவர்களாக மாறி நந்தினியிடம் சாமியாடி அவளைத் தோப்புக்கரணம் போட வைப்பார்கள்..

இதையெல்லாம் யோசித்துத்தான் அவளுடைய அப்பா அவளைக் கேட்காமலே திருமணத்தை நிச்சயித்து விட்டாரோ.. பயந்த சுபாவம் கொண்டவளுக்கு முரட்டுத்தனமான கணவன்தான் பாதுகாவலாக இருக்க முடியும் என்ற முடிவுக்கு வந்து விட்டாரோ..

இந்த எண்ணம் மனதில் தோன்றியதும் நந்தினியின் பயம் நாலு கால் பாய்ச்சலில் ஓடோடிப் போனது..

‘எனக்கென்ன பயம்..? நான் தைரியமா இருப்பேன்..’ மனதுக்குள் சொல்லிக் கொண்டாள்.. பயமாய் இருக்கிறுத என்று உத்ராவிடம் அனத்துவதை நிறுத்தி விட்டாள்..

ஆர்டர் கொடுத்த உணவு வகைகள் வந்து விட்டன.. உத்ராவின் பக்கமாக தட்டுக்களை நகர்த்தி வைத்தான் வினித்.. தனிப்பட்ட அவன் கவனிப்பில் உத்ரா சொந்தத்துடன் அவனைப் பார்த்து விட்டு நந்தினிக்காக தட்டுக்களை அவள் பக்கம் நகர்த்தி வைத்தாள்.. வினித்தும் உத்ராவும் ரகசியப் பார்வைகளும் தீண்டல்களுமாக சந்தோஷமாக இருந்தார்கள்... அவர்களைப் பார்க்காததைப் போலத் தட்டிலேயே கவனமாக உணவு வகைகளை காலி செய்து

முடித்தாள் நந்தினி.. கைகழுவ எழுந்தவள் உத்ரா சாப்பிட்டு முடித்து விட்டதைப் பார்த்ததும் தயங்கி நின்றாள்..

“வினித் இன்னும் சாப்பிட்டு முடிக்கலைடி.. நீ போ.. நான் அப்புறமா ஹேண்ட் வாஷ் பண்ணிக்கிறேன்..” என்று சொல்லி விட்டாள் உத்ரா..

தனித்துக் கை கழுவப் போன நந்தினிக்கு இதைப் பழகிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் வந்தது.. உத்ராவை அவள் கூப்பிட்டிருக்கக் கூடாது என்று தோன்றியது.. வினித்தும் அவர்களுடன் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறான் என்பதை எப்படி அவள் மறந்தாள்..? வினித்திற்கும் உத்ராவிற்கும் இடையே நிலவிய அன்யோன்யம் அவள் மனதில் ஏக்கத்தை விதைத்தது.. இது போல மணவாழ்க்கை அவளுக்கு அமைந்திருந்தால் இப்படி அனாதைபோல முன் பின் தெரியாத ஊருக்கு ஓடி ஒளிய வேண்டிய அவலம் அவளுக்கு நேர்ந்திருக்காதே என்ற எண்ணம் வருவதை அவளால் தடுக்க முடியவில்லை..

அடுத்துச் செய்ய எந்த வேலையும் இல்லாததால் அவர்கள் சென்ட்ரல் ரயில்வே ஸ்டேஷனுக்கு போனார்கள்.. கைக்கடிகாரத்தைப் பார்த்த வினித் உத்ராவிடம்..

“மங்களூர் எக்ஸ்பிரஸ்.. வர ஒன் ஹவராகும் உத்ரா.. நாம வெயிட் பண்ணியாகனும்..” என்றான்..

பிளாட்பாரத்தில் இருந்த பெஞ்சில் அவர்கள் மூவரும் சாய்ந்து அமர்ந்தார்கள்.. வினித் உத்ராவின் பக்கமாக நெருங்கி ஒட்டி உட்கார்ந்து அவள் தோளைச் சுற்றிக் கை போட்டான்.. அந்த நெருக்கத்தில் உத்ரா கிளர்ந்திருக்க வேண்டும்.. நந்தினி அருகிலிருப்பதை மறந்தவளாக அவளும் நகர்ந்து வினித்தின் மீது அப்பி அவன் மடியில் கை வைத்து தோளில் தலை சாய்த்துக் கொண்டாள்.. ரகசியம் பேசுவதைப் போல அவள் காதோரம் முகத்தை புதைத்த வினித் அவள் கூந்தலின் வாசனையை முகர்ந்தபடி அவளது காதில் முத்தமிட்டான்.. உத்ராவின் இதழ்கள் வினித்தின் தோளில் முத்தமிட்டன..

நந்தினிக்குச் சங்கடமாக இருந்தது.. அவர்களைப் பார்த்தும் பார்க்காததைப் போல எவ்வளவு நேரம்தான் இருப்பது..?

“டிரெயினில் படிக்க மேகசினும், குடிக்க வாட்டர் பாட்டிலும் வாங்கிட்டு வந்துடேறன் உத்ரா..”

அவர்களைத் திரும்பிப் பார்க்காமல் எழுந்து பிளாட்ஃபாரத்திலிருந்த கடைக்கு நடந்து விட்டாள்.. அங்கு நின்றிருந்தவன் அவளைப் பார்த்ததும்..

“ஹலோ..” என்றான்..

# அத்தியாயம் 13

"**ஹ**லோ.." என்ற வார்த்தை காதில் விழுந்தாலும் யாரோ யாரையோ அழைக்கிறார்கள் என்று அசட்டையாக கடையில் தொங்க விடப் பட்டிருந்த வார, மாத இதழ்களை ஏதோ அகழ்வாராய்ச்சி பண்ணுவதைப் போல ஆராய்ச்சி பார்வை பார்க்க ஆரம்பித்தாள் நந்தினி.. நேரத்தை கடத்தியாக வேண்டுமே..

'டிரெயின் வரும்வரை இங்கேயே நிக்க முடிஞ்சா பெட்டரா இருக்கும்..' என்றது அவள் மனது..

அது அவனின் காதுகளில் விழுந்ததைப் போல..

"ஏங்க.. உங்களைத்தாங்க.." என்று உரக்கக் கூப்பிட்டான்..

இது போன்ற கூப்பிடுதலைப் பொதுவாக மனைவி மார்கள்தான் செய்வார்கள்.. கணவனை அழைக்க இந்த முறையைத்தான் அவர்கள் பயன்படுத்துவார்கள்.. நந்தினியின் உறவு வட்டாரத்தில் உள்ள பெண்கள் இது போன்ற வார்த்தைகளுடன் கணவனிடம் பேசுவதை நந்தினி

கவனித்திருக்கிறாள்.. வெண்ணிலா மேகநாதனை இப்படித்தான் கூப்பிடுவாள்..

ஒரு ஆண்குரல் இப்படி அழைத்தில்..

'யாருடா அவன்..? கதையை மாத்தறவன்..' என்று நிமிர்ந்து பார்த்தாள் நந்தினி..

"ஹாய்.." என்று வலது கையின் ஐந்து விரல்களையும் விரித்து ஆட்டினான்.. செஞ்சிக் கோட்டையில் தேசிங்கு ராஜாவின் நீலவேணிக் குதிரையைப் பற்றிய பேச்சுடன் அவளுக்கும் நந்தினிக்கும் அறிமுகமானவன்..

'இவனா..?' இமை கொட்டி விழித்தாள் நந்தினி..

அவனை மறுபடியும் சந்திப்போம் என்று அவள் நினைத்தும் பார்க்கவில்லை.. இரண்டு நாள்கள்தான் கடந்திருக்கின்றன.. மறுபடியும் அவனைச் சந்தித்திருக்கிறாள்..

செஞ்சிக் கோட்டையில் அவன் பார்த்த பார்வைகள் அவள் மனதில் உலா வந்தன.. மன்மதன் போல அவளைக் கவர்ந்து இழுக்க அவன் முயன்றதெல்லாம் நினைவுக்கு வந்ததில் நந்தினி முகத்தைத் திருப்பிக் கொண்டாள்..

“எவ்வளவு கஷ்டப்பட்டு உங்களை ஏறெடுத்துப் பார்க்க வைச்சேன் தெரியுமா..? பதினைஞ்சு நிமிசமா ‘ஹலோ, ஹலோ’ன்னு காட்டுக் கத்தலா கத்தறேன்.. நீங்க திரும்பிப் பார்ப்பேனான்னு சோதிச்சீங்க.. கடைக்காரர் கூட முன்னே பின்னே தெரியாத பெண்ணை டிஸ்டர்ப் பண்றேனோன்னு நினைச்சு முறைக்க ஆரம்பிச்சுட்டார்.. வேற வழியில்லாம ‘ஏங்க, உங்களைத்தாங்க..’ன்னு டிபிகல் இந்தியன் வொய்ஃப் ஹஸ்பெண்டைக் கூப்பிடறதைப் போல கூப்பிட வேண்டியதாப் போயிருச்சு.. இதுக்கும் நீங்க திரும்பிப் பார்க்காம இருந்திருந்தீங்கன்னா கடைக்காரர் போலிஸுக்கு ஃபோன் பண்ணி ஈவ் டீஸிங் கேஸில பிடிச்சுக் கொடுத்திருப்பார்.. இவ்வளவு பெரிய ரிஸ்க்கையெல்லாம் ரஸ்க் மாதிரி சாப்பிட்டு உங்களை திரும்பிப் பார்க்க வைச்சா நீங்க ஒரே ரெகண்டில பொசுக்குன்னு முகத்தைத் திருப்பிக்கறீங்களே.. ஏங்க..? என் முகம் பார்க்கிறதுக்கு அவ்வளவு அசிங்கமாவா இருக்கு..? கடைக்காரரே.. நீங்களே சொல்லுங்க.. என் முகத்தைப் பார்க்க முடியலையா..?”

அவன் அங்கலாய்த்த விதத்தில் கடைக்காரர் சிரித்து விட்டார்.. நந்தினிக்கும் சிரிப்பு வந்தது.. இவன் எவரையும் எளிதில் வசீகரித்து சிரிக்க வைத்து விடுகிறான் என்று

நினைத்துக் கொண்டாள்.. இயல்பாக சிநேகிக்கிறான்.. பேச விரும்பாதவர்களையும் பேச வைத்து விடுகிறான்..

“பதிலுக்கு ஒரு ஹாய் சொல்லிட்டிங்கன்னா ஈவ் டீஸிங் கேஸில இருந்து தப்பிச்சுருவேன்..”

சிரிக்காமல் பாவம் போல முகத்தை வைத்துக் கொண்டு பேசி அவளைச் சிரிக்க வைத்து விட்டான்..

“நீங்க ரொம்ப பயந்தவர்தான்..” என்றாள் நந்தினி..

“ஜென்ட்ஸ்கிட்டப் பயமில்லைங்க.. லேடிஸ்கிட்ட ரொம்ப பயந்தவன்.. எட்டடி தள்ளியே நிப்பேன்.. இப்பவும் அப்படித்தான் நிற்கிறேன்.. நீங்க வேணும்னா அளந்து பார்த்துக்கங்க..” என்றான் அவன்..

“நம்பிட்டேன்..” நந்தினி மாத நாவல் ஒன்றைக் கையில் எடுத்துப் புரட்டிப் பார்த்தாள்..

“இந்த ரைட்டரோட கதை நல்லாயிருக்கும்..” அவன் பரிந்துரைத்தான்..

“நான் மத்தவங்க சொல்கிறதை வைத்துப் படிக்க மாட்டேன்.. எனக்குப் பிடிக்கனும்...” புத்தகத்தின் பக்கங்களில் பார்வையைப் பதித்தபடி சொன்னாள் நந்தினி..

“நல்ல பழக்கம்.. அப்படியே மெயின்டெயின் பண்ணுங்க..” என்றவன் அவளை கூர்ந்து பார்த்து..

“எங்கே இந்தப் பக்கம்..?” என்று விசாரித்தான்..

நந்தினிக்கு அது பிடிக்கவில்லை.. அது என்ன அவன் அவளை விசாரிப்பது..? அதுவும் எங்கே இந்தப் பக்கம் என்ற கேள்வி வேறு.. அவனைச் சும்மா விடக் கூடாது என்ற கோபத்துடன்..

“இதே கேள்வியை நானும் கேட்கலாமில்ல..?” என்று கேட்டாள்..

“தாராளமாக் கேட்கலாம்..” அனுமதி கொடுப்பதைப் போல் அவன் சொன்னான்.. அது அவளது கோபத்தை அதிகப் படுத்தியது..

“ஹலோ.. ரயில்வே ஸ்டேஷனை உங்களுக்கு யாரும் பட்டாப் போட்டுக் கொடுத்திருக்காங்களா..?” என்று சீறினாள்..

“இல்லையே..” அவன் கைகளை விரித்தான்..

“இது சென்ட்ரல் கவர்ண்மென்ட் இடமாச்சே.. சத்தமாச் சொல்லாதீங்க.. கவர்ண்ட்மென்ட் ஆக்ஷன் எடுத்திரும்..”

“தெரியுதில்ல.. அப்ப வாயை மூடிக்கங்க..” நந்தினி முகத்தை திருப்பிக் கொண்டாள்..

“எதுக்கெடுத்தாலும் முகத்தைத் திருப்பிக்கறிங்க.. அப்படி நான் என்னங்க தப்புச் செஞ்சேன்..? யதார்த்தமா பேசினாக்கூட அதில குற்றம் கண்டு பிடிக்கறிங்களே.. உங்கப்பா பேரென்ன நக்கீரரா..?”

அவனது கேள்வியில் நந்தினி முகம் மாறினாள்.. அடி மனதில் அரித்துக் கொண்டிருந்த தந்தையின் நினைவு மேலே எழுந்து அவளை ஆக்ரமித்தது.. அவளது முக மாறுதலை உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தவன் மெதுவான குரலில்.

“உங்களை இங்கே பார்த்ததும் ஆவியோன்னு பயந்துட்டேங்க..” என்று பயமில்லாத குரலில் சொன்னான்..

“கிண்டலா..?” நந்தினி ரௌத்ரமானாள்..

“ஒரு சுண்டலுமில்லைங்க... செஞ்சிக் கோட்டையிலே தலைகுப்புறப் பாயப் போனவங்கதானே நீங்க.. அன்றைக்கு நீங்க பண்ணின களேபரத்தில நிச்சயமா மறுபடியும் சூசைட் அட்டெண்ட் பண்ணுவீங்கன்னு நினைச்சேன்.. ஃபர்ஸ்ட் அட்டெம்ட் பெயிலியராப் போனதினாலே செகண்ட் அட்டெம்ட்டை தெளிவா திட்டம் போட்டு ஓட்டை உடைசல்

இல்லாம பிளான் பண்ணிப் போய் சேர்ந்திருப்பீங்கன்னு பார்த்தா நேரே வந்து நிற்கறிங்க..? தற்கொலை பண்ணிக்கலையா..?" அப்பாவி போல அவன் கேட்டதில்..

"மைண்ட் யுவர் வெர்ட்ஸ் மிஸ்டர்.." என்று எச்சரித்தாள் அவள்..

"என் வார்த்தைகளை நான் மைன்ட் பண்றது இருக்கட்டும்.. உங்க மைன்ட் வாய்ஸ் என்ன சொல்லுது..? தண்டவாளத்தில தலையைக் கொடுக்கச் சொல்லுதா..? ஒருவேளை அதுக்கு டிரை பண்ணத்தான் இங்கே வந்திருக்கீங்களா..?" விடாமல் அவன் பேச..

"ஆமாம் மிஸ்டர்.. தண்டவாளத்தில தலையைக் கொடுக்கிறப்ப டைம் பாஸ் பண்ண புக் படிக்கலாம்ன்னு தான் புத்தகம் வாங்க வந்திருக்கேன்.. வந்த இடத்திலே உங்களைப் பார்த்துட்டேன்.. தனியாத் தண்டவாளத்தில தலையைக் கொடுக்க மனசில்லாமப் போயிருச்சு.. துணைக்கு நீங்களும் வந்தீங்கன்னா.. சேர்ந்தே தண்டவளாத்தில தலையைக் கொடுக்கலாம்.. வர்றீங்களா..?" என்று அழைத்தாள் நந்தினி..

கடைக்காரர் "ஹா.. ஹா.." என்று சிரிக்க ஆரம்பிக்க.. அவன்...

“வர்றேனே..” என்று கிளம்பி விட்டான்..

“வருகிறீங்களா..?” நந்தினி திகைத்து விட்டாள்..

“ஆமாங்க.. இவ்வளவு அழகான பெண் கூப்பிட்டாத் தாராளமா தண்டவாளத்தில தலையைக் கொடுக்கலாம்ங்க.. என்ன கடைக்காரரே.. நான் சொல்கிறது சரிதானே..?”

கடைக்காரரிடம் அவன் அபிப்ராயம் கேட்க, அவர்..

“ரொம்பச் சரி தம்பி..” என்றார் வாயெல்லாம் பல்லாக.. அவனையும், அவளையும் இணைத்து காதலர்கள் போல அவர் பார்த்து வைத்த பார்வையை தாங்க மாட்டாமல் விரைந்து புத்தகங்களை தேர்வு செய்ய ஆரம்பித்தாள் நந்தினி..

“மெல்ல..” என்றான் அவன்.. நந்தினி முறைத்தாள்..

“என்னவோ நான் உங்களைப் பிடிச்சுத் தண்ட வாளத்திலே தள்ளி விட்டுடப் போகிறதைப் போலயில்ல பதட்டமா புக்கை செலக்ட் பண்றீங்க.. அப்படிச் செய்கிற ஆள் நானில்லைங்க.. செஞ்சிக் கோட்டையிலேயும் நீங்களாத்தான் குதிக்கப் போனீங்க... இங்கே தண்டவாளத்தில தலையைக்

குடுக்கிறதா இருந்தாலும் நீங்களாத்தான் கொடுக்கப் போறீங்க.. நான் பிடிச்சுத் தள்ளவே மாட்டேன்..”

அவன் உத்திரவாதம் அளித்ததில் கடைக்காரர் மீண்டும் சிரித்தார்.. அங்கே இருந்தால் அவரை சிரிக்க வைத்தே அவன் வயிற்று வலியை வர வைத்து விடுவான் என்பதால் போய் விடலாம் என்று நந்தினி திரும்பிப் பார்த்தாள்.. ஏறக்குறைய வினித்தின் மடியில் உத்ரா அமர்ந்திருக்க அது ரயில் நிலையம் என்ற நினைவின்றி அவளைத் தன் கைகளுக்குள் சிறை வைத்திருந்தான் வினித்..

‘இப்பப் போனா அவ்வளவுதான்..’

நந்தினி தவித்தாள்.. அங்கே நின்றால் அவன் பேச்சை வளர்ப்பான்.. போய் விடலாம் என்று பார்த்தால் வினித்தும் உத்ராவும் தங்களை மறந்து காதல் செய்து கொண்டிருக்கிறார்கள்..

‘என்னதான் செய்வது..?’ அவள் நகம் கடிக்க ஆரம்பித்தாள்..

“இந்தப் பழக்கம் வேற இருக்கா..?” என்று கடுப்படித்து வைத்தான் அவன்..

அவள் போக வேண்டிய ரயில் வந்து சேர எவ்வளவு நேரம்தான் ஆகுமோ என்ற சலிப்பு ஏற்பட்டது அவளுக்கு..

உத்ராவிடம் போகவும் முடியாது.. கடையில் நிற்கவும் முடியாது..

‘என்னடா இது.. நந்தினிக்கு வந்த சோதனை..!’

அவளது மனதின் புலம்பலுக்கு செவி சாய்த்ததைப் போல அவள் போக வேண்டிய ரயில் பதினைந்து நிமிடங்கள் தாமதமாக நிலையத்துக்கு வந்து நின்று விட்டது..

“டிரெயின் வந்தாச்சு..”

வினித்தின் பிடியிலிருந்து விலகிய உத்ரா நந்தினி எங்கேயென்று தேடினாள்.. இத்தனை நேரம் என் நினைவு வரவில்லை.. இப்போது வந்திருக்கிறது என்று நந்தினி மனதுக்குள் பொருமினாள்.. உத்ரா நந்தினியைப் பார்த்து விட்டாள்.. கூடவே பக்கத்திலிருந்தவனையும் பார்த்து விட்டவளின் முகம் மாறியது.. வினித்திடம் தாழ்ந்த குரலில்..

‘அவனை’ச் சுட்டிக் காட்டி முணுமுணுத்தாள்.. வினித் எழுந்து வந்தான்.. நந்தினி அவசரமாக புத்தகங்களுக்கும் தண்ணீர் பாட்டிலுக்கும் பணத்தைக் கொடுத்தாள்..

“எதுக்கு இத்தனை அவசரம்..” அக்கறையாக அவன் விசாரித்தான்..

நந்தினி பதில் சொல்லவில்லை.. அவள் மனம் முழுவதும் உத்ரா அவனைக் காட்டி வினித்திடம் என்ன சொன்னாளோ என்பதிலேயே இருந்தது.. வினித் முகம் இறுக நந்தினியை நோக்கி வந்து கொண்டிருந்தது அவள் மனதை உறுத்தியது..

வினித் என்ன நினைப்பான்..? உத்ராவும் அவனும் தனிமையில் பேசட்டும் என் று நந்தினி விலகி வந்ததை ‘அவனு’டன் தனியாக பேசுவதற்காக விலகி வந்தாள் என்று நினைத்து விடமாட்டானா..?

‘இவன் ஏன் இங்கே வந்து தொலைத்தான்..?’ அவளுக்கு எரிச்சலாக இருந்தது..

“யார் அவர்..?” அவன் கேட்டான்..

“யார் இவர்..?” அருகில் வந்து விட்ட வினித் கேட்டான்.. அவனுக்குப் பதில் சொல்ல வேண்டிய அவசியமேதுமில்லை என்று முறைத்து விட்டு வினித்திடம் தயக்கத்துடன் பதில் சொல்ல ஆரம்பித்தாள் நந்தினி.. மனம் இது தேவையா என்றது..

“யாருன்னு தெரியாது.. நானும் உத்ராவும் செஞ்சிக் கோட்டையைச் சுற்றிப் பார்க்கப் போனப்ப இவரும் கோட்டையைச் சுற்றிப் பார்க்க வந்திருந்தார்... அப்போப் பார்த்ததுதான்.. வேறு எதுவும் இல்லை.. இப்பக் கடையில பார்த்ததும் ஜஸ்ட் ஒரு ஹலோ சொன்னார்.. தட்ஸ் ஆல்..”

‘அவ்வளவுதானா..?’ என்று அவன் விழிகள் கேட்பதை நந்தனி பொருட்படுத்தவில்லை..

போடா.. நீயும் உன் ஹாயும்.. என்றிருந்தது அவளுக்கு.. அன்றைக்கு கோட்டையைச் சுற்றிப் பார்க்க வந்தவன் கோட்டையை விட்டுவிட்டு இவளைச் சுற்றினான்.. இன்று என்னடாவென்றால் ரயிலேற வந்தவன் ரயில் எங்கே நிற்கிறது என்று தேடி ஏறாமல் இவளிடம் கடலை போட்டு வினித்திடம் விளக்கம் சொல்ல வைக்கிறான்..

‘இவனை என்ன செய்தால் தேவலாம்..’

அப்படியே தண்டவாளத்தில் அவனைத் தள்ளி விட்டு விட்டால் என்ன என்று தோன்றியது.. அவன் விழுந்து தொலைக்க மாட்டான்.. மாறாக இவள் கையைப் பிடித்து இழுத்து இவள்தான் தண்டவாளத்தில் விழுந்து தற்கொலை செய்து கொள்ளப் போனாள் என்று பெயர் கட்டி விடுவான்..

அதை உத்ராவும் வினித்தும் கேள்வி கேட்காமல் நம்பி விடுவார்கள்..

“தெரியாதவங்ககிட்டப் பேச வேணாம்மா..”

வினித்தின் கனிவான கண்டிப்பில் கண் கலங்கி விட்டாள் நந்தினி..

‘தடிமாடு..’ என்று அவனை அவள் விழிகள் சாடின.. அவனோ தடிமாட்டின் மீது மழை பெய்ததைப் போல சூடு சொரணையின்றி நின்று கொண்டிருந்தான்.. இவன் பேசாமல்..

‘வெ.மா.சூ.சொ. இல்லாதோர் சங்கத்திற்கு’ தலைவனா ஆகிறலாம்.. அதுக்கு இவனை விட்டாப் பொருத்தமான தலைவன் கிடைக்கவே மாட்டான்.. என்று அவள் மனம் பரிந்துரைத்தது..

வெ.மா.சூ.சொ இல்லாதோர் சங்கம் என்பதின் விரிவாக்கம் வெட்கம், மானம், சூடு, சொரனை இல்லாதோர் சங்கம் என்பதாகும்.. நந்தினியின் கல்லூரியில் புழங்கும் சொற்றாடல்களில் இதுவும் ஒன்று..

“சாரைக் கூடத்தான் எனக்குத் தெரியாது.. அதனால இவர்கூடப் பேசக் கூடாதுன்னு நான் சொல்கிறேனா..? இவர் மட்டும் ஏங்க இப்படிச் சொல்கிறாரு..?” ஒன்றும் தெரியாத அப்பாவி போல வினவி வைத்தான் அவன்..

வினித் அவனை முறைக்க.. நடப்பதைக் கவனித்துக் கொண்டிருந்த உத்ரா எழுந்து வேகமாக அவர்கள் அருகில் வந்தாள்..

# அத்தியாயம் 14

**ஏ**ற்கெனவே நந்தினியை நினைத்து மன உளைச்சலில் இருந்த உத்ரா வந்த வேகத்தில் அவனுடன் சண்டையிடக் கிளம்பி விட்டாள்..

"ஹேய் மிஸ்டர்.. என்ன இது..? வம்பு பண்றீங்களா..?" என்று அவள் வெடுவெடுக்க..

"வம்பா..? நானா..?" என்று கண்களை விரித்தான் அவன்..

"நீங்களேதான்.. வினித் அன்றைக்கே இவன் வேணும்ன்னே வாய் வளர்த்தான்.."

அவன் செஞ்சிக் கோட்டையைப் பார்க்க வந்தவன் என்பதில் ஓர்வித பிணைப்பு ஏற்பட்டு அவனுடன் உத்ராதான நட்பாக பேசினாள் என்பதை வெகு தோதாக மறந்த வீட்டு அவன் மீது குற்றம் சாட்டினாள் உத்ரா..

அதை நினைத்துக் கொண்டானோ என்னவோ.. அவனது உதடுகள் கேலியாக வளைந்து நெளிந்தன.. உத்ரா அவன் முகத்தைப் பார்க்கவே இல்லை.. நந்தினியிடம் அவன் நின்று

பேசி விட்ட குற்றத்திற்காக அவனை தண்டித்தாக வேண்டும் என்ற துடிப்புடன் கோள் மூட்டிக் கொண்டிருந்தாள்..

“என்ன மிஸ்டர்.. லேடிஸ்கிட்ட வாலாட்டறிங்களா..? வாலை ஒட்ட நறுக்கி விடட்டுமா..?” கோபத்துடன் முஷ்டியை மடக் கினான் வினித்..

“ஹைய்யோ.. பயந்துட்டேன்..”

இரு கைகளையும் உயர்த்தி விட்டு சன்னமாக விசிலடித்தான் அவன் வினித்தின் மீசை துடித்தது..

“ரெண்டில் ஒண்ணு பார்க்காம நீ நகர மாட்ட..” என்று அதட்டினான்..

“சண்டையெல்லாம் வேணாம் ஹீரோ சார்.. ஒரு பெண் பக்கத்தில இருந்தாலே ஹீரோ வேஷம் கட்டத் தோணும்.. இங்கே ரெண்டு பொண்ணுக இருக்காங்க.. ரத்தம் கொதிக்கத்தான் செய்யும்.. எதுக்கு வம்பு..? நான் சும்மாவே சண்டை போட மாட்டேன்.. இதில ரத்தம் கொதிக்க முஷ்டியை மடக்கிக்கிட்டு கர்ஜிக்கிற உங்ககூட சண்டை போடுவேனா..? பை ஞெ்சிக் கோட்டை மேம், பை சூசைட் அட்டெம்டு மேம்..” அவன் கையாட்டி விட்டு போய் விட்டான்..

'கடைசியில் சூசைடு அட்டெம்டுன்னு பேர் வைச்சிட்டானே..' நந்தினியை வெட்கம் பிடுங்கித் திண்றது..

"நீ பண்ணி வைச்ச வேலைக்கு போற, வர டூரிஸ்ட்டெல்லாம் பேர் வைச்சிட்டுப் போறான் பாரு.." உத்ரா தலையில் அடித்துக் கொண்டாள்..

"எவனோ ஒரு ரோமியோ.. பேசற பேச்சுக்கு நந்தினி என்ன பண்ணுவாங்க..?" என்று வினித் சொன்னானோ நந்தினி தப்பித்தாளோ..

"சரிசரி.. நீயே கேரளாவுக்கு கிளம்பிக்கிட்டு இருக்கிற.. இந்த நேரத்திலே எவனோ ஒருத்தன் பேசின பேச்சை ஏன் நினைத்துப் பார்க்கனும்..? அவன் கிடக்கிறான்.. தறுதலை..! நீ வா.. டிரெயின் வந்தாச்சு.. உன் கம்பார்ட்மெண்டைத் தேடிப் பிடிச்சு இடத்தைக் கண்டுபிடிச்சு உட்கார வைக்கிறோம்.."

உத்ராவும் வினித்தும் ஆளுக்கொரு பையைத் தூக்கிக் கொள்ள நந்தினி ஹேண்ட் பேக்கில் புத்தகங்களையும் தண்ணீர் பாட்டிலையும் திணித்தபடி அவர்களைத் தொடர்ந்த ஓடினாள்..

வேகமாய் முன்னால் போனவர்கள் கையிலிருந்த டிக்கெட்டைப் பார்த்துக் கம்பார்ட்மெண்டைக் கண்டு பிடித்து

அதன் வாயிலில் ஒட்டப் பட்டிருந்த சார்ட்டில் நந்தினியின் பெயரைத் தேடி..

“இதோ இருக்கு..” என்று கூவினார்கள்..

அது முதல் வகுப்பு ஏஸி கம்பார்ட்மெண்ட்.. இரண்டாம் வகுப்பு ஏஸி கம்பார்ட்மெண்டில் டிக்கெட் வாங்கியிருக்கலாமே என்றிருந்தது நந்தினிக்கு.. இரண்டாம் வகுப்பு ஏஸி என்றால் நான்கு மக்கள் மனிதரின் முகம் பார்த்தபடி பயணம் செய்யலாம்.. பயம் இல்லாமல் இருக்கும்.. முதல் வகுப்பில் அப்படியில்லை.. ஏதோ பெட்டியில் அடைபட்டிருப்பதைப் போல மூச்சுத் திணறும்..

உத்ராவிடம் அதைச் சொன்னபோது..

“மூச்சு முட்டுமா..?” என்று ஏதோ நகைச்சுவையைக் கேட்டு விட்டதைப் போலச் சிரித்தாள்..

“அவங்களுக்கு ஏற்படற ஃபீலிங்கை அவங்க சொல்கிறாங்க.. இதில சிரிக்க என்ன இருக்கு..?” என்று வினித் கடிந்து கொண்ட பின்புதான் சிரிப்பதை நிறுத்தினாள்..

நந்தினியின் பைகளை வைத்து விட்டு எதிர் சீட்டில் உத்ராவும் வினித்தும் அமர்ந்தார்கள்..

“அங்கே யார் வருவாங்களோ..” நந்தினி கவலையாகச் சொன்னாள்..

“யாரோ ரவிச்சந்திரன் பேர் போட்டிருக்கு.. யாராய் இருந்தா என்ன..? டி.டி.ஆர் எனக்குத் தெரிந்தவர்தான்.. சொல்லி வைத்து விட்டுப் போகிறேன்.. எதுவாக இருந்தாலும் அவர்கிட்டக் கம்ப்ளெயிண்ட் பண்ணுங்க.. எங்களுக்கு ஃபோன் பண்ணுங்க..” என்றான் வினித்..

அவள் வேலைக்குப் போகும் எஸ்டேட் பற்றிய விவரங்களைச் சொன்னார்கள்.. கலவரத்துடன் கேட்டுக் கொண்டாள் நந்தினி..

“கேரளாவில ‘வயநாடு’ங்கிற ஊரில மலைமேலே இருக்கிற ‘கேரளம் எஸ்டேட்’டுக்குத்தான் நீ வேலைக்குப் போகப் போகிற.. வயநாட்டுக்கு ஸ்ட்ரெயிட்டா டிரெயின் கிடையாது.. கோழிக்கோடு ஸ்டேஷனில இறங்கிப் போகனும்..”

“ரயில்வே ஸ்டேஷனில இறங்கின பின்னால எப்படிப் போகிறது உத்ரா..? பஸ் இருக்குமா..? தனியா டாக்ஸி பிடிச்சு வயநாட்டுக்குப் போக யோசனையா இருக்குடி..”

நந்தினியின் கண்களில் தெரிந்த கலவரத்தில் உத்ராவுக்கு இரக்கமாக இருந்தது.. தைரியம் கொடுக்கும் வகையில் அவள் கையைப் பிடித்துத் தட்டிக் கெடுத்து விட்டு ஒரு கவரைத் திணித்தாள்..

“பயப்படாதே நந்தினி.. இந்தக் கவரில் நீ போக வேண்டிய இடத்தைப் பத்தின விவரங்களும் விசிட்டிங் கார்டும் இருக்கு.. விசிட்டிங் கார்டில இருக்கிற பேரையும் ஃபோன் நம்பரையும் உன் ஃபோனில சேவ் பண்ணி வைத்துக்க.. வயநாடு மலைப் பிரதேசம் அங்கே டிரெயினில் போக முடியது... கோழிக்கோடு வரைக்கும்தான் நீ டிரெயினில் போக முடியும்.. அதுக்கப்புறம் ஜீப்போ.. காரோதான்.. நீ கிளம்பி வர்றதைப் பத்தித் தகவல் கொடுத்திருக்கோம்.. உன்னை ரிஸீவ் பண்ணக் கார் வரும்.. அதில வயநாட்டுக்கு போகலாம்..”

“ம்ம்ம்..”

“வாட்டர் பாட்டில் இருக்கில்ல..?”

“இருக்கு.. இப்பத்தான் வாங்கினேன்..”

“வழியில எதுக்காகவும் டிரெயினை விட்டு இறங்காதே..”

“சரி..”

“பத்திரமா இரு.. எஸ்டேட்டுக்குப் போனதும் ஃபோன் போடு..”

“ம்ம்ம்..”

கோழிக்கோடு ரயில்வே ஸ்டேஷனின் அடையாளத்தை அறிந்து கொள்ள விரும்பினாள் நந்தினி.. உத்ராவோ நந்தினி எடுத்துக் கொண்டு போக வேண்டிய மருந்துகளைக் கொடுத்துக் கொண்டிருந்தாள்..

“வயநாட்டை கேரளாவோட சிரபுஞ்சின்னு சொல்லுவாங்களாம்டி.. வருஷத்தில ஆறுமாசம் மழை பெய்து கொண்டே இருக்குமாம்.. ஜலதோஷம் பிடித்தா விடாது கருப்புங்கிறதைப் போல படுத்தி எடுத்திருமாம்.. குணமாக சில, பல மாதங்கள் கூட ஆகிருமாம்..” உத்ரா விவவரித்ததில்..

“என்னடி இப்படிச் சொல்கிற..?” என்று அரண்டு போனாள் நந்தினி..

அவளுக்கு ஜலதோஷம் என்றாலே அலர்ஜி.. மூக்கில் நீர் வடிய கண்கள் கோவைப் பழமாய் சிவக்க.. நுனி மூக்கு பச்சைக் கிளியின் அலகைப் போல கோவைப் பழமாகி விட..

கண்களில் கண்ணீர் கொட்ட.. தலை பாரமாய் கனக்க.. சள்ளு புள்ளென்று பாடாய் பட்டு வீட்டில் உள்ளவர்களையும் படுத்தி எடுத்து விடுவாள்..

மழை காலங்களில் வெளிநாட்டு வாசிகள் போல உல்லன் ஸ்வெட்டரும் கம்பளிப் போர்வையுமாக சுருண்டு முடங்கி விடுவாள்.. அதிலும் அவளுக்கு சரக்கென்றால் ஜலதோஷம் பிடித்து விடும்.. ஜலதோஷமென்றால் அலர்ஜி என்று இருப்பவளுக்கு தூசி பட்டால்கூட அலர்ஜி வந்து ஜலதோஷம் வந்துவிடும்.. மூக்கை உறிஞ்சுவதில் ஆரம்பித்து, இருமலுக்கு வந்து, காய்ச்சலில் குளிருடன் நடுங்கி ஜன்னி வந்து படுத்து விடுவாள்..

ஜலதோஷத்திற்கும் நந்தினிக்கும் உள்ள இந்த ஆழ்ந்த பிணைப்பைப் பற்றி அறிந்து வைத்திருந்ததினால்தான் செஞ்சியில் நந்தினி மழையில் நனைந்து காய்ச்சலை இழுத்துக் கொள்ள முயன்றபோது உத்ரா அலறிப் பதறினாள்..

“என்னை என்னடி செய்யச் சொல்ற..? உன் அப்பா யோசித்துக் கூடப் பார்க்காத இடத்துக்கு நாடு கடத்தனும்னா இந்த கேரளத்து வயநாடுதான் அகப்பட்டது.. சேரளம் எஸ்டேட் அங்கே ரொம்ப ஃபேமஸான எஸ்டேட்டுடி..”

“என்னது..? கேரளம் எஸ்டேட்டுன்னுதானே சொன்ன..?”

“கேரளமா..? ‘சேரளம் எஸ்டேட்..’டுடி..”

“சேரளமா..? நீ கேளரம்ன்னு சொன்ன மாதிரியில்ல இருந்தது.. அப்ப அப்படித்தானேடி சொன்ன..?”

“அப்பவும் ‘சேரளம்’ன்னுதான் சொன்னேன்.. இப்பவும் ‘சேரளம்’ன்னுதான் சொல்றேன்..”

“கேரளத்தில என்னடி ‘சேரளம்’ன்னு பேர் வைச்சிருக் காங்க..?”

“கம்யூட்டரைப் படிச்சா ஹிஸ்டரியை மறந்துடனும்ன்னு இருக்கா..? சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடுன்னு மூணு பிரிவா தமிழகம் இருந்தப்ப சேரர்கள் ஆண்ட நாடு சேர நாடு எனப் படுகிற கேரளம்.. சேர நாடு சேரளம்ன்னு மருவி மெல்ல கேரளம்ன்னு மாறிப் போச்சாம்.. பழசை மறக்காம ‘சேரளம் எஸ்டேட்..’டுன்னு பேர் வைச்சிருக்காங்க.. அதைப் பாராட்டுவியா.. அதை விட்டுட்டு ஏன் அப்படி வைச்சாங்கன்னு விளக்கம் கேட்டுக்கிட்டு இருக்கிறயே..”

“தெரியாம கேட்டுட்டேன்.. போதுமா..”

“காஃப் சிரப்பில இருந்து ஜலதோஷம் வராம இருக்க முன் ஜாக்கிரதை நடவடிக்கையா போட்டுக்க வேண்டிய டேப்லெட்ஸ் வரை இந்த டப்பாவில் இருக்கு.. பத்திரமா வைத்துக்க.. ஸ்வெட்டர் சால்வையெல்லாம் பர்சேஸ் பண்ணியாச்சு.. கவலையில்லை.. டிரெயின் நின்னதும் முதல் வேலையா ஸ்வெட்டரை மாட்டிச் சால்வையை போர்த்திக்கிட்டு இறங்கு.. அங்கே ரொம்பக் குளிரும்..”

பொதுவாக வெயில் காலத்தை விட மழைக் காலங்களை பாதுகாப்பு இல்லாததைப் போல உணர்வாள் நந்தினி.. அதிகக் குளிரும் சலசலவென்ற மழையுமாக அவளுக்குள் ஜில்லிப்பு ஏற்படும்.. வீட்டுக்குள்ளேயே முடங்கச் சொல்லும்..

வருடத்தில் இரண்டு மாதங்கள் வந்து போகும் மழைக் காலத்தையே தாங்கிக் கொள்ள முடியாதவள் சொதசொதவென மழை பொழியும் மலை பிரதேசத்தில் எப்படித் தாக்குப் பிடிப்பாள்..

வெளிறிப் போன நந்தினின் முகத்தைப் பார்த்த உத்ரா..

“பழகிட்டா சரியாப் போயிரும்டி..” என்று ஆறுதல் சொன்னாள்..

என்னத்தைப் பழகி என்று தோன்றினாலும் அதைச் சொல்லி என்னத்தை ஆகப் போகிறது என்று பேசாமல் இருந்து விட்டாள் நந்தினி..

உத்ரா கொடுத்த கவரையும் மருந்து டப்பாவையும் வாங்கி பத்திரப் படுத்திக் கொண்டாள்.. நந்தினியுடன் பேசிக் கொண்டிருந்த உத்ராவின் செல்ஃபோன் ஒலித்தது..

“குல தெய்வத்துக்கு பொங்கல் வைத்து சாமி கும்பிட்டு கல்யாணப் பத்திரிக்கையையும் வைத்து விட்டோம்.. வீட்டுக்கு கிளம்பிக்கிட்டு இருக்கோம்.. நீ திண்டிவனத்தில இருந்து வந்துட்டியா..?” மறுமுனையில் அகிலா கேட்டாள்..

“வந்துட்டேன்ம்மா..” அப்பட்டமான அக்மார்க் பொய்யை அயராமல் அள்ளி விட்டாள் அகிலா பெற்ற உத்ரா..

“வீட்டிலே நீ இல்லையாமே..” என்ற அகிலாவின் வார்த்தைகளில் அக்கினிப் பிழம்பான உத்ரா செல்ஃபோனை கையில் மூடிவிட்டு..

“அதுக்குள்ள சி.ஐ.டி வேலை பார்த்துட்டாங்க பார்த்தியா..” என்று நந்தினியிடம் முறையிட்டாள்..

“அவங்க எப்படி சி.ஐ.டி வேலை பார்த்தாலும் நீ கடுக்கா கொடுத்து எஸ்ஸாகிடற பாரு.. அங்கே நிக்கிற நீ..” என்றான் வினித்..

“மாமியா பக்கம் ஜால்ராவா..? பிழைக்கத் தெரிந்த மருமகன்தான் நீங்க..” வினித்துக்கு சான்றிதழ் வழங்கிய உத்ரா செல்ஃபோனை காதுக்கு கொடுத்து..

“யாரும்மா சொன்னது..?” என்றாள்..

“எதுத்த வீட்டு அகிலாண்டம்தான் சொன்னா..? ஏன்..? அவகூடச் சண்டைக்குப் போகப் போகிறயா..?” என்றாள் அகிலா..

“அது கூட.. சண்டை போட்டுட்டாலும்.. கழுதையில.. ஏம்மா அதுக்கு பகல்லேயே பசுமாடு தெரியாது.. ராத்திரியில எருமைக் கன்னுக்குட்டியை கண்டு பிடிச்சுருமாக்கும்..?”

“இப்போ எதுக்குடி இந்த பழமொழியைச் சொல்கிற..?”

“நான் பக்கத்து வீட்டு பர்வதம் அக்காகிட்டப் பேசிக்கிட்டு இருக்கேன்.. வீட்டில இருந்தாத்தானே அகிலாண்டம் அக்கா வியாக்கினம் பேசும்..? நந்தினியை தஞ்சாவூர் பஸ்ஸில ஏத்தி

விட்டுட்டு திண்டிவனம் போய் தேவையான திங்ஸை வாங்கிட்டு அப்பவே வந்துட்டேனே..”

“சரி சரி.. நாங்க வர்ற வரைக்கும் அங்கேயே பேசிக்கிட்டு இரு..”

அகிலா ஃபோனை அணைத்துவிட..

“ஸ்ஸ் அப்பா..” என்று கன்னங்களை உப்பிக் காற்றை ஊதியபடி இந்தப்பக்கம் செல்ஃபோனை அணைத்தாள் உத்ரா..

“உங்கம்மா பக்கத்து வீட்டு பர்வதம் அக்காகிட்டக் கேட்டு வைச்சா என்ன செய்வ..?” வேடிக்கையாக கேட்டான் வினித்..

“அந்தக்கா ஆமாம்ன்னு சொல்லும்..”

“ஓஹோ.. ரெண்டு பேரும் கூட்டு களவானிகளா..?”

“அப்படித்தான் வைத்துக்கங்களேன்..”

“நீயே சரின்னு சொல்லிட்ட பின்னாலே நான் என்ன மாட்டேன்னா சொல்லப் போறேன்..?”

வினித் குறும்பாக கண்களைச் சிமிட்டியதில் எதைப் பற்றிச் சொல்கிறான் என்று யோசித்த உத்ரா அது எது என்று கண்டு கொண்டவளாக..

“படவா..” என்று வினித்தின் கைகளில் அடித்தாள்..

“ஹா.. ஹா..”

“இந்த ஆம்பளைப் புத்த இருக்குதே..” செல்ல கோபத்துடன் வினித்தை கிள்ளி விட்டு ஹேண்ட்பேகை தோளில் மாட்டியபடி எழுந்தாள் உத்ரா..

“அம்மா வர்றதுக்கு முன்னால நான் செஞ்சியில இருந்தாகனும் நந்தினி.. உன் அப்பாவுக்கு நீ எழுதிய லெட்டரை ஆன் தி வேயில கொரியர் பண்ணிட்டுப் போயிடறேன்.. நியுயார்க்கில இருக்கிற சரோஜா சீனியரும் ஃபோன் போட்டுப் பேசிருவாங்க.. உன் வீட்டுக்குத் தகவல் போயிரும்.. அதைப்பத்தி நீ கவலைப் பட்டுக்காதே..”

“ஆண்ட்டி வர்றதுக்கு முன்னாலே செஞ்சிக்குப் போயிருவியா..?”

“வினித் காரில் டிராப் பண்ணிருவார்.. தெரு முனையில இறங்கி பர்வதம் அக்கா வீட்டுக்குப் போயிருவேன்.. இதைப் பத்தியும் நீ கவலைப் பட்டுக்காதே..”

உன்னைப் பற்றி மட்டும் கவலைப்படு என்று சொல்கிறாளா உத்ரா..? நந்தினியின் கண்களில் துயரக் கண்ணீர் முட்டியது..

# அத்தியாயம் 15

**ர**யில் கிளம்புவதற்கு இன்னும் நேரம் இருந்தது போல.. மந்த கதியில் பிரயாணிகள் ஏறிக் கொண்டிருந்ததை கண்ணாடி ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தா நந்தினி.. வினித்தும் உத்ராவும் போய் விட்டார்கள்.. உத்ரா மட்டும் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கையை ஆட்டினாள்.. ஒரு கட்டத்தில் அதுவும் நின்று போனது.. ஒரு திருப்பத்தில் நின்று நந்தினிக்கு கையசைத்து விட்டு வினித்துடன் கைகோர்த்து நடந்து விட்டாள்..

நந்தினியைத் தனிமை சூழ்ந்து கொண்டது.. ஓர்நொடி பிளாட்பாரத்தில் குதித்து உத்ராவின் பின்னால் ஓடி விடலாமா என்று கூட யோசித்தாள்.. ரயில் கிளம்பி விட்டால் நினைத்ததை செய்ய முடியாது.. உத்ரா வெகு தூரம் போயிருக்க மாட்டாள்..

அசைய முடியாமல் உடலும் மனமும் தொய்ந்து போயிருந்ததில் சீட்டில் தலை சாய்த்துக் கண்களை மூடிக் கொண்டாள்.. இந்த ரயில் சீக்கிரமாகக் கிளம்பி விட்டால் தேவலையென்று இருந்தது அவளுக்கு.. இது போன்ற

எண்ணங்கள் ஏற்படாது.. வழியில் இறங்கி திருதிருவென விழிப்பதை விடக் கேரளாவுக்கு போய் விடுவதே உத்தமம் என்று தோன்றி விடும்..

கோழிக்கோடு ரயில் நிலையத்தில் அவளை அழைத்துப் போக யார் வருவார்..?

“ஹலோ..” பரிச்சயமான குரல் அவள் காதுகளில் விழுந்தது..

‘அவனில்ல இவன்..!’

அவசரமாகக் கண்களைத் திறந்து பார்த்தாள்...எதிர் இருக்கையில் கால்மேல் கால்போட்டு அவன் அமர்ந்திருந்தான்.. கண்களில் கூலிங்கிளாஸ்.. அன்று போல இன்றும் இந்திபப்ட ஹீரோவை நினைவுறுத்தும் வகையில் சிவந்த நிறமும், ஆறடி உயரமும், அழகான தோற்றமுமாக படு அம்சமாக இருந்து வைத்தான்..

துளைக்கும் அவனது ஆழ்ந்த பார்வையில் சினம் கொண்டாள் நந்தினி..

‘இவன் மனசில என்ன நினைச்சுக்கிட்டு இருக்கான்..? இவன் அழகைக் காட்டி மயக்கப் பார்க்கிறானா..? அழகனா இருந்தா நான் மயங்கிருவேனா..?’

“உங்களுக்கு இங்கேயென்ன வேலை..?” சுள்ளென்று கேட்டு வைத்தாள்..

அவளது கோபத்தால் பாதிக்கப்படாதவனாக அவன் கால்களை ஆட்டிக் கொண்டிருந்தான்..

‘அதுசரி.. வினித் அத்தனை திட்டுத் திட்டியும் துடைத்து விட்டு இங்கே வந்து உட்கார்ந்திருக்கிற ஜென்மம்தானே இவன்..’

நந்தினிக்கு பற்றிக் கொண்டு வந்தது.. பெற்றோர், கூடப்பிறந்தவன், உற்றார் உறவினர், பிறந்து வளர்ந்த ஊர் என்று அத்தனையையும் விட்டு விட்டு கண்காணாமல் ஓடிக் கொண்டிருக்கும் அவலத்தினால் ஏற்பட்டத் துயரத்தின் வலி மொத்தமும் கோபமாக மாறி அவன்மீது பாய யத்தனித்தது..

“என்ன மிஸ்டர்.. டி.டி.ஆரையும் ரயில்வே போலிஸையும் கூப்பிடனுமா..?” கடுமையாகக் கேட்டாள்.

“கூப்பிடுங்க.. எனக்காக ரிசர்வ் பண்ணின சீட்டில நான் உட்கார்ந்திருக்கிறேன்.. இதைத் தப்புன்னு அவங்க சொல்லுவாங்களா..? ம்ம்ம்..?” அவன் கெத்தாக புருவங்களை உயர்த்தினான்..

‘இவனுக்காக ரிசர்வ் பண்ணின சீட்டா..?’ நந்தினி வேகம் குறைந்து..

“நீங்கதான் ரவிச்சந்திரனா..?” என்று கேட்டாள்..

“சாட்சாத் அந்த ரவிச்சந்திரன் நானேதான்..” நாடக பாணியில் அவன் சொன்னான்..

‘இதை நான் ரசிக்கனுமாக்கும்..’

போடா டேய் என்ற பாவனையில் முகத்தை வைத்துக் கொண்டாள் நந்தினி.. எதிரிலிருந்தவனின் முகத்தைப் பார்க்காமல் பிளாட்பாரத்தை வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்..

“கேரளா வரைக்கும் போகனுமே.. பேச்சுத் துணைக்கு ஆள் வேணுமே.. கூட டிராவல் பண்றவங்க ஓல் டு பீப்புளா இருந்தா ஜர்னி முழுக்க ஏதோ ஹாஸ்பிடலில் இருக்கிறதைப் போல மருந்து வாடை அடிக்குமேன்னு பயந்துக்கிட்டே

இருந்தேன்.. தேங்க் டு காட்.. ஒரு அழகான பெண் கூட வர்றாங்க.. டிராவல் டயம் ஃபெண்டாஸ்டிக்கா இருக்கப் போகுது..” தோரணையாக சாய்ந்தபடி பேசினான் அவன்..

“ஏன்..? ஓல்ட் பீப்புள் பேச்சுத் துணையா இருக்க மாட்டாங்களா..? அதென்ன மருந்து நெடி அடிக்கும்ன்னு சொல்றீங்க..? உங்களுக்கு உடம்பு சரியில்லைன்னா மருந்து மாத்திரை போட்டுக்க மாட்டிங்களா..?” காட்டமாக கேட்டாள் நந்தினி..

“அப்படிச் சொல்ல வரலைங்க.. ஆயிரம்தான் இருந்தாலும் உங்ககூடப் பேசிக்கிட்டு வர்றதைப் போல இருக்குமா..?” அவன் ஜொள்ளினான்..

‘ஜொள் மன்னன்..!’

மனதுக்குள் அவனுக்கு பட்டம் வழங்கியபோதும் அவன்தான் அவளுடன் பயணிக்கப் போகும் சக பயணி என்பதில் ஏதோ ஒருவகையில் அவளுக்கு நிம்மதி ஏற்பட்டது.. தெரியாத தேவதையை விடத் தெரிந்த பிசாசே மேல் என்பது போன்ற உணர்வுதான் அது.. எவனோ ஒரு முகம் தெரியாத மனிதனுடன் பயணிப்பதை விட.. இந்திப்பட ஹீரோ போல

இருக்கும் ஜொள் மன்னனுடன் பயணம் செய்து மேல் அல்லவா..?

இவன் இப்படித்தான் இருப்பான் என்பதை அவள் அறிவாள்.. எப்படியும் அவளுக்கு இரவு முழுவதும் ஒரு பொட்டுத் தூக்கம் கூட வரப் போவதில்லை.. பயணம் முழுவதும் கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டுதான் இருக்கப் போகிறாள்.. முகம் தெரியாத ஒருவனுடன் நடுங்கிக் கொண்டே பயணிப்பதை விட ஜொள் மன்னன் தொணதொணப்பதைக் கேட்டபடி பயணிக்கலாமே..

"நீங்க மும்பைக்காரர்ன்னு சொன்னதா ஞாபகம்.." அவனைப் பற்றி அறிந்து கொள்ளும் ஆவல் இல்லாததைப் போல காட்டிக் கொண்டாள் நந்தினி..

"இல்லையே.. மும்பையிலே பிஸினெஸ் பண்றேன்னுதான் சொன்னேன்.. நான் பக்கா கேரளாக்காரன்ங்க.."

என்னவோ பக்கா ரௌடி என்பதைப் போல அவன் சொன்ன தினுசில் அவளுக்குச் சிரிப்பு வந்தது..

'இவன் பேச்சிலே கெட்டிக்காரன்..'

மெச்சுதலை விழிகளிலோ, முகத்திலோ பிரதிபலித்து விடாமல் வெகு கவனமாக கடத்திக் கொண்டாள்..

“பக்காக் கேரளாக்காரர்ன்னு சொல்கிறீங்க.. மலையாளத்தில பேசாம தமிழில சக்கை போடு போடறிங்க.. எப்படி..?”

“பக்காக் கேரளாக்காரன்தாங்க.. ஆனா தமிழன்..”

“என்னது..!!!”

“எதுக்கு இத்தனை ஆச்சரியக்குறி..? கேரள வாழ் தமிழன்ங்க..”

“கேரளா மலையாள தேசமாச்சே..”

“மலையாள தேசம்தான்.. மலை வாழ் மக்கள் வாழற தேசம்.. மேற்குத் தொடர்ச்சி மலைகளை ஒட்டிய தேசம்ங்கிறதினால மலையாள தேசமாச்சு.. அங்கே மலையாளம் பேசற மக்கள் மட்டும் வாழலை.. மலையாத்தோட, தமிழ், கன்னடம், உருது, தொங்கனின்னு பல மொழி பேசற மக்கள் வாழறாங்க..”

“ஓ..”

“நீங்க ‘ஓ’ போடறப்ப அழகாயிருக்கு..”

கிடைக்கும் சிறு வாய்ப்பையும் நழுவ விடாமல் அவன் ‘ஜொள்’ விட்டதில் இவன் பெண்களின் அழகைப் புகழ்வதன் மூலம் அவர்களிடம் நெருக்கமாகி விடலாம் என்று கணக்குப் போட்டுப் பழகுகிறவன் என்று நினைத்துக் கொண்டாள் நந்தினி..

அது போன்ற ஆண்கள் பலரை அவள் பார்த்திருக்கிறாள்.. தஞ்சாவூரில் அவளுடைய வீடு இருந்த ஏரியாவில் சின்ன ஜவுளிக் கடை ஒன்று இருந்தது.. அதன் சொந்தக்காரர் நடுத்தர வயதுடையவர்.. கடைகளுக்கு ஜவுளி எடுக்க வரும் பெண்கள் தேர்ந்தெடுக்கும் உடைகளை ஆஹா, ஓஹோ என்று பாராட்டுவார்.. இந்தக் கலர்தான் உங்களுக்குப் பொருத்தமா இருக்கும்ன்னு நினைத்தேன், நீங்க அதை எடுத்திட்டிங்க என்று சொல்வார்.. ஆயிரம்தான் சொல்லுங்க.. நீங்க செலக்ட் பண்ற நேர்த்தியே தனி என்பார்..

அவர் பேசும்போதே அதிலிருக்கும் செயற்கைத்தனம் தனியாக தெரிந்து விடும்.. அதில் மறைந்திருக்கும் வியாபார யுக்தி புலப்படும்.. ஆனாலும் அவர் கடையில் பெண்களின் கூட்டம் அலைமோதும்.. அங்கே நடக்கும் வியாபாரம் தஞ்சையிலேயே பெரிய ஜவுளிக்கடையான மேகநாதனின் ஜவுளிக்கடையில் கூட நடக்காது..

“நம்ம அப்பாவுக்கு விவரம் பத்தாதுக்கா..” என்பான் நந்தகுமார்..

“இதை அவர்கிட்டச் சொல்லிரு பார்ப்போம்..” கேலியாகச் சொல்வாள் நந்தினி..

“எதுக்கு..? அவரோடு அருமந்தப் புதல்வன்ங்கிற சீரும், செல்லமும் அடிவாங்கறதுக்கா பிளான் பண்ற..? அப்படியெல்லாம் நேக்குப் போக்குத் தெரியாம அப்பாகிட்ட மாட்டிக்குவேன்னு பார்த்தியா..? யாரு நானு..?”

“யாருடா நீ..?”

“விவரமானவன்க்கா.. தீபாவளிக்கு பட்டாசைக் கொளுத்தினா நம்ம வீட்டு வாசல்ல போட்டாக் குப்பையாகிரும்ன்னு அடுத்த வீட்டு வாசல் போடறவனாச்சே..”

“அடப்பாவி.. அதான் இந்த வருஷத் தீபாவளியன்னைக்கு எதிர் வீட்டுக்காரங்க சண்டைக்கு வந்தாங்களா..?”

“ஆமாமாம்.. வருஷா வருஷம் அக்கம் பக்கத்து வீடுக பக்கமே பட்டாசை வீசினா உறவு கெட்டுப் போகாதா..?

அதான் இந்த வருஷ தீபாவளிக்கு எதிர் வீட்டு வாசலை எய்ம் பண்ணி வெடி வைச்சேன்.. எப்படி என் ஐடியா..?”

“சகிக்கலை.. நாம பட்டாசு வெடிச்சுட்டு அடுத்தவங்க வீட்டு வாசல்ல போட்டா குப்பையாகிறாதா..?”

“அது அவங்க வாசல் பிரச்னை.. நமக்கென்ன வந்துச்சு..?”

இப்படியாப்பட்ட வியாக்கினம் பேசும் நந்தகுமாரின் அடாவடிக்கு ரசிகைதான் நந்தினி.. ஆனால் எதிரில் இருப்பவனைப் போன்ற பெண்களைக் கவரும் நைச்சியப் பேச்சுக்கு ரசிகையல்ல.. ஆண்கள் சும்மா பேசினால் யதார்த்தமாக பதில் பேசத் தயங்க மாட்டாள்.. இது போல அழகு அது இது என்று பேசினால் இதுதானா நீ என்ற கேலிப் பார்வையோடு நகர்ந்து விடுவாள்..

ரயிலின் முதல் வகுப்பு ஏஸி பெட்டியில் கேலிப் பார்வையுடன் நகரத்தான் முடியாது.. கேலிப் பார்வை பார்க்க முடியுமே..

நந்தினி கீழுதட்டை மடித்து அலட்சியமான கேலிப் பார்வையொன்றை வீசினாள்.. அவன் முகத்தில் வியப்பு வந்தது..

நீ அழகாக பேசுகிறாய் என்ற வார்த்தைகளை ஒரு பெண் அலட்சியப் படுத்துகிறாளா..?

“ஜெமினின்னு ஒரு சினிமா.. அதில் ஹீரோ விக்ரம் சார் ‘ஓ போடுன்னு’ பாட்டுப் பாடி ஆடுவார்.. எனக்கென்னவோ அவர் ‘ஓ’ போடுகிறதுதான் அழகாயிருக்குன்னு தோணுது... அப்புறம் மிஸ்டர், இந்த அழகு, சொலகுங்கிற ஐஸெல்லாம் இங்கே வேணாம்.. நான் அதையெல்லாம் மைண்ட் பண்ணிக்காத கேட்டகிரி.. ஓகே..”

எதிரிலிருந்தவனின் முகம் விழுந்து விட்டது.. எதையோ சொல்லப் போனவன் ஜன்னலின் கண்ணாடித் தடுப்பின் வழியாக வெளியே யாரையோ பார்த்து விட்டு மிரண்டு எழுந்தான்.. இப்பேற்பட்ட அஞ்சா நெஞ்சனையே அஞ்ச வைக்கும் அந்தப் பிரகுருதி யாராக இருக்கும் என்று நந்தினியும் எட்டிப் பார்த்தாள்..

ஆறடிக்கும் மேல் உயரமும், ஆஜானுபாகுவான தோற்றமுமாக அந்தக் காலத்தில் யுத்தம் புரியச் செல்லும் அரசனைப் போலத் தோரணையாக ஒருவன் நடந்து வந்து கொண்டிருந்தான் எதிரில் இருப்பவனையும் அவனையும் ஒப்பிட்டுப் பார்த்தாள் நந்தினி..

‘இவன் ஆறடி உயரத்தில இருக்கான்னா அவன் இவனையும் மிஞ்சின உயரத்தில இருக்கான்.. இவன் சதா சர்வ காலமும் ‘ஈ’ன்னு பல்லைக் காட்டிக்கிட்டு புன்னகை மன்னனாக இருந்தா அவன் சிரிக்கக் கூலி கேட்கிற கடுகடுப்போட முகத்தில முள்ளைக் கட்டிக்கிட்டவனா இருக்கான்.. இவன் ஈஸி கோயிங் ரகம்ன்னா அவன் மிலிடிரி கம்மாண்டர் மாதிரி ஸ்டெரியிட் ஃபார்வர்டா லெப்ட் ரைட் போட்டு நடந்து வர்றான்..’

ஏனோ அந்த நெடியோனைப் பார்த்த நொடியிலேயே நந்தினிக்குப் பிடிக்காமல் போய் விட்டது.. அது எதனால் என்று அவளுக்கே தெரியவில்லை.. அவன் யாரோ ஒரு வழிப் போக்கன்.. ரயில் நிலையத்தில் நடந்து கொண்டிருப்பவன்.. சில நொடிகளில் அவளைக் கடந்து போய் விடுவான்.. அவனை ஏன் நந்தினி வெறுக்க வேண்டும்..?

யோசித்துப் பார்த்த போது அவளுக்கு நிச்சயிக்கப் பட்டிருந்த மாப்பிள்ளையை ‘கம்மாண்டர் போல’ என்று நந்தகுமார் வர்ணித்திருந்ததுதான் காரணமாயிருக்கும் என்று தோன்றியது..

'நான் இப்படியா ஆகிப் போகனும்..?' கவலையுடன் தலையைப் பிடித்துக் கொண்டாள் நந்தினி.. எந்த அளவுக்கு அந்த மாப்பிளைகாரன் நந்தினியின் மனதை பாதித்திருந்தால் அவள் வழியில் எதிர் படுகிறவனையெல்லாம் விரோதி போல வெறுக்கிற அளவுக்கு வந்திருப்பாள்..?

'ராஸ்கல்..'

நந்தினியின் ரத்தம் கொதித்தது.. அவள் பாட்டுக்கு தானுண்டு, தம்பியுண்டு, குடும்பம் உண்டு என்று இருந்தாள்.. அனைத்தையும் பிரிந்து தலைமறைவாக ஊரை விட்டு ஓட வைத்து விட்டானே..

"பாவி.."

நந்தினி வாய் விட்டுத் திட்டினாள்.. வயிற்றில் கோளாறு ஏற்பட்டிருப்பது போல சங்கடம் முகத்தில் அப்பியிருக்க எதிரிலிருந்தவன் நெளிந்தான்..

"வாட் ஹேப்பன்..?" புரியாமல் கேட்டாள் நந்தினி..

"நத்திங்.." அவன் முகம் வியர்த்தது..

"ஏஸி கோச்சில் இப்படி வியர்க்குதே.. அவரைப் பார்த்துத்தான் டென்ஷனாகிறீங்கன்னு நினைக்கறேன்.. அவர்

யார்..? உங்களுக்குத் தெரிந்தவரா..?” நந்தினி என்னவோ இயல்பாகத்தான் வினவினாள்.. அதற்கு அவன்.

“இல்லை.. இல்லை..” என்று ஏறக்குறைய அலறினான்..

“ஓகே.. ஓகே.. ரிலாக்ஸ்.. கண்ட்ரோல் யுவர் ஷெல்ப்.. ஃபர்ஸ்ட் நீங்க உங்க சீட்டில உட்காருங்க.. இந்த வாட்டரைக் குடிங்க.. சரியாப் போயிரும்..”

நந்தினி தண்ணீர் பாட்டிலை எடுத்து அவனிடம் நீட்டினாள்.. அவன் உட்காரவும் இல்லை.. அவளிடம் தண்ணீர் பாட்டிலை வாங்கிக் கொள்ளவும் இல்லை.. யாரோ அவனைக் கத்தியெடுத்து குத்த வருவதைப் போல விரைந்து விட்டான்..

‘ஏன் இப்படி ஓடறான்.. டிரெயின் கிளம்பிட்டா என்ன செய்வான்..?’ என்று குழம்பினாள் நந்தினி.

எப்படியோ போகட்டும் என்ற முடிவுக்கு வந்தவளாக தண்ணீர் பாட்டிலை ஹேண்ட் பேகில் வைத்து விட்டு சாய்ந்து உட்கார்ந்து கண்களை மூடினாள்..

அவளே பிடிக்காத திருமணத்திலிருந்து தப்ப தலைமறைவாக ஓடிக் கொண்டிருக்கிறாள்.. யார் எப்படி ஓடினால் அவளுக்கென்ன..?

# அத்தியாயம் 16

**அ**வளிருந்த முதல் வகுப்புப் பெட்டியின் கதவு படாரென்று திறக்கப்பட்டது.. ஆழ்ந்த சிந்தனையிலிருந்த நந்தினி சிந்தனை கலைந்து விட்ட கோபத்துடன்..

“யார் அது..?” என்று கோபத்துடன் கேட்டபடி கண் விழித்தாள்..

எதிரில் அந்த நெடியேன் பெட்டியுடன் நின்றிருந்தான்.. நந்தினி இமை கொட்டி ஆச்சரியத்துடன் விழித்தாள்..

‘இப்பத்தானே இவன் நடந்து வந்துக்கிட்டு இருந்தான்..? அதுக்குள்ள இங்கே வந்து நிற்கிறானே.. மாய மந்திரம் கற்றுக் கைக்குள் வைத்திருப்பானோ..?’

அவளது விழிகள் ஓடிப் போன ரவிச்சந்திரனாகப் பட்டவனைத் தேடின.. இவனைக் கண்டுதானே அவன் ஓடினான்..? ஏன் அப்படி ஓடினான்..? ஒருவேளை இவனிடம் கடன், கிடன் வாங்கியிருப்பானோ..

கந்து வட்டிக்காரனைப் போல எதிரில் நின்றவனை உற்றுப் பார்த்த நந்தினியின் விழிகள்..

‘பாதகா..’ என்றன..

கடன் கொடுத்து விட்ட காரணத்திற்காக ரயிலில் பயணம் செய்பவனைக் கூட இவன் துரத்திக் கொண்டு வருவானா..?

‘அவன் மும்பையில் பிஸினெஸ்.. செஞ்சிக் கோட்டையைப் பார்க்கப் ஃபிளைட் பிடித்து வந்தேன்.. அது, இதுன்னு அளந்தானே.. பார்த்தாக் கடன்காரனைப் போலத் தெரியலையே.. இவன் அவனை எதை வைத்துப் பயமுறுத்தறான்..?’

வெறுப்பைக் கக்கிய நந்தினியின் விழிகளை அகந்தையுடன் சந்தித்தன அவனது விழிகள்..

‘இத்தனை அகந்தையா..?’ நந்தினியின் வெறுப்பு அதிகரித்தது..

துவேஷத்துடன் அவனைப் பார்த்தாள்.. அவனோ நீயெல்லாம் எனக்கு இணையா என்பதைப் போலத் துச்சமாக அவளைப் பார்வையிட்டபடி எதிர் இருக்கையில் சாய்ந்து உட்கார்ந்து கால் மேல் கால் போட்டுக் கொண்டான்..

‘பாருடா.. இவன் தெனாவெட்ட..’

எவனோ ஒரு ரவிச்சந்திரன் ரிசர்வ் பண்ணி வைத்திருக்கும் சீட்டில் சொந்தப் பணத்தில் ரிசர்வ் பண்ணி வைத்திருக்கும் சீட்டில் உட்காருவதைப் போல கால்மேல் கால் போட்டு அவன் தோரணை காட்டியதில் அவள் வெகுண்டாள்.. அவ ன் காட்டிய அகந்தையைத் தட்டி வைக்க வேண்டும் போல அவருக்கு இருந்தது..

“ஹு ஆர் யு மேன்..?” குரலை உயர்த்தி அதட்டினாள்.. அவன் விழிகளில் இமைக்கும் பொழுதிற்குள் எதுவோ வந்து போனது.. அவனது கல்போன்ற கடினம் பரவியிருந்த உணர்வுகள் துடைக்கப்பட்டிருந்த முகத்திலிருந்து எதையும் கண்டு பிடிக்க முடியவில்லை..

“ஃபர்ஸ்ட் யு டெல் மீ.. ஹு ஆர் யு..?” அதிகாரமாக அவன் கேட்டான்..

‘என்ன திமிர்..! இவனுக்கு நான் யாருன்னு சொல்லனுமாமில்ல.. பெரிய இவன்னு மனதுக்குள்ள நினைப்பு.. இவனைக் கண்டு அந்த ரவிச்சந்திரன் பயப்படலாம்.. நான் பயப்படமாட்டேன்..’

கன்ஃபைட் காஞ்சனா போல துப்பாக்கியொன்றை ஏந்தாதது தான் குறை.. மற்றபடி ஒரு கடைந்தெடுக்கப்பட்ட

அக்மார்க் வீராங்கனையாக பொங்கியெழுந்த நந்தினி கொதித்தாள்..

“என்ன மிஸ்டர்.. வம்பு பண்றீங்களா..?”

“வம்பா..? நானா..? உங்களிடமா..? குட் ஜோக்.. நீங்க யாரன்னே எனக்குத் தெரியாது... அதைத் தெரிஞ்சுக்கனும்னு நானும் விரும்பலை.. நீங்கதான் என்னைப் பார்த்ததும் ஹு ஆர் யு மேன்னு கேட்டிங்க.. பதிலுக்கு நீங்க யார்ன்னு நான் கேட்டேன்.. இதில என்ன தப்பிருக்கு..? இதுக்காக வம்பு பண்றேன்னு பெரிய வார்த்தையெல்லாம் பேசுவீங்களா..?”

“பேசத்தான் செய்வேன்.. இதில தப்பில்லையாமில்ல.. இது தப்பு இல்லேன்னா வேற எதுதான் தப்பு..?”

“ஓஹோ.. இது தப்புன்னா.. அறிமுகமில்லாத என்னை யாருன்னு தெரிஞ்சுக்க நீங்க ஆசைப்பட்டதுதான் முதல் தப்பு..”

“என்னது..?”

நந்தினிக்கு ரத்தம் எகிறி தலை கிர்ரென்று சுற்ற ஆரம்பித்து விட்டது.. என்ன வார்த்தை சொல்லி விட்டான்..

“நான் உங்க மேல ஆசைப்பட்டேனா..?”

மறுபடியும் அவன் முகத்தில் மின்னல் போல எதுவோ வந்து போனது.. அது என்ன கழுதையாகவும் இருக்கட்டும்.. அதைப் பற்றி அவளுக்கு யாதொரு கவலையும் இல்லை.. இந்த கல்லுளி மங்கன் எப்படி அவன்மீது அவள் ஆசைப்படுவதாகச் சொல்லலாம்..? என்னவோ இவன் சொத்தை அவள் கொள்ளையடித்து விட்டதைப் போல உர்ரென்று விறைத்து கொண்டிருக்கும் இவனைப் பார்த்து அவள் ஆசைப்படுகிறாளாமா..?

“என்னைப் பத்தித் தெரிஞ்சுக்க ஆசைப்பட்டிங்க..”

“தெரிஞ்சு என்ன செய்யப் போகிறேனாம்..?”

“யாருக்குத் தெரியும்.. அதை நீங்கதான் சொல்லனும்..”

அவன் கண்களில் தெரிந்த சிரிப்பில் இவள் தடுமாறினாள்.. அவள் பக்கம் தவறைத் திருப்பி விட்டு விட்டவனை சும்மா விடக் கூடாது என்ற வேகத்துடன்,

“அடுத்தவங்க சீட்டில உட்கார்ந்துக்கிட்டு அழிச்சாட்டியம் பண்றீங்களா..? எழுந்திருங்க முதலில.. இல்லேன்னா ரயில்வே போலிஸையும் டி.டி.ஆரையும் கூப்பிட வேண்டியிருக்கும்..” என்று படபடவென பொரிந்தாள்..

எதிரில் இருப்பவனைக் கண்டதும் ஓடிப் போய்விட்ட ரவிச்சந்திரனிடம் சொன்னதையே இவனிடமும் அவள் சொல்ல.. அதிசயத்திலும் அதிசயமாக இவனும் அவன் சொன்னதையே வார்த்தை பிறளாமல் சொல்லி வைத்து அவளை மிரள வைத்தான்..

“கூப்பிடுங்க.. எனக்காக ரிசர்வ் பண்ணின சீட்டில நான் உட்கார்ந்திருக்கிறேன்.. இதைத் தப்புன்னு அவங்க சொல்வாங்களா..? ம்ம்ம்..?” இவனும் அவனைப் போலவே படுகெத்தாக புருவங்களை உயர்த்தினான்..

‘அவனை விட இவனுக்குத்தான் இந்த மேனரிசம் பொருந்தி வருது..’ நேரம் காலம் தெரியாமல் அவள் மனது ஜொள்ளியது.. அதுவும் போதாதென்று..

‘அவன் கால் மேல் கால் போட்டு உட்கார்ந்திருந்தது போஸ் கொடுக்கிறதைப் போல இருந்தது.. இவன் கால்மேல் கால் போட்டத் தோரணையே அட்டகாசமா, எடுப்பா இருந்தது..’ என்றும் ஜொள்ளி வைத்தது..

‘இருந்திருந்து இவனைப் போய் ரசித்து வைக்கிறேனே..’

மானசீகமாய் தலையில் அடித்துக் கொண்டாள் நந்தினி.. அவளது மனப் போராட்டத்தை அறிந்தவளைப் போல

அவளையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தவனின் கண்களில் கேலி இருந்தது.. அது நந்தினியை சோதித்து வைத்தது..

“நீங்கதான் ரவிச்சந்திரன்ங்கிறதுக்கு என்ன ஆதாரம்..?” விரல் உயர்த்திச் சிலும்பினாள்..

“நான் ரவிச்சந்திரன் இல்லைங்கிறதுக்கு நீங்க என்ன ஆதாரம் வைத்திருக்கீங்க..?” நிதானமாக அவளை மடக்கினான் அவன்..

“ஒரிஜினல் ரவிச்சந்திரன் இப்பத்தான் இங்கே இருந்தார்..” விடாமல் அவள் வாதாடினாள்..

அவன் முகம் மாறியது.. கடுமை முகத்தில் அதிகரிக்கச் சுற்று முற்றும் பார்த்து விட்டு..

“இருந்தார்ன்னா..? இப்ப எங்கே..?” என்று அதட்டினான்..

‘இவன் யார் என்னை அதட்ட..?’ அவளுக்கு ரோஷம் பொத்துக் கொண்டு வந்தது..

“என்ன மிஸ்டர்.. தெரியாததைப் போலக் கேட்கறிங்க.. அவர்தான் உங்களைக் கண்டதும் ஓடி ஒளிஞ்சுக்கிட்டாரே..

பாவம்.. அவரை என்ன பாடுபடுத்தி வைத்திருந்தீங்களோ.. முன்னேப் பின்னே தெரியாத என்னையே லெப் ட் அண்ட் ரைட் வாங்கறவரு அவரைச் சும்மாவா விட்டிருப்பீங்க..?''

''எவரை..?''

''அதான்.. ஒரிஜினல் ரவிச்சந்திரனை..''

''அப்ப நானென்ன டூப்ளிகேட் ரவிச்சந்திரனா..?''

''அதை என் வாயாலே வேற நான் சொல்லனுமா..?''

''ஷட்-அப்.. நான் ஒரிஜிளா இல்லை டூப்ளிக்கேட்டாங்கிறதை டி.டி.ஆர்கிட்டச் சொல்லிக்கறேன்.. உங்களுக்கு அது தேவையில்லாத விஷயம்.. நீங்க ஓடிப் போனதா சொல்ற அந்த ஒரிஜினல் என்ன உங்களுக்கு சொந்தக்காரனா..?''

''இல்லவே இல்லை..''

''ஃபிரண்டா..?''

''அதுவும் இல்லை சார்..''

''பின்னே..? வேற எந்த வகையில உங்களுக்குத் தெரிஞ்சவன்..? காதலா..?''

“சேச்சே..”

வேப்பங்காயைக் கடித்து விட்டதைப் போல அவள் முகம் கோணியதை வேடிக்கையாக பார்த்தவன்..

“எதுவும் இல்லைன்னா நீங்க ஏன் அவனுக்கு வக்காலத்து வாங்கறிங்க..? உங்ககூட துணைக்கு வந்தவரா..?”

“அதெல்லாம் இல்லை.. அவர் யாரோ.. நான் யாரோ..”

“நீங்க தனியா டிராவல் பண்றீங்களா..?”

‘என்ன இவன் இப்படித் தூண்டித் துருவறான்..’

அவளுக்குத் ‘திக்’ கென்று ஆகி விட்டது.. எதிரில் இருந்தவனை அடிப்பார்வையில் ஆராய்ந்தாள்..

‘பாகுபலி போல படு திடகாத்திரமா இருக்கானே..’

இவனுடனா அந்த ரயில் பயணத்தை அவள் கழிக்க வேண்டும்..?

‘கடவுளே..! இவனுக்கு அந்த புன்னகை மன்னன் பெட்டராச்சே.. கடலை தான் போடுவான்.. மற்றபடி இவனைப் போல பயமுறுத்த மாட்டான்.. எங்கே போய்

தொலைந்தான்...,. இவன்தான் ரவிச்சந்திரன்னா அவன் யார்..? பொய் சொன்னானா..?'

அவன் சொன்னாலும் சொல்லியிருப்பான் என்பதில் அவள் முகம் விழுந்து விட்டது.. எதிரில் இருந்தவன் வேறு அவள் முகத்தையே ஊன்றிப் பார்த்துக் கொண்டிருந்தான்.. துளைப்பதைப் போன்ற அவனது பார்வையில் 'என்ன.. இப்படிப் பார்த்து வைக்கிறான்..' என்று அவள் திகிலானாள்..

தண்ணீர் குடிக்கும் பாவனையில் ஹேண்ட் பேகில் தலையைக் கவிழ்த்துக் கொண்டவளின் கையில் உத்ரா கொடுத்திருந்த கவர் அகப்பட்டது.. விசிட்டிங் கார்டை கையில் எடுத்தவள் அதில் பொறிக்கப்பட்டிருந்த ஃபோன் நம்பரை செல்ஃபோனில் பதிவு செய்து கொள்ள அழுத்தினாள்.. எதிரிலிருந்தவன் எழுந்து பெட்டியை விட்டு வெளியே போனான்.. இவள் நம்பரை அழுத்தும் போது கை அழுத்தமாக பதிந்து விட்டதில் கால் போய் விட்டது.. பதட்டத்துடன் இவள் ஃபோனை அணைப்பதற்குள் எதிர்முனையில்..

“ஹலோ..” என்ற கம்பீரமான குரல் கேட்டது..

வேறு வழியில்லை.. இவள் பேசித்தானாக வேண்டும் என்ற நிலையில் தவித்துப் போன நந்தினி தயக்கத்துடன்..

“ஐ ஆம் நந்தினி சார்.. உங்க எஸ்டேட்டில் வேலை பார்க்கக் கிளம்பி வருகிறேன்..” என்றாள்..

“வாங்க..” என்ற பதில் ஃபோனிலும் எதிரிலும் கேட்டது..

‘என்னடா இது..?’ தூக்கிவாரிப் போட்டவளாக நிமிர்ந்து பார்த்தால் வெளியே போயிருந்தவன் செல்ஃபோனில் பேசியபடி உள்ளே வந்து கொண்டிருந்தான்..

இவளையும் இவள் கையிலிருந்த ஃபோனையும் பார்த்தவன் புருவங்களை உயர்த்தினான்..

எதையும் உறுதி செய்து கொள்ளாமல் மறுபடியும் அவனிடம் மூக்குடைபட அவள் தயாராக இல்லை..

அவன்தான் மூககை உடைப்பதில் கை தேர்ந்த வல்லுனனாக இருக்கிறானே..

‘போடா’ என்று முகத்தைத் திருப்பிக் கொண்ட நந்தினி.. “சென்ட்ரலில டிரெயினில் ஏறிட்டேன் சார்.. கோழிக் கோடில் இறங்கிக்கனும்னு உத்ரா சொன்னா.. எனக்கு கேரளாவைப் பத்தி எதுவும் தெரியாது சார்.. கோழிக்கோடில என்னை ரிஸீவ்

பண்ணிக்க யாராவது வருவாங்களா..? இல்லை.. நானே பஸ் பிடித்து வந்து விடவா..?" என்று ஃபோனில் கேட்டுக் கொண்டிருந்தாள்..

"அவசியமேயில்லை.. என்னோட கார் கோழிக் கோடில எனக்காக காத்திருக்கும்.. என்னுடன் நீங்களும் வந்து விடலாம்.." என்று எதிர் சீட்காரன் சொன்னது ஃபோனிலும் நேரிலும் ஒலித்ததில் அரண்டு போய் ஃபோனை நழுவ விட்டாள்..

அவன் செல்ஃபோனை அணைத்து விட்டு சுவாதீனமாக குனிந்து அவளது ஃபோனை எடுத்து அவள் கையில் கொடுத்தான்.. இயந்திரம் போல வாங்கிக் கொண்டவளிடம் அவனது ஃபோனைக் காட்டினான்.. அதில் நந்தினியின் நம்பர் இருந்தது..

"இதிலும் சந்தேகம் வேண்டாம்.. நீங்க என்னுடன் தான் பேசினீங்க.." என்றான்..

கையிலிருந்த விசிட்டிங் கார்ட்டை பார்த்தாள் நந்தினி..

'ரவிச்சந்திரன் எம்.ஈ, எம்.பி.ஏ'

உரிமையாளர் சேரளம் எஸ்டேட்

'யாழ்' ஹோட்டல்...'

என்று பொன்னெழுத்தில் பொறிக்கப் பட்டிருந்தது.

'இவன்தான் ரவிச்சந்திரன் போல.. கடவுளே..!

இவனேதான் நான் வேலை பார்க்கப் போகிற எஸ்டேட்டின் முதலாளி.. தலைமறைவாய் ஓடுகிறவள் வாயை மூடிக்கிட்டு ஓடக் கூடாதா..? இப்படியா வாயடித்து நீதான் ரவிச்சந்திரன்ங்கிறதுக்கு என்ன ஆதாரம்ன்னு கேட்டு வைப்பேன்..?'

வெட்கத்தினால் முகம் கன்றிப் போனவளை ரசனையுடன் பார்த்தான் அவன்..

"நான்தான் ரவிச்சந்திரன்ங்கிறதுக்கு இதைவிட ஆதாரம் வேற ஏதும் வேணுமா..?"

நையாண்டியாக அவன் கேட்டதற்கு பதில் சொல்ல அவளால் தலையை உயர்த்த முடியவில்லை..

# அத்தியாயம் 17

**ர**யில் கிளம்பி விட்டது.. ஓடிப் போன டூப்ளிகேட் ரவிச்சந்திரன் எங்கே போயிருப்பான் என்று யோசித்தாள் நந்தினி.. எங்கே போயிருந்தால் அவளுக்கென்ன என்ற எண்ணம் வந்தது.. தனித்த ரயில் பயணத்தின் பயமின்றி அவள்தான் மிலிடிரிக் கம்மாண்டர் போன்ற கடுகடு முகத்துக்காரனுடன் பயணித்துக் கொண்டிருக்கிறாளே..

‘அவனுக்கு இவன் கோடி மடங்கு பெட்டர்..’

அவனைப் போல இவன் ரோமியோத்தனம் காட்டவில்லை.. கடலை வறுக்கவில்லை.. தொண தொணக்கவில்லை.. ஆர்ட்டின் அம்புகளை ஏவி விடவில்லை.. தூண்டில் பார்வையை வீசவில்லை..

லேப்டாப்பை விரித்து வைத்து கீபோர்டை தட்டி எதையோ டைப் அடித்துக் கொண்டிருந்தான்.. அவனிடம் வேலை பார்க்கப் போகிறாளே என்ற நினைவில்..

“மே ஐ ஹெல்ப் யு..?” என்று தயக்கத்துடன் கேட்டு வைத்தாள்..

அசைவில்லாமல் விழிகளை மட்டும் உயர்த்தியவனின் பார்வையில் கேலி இருந்தது..

“நானே டூப்ளிகேட்.. எனக்கு ஹெல்ப் பண்ணினா தப்பாகிறாதா..?”

‘இவன் இதையே சொல்லிக் காண்பிக்கப் போகிறான்..’

நந்தினிக்கு மொட்டைச் சுவரில் முட்டிக் கொள்ளலாம் போல இருந்தது.. எதிரிலிருப்பவன் அவளையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்ததில் உடலில் நடுக்கம் பரவியது.. அவனைப் பார்த்தால் தானே பிரச்னை.. பார்க்காமல் இருந்து விடலாமே என்று ஜன்னலின் கண்ணாடிக் கதவில் பார்வையை பதிக்க முயன்றாள் வெளியே கொட்டிக் கொண்டிருந்த மழை ஈரத்தில் புள்ளிப் புள்ளியாக நீர்த்துளிகள் ஒன்றுகூடி மறைந்ததில் வெளியேயும் வேடிக்கை பார்க்க முடியவில்லை.. அதற்காக திரும்பி விட முடியுமா..? அவன்தான் அவள்மீதிருந்த பார்வையை இம்மியளவும் நகர்த்தாமல் அவளையே உற்று உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தானே..

என்ன ஆனாலும் சரி.. அவன் உட்கார்ந்திருக்கும் திசைப் பக்கம் பார்த்து விடவே கூடாது என்ற கங்கணம் கட்டிக்

கொண்டவளாக மழைத்துளிகள் அடர்ந்திருந்த கண்ணாடிக் கதவையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள் நந்தினி..

நீ என்னை உற்றுப் பார்த்தால் நான் ஜன்னலின் கண்ணாடிக் கதவை உற்றுப் பார்ப்பேன் என்று சவால் விடுவதைப் போல இருந்தது அவள் செயல்..

குழந்தைத்தனமான அவளது பிடிவாதத்தை ரசிப்பதைப் போல அவன் முகத்தில் ஓர் சுவராஸ்யம் தோன்றியது.. எதிரில் இருப்பவளின் எழிலில் பார்வையைச் செலுத்தினான்.. அவனது ரசிப்பை அவள் உணர்ந்துதான் இருந்தாள்..

டூப்ளிகேட் ரவிச்சந்திரனின் ரோமியோ பார்வையைப் போல இல்லாத உறுத்தாத ரசிப்பு இது என்ற சிலிர்ப்பு மனதில் ஓடித் தொலைத்து அவள் மனதை சலனப்படுத்தியது..

“இது பனிகாலம்..” என்றான் அவன்..

எதற்காக இதைச் சொல்கிறான் என்று புரியாமல் அவன் பக்கம் பார்வையைத் திருப்பி விட்டாள் அவள்.. பார்த்து விட்டாயா என்ற வெற்றி மின்னல் அவன் கண்களில் வந்து போனதோ என்று அவளுக்குச் சம்சயமாக இருந்தது.. அதை உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டுமானால் அவன் கண்களை

உற்றுப் பார்த்தாக வேண்டடம்.. தீட்சண்யம் மிகுந்த அவன் பார்வையை நேருக்கு நேர் சந்திக்க அவளால் முடியுமா..?

'அப்பாடி..' அவளுக்கு மலைப்பாக இருந்தது..

'எப்படியாப்பட்ட பார்வை இது...! எதிரில் இருக்கிறவங்கள துளைச்செடுக்கிற பார்வை.. மனசை சல்லடையாக்கி சலித்து அதில இருக்கிறதை தூண்டித் துருவுகிற பார்வை.. இந்தப் பார்வையை எதிர்நோக்கற சக்தி எனக்கில்லை..'

இருந்திருந்து இப்படியாகப்பட்ட ஒருவனிடமா அவள் வேலைக்குச் சேர வேண்டும் என்றிருந்தது அவளுக்கு.. ஒளியத் தெரியாதவள் போலிஸ் டி.ஜி.பி வீட்டில் ஒளிந்தாளாம்.. அந்தக் கதையாய் அவள் கதை ஆகி விட்டதே..

அவளைத் திரும்பிப் பார்க்க வைக்கச் சொன்னானோ.. இல்லை.. வேறு கழுதைக்குச் சொன்னானோ.. அவனது இறுக்கமான வாயைத் திறந்து இரண்டு வார்த்தை முத்துக்களைச் சொல்லி விட்டான்.. அதற்கு அவள் பதில் சொல்லாவிட்டால் எஜமான குற்றம் ஏற்பட்டு விடாதா..?

அவன் முதலாளி.. அவள் அவனிடம் வேலை பார்க்கப் போய் கொண்டிருப்பவள்.. முதலாளியின் வார்த்தைகளுக்கு அவள் செவி வாய்க்கவில்லை என்று ஆகிவிடாதா..?

இன்ன பிற காரணங்களால் அவள் தனது செம்பவள வாய் திறந்து..

“என்ன சொன்னீங்க..?” என்று கேட்டு வைத்தாள்..

ஓர் நொடி அமைதி நிலவியது.. அவன் பதிலேதும் சொல்லாமல் லேப்டாப்பில் பார்வையைத் திருப்பிக் கொண்டான்.. நந்தினி உதாசீனப்படுத்தப் படுவதைப் போல உணர்ந்தாள்..

‘பிறகு என்ன கழுதைக்கு என் கூடப் பேசினானாம்.. இவன் பேசினா நான் பதில் பேசனும்.. நான் பேசினா இவன் பதில் பேச மாட்டானா..?’ நந்தினிக்குள் சினம் துளிர்த்தது..

வலியவரிடம் சினத்தைக் காண்பிக்க முடியாது என்பது ஒரு புறமிருக்க.. சினத்தைக் காட்டி போடா நீயாச்சு, உன் வேலையாச்சு என்று தூக்கிப் போட்டு விட்டுப் போகக்கூடிய நிலையில் நந்தினி அப்போது இல்லை என்ற தன்னிரக்கம் மறுபுறம் அவளது மனதை வாட்டியது..

நந்தினி ஒளிந்து வாழ ஒரு பாதுகாப்பான இடம் தேவை.. அதை ரவிச்சந்திரன் கொடுக்கவிருக்கிறான்.. கூடுதலாக அவன் பெண்களிடம் வழியாதவனாக இருப்பது நந்தினிக்குப்

பாதுகாப்புத்தானே என்ற எண்ணம் வந்ததில் நந்தினியின் மனம் சற்றுச் சமாதானமானது..

இருந்தாலும் அவளது பேச்சை சட்டை செய்யாமல் அவன் லேப்டாப்பைப் பார்க்க ஆரம்பித்ததில் ஏற்ப்பட்ட மனச்சடைவில் மறுபடியும் கண்ணாடிக் கதவின் மழைத் துளிகளைப் பார்க்க ஆரம்பித்தாள்..

இப்போது அவன் அவளைப் பார்த்தான்.. ஓரக் கண்ணால் அவனைக் கண்காணித்துக் கொண்டிருந்த நந்தினியின் உடலில் விறைப்பு வந்தது.. அவளை அவன் சட்டை செய்ய மாட்டானாம்.. அவள் மட்டும் அவன் திரும்பிப் பார்த்து விட்டால் விழுந்தடித்துக் கொண்டு என்னங்க எஜமான் என்று அவனைப் பார்க்க வேண்டுமாம்..

‘இதுக்கெல்லாம் வேற ஆளைப் பார்.. நான் நந்தினி. .! கோடிஸ்வரன் ஒருத்தன் என்னைக் கல்யாணம் பண்ணிக்க நினைக்கிறான்.. எனக்கு அவனைப் பிடிக்கலைங்கிற ஒரே காரணத்துக்காக பிடிக்காத கல்யாணத்தில இருந்து தப்பிக்க ஓடி ஒளிஞ்சுக்கிட்டு இருக்கேன்.. உன்கிட்ட வேலை பார்க்க வந்தா நீ இம்புட்டுப் பந்தாக் காட்டுவியா..?’

அவளது மடித்துக் கடித்த உதடுகள் பிரதிபலித்த பிடிவாதத்தை ஊன்றிப் பார்த்தான் அவன்.. அவள் அவனை ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டே பார்க்காததைப் போல பாவனை செய்ததில் அவன் இதழ்களில் சிறு இளநகை தோன்றியது..

'எதுக்குச் சிரிக்கிறானாம்..? இவனுக்கு என்னைப் பார்த்தா கைப்புள்ள போல தோணுதா..?'

கோபத்துக்குப் பதில் அவளுக்கு கவலை வந்து தொலைத்தது.. பாகுபலி போல ஒரு திடகாத்திரமான ஆறடி உயர ஆண்மகன் ஒருவன் எதிரில் உட்கார்ந்திருக்கிறான்.. அவனது பார்வை அவளைத் துளைக்கிறது.. அது தின்று விடும் பார்வையாக இல்லாமல் அவளைத் தூண்டித் துருவும் பார்வையாக இருக்கிறது.. அவளை அவன் ரசித்துப் பார்க்கிறான்.. அந்த ரசிப்பு அவளது அழகுக்கானதல்ல.. அவளது குழந்தைத்தனத்திற்கானது என்றால் இளம் வயதுப் பெண் கவலை கொள்ள மாட்டாளா..?

'பார்க்க நல்லாத்தானே இருக்கேன்..?' அவளுக்கு சந்தேகம் வந்து தொலைத்தது..

ஜாடையாக ஜன்னலின் கண்ணாடிக் கதவில் பிரதிபலித்த அவளது உருவத்தைப் பார்த்துக் கொண்டாள்.. நன்றாக இருப்பதைப் போலத்தான் இருந்தது..

‘அழகாத்தான் இருக்கேன்.. அந்த டூப்ளிகேட் என்னைப் ஃபாலோ பண்ணினானே.. வழிசல்னா வழிசல்.. அப்படியொரு வழிசலை வழிஞ்சானே.. அவன் விட்ட ஜொள்ளில இந்த கம்பார்ட்மண்டே கழுவி விட்டுட்டுப் போனானே.. நான் அழகா இல்லாமலா என்னைத் துரத்திக்கிட்டு வந்திருப்பான்..?’

தன்னம்பிக்கை தலை தூக்கியது.. எதிரில் இருப்பவன் ஆணவக்காரன் என்று மனதுக்குள் அர்ச்சனை பண்ணினாள் நந்தினி..

‘இவனுக்கிருக்கிற ஹெட் வெயிட்டுக்கு உலகம் தாங்காது... இதில இவன்கிட்டே நான் வேலை பார்த்தாகனும்... எப்படியெல்லாம் துன்பம் வந்து சேர்ந்து தொலைக்குது..’

அந்தத் திமிர் பிடித்தவன் நிமிர்ந்து உட்கார்ந்தான்.. என்ன பேசித்தொலைக்கப் போகிறானோ என்று நந்தினியின்

மனம் 'பதக், பதக்' என அடித்துக் கொண்டது.. இதயத் துடிப்பு அதிகரித்தது..

'ச்சை..!' அவளுக்கு வாழ்க்கையே வெறுத்துப் போனது..

'விதிடா சாமி..! ஒரு வார்த்தைப் பேசறதுக்குள்ள உயிர் போய் உயிர் வருது.. இந்த லட்சணத்தில இவன்கிட்ட நான் வேலை பார்த்தாகனும்.. எப்படித்தான் குப்பை கொட்டப் போறேனோ.. தெரியலையே.. காலக் கொடுமை..! இப்படியுமா ஒரு மனுஷன் பிளட் பிரசரை எகிற வைப்பான்..? இவன் நிமிர்ந்து பார்த்தாலே 'திக், திக், திகில்' ன்னு இருக்கு.. மர்மக் கதை தோத்துப் போயிடும்.. அப்படி அலப்பறை பன்றான்.. இந்தக் கர்வம் பிடிச்சவன் எந்த நேரத்தில என்ன சொல்லித் தொலைப்பானோங்கிற பயத்திலேயே பாதி உயிர் குறைஞ்சிரும் போல இருக்கே..'

அவன் அப்படித்தான் அமர்த்தலாகப் பேசி வைத்தான்..

"இந்தக் கோச்சில நீங்களும் நானும் மட்டும்தான் இருக்கோம்.."

'இதை எதுக்குச் சொல்லி வைக்கிறான்..?' அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.. பயத்துடன் அவனைப் பார்த்தாள்.. அந்தப் பார்வையில் அவன் முகம் கடுகடுத்தது..

“கற்பனைக் குதிரையை எக்குத்தப்பாய் பறக்க விடவேணாம்..” எரிச்சலுடன் சொன்னான்..

“என்.. என்.. என்து..?” வார்த்தைகளில் அவள் தந்தியடித்தாள்..

“ரிலாக்ஸ் யுவர் ஸெல்ப்.. நான் பெண்களை தப்பான கண்ணோட்டத்தில் பார்க்கிறவனில்லை.. அண்டர்ஸ்டாண்ட் ...?”

“அண்டர்ஸ்டாண்ட்..” நிம்மதியாக மூச்சு விட்டாள்..

“உங்களை ரேப் பண்ற உத்தேசம் எனக்குக் கிடையாது..”

“என்னது..?” மறுபடியும் அவள் அலறினாள்..

இத்தனைப் பட்டவர்த்தனமான தன்னிலை விளக்கத்தை அவள் சத்தியமாக எதிர்பார்த்திருக்க வில்லை.. எந்த விதமான நாகரிகப் பூச்சுக்களின்றி நெருஞ்சி முள்ளைப் போல அவன் பேசி வைத்ததில் வெளிப்பட்ட முரட்டுத்தனம் அவளை மருள வைத்தது..

“என்ன ‘என்னது..?’ எடுத்ததிற்கெல்லாம் என்னதுன்னு அலறினிங்கன்னா வேலைக்கு ஆகாது.. இந்த ஃபர்ஸ்ட்

கிளாஸ் கோச்சில நீங்களும் நானும் மட்டும்தான் இருக்கிறோம்ங்கிறது தானே உண்மை..? அது உங்களுக்குத் தெரிந்த சங்கதிதானே..? கேசுவலாத்தானே டிராவல் பண்ணிக்கிட்டு இருக்கீங்க..? அதை வாய் விட்டுச் சொன்னா மட்டும் பதட்டம் ஏன் வருது..?"

'அதுதானே..' என்று மனம் கேட்ட போதும் நந்தினியால் இயல்பாகி விட முடியவில்லை..

அது தெரிந்த சங்கதிதான் என்றாலும் இந்தக் கோச்சில் நீயும் நானும் மட்டும்தான் இருக்கிறோம் என்ற தெரிந்த சங்கதியை எதற்காக அவன் வாய் விட்டுச் சொல்ல வேண்டும்..? அதற்கான அவசியம்தான் என்ன..?

"எதிரில் இருக்கிறவன் ஒரு வார்த்தை சொன்னா காதில் விழுகாததைப் போல என்ன சொன்னீங்கன்னு கேட்கிறது என்ன பழக்கம்..? நான் என்ன ஆறு கிலோ மீட்டருக்கு அந்தப் பக்கமிருந்தா சொன்னேன்..? ஒரே கோச்சில எதிர் சீட்டிலதானே உட்கார்ந்திருக்கேன்..? இங்கே நீங்களும் நானும் மட்டும்தானே..? கூட்டமிருந்தாலும் அவங்க சளசளன்னு பேசற பேச்சுச் சப்தத்திலே என் பேச்சு காதில விழலைன்னு சொல்லலாம்.. அதுவுமில்லையே.. இதைத்தான்

சொல்ல வந்தேன்.. அதுக்குள்ளே மேடம் ‘என்னது’ன்னு அலறி வைக்கறீங்க.. உங்களை வேலைக்கு அப்பாயிண்ட் பண்ணியிருக்கேன் பாருங்க. என்னைச் சொல்லனும்.. தேவைதான் எனக்கு..”

தயவு தாட்சண்யம் பார்க்காத அழுத்தமான அவனது வார்த்தைகள் அவள் அவனுக்குத் தேவையில்லை என்ப தைக் குறிப்பால் உணர்த்தின.. அவளது முகம் கன்றி விட்டது.. அடுத்தடுத்து அவன் முன்பு தலை குனிய நேர்வதை உணர்ந்து மனதுக்குள் புழுங்கினாள் அவனிடம் வேலை பார்ப்பது என்பது கடினமான ஒன்றாக இருக்கப் போகிறது என்பது தெள்ளத் தெளிவாக புரிந்து விட்டது.

‘தப்பிக்க மார்க்கமில்லை..’

இமைகளைச் சிமிட்டிக் கண்ணீரை அடக்கிக் கொண்டாள்.. குற்றம் புரிந்து விட்டக் குழந்தையின் முக பாவனையை அவளிடம் கண்டும் அவன் இரக்கம் கொள்ளவில்லை.. கறாராகப் பேசினான்..

“எல்லோரும் உங்களுக்குத் தகுந்ததைப் போலப் பேசனும்னு எதிர்பார்க்காதீங்க.. பிராக்டிகல் லைஃபில ஆத நடக்காது.. மத்தவங்களுக்குத் தகுந்ததைப் போலப் பேசிப்

பழகுங்க.. அதுதான் உங்களுக்கு நல்லது.. அண்டர்ஸ்டாண்ட்..?”

அவனது அதிகாரத்தில் அவளுக்கு அழுகையே வந்து விட்டது... முதல் சந்திப்பிலேயே அவளை அழுக வைப்பவன் போகப் போக எப்படியெல்லாம் வறுத்தெடுக்கப் போகிறானோ என்ற பயம் அடி மனதை ஆட்டிப் பார்த்தது..

“நீங்களா ஒரு முடிவுக்கு வருவது.. மனதில நினைக்கிறதையெல்லாம் யோசிக்காம பேசி விடுவதுன்னு இருக்கிற உங்க நேச்சரை மாத்திக்கனும்.. இல்லைன்னா என்னிடம் வேலை பார்ப்பது கஷ்டம்..”

‘இருந்தா மட்டும் உன்னிடம் வேலை பார்க்கிறது இஷ்டமாகிடுமா..?’

நந்தினி உதட்டைச் சுழித்தாள்.. ரவிச்சந்திரனின் பார்வை சுழித்த அவளது உதடுகளில் மையமிட்டது.. அவன் வில்லன் என்பதை மறந்து நந்தினியின் முகம் சிவந்தது..

“என்ன..?”

அவன் புருவங்களை உயர்த்தினான்.. அந்த வசீகரத்தில் ஈர்க்கப்பட்ட நந்தினி ஓர்நொடி அவனை அபிமானத்துடன் பார்த்து விட்டாள்..

# அத்தியாயம் 18

**அ**வ்வளவுதான்.. உதட்டை மடித்து, கண்கள் மின்ன ஒரு மார்க்கமாக அவளை கூர்மையாக பார்த்து வைத்தானே ஒரு பார்வை..!

நந்தினியின் உடலெங்கும் பிரவாகமாய் ஓர் அலை எழுந்தது.. ஆளை இழுக்கும் அவனது பார்வையில் கிளர்ந்த மனதை அடக்க அவள் வெகுவாகப் பிரயத்தனப் பட்டாள்.. குறுகுறுத்த அவன் பார்வையிலே அவளது இதயம் குறுகுறுத்தது.. இம்சை செய்பவனின் மீது மனதுக்குள் இச்சை எழுவது எப்படியென்ற மர்மம் புரியாமல் அவள் திகைத்தாள்.. மூச்சுத் திணறுவதைப் போல இருந்தது..

அவளது சிவந்த மூக்கின் நுனி முன்னிலும் அதிகமாக சிவப்பதை மோகித்ததைப் போல அவன் பார்த்து வைத்ததில் அவள் சட்டென்று எழுந்து கதவைத் திறந்து வெளியேறி விட்டாள்.. முதல் வகுப்பு பெட்டிகள் வரிசை கட்டியிருக்க.. நட்சத்திர ஹோட்டலின் காரிடார் போல நீண்டிருந்த நடைபாதையில் சென்று கம்பார்ட்மென்டின் கதவைத் திறந்தாள்.. குளிர் காற்று முகத்தில் அடித்தது.. உள்ளே

கேட்காத தடதடத்த ரயிலின் சப்தம் அவளது செவிப்பறையில் மோதுவதைப் போல அதிகமாக ஒலித்தது.. ரயிலின் அதிர்வில் அங்கு நிற்க அவளுக்குப் பயமாக இருந்தது.. இருட்டியிருந்தது.. இருட்டும் மழையும் ஒன்று சேர்ந்தி ருக்கும் அந்த குளிர் இரவில் குடும்பத்தைப் பிரிந்து அகதி போல அவள் ஓடிக் கொண்டிருக்கிறாள் என்ற உண்மையில் ரயிலின் அதிர்வோடு அவளது மனமும் அதிர்ந்தது..

கேராளவில் அவளுக்கென்று யார் இருக்கிறார்கள்..?

இதோ உள்ளே.. நெருஞ்சி முள்ளின் வடிவமாக பேச்சில் முள்ளை இழைத்து அவள் மனதில் ‘சுருக், சுருக்’ எனக் குத்துவதைப் போலப் பேசிக் கொண்டிருக்கிறானே.. அவனா அவளுக்கென்று இரக்கம் காட்டி துணைக்கு இருக்கப் போகிறான்...?

‘இல்லை..’ நெடுமூச்சு அவளிடமிருந்து வெளிப் பட்டது.. மேகநாதனும் கோபப்படுவார்.. அது மகள் மீதான பாசத்தின் வெளிப்பாட்டால் உண்டாகும் கோபம்.. அவர் மட்டும் இந்த ரயிலில் அவளுடன் பயணித்திருந்தால்.. இப்படிக் குளிர் மழையில் உடல் நடுங்க அவளை நிற்க விட்டிருப்பாரா..?

‘அதான் குளிரும், மழையுமா இருக்குதுன்னு தெரியுதில்ல..? பனியில நனைஞ்சா ஜலதோஷம் வந்து காய்ச்சலில் படுத்துக்குவயே.. அந்த அறிவு வேண்டாமா..? உள்ளே போ.. ஸ்வெட்டரைப் போட்டுச் சால்வையைப் போர்த்திக்க.. ஏழு கழுதை வயசாகுது.. இன்னும் தானா எதுவும் தெரியறதில்ல..’ என்று அதட்டியிருக்க மாட்டாரா..?

கவனிப்பாரற்றுப் போன ஏக்கத்தில் அவள் கண்களில் கண்ணீர் வழிந்தது.. குளிரில் நடுங்கியது உடல் கைகளை மடித்துக் கட்டிக் குளிரிலிருந்து தப்பிக்க முயன்றாள்..

‘‘அதுதான் குளிருதுன்னு தெரியுதில்ல..? இங்கே என்ன வேலை..?’’

அதட்டும் குரல் காதில் விழுந்தது.. மேகநாதன்தான் வந்து விட்டாரோ என்று அவசரமாகத் திரும்பிப் பார்த்தாள்.. துளைக்கும் பார்வையோடு ரவிச்சந்திரன் நின்றிருந்தான்..

‘இங்கேயும் வந்துட்டானா...?’

அலுப்பாக இல்லாமல் அவள் மனம் விசித்திரமான வகையில் நிம்மதியடைந்தது.. அது ஏன் என்ற ஆராய்ச்சிக்கே அவள் போகவில்லை.. அது எதற்கு தேவையற்ற ஒரு ஆராய்ச்சி..? தேட ஆள் இல்லையென்றுதானே தனிமையாக

உணர்ந்தாள்..? தேடி அவன் வந்திருக்கிறான்.. அது போதாதா..?

‘இவன் தேடி வந்துட்டாலும்..’

நொடித்தது மனது.. உள்ளே அழைத்துக் கொண்டு போய் நெருஞ்சி முள்ளாய்க் குத்தப் போகிறான் என்று நினைத்துக் கொண்டாள் அவள்.. அவன் அங்கேயே அதைச் செய்து வைத்தான்..

“ஒருவேளை ஓடற டிரெயினில இருந்து குதிச்சு சூசைட் பண்ணிக்கலாம்ன்னு ஐடியா பண்ணியிருக்கீங்களா..?”

அழுத்தமான அவனது கேள்வியில்..

“அடிப்பாவி உத்ரா..! இதையும் இவன் காதில போட்டுட்டயா..?’ என்று குன்றிப் போனாள் நந்தினி..

அவன் சும்மாவே சொல்லிக் காட்டுவான்.. ஏற்கனெவே ‘டூப்ளிகேட்’ என்று அவனைச் சொல்லி விட்டக் கணக்கு ஒன்று அவனுக்கும் இவளுக்கும் இடையே நேர் செய்யப்படமல் இருக்கிறது.. இதில் அடுத்து ஓர் இளைப்பா..?

‘இவனுக்கு இவ்வளவு பத்தாதா..?’

வெட்கத்தில் முகம் கன்ற அவன் முகத்தை நிமிர்ந்து பார்க்க முடியாமல் திணறிப் போனாள் அவள்.. அவளையே ஆழ்ந்து பார்த்தபடி அவன் நின்றிருந்ததில் மனம் படபடத்தது.. ஊசிமுனை வார்த்தைகளுடன் இருப்பவனிடம் மனம் மயங்குவது ஏன் என்ற கேள்விக்கு விடை கிடைக்காமல் அவளுக்குப் பைத்தியம் பிடித்து விடுவதைப் போல இருந்தது.. சாட்டை நுனியால் அவளைச் சுற்றி விடுகிறான்..

அவள் கிறுகிறுத்து அவன் முன் விழுகிறாள் என்றால் நன்றாகவா இருக்கிறது..? அவளது சுய மரியாதை எங்கு போனது..? சொல்லிக் கொள்ளாமல் அது ஓடிவிடும் அளவிற்கா அவள் மனது பலவீனமானதாக இருக்கிறது..?

“வாய்க்கு வந்ததைப் பேச வேணாம்..” அவள் ரோஷத்துடன் சொன்னாள்..

அவன் கேலியாக அவளைப் பார்த்து இதழ்களை வளைத்தான்.. அவனது கேலியில் அவள் வெகுண்டாள்.. சுட்டெரிக்கும் அவள் பார்வையை அவன் லட்சியம் பண்ணவில்லை..

“வாய்க்கு வந்ததைப் பேசுகிறேனா..? எதைப் பேசினேன்..?” அறியாப் பிள்ளை போல கேள்வி வேறு..

# எண்ணியிருந்தது ஈடேற... 1

'கொழுப்பைப் பார்..' நந்தினி யின் கண்களில் நீர் திரண்டது.. "வேடிக்கை பார்க்க வந்தா சூசைட் அது இதுன்னு பேசுவீங்களா..?" படபடத்தாள்..

"ஊஹும்..?" அவன் பார்வை அவளைத் துளைத்தது.. இவன் இப்படிப் பார்க்காமல் இருந்தால் தேவலையென்று மனம் தொய்ந்தாள் நந்தினி.. அதுபோன்ற பார்வையுடன் எவரும் அவளை அணுகியதில்லை.. வழிந்திருக்கிறார்கள்.. காதல் கணை வீசியிருக்கிறார்கள்.. கடிதங்களை நீட்டியிருக்கிறார்கள்.. ஆனால் மனதைத் துளைத்துக் கிறுகிறுக்க வைக்கும் இந்த இரும்புப் பார்வையை எவரும் பிரதிபலித்ததில்லை..

"செஞ்சிக் கோட்டையையும் சுற்றிப் பார்க்கப் போகிறதாத்தான் உங்க ஃபிரண்டுகிட்ட சொன்னீங்களாம்.. நம்பி அவங்களும் கூப்பிட்டுக்கிட்டுப் போனாங்களாம்.. போன இடத்தில மலையில உருளப் பார்த்தீங்களாம்.. அதான் கேட்டு வைச்சுக்கிட்டேன்.. இல்லாத எதையும் பேசிடலையே.."

அழுத்தமான கேள்வியுடன் புருவங்களை உயர்த்தியவனின் மண்டையைப் பிளந்து விட்டால்தான் என்ன என்ற வெறி அவளுக்குள் கிளர்ந்தது.. மயக்கம் கிளரும்

மனதில் வன்மத்தையும், கோபத்தையும் கிளற வைக்கும் வித்தையை கற்று வைத்திருக்கும் கை தேர்ந்த விற்பணன் அவன் என்பதில் அவளுக்கு மூச்சு முட்டியது.. இப்போதே இப்படியென்றால் போகப்போக எப்படியோ என்று மலைப்பாக இருந்தது..

“அது என் சொந்த விஷயம்..!” பல்லைக் கடித்தபடி அறிவுறுத்தினாள் நந்தினி..

“எது உன் சொந்த விஷயம்..?” ஏக வசனத்துக்கு மாறினான் ரவிச்சந்திரன்..

அதைக் கவனிக்காமல் வார்த்தையாடுவதிலேயே கவனமாக இருந்தாள் நந்தினி.. எப்படியாவது அவனைப் பின்னடையச் செய்ய வேண்டும் என்பதே அவளது குறிக்கோளாக இருந்தது.. அவளது குறிக்கோளைத் தகர்ப்பதைப் போல அவன் ஏளனமாக ..

“சூசைட் பண்ணிக்கிறதா..?” என்று கேட்டு வைத்தான்..

‘கடவுளே..!’

மொட்டைச் சுவரில் முட்டிக் கொள்ள வேண்டும் போல இருந்தது நந்தினிக்கு.. பதில் சொல்ல முடியாமல் வழியை

அடைக்கிறானே.. இவனிடம் அவள் வேலை பார்த்து.. ம்ஹூம்.. எதற்கோ பயந்து எதிலோ தலையைக் கொடுத்து விட்டாளே..

“அதுவும்தான்..” அவள் வீம்புடன் சொன்னாள்..

“ஊஹூம்..” தலையாட்டி அவன் மறுத்தான்..

“செஞ்சிக் கோட்டையெல்லாம் சும்மாம்மா.. எங்க கேரளா மொத்தமுமே மலைப் பிரதேசம்தான்.. வயநாட்டு எஸ்டேட்டில வேலை பார்க்கப் போகிற.. மேற்குத் தொடர்ச்சி மலைகளிலேதான் என்னோட சேரளம் எஸ்டேட் இருக்கு.. மலைமேல வேலை பார்க்கப் போகிறேன்னு போயிட்டு.. பள்ளத்தாக்கைப் பாத்தவுடனே தொபுக்கடிர்ன்னு குதிச்சிட்டா என்ன பண்றது..? உன் ஃபிரண்டுக்கும் வினித்துக்கும் யார் பதில் சொல்றது..?”

மிகவும் நன்றாக அவன் கேட்டு வைத்த கேள்விகளில் அவளுக்குள் வந்திருந்த ரோஷம் இமைக்கும் பொழுதிற்குள் இடத்தைக் காலி செய்து விட்டது.. அவனிடம் பாயிண்ட், பாயிண்டாக கேட்க நினைத்திருந்த கேள்விகள் புஸ்வாணமாகி தொண்டைக்குழிக்குள் அஸ்தமனம் ஆகி விட்டன.. அவள் எந்த நேரம் தற்கொலை முயற்சியில் ஈடுபடுவாளோ என்ற

சந்தேகத்தை எழுப்பி வைக்கும் பிரகிருதி என்று அவன் பிட்டுப்பிட்டு வைத்ததில் அவள் வாய்க்குப் பெரிய பூட்டுப் போட்டு பூட்டி வைத்தாள்..

எவரோ ஊமையாகக் கடவது என்று சாபமிட்டு விட்டதைப் போல அவள் ஊமையாகி விட்டதைக் கேலியாகப் பார்த்தான் அவன்.. அவளைப் பார்த்தாலே அவன் விழிகளில் கேலி வந்து விடுவதில் அவளுக்குள் பூகம்பம் உண்டானது.. இப்படித்தான் நானிருப்பேன் என்று அவன் பார்வை அறிவுறுத்தியதில் அவள் சோர்ந்து போனாள்..

“ஸோ.. நீ சூசைட் பண்ணிக்கிற உத்தேசத்தில இருந்து மாறாம இருக்கிறதா இருந்தா அடுத்த ஸ்டேஷனிலேயே இறங்கி உன் ஊரைப் பார்த்துத் திரும்பிப் போயிரு.. வினித்துக்கு நான் ஃபோன் பண்ணித் தகவல் சொல்லிடறேன்..”

கேலியிலிருந்து கண்டிப்புக்கு மாறியிருந்தது அவனது குரல்.. பேசாமல் அடுத்த ஸ்டேஷனில் இறங்கி விடலா மா என்று யோசித்தாள் நந்தினி.. இந்த நெருஞ்சிமுள்க்காரனிடம் மாரடிப்பதற்குப் பதில் ஊர் பேர் தெரியாத இடத்திற்கு ஓடி விடலாம்..

அவளது இதயம் ஓர் நிலையில் இல்லாமல் ஊசலாட ஆரம்பித்தது.. அது புரியாமல் அவன் குத்தூசியாய் அவள் இதயத்தைத் துளைத்தான்..

“நீ சூசைட் பண்ணிக்கிறது உன் சொந்த விஷயமா..? நல்ல கதையாய் இருக்கே.. எங்கிருந்தோ வந்து என்னிடம் வேலை பார்ப்ப.. வந்த இடத்தில நீ மலையுச்சியில இருந்து குதிச்சு வைச்சிட்டாக் கேட்கிறவங்களுக்கு யார் பதில் சொல்கிறது..? ஏன்னு கேள்வி வரும்.. உன் வயதும், இளமையும், அழகும் என்னைக் குற்றவாளியாகக் காண்பித்துக் கொடுத்திரும்.. அதுக்கு நான் தயாரில்ல..”

குத்தலாகச் சொன்னாலும் அவன் சொல்வதிலும் உண்மை இருக்கிறது என்பதில் உதட்டைக் கடித்துக் கொண்டு அவனை ஏறிட்டுப் பார்த்தாள் அவள்.. அவளது விழிகளில் முட்டிக் கொண்டிருந்த கண்ணீரில் அவன் பேச்சை நிறுத்தி விட்டான்..

“உயிரை விடறதா இருந்தா கேரளாவுக்கு ஏன் நான் ஓடி வரனும் சார்..? இந்தத் தண்டவாளம்தான் தயாரா இருக்கே..?” மனமுடைந்த அவளது குமுறலில் மௌனமானான் ரவிச்சந்திரன்.. தன்னிரக்கத்தில் அழுதபடி

கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள் நந்தினி.. மனம் ஆறவில்லை.. புண்ணாக இருந்தது..

“உயிர் வாழ எனக்கு ஆசையில்லைதான்.. உத்ராதான் வாக்குவாதம் பண்ணி என்னை கேரளாவுக்கு அனுப்பி வைச்சா.. பிறந்ததில் இருந்து எங்கேயும் தனியா டிராவல் பண்ணினதில்லை.. ஃபர்ஸ்ட் டைம் யாருமில்லாம தனியா டிராவல் பண்றேன்..”

தனித்து நிற்கும் தவிப்பில் வெளிப்பட்ட அவளது கேவலில்..

“தனிச்சு டிராவல் பண்ணிலியே.. நான் கூட இருக்கிறேனே..” என்று அவன் சொல்லி விட்டான்..

‘சொன்னது நீதானா..?’ வியப்புடன் அவனைப் பார்த்தாள் நந்தினி..

முள் எப்படி மலரானது..?

“உயிரை விடற அளவுக்கு உனக்கென்ன பிரச்னை..?” முதன்முதலாக அதட்டல் இல்லாமல் தணிவான குரலில்

அவன் கேட்டது அவளுக்கு இதமாக இருந்தது..

“பிடிக்காத கல்யாணம்..” இரண்டே வார்த்தைகளில் விளக்கினாள்..

“ஓ..! உனக்குப் பார்த்திருக்கிற மாப்பிள்ளையை உனக்குப் பிடிக்கலையா..?”

“ம்ம்ம்..”

“ஏன்..? அவன் பார்க்க நன்றாக இருக்க மாட்டானா..?”

“யாருக்குத் தெரியும்..?”

விட்டேற்றியான பதிலில் ஆச்சரியப்பட்டான் அவன்..

“யாருக்குத் தெரியும்ன்னா..? உனக்குத் தெரியாதா..?”

“தெரியாது..”

“த்ச்சு.. த்ச்சு..”

சூள் கொட்டித் தன் பரிதாபத்தைத் தெரியப் படுத்தினான்.. யாருக்கு வேண்டும் உன் பரிதாபம் என்று நினைத்துக் கொண்டாலும் இணக்கமாக பேசுபவனிடம் வாயாட வேண்டாம் என்ற எண்ணத்தில் அமைதியாகவே பேசினாள் நந்தினி..

“ஃபைனல் இயர் எக்ஸாம்ஸை எழுதிட்டு ஊருக்கு வந்தா உனக்குக் கல்யாணம்ங்கிறாங்க.. மாப்பிள்ளை மகா முரடனாம்.. பெல்ட்டால் விளாசி எடுத்திருவானாம்.. கரடு முரடான ஆசாமியாம்.. மிலிட்டிரி டிசிப்ளினில இருக்கனும்னு ஆர்டர் போடுவானாம்.. எதிலும் ஒரு நேர்த்தி இருக்கனும்னு மிரட்டுவானாம்..”

“அதில உனக்கு என்ன கஷ்டம்..? நேர்த்தியாய் இருக்கனும்ங்கிறது நல்ல விஷயம்தானே..”

“உங்களுக்கென்ன சார்.. நல்ல விஷயம்தானேன்னு ஈஸியா சொல்லிருவீங்க.. படறது யாரு..? நான்தானே..?”

ஆத்திரத்துடன் அவனை முறைத்தாள் நந்தினி.. உணர்வுகள் துடைக்கப்பட்டதைப் போல கல்லாக இறுகியிருந்த முகத்திலிருந்து அவன் மனதில் என்ன இருக்கிறது என்று கண்டு பிடிக்க அவளால் முடியவில்லை.. அவளது ஆத்திரத்தில் பாதிக்கப்படாத நிதானத்துடன் அதிகாரத் தோரணையாக அவன் நின்றிருந்தான்..

‘நிற்கிறதைப் பாரு.. கம்மாண்டர் மாதிரி..’ அவளது முகம் ஜிவுஜிவுத்தது..

“கோடு போட்டு அந்தக் கோட்டுக்குள்ளேயே நடக்கனும்னா முடியுமா சார்..?”

“ராமாயணத்திலே லட்சுமணன் கிழிச்ச கோட்டைத் தாண்டினதினாலதான் ராவணன் கையில சீதை அகப்பட்டாங்க.. ராமாயணம் படிச்சிருக்கயா..?”

“நீங்களே படிச்சிருக்கப்ப நான் படிச்சிருக்க மாட்டேனா..?”

“அது என்ன.. ‘நீங்களே..’? நான் ராமாயணம் படிக்கக் கூடாதா..?”

“அட..! பேசற பேச்சில எல்லாம் சுளுக்கெடுத்தா வேலைக்கு ஆகாது சார்.. கேரளாவில இருக்கிறவங்க சிலப்பதிகாரம் படிச்சிருக்கலாம்.. சேர நாட்டோட அது சம்பந்தப்பட்டதாச்சே..”

“சோழ நாடான தமிழ் நாட்டோட அது சம்பந்தப் படலையா..? பூம்புகார் என்ன சுவிட்சர்லாந்திலேயே இருக்கு..?”

இறுக்கமான முகத்துடன் இப்படியாப்பட்ட கேள்விகளைச் சிரிக்காமல் கேட்டு வைக்க இவனால்தான் முடியும் என்று

மெச்சிப் போனாள் நந்தினி.. எப்பேர்பட்டத் கேள்வியைக் கேட்டிருக்கிறான்..

# அத்தியாயம் 19

“ஆஹா..! அறிவுத் திருக்கடல் சார் நீங்கள்..”

அவள் சூட்டிய புகழாரத்தை ஏற்றுக் கொள்வதா வேண்டாமா என்று யோசிக்கிறவனைப் போல புருவங்களை நெரித்து வைத்தவன்..

“இப்ப அறிவுத்திருக்கடல்ங்கிற.. இதுக்கு முன்னே அடா, புடான்னு சொன்ன..?” என்று கேட்டு வைத்தான்..

“அது சரி..” என்று தலையை ஆட்டிய நந்தினி..

“வாங்க, போங்கன்னு கூப்பிட்ட பாஸ் திடீர்ன்னு மரியாதையைத் தூக்கிக் கடாசிட்டு ‘வா, போ’ன்னு பேசுவாராம்.. நான் மட்டும் பேச்சு வாக்கில ‘அட..’ ன்னு ஆச்சரியக் குறியோட சொல்லிட்டா அதையே பிடிச்சுக்கிட்டுத் தொங்குவாராம்.. வாட் எ ஜட்ஜ்மெண்ட்..” என்று போலியாக வியந்தாள்..

“தொங்கினேனா..?”

“அட..! இதுவும் பேச்சுவாக்கில வந்ததுதான் சார்..”

“திரும்பவும் ‘அட’ வா..?”

“நீங்க இருக்கீங்களே..”

அவள் தலையை ஆட்டிச் சிரித்தபோது அவன் கண்களில் வந்து சென்ற மின்னலை அவள் கவனிக்கவில்லை.. சம்பாஷணையின் சுவராஸ்யத்தில் கரைந்திருந்தாள்.. ஓர் அழகான அரும்பு இதழ் விரித்து மலர்வதைப் போல இயல்பான சம்பாஷணை அவர்களுக்குள் முகிழ்ந்திருந்தது.. அதையறியாத குழந்தைத்தனத்துடன் அவள் சம்பாஷணையைத் தொடர்ந்ததில் அவன் முகத்தில் சன்னமான மென்மை படர்ந்தது..

“நான் இருக்கப் போய்த்தான் உனக்கு வேலை கொடுக்க முடிந்திருக்கு.. நீயும் பிடிக்காத மேரேஜில இருந்து எஸ்ஸாகி தலைமறைவாய் இருக்க சேரவள நாட்டுக்கு ஓடி வர முடிஞ்சிருக்கு..”

“ஓடி வந்திருக்கேன்னு சொல்லாதீங்க சார்.. ஐ ஹேட் தட் வொர்ட்..” முகம் சுளித்தாள் நந்தினி.. அந்த முகச்சுளிப்பை உன்னிப்பாய் அவதானித்தவன்..

“ஏன்..?” என்று கேட்டான்..

“அதென்ன ஓடி வந்திருக்கேன்னு பட்டுன்னு பேர் கட்டறீங்க.. நான் அப்படிப்பட்ட பெண் கிடையாது..”

படபடத்தாள் நந்தினி.. அவள் முகம் சிவந்து விட்டது..

“இப்ப நீ செய்திருக்கிறதுக்குப் பெயர் என்னவாம்..?” நிதானமாக கேட்டான் அவன்..

“இதுக்குப் பெயர் வேலை பார்க்க வருகிறது.. ஓடி வர்றதில்லை.. என்னை யாரன்னு நினைத்தீங்க..?” ரோஷத்துடன் அவள் கேட்டாள்..

“நந்தினின்னு நினைத்தேன்.. நந்தினிதானே நீ..?”

இலகுவான அவனது கேள்வி சூழ்நிலையின் இறுக்கத்தைத் தளர்த்தி மறுபடியும் மிக அழகானதொரு சம்பாஷணைக்கு அவர்களை இட்டுச் சென்றது.. தடதடக்கும் ரயிலின் ஆட்டத்திலிருந்து தப்பிக்கப் பிடிமானம் தேடியவளாக சாய்ந்து நின்றாள் நந்தினி..

“என்னவோ ‘யார் நீ..?’ன்னு கேட்கிறதைப் போலவே இருக்கு.. ஆனாலும் இது அநியாயம் சார்.. உங்களிடம் வேலை பார்க்க வந்தா ‘வா, போ’ன்னு கூப்பிடுவீங்களா..?”

பச்சை குழந்தை போலக் கேட்டவளின் கன்னத்தைக் கிள்ளிக் காதைத் திருக வேண்டும் போல இருந்தது அவனுக்கு.. அப்படியொரு ஆசை அவனுக்குள் கிளர்வதை

உணராத அறியாமையோடு அவனிடம் ஒட்டுதலாகப் பேசிக் கொண்டிருந்தவளின் சிறுபிள்ளைத் தனத்தில் வசீகரிக்கப் பட்டான் ரவிச்சந்திரன்.. குறுகுறுவென பார்த்து வைத்தான்.. அவனது அந்தப் பார்வை நந்தினியை ஏதோ செய்ய வெட்கத்துடன் உதட்டைக் கடித்தபடி அடிப் பார்வையில் அவனை ஆராய்ந்தாள்.. தூண்டில் போடும் உணர்வில்லாமல் தூண்டில் போட்ட அவளது பார்வைக்கு இரையான ரவிச்சந்திரன்..

‘இதை இவள் அறிவாளா..?’ என்று மனதுக்குள் கேட்டுக் கொண்டான்..

அவளது அந்த அறியாமையே அவளுக்கு அலாதியானதொரு சோபையைத் தந்தது.. சிலுசிலுக்கும் பனிக்காற்று உடலைத் துளைத்ததில் அவள் மீதான ரவிச்சந்திரனின் ஆசையும் அதிகரித்தது..

அவன் ஒன்றும் பெண்களை அறியாதவனல்ல.. அதைச் சொன்னால் நந்தினி எப்படி எடுத்துக் கொள்வாள் என்று யோசித்தான்.. பயந்து விடுவாள்.. ஓடும் ரயிலில் இருந்து குதித்து விட யத்தனித்தாலும் யத்தனிக்கலாம்.. அவனைப்

பெண்பித்தன், பொறுக்கி, காமுகன் என்று பலவாறாக நினைத்தாலும் நினைத்து விடலாம்..

எது எப்படியோ.. அவனைப் பற்றிய அவந்த விவரத்தை அறிந்தால் இதுபோன்ற குழந்தைத்தனமான ஒட்டுதலுடன் அவனிடம் பேசிக் கொண்டிருக்க மாட்டாள் என்பது மட்டும் நிச்சயம்..

ஏனோ தெரியவில்லை.. அவள் விலகி நின்று ஒட்டுதலில்லாமல் பேச நேர்வதை ரவிச்சந்தினால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.. அவன் கோடிஸ்வரன்..! வெறும் கோடிஸ்வரன் மட்டுமல்ல.. கேரள சமஸ்தானத்தின் ராஜ வம்சங்களில் ஒன்றில் பிறந்து வளர்ந்தவன்.. கேரளாவில் மட்டுமின்றி, உலகம் முழுவதும் அறியப்பட்ட இளம் தொழிலதிபன்..!

ராஜ வம்சத்துக்கேயுரிய அனைத்து சாமுத்திரிகா லட்சணங்களும் ரவிச்சந்திரனிடம் குவிந்திருந்தன.. ஆடிறக்கும் மேல் உயரம்.. தேக்குமரம் போன்ற உடல்கட்டு.. செதுக்கி வைத்ததைப் போன்ற முக அமைப்பு... நீண்ட கை, கால்கள் என்று அவன் இளம் பெண்களின் மனதைச் சுண்டியிழுக்கும் கம்பீரமான வனப்போடு இருந்தான்.. அதில்

வசியம் செய்யப்பட்ட பலர் அவனை வசியம் செய்ய முயன்று தோற்றிருக்கிறார்கள்..

எவராலும் வசியம் செய்ய முடியாத அந்த வசியக்காரனின் மனதை வசியம் செய்யும் வசீகரியாக தான் இருப்பதை அறியாமல் அவனிடம் வாயாடிக் கொண்டிருந்தாள் நந்தினி..

அதுதான்.. அவன் யாரென்று அறியாத அவளது குழந்தைத்தனம்தான் அவனை ஈர்த்தது.. எடுத்த எடுப்பில் அவனைப் பார்த்த மறு நொடியிலேயே..

“ஹு ஆர் யு மேன்..?” என்று கேட்டு அவனை அயர வைத்தாள் நந்தினி..

ஏறக்குறைய இந்தியாவின் அனைத்து வியாபார இதழ்களும் அவனது புகைப்படத்தால் தங்கள் இதழ்களின் அட்டைப் படத்தை அலங்கரித்திருக்கின்றன.. வெளிநாடுகன் வர்த்தக இதழ்களும் அவனது பேட்டிகளையும், புகைப்படங்களையும் பிரசுரித்திருக் கின்றன.. கேரளாவில் அவனை அறியாதவர்கள் இல்லை.. அப்படிப்பட்டவனைத்தான் ‘யார் நீ..?’ என்று கேட்டு வைத்தாள் நந்தினி..

அதையும் அதிகார தோரணையில் கேட்டு வைத்தாள்.. கூடவே டி.டி. ஆரிடமும், ரயில்வே போலிஸிடமும் புகார் பண்ணவா என்று மிரட்டினாள்.. அவனது உயரத்தை அறியாத அவளது பேதைத்தனம் அவளை கூர்ந்து பார்க்க வைத்தது.. வாயாடியவளை வம்புக்கு இழுக்க வைத்தது.. அவளைக் குத்திக் காட்டிப் பேசுவதைப் போலப் பேசி அவள் மனதை குடைந்து அவளைப் பற்றிய செய்திகளைக் கிரகிக்க வைத்தது.. அவளை கூர்ந்து பார்க்க வைத்தது.. அவனது பார்வையில் சிலிர்த்துப் போனவளின் பிரத்யேக சிறுபார்வையில் அவனை நனைய வைத்தது..

எத்தனையோ பெண்களுடன் நெருக்கமாக இருந்தபோது கிடைக்காத ஓர் பரவசம் அவளது பிரத்யேக மான சிறுபார்வையில் கிடைத்தது.. குளிர்காற்று உடலை சில்லிட வைத்ததில் குளிருக்கு இதமாக அவளை அணைத்துக் கொண்டால் என்ன என்று சலனம் கொண்டான் ரவிச்சந்திரன்..

ஓடிக்கொண்டிருந்த ரயிலின் திறந்திருந்த வாசல் வழியே வந்த குளிர்காற்று மேனியை சிலிர்க்க வைத்ததில் துப்பட்டாவை இழுத்துப் போர்த்திக் கொண்டாள் நந்தினி..

ரவிச்சந்திரனின் பார்வை அவள் உணராமல் அவளை மேய்ந்தது..

கள்ளமற்ற அவளது முகத்தின் அறியாமையில் அவன் மனம் அசைந்தது.. அவனது பார்வையின் மாறுபாட்டை அறியாதவளாய் அவள் கைகளை மார்பின் குறுக்கே கட்டிக் கொண்டு வெள்ளையாய் சிரித்தவள்..

“குளிருது..” என்றாள்..

சடசடவெனப் பெய்த மழையின் சாரல் அவள் மீது விழுந்து தெறித்ததை இமைகளை மூடி சிலிர்த்து அனுபவித்தாள்.. அவள்மீது விழும் மழைத்துளிகளில் அவள் சிலிர்த்தது அவளோடு சேர்ந்து நனைந்திட வேண்டுமென்ற ஏக்கத்தை அவன் மனதில் விதைத்தது..

“குளிறிலும் மழையிலும் நனைந்துக்கிட்டு இங்கே நிற்கனுமா என்ன..? சீட்டுக்குப் போயிரலாமே..” என்றான்..

“இதுகூட நல்லாயிருக்கில்ல..” நகர மனமில்லாமல் அவள் கேட்டதில் அவன் இதழ்களில் சிறு முறுவல் வந்தது..

‘இவள் குழந்தையேதான்..’

மெல்லிய பிரியம் அவன் மனதில் சூழ்ந்தது.. அவளையே உற்றுப் பார்த்தான்.. தீர்க்கமான அவனது பார்வையின் வேகம் தாளாமல் வெட்கிச் சிவந்தவளைப் பார்க்க அவனுக்குப் பிடித்திருந்தது..

'இவளை வாங்க, போங்கன்னு சொல்லனுமாம்..' அவனது சிரிப்பு விரிந்தது..

"ஏன் சிரிக்கறீங்க..?" சிறு குழந்தையாக அவள் சிணுங்கினாள்.

"நேற்று பைனல் எக்ஸாம் முடிச்சுட்டு ரிசல்ட் வர்றதுக்குள்ள வேலை பார்க்க வந்து நின்னிருக்க.. உன்னை வாங்க, போங்கன்னு கூப்பிட்டா என் வயசுக்கு என்ன மரியாதை..?"

"அடேங்கப்பா.. தடியூண்டற கிழவர்தான் நீங்க.. போவீங்களா.." உதட்டைச் சுழித்து அழகு காட்டினாள் நந்தினி..

அவளது சுழித்த உதடுகளில் தடுக்கி விழுந்தான் ரவிச்சந்திரன்.. அவளின் ஒவ்வொரு அசைவும் ஆயிரம் அழகுகளை அள்ளித் தெளித்தது.. புதுப்புதுப் பரிணாமங்களில்

வெளிப்பட்ட அவளது அழகில் ரவிச்சந்திரனுக்குள் ஓர்விதமான கிளர்ச்சி பரவியது..

“எங்கே போகச் சொல்ற..?” உல்லாசமாக சிரித்தான்..

இது போலச் சிரிப்பது தான்தானா என்று அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது.. அவ்வளவு எளிதில் அவன் சிரித்துப் பேசிவிட மாட்டான்.. அதுவும் பெண்களிடம் சிரிக்கவே மாட்டான்.. பேச நேர்ந்தாலும் ஒரிரு வார்த்தைகளில் முடித்து விடுவான்.. அநாவசியமான பேச்சுக்களைத் தவிர்த்து விடுவான்..

அவனது இந்த குணாதிசியம் பெண்களை அவனிடமிருந்து தள்ளி நிறுத்தியிருந்தது.. பணத்துக்காக அவனிடம் நெருக்கும் கொண்ட பெண்களிடம் நெருக்கமாக அவன் இருப்பான்.. நெருக்கத்தைக் கடந்த பின்பு அவர்களுக்குத் தேவையான பணத்தைக் கொடுத்து வெட்டி விடுவான்.. ஒட்டிப் பழக அனுமதிக்க மாட்டான்.. அடுத்து அவர்களை முகம் பார்க்க நேர்ந்தாலும் அறிமுகமற்றப் பார்வையுடன் கடந்து சென்று விடுவான்.. துச்சமாகப் பார்க்கும் அவனது பார்ை வயின் உதாசீனம் அவனிடம்

உரிமை கொண்டாட விழையும் பெண்களைத் தள்ளி நிறுத்தி விடும்..

அந்த ரவிச்சந்திரன்தான் அவனிடம் அடைக்கலமாக வேலை தேடி வந்திருக்கும் பெண்ணிடம் வெகு சகஜமாக கலந்துரையாடிக் கொண்டிருக்கிறான்..

பணத்துக்காக அவனுடன் நெருக்கமாக இருந்த பெண்களுடன் நந்தினியை ஒப்பிட்டுப் பார்ப்பது தவறு என்று அவனது மனச்சாட்சி அவனைச் சாடியதில் மற்ற எண்ணங்களைத் தவிர்த்து விட்டு எதிரில் நிற்பவளை மட்டும் மனதில் நிறுத்தினான் அவன்..

“போகிறதுக்கு உங்களுக்கு இடமா இல்லை..? நீங்கள்தான் உலகம் சுற்றும் வாலிபராமே.. உத்ரா வாயைத் திறந்தாலே உங்க புராணம்தான்.. அள்ளி வீசினாளே..”

“அதாவது இல்லாததைச் சொன்னாங்கன்னு சொல்ற..”

“அநியாயம் சார் இது.. என்னை மட்டும் ‘வா, போ..’ன்னு சொல்வீங்க.. அவளை மட்டும் ‘அவங்க, இவங்க’ன்னு சொல்வீங்களா..?”

“உன்னைப் பார்த்தா இன்னைக்குத்தான் எல்.கே.ஜி யில சேர்ந்த பாப்பா மாதிரி தெரியுது.. அவங்க அப்படி இல்லையே..”

“நீங்க பார்த்தீங்களா..?”

“பார்க்கலைதான்.. ஜஸ்ட் ஒரு கெஸ்ஸிங்தான்.. பட்.. உன்னைப் போல மேரேஜுக்குப் பயந்துக்கிட்டு ஓடி ஒளியாம, அசாத்திய மனதைரியத்தோட மேரேஜை ஃபேஸ் பண்றாங்களே.. இதில இருந்தே உன்னை விட அவங்க மெச்சூர்ன்னு தெரியுதே..”

“சான்ஸ் கிடைச்சா போதும்.. ஓட்ட ஆரம்பிச்சிருவீங்களே..”

“ஹா.. ஹா..”

“எல்லாம் சரிதான்.. எதுக்கெடுத்தாலும் லட்சுமணன் சீதைக்குக் கோட்டைப் போட்டான்.. ராமனுக்கு ரூட்டைப் போட்டான்னு ராமாயணம் பேசி பெண்ணடிமைத்தனத்தை என்கரேஜ் பண்றீங்க பாருங்க.. அங்கேதான் நான்சின்கா இடிக்குது..”

“இதிகாசத்தில் உள்ளதைத்தானே சொன்னேன்..?”

“லட்சுமணன் கிழிச்ச கோட்டை சீதை தாண்டியதாலே ஒண்ணும் அவளுக்குத்து துன்பம் வரலை.. இந்த லட்சுமணன் சூர்ப்பனகையின் மூக்கை அறுக்காமல் தேமேன்னு இருந்திருந்தா இந்த வில்லங்கமே வந்திருக்காது..”

“பாருடா..”

அவளது லாஜிக்கை ரசித்துச் சிரித்தான் ரவிச்சந்திரன்.. எல்லாவற்றுக்கும் ஒரு புதிய கோணத்தை வைத்திருக்கும் அந்த யௌவன சுந்தரியிடம் உரையாடுவது அவனுக்குப் பேரின்பமாக இருந்தது.. வெறும் உரையாடலில் இதுபோன்ற சுகானுபவம் கிடைக்கக்கூடும் என்பதை அன்றுதான் அவன் உணர்ந்தான்..

“என்னத்தைப் பார்க்கச் சொல்கறீங்க..?”

அவனைப் போலவே வசீகரமாக அவள் புருவங்களை உயர்த்தி இறக்கியதில் மயங்கிப் போனான்..

‘என்னைப் பாரேன்..’ என்று சொல்ல அவன் மனம் ஆசை கொண்டது.. அதைச் சொல்லாமல்..

“ராமாயணத்தைப் பார்க்கச் சொன்னேன்..” என்று சொல்லி வைத்தான்..

“பார்த்தது வரைக்கும் போதும் சார்.. போரடிக்குது..” என்றாள் நந்தினி..

“இப்படி வாயடிக்கிறவளுக்கும் மிலிட்டிரி டிஸிப்ளினுக்கும் சரிப்பட்டு வராதுதான்..” ஒப்புக் கொண்டான் ரவிச்சந்திரன்..

“இப்பப் புரியுதா..? ஏன் நான் அந்த மேரேஜில இருந்து எஸ்கேப் ஆகி வந்திருக்கேன்னு..?”

“புரியுது, புரியுது.. ஈஸியா லைஃப் இருக்கனும்னு நீ நினைக்கிற.. நேர்த்தியெல்லாம் உனக்குப் பிடிக்காதுதான்..”

“நேர்த்திங்கிறது அழகான விஷயம் சார்.. கட்டுப்பாடோட அதை ஜாயின் அடிக்கக் கூடாது..”

விளக்கம் சொல்ல ஆரம்பித்தாள் நந்தினி.. அவளது பேச்சைக் கவனிக்காமல் அசையும் அவளது உதடுகளையே ஆழ்ந்து பார்க்க ஆரம்பித்தான் ரவிச்சந்திரனாகப்பட்ட அந்த உள்ளம் கவர் கள்வன்..

# அத்தியாயம் 20

“நீட்னெஸ்ஸில்தான் நேர்த்தி இருக்கனும்ங்கிறது இல்லை சார்.. ஏனோ தானோன்னு இயல்பா இருக்கிறதிலேயும் நேர்த்தியிருக்கும்.. அது நிறையப் பேருக்குத் தெரியறதில்ல..”

ஆலாபனை போல் ஆரம்பித்தாள் நந்தினி.. அப்படியா என்பதைப் போல கவர்ச்சிகரமாக புருவங்களை உயர்த்திச் சிரித்த ரவிச்சந்திரன்..

“அந்த நிறையப்பேரில நானும் ஒருத்தன்ங்கிற..?” என்று கிண்டலாகக் கேட்டான்..

“பின்னே..? இல்லையா..?” தைரியமாக அவள் எதிர் கேள்வி கேட்டதில் அவன் கண்களில் மின்னல் ஒருகோடி வந்து நின்று சென்றது..

“எனக்கு ஒரு சந்தேகம்..” என்றான் அவன்..

“உங்களுக்கெல்லாம் சந்தேகம் வருமா சார்..?” போலியாக ஆச்சரியப்பட்டாள் நந்தினி..

“உன்னைப் பார்க்கிற வரைக்கும் அப்படித்தான் இருந்தேன்..”

“பார்த்த பின்னால எல்லாமே தலைகீழா மாறிப் போயிருச்சுங்கறிங்க..”

“கெட்டிக்காரிதான்.. கரெக்டாச் சொல்லிட்டயே..”

“தேங்க்ஸ் ஃபார் யுவர் காம்ளிமெண்ட்..”

“இது வேறயா..?”

“இருக்கக் கூடாதா..?”

“இருக்கலாம்.. இருக்கலாம்..”

“தேங்க்ஸ் எகெய்ன்..”

“இது எதுக்கு..?”

“ஆகப்பெரும் ஜால்ராக்களை மட்டுமே அப்ரிஷியேட் பண்ணற முதலாளி வர்க்கத்தில வாயடிக்கிறதை அக்செப்ட் பண்ணிக்கறீங்களே அதுக்கு..”

நந்தினியின் கண்கள் சிரித்தன.. சிரிக்கும் விழிகளுடன் கூடிய அந்தச் சிங்காரியின் துடுக்குத்தனம் தன்னைக் காந்தமெனக் கவர்ந்திழுப்பதை உணர்ந்து திகைத்தான்

ரவிச்சந்திரன்.. எவராலும் அசைக்க முடியாத இரும்புக் கோட்டையின் மதில் சுவரைத் தான் அசைத்துக் கொண்டிருப்பதை அறியாதவளாக சிரித்துக் கொண்டிருந்தாள் நந்தினி..

“நீ தொழிலாளி வர்க்கமா..?”

“இதுக்கு உங்க ஸ்டைலிலேயேதான் ஆன்சர் பண்ணியாகனும்..”

“எப்படி..?”

“இப்படி..” உத்ராவிடம் கண்சிமிட்டுவதைப் போக் கண்களைச் சிமிட்டியவள்..

“உங்களைப் பார்க்கிற வரைக்கும் முதலாளி வர்க்கமாகத்தான் இருந்தேன்..” என்று சொல்லி விட்டு..

“எப்புடி..?” என்று மறுபடியும் குறும்பாக கண்களைச் சிமிட்டி விட்டுச் சிரித்தாள்..

ரவிச்சந்திரனின் விழிகள் பளபளத்தன.. இது போன்ற கண்சிமிட்டல்களை அவன்தான் செய்வான்.. அதுவும் நண்பரிடமும், குடும்பத்தாரிடமும் மட்டும்தான்.. மற்றவர்களுக்கு அவன் சக்கரவர்த்தி.. ஆளுமை நிறைந்த

மாமனிதன்.. அதிகம் பேசாதவன்.. உணர்வுகள் துடைக்கப்பட்ட கடும்பாறை முகம் கொண்டவன்.. மகா ரவிச்சந்திரன்..!

அவனிடம் குறும்பும், துடுக்குத்தனமுமாக கண்சிமிட்டிச் சிரித்துப் பேசுகிறாள் ஒருத்தி.. சௌந்த ரியம் தவழும் அவளது தோற்றத்தைக் குறித்த உணர்வு ஏதுமின்றி, பால்மணம் மாறாத பச்சிளங்குழந்தை போலக் கதை பேசுகிறாள்.. பரிச்சயமில்லாத ஒருவனிடம் கதைபேசும் நினைவின்றி வெகு சுவாதீனமாக கலந்துரையாடுகிறாள்.. கூடுதலாக கண்சிமிட்ட வேறு செய்கிறாள்..

இந்த ரயில் பயணத்தை மறக்கவே முடியாது என்று நினைத்துக் கொண்டான் ரவிச்சந்திரன்.. மனமெங்கும் மழைச்சாரலாய் சந்தோஷம் வியாபித்திருந்தது.. வெகு நாள்களுக்குப் பின் கிட்டியிருக்கும் சந்தோஷம்.. எஸ்டேட், ஹோட்டல், வெளிநாட்டு ஏற்றுமதி, இறக்குமதியென்று சதாசர்வகாலமும் பணத்தின் பின்னால் ஓடிக் கொண்டிருந்தவன் முதன் முதலாக வர்த்தகத்தை மறந்து இளைப்பாறினான்.. மனதைக் குடையும் வேலையை மறந்து நிலாமுற்றத்தின் வேய்ங்குழல் இசையில் மூழ்கியிருக்கும் நினைவோடு அன்றில் பறவையாய் எதிர் நின்றிருப்பவளின்

அழகை அள்ளிப் பருகுவதைப் போல பார்க்க ஆரம்பித்தான்.. அவன் மனதில் எவரோ 'தாம், தரிகிடதோம்..' என மத்தளம் வாசித்தார்கள்.. அவள் யாழ் மீட்டி மத்தள இசையை வென்றாள்.. நளினம், லாவகமற்ற இயல்பான அவளது அசைவுகளில் அவன் மனம் லயித்தது.. அவர்களைச் சுற்றி ஓர் பரவசம் அடர்ந்திருந்தது..

"சூப்பர்.." என்றான் ரவிச்சந்திரன்..

துளைக்கும் அவன் பார்வையில் கூச்சத்துடன் துப்பட்டாவை சரி செய்து கொண்டாள் நந்தினி.. அவன் அதை விகல்பமாக எடுத்துக் கொள்வானோ என்று தடுமாறினாள்.. தயக்கத்துடன் அவனைப் பார்த்தபோது அவன் சிநேகிதமாக சிரித்தான்.. அவளது கூச்சமும், தடுமாற்றமும் பறந்து விட்டன..

ஆனாலும் அவன் சூப்பர் என்று சொன்னது அவளது வாயாடலை மட்டும்தானா என்ற சம்சயம் அவள் மனதை அரிக்கத்தான் செய்தது.. அதை ஓரமாக ஒதுக்கி வைத்தாள் நந்தினி.. இருந்தாலும் ஒரு இரும்பு மனிதன் அவளிடம் இளக்கமாகப் பேசுகிறான்.. ஆதாரமற்ற சந்தேகங்களை வைத்து அதைக் கெடுத்துக் கொள்வதா..?

“ஆக்சுவலா சார், இது இப்படித்தான் இருக்கனும்னு செயற்கையா நாம கற்பனை பண்ணி வடிவமைக்கிற தோட்டத்துப் பூச்செடிகளைவிட தானா வளர்ந்து மலர்ந்திருக்கும் காட்டுப் பூச்செடிகள் செம அழகாயிருக்கும் தெரியுமா..?” கண்களை மலர்த்திச் சொன்னாள் நந்தினி..

‘இவள் சும்மா சொன்னாலே ஆமாம்ன்னு ஒப்புக்குவேன்.. இப்படிக் கண்ணை விரித்துச் சொன்னா மறுபேச்சுப் பேச முடியுமா..?’ தனக்குள் கேட்டுக் கொண்டான் ரவிச்சந்திரன்..

தேவதையைப் போல மாசு மறுவற்ற தெளிந்த பால்நிலா முகத்துடன் அவள் இருந்தாள்.. ஏதோ ஒரு தேஜஸ் அவள் முகத்தில் இருப்பதைப் போல அவனுக்குத் தோன்றியது... அது என்னவென்று யோசித்துப் பார்த்தபோது அவளது கள்ளமின்மை என்று புலப்பட்டது..

அவனது கவனத்தைக் கவர முயலும் பெண்கள் செயற்கையாக விழிகளை விரிப்பார்கள்.. அவன் எதைச் சொன்னாலும் அதில் ஆழ்ந்து கருத்திருப்பதைப் போல முகத்தை வைத்துக் கொண்டு உன்னிப்பாகக் கேட்பார்கள் .. அதுபற்றி அவர்களுக்கும் தெரியும் என்பதை பறைசாற்றும்

விதமாக விவாதிப்பார்கள்.. அப்படி விவாதிக்கும் போது இயல்பாக இருக்காமல் அவர்களது அழகு பளிச்சிடும்படி பார்த்துக் கொள்வார்கள்.. தலையைச் சாய்ப்பது, தோள்களை படு ஸ்டைலாகக் குலுக்கி கைகளை விரிப்பது, உதட்டைக் குவித்து ‘ஓ’ போட்டு ஆச்சரியத்தை வெளிப்படுத்துவது போன்ற இன்னபிற பாவனைகளுடன் மாட்டாடுவார்கள்..

நந்தினி அப்படியில்லை.. வெகு இயல்பாக இருந்தாள்.. சுவாதீனமாகப் பேசினாள்.. சிரித்தாள்.. இவளும் கண்களை மலர்த்தினால்தான்.. நொடிக்கொரு முறை தலையைச் சாய்த்து அவனைப் பார்த்தாள்தான்.. உதட்டைக் குவித்து ‘ஓ’ வென்று சொன்னாள்தான்..

அவை அனைத்தும் இயற்கையாக இருந்தன.. எந்தவொரு நொடியிலும் அவன் கவனத்தைத் கவர அவள் முயலவேயில்லை.. அவனைப் பார்த்த நொடியில் சண்டையிட்டாள்.. அவன்தான் உண்மையான ரவிச்சந்திரன், அவளுக்கு வேலை கொடத்திருக்கும் முதலாளி என்று தெரிந்தவுடன் சங்கடப்பட்டாள்.. அவன் முன்னால் உட்கார்ந்திருக்க முடியாமல் வாசலுக்கு வந்தாள்.. அங்கும் தொடர்ந்து வந்து சீண்டியவனிடம் ரோஷப்பட்டாள்.. இவை

அனைத்தையும் பேச்சு சுவராஸ்யத்தில் மறந்து போனவளாக குழந்தைத் தனத்துடன் அரட்டையடிக்கிறாள்..

அவளது அந்தக் குழந்தைத்தனம்தான் ரவிச்சந்திரனை வசீககரித்தது..

“கேரளாக்காரன்கிட்டயே காட்டுப் பூச்செடிகளோட அழகை வர்ணிக்கிறயா..? ம்ம்ம்..?”

“ஆஹா.. அதை மறந்துட்டேன் பாருங்க.. கேரளாக்காரர்ன்னு சொல்றீங்க.. தமிழில வெளுத்துக் கட்டறீங்க..”

“கேரளாவில பிறந்து வளர்ந்தா தமிழ் பேசக் கூடாதா..?”

“பேசலாம் சாரே.. ஞானும் மலையாளம் பறயலாமல்லலோ..?”

அவள் களுக்கென்று சிரித்தாள்.. சிரிக்கும் போது அவளது கண்களும் சேர்ந்து சிரிக்கும் அழகை ரசித்தபடி..

“அறிஞ்சாப் பறயலாம்..” என்றான் அவன்..

“சார் எனக்கு மலையாளம் சொல்லித் தர மாட்டாரோ..? எந்தா சாரே..” அவள் மறுபடியும் சிரித்தாள்.

“அதுக்குத்தானே உனக்குச் சம்பளம் தரப் போறேன்..” அவன் சிரிக்காமல் சொன்னான்..

“ஹைய்யோ.. அதை மறந்துட்டேனே..” அவள் பயந்ததைப் போல இமை கொட்டினாள்..

“நீ ரொம்பப் பயந்தவதான்.. நம்பிட்டேன்..” என்றான் அவன்..

அவள் தோள்களைக் குலுக்கிய விதம் அழகாக இருந்தது.. கல்லூரி மாணவிக்குரிய சகலவிதமான சாமுத்ரிகா லட்சணங்களுடன் இருந்தாள்.. கன்றுக் குட்டியைப் போலத் துள்ளித் திரியும் சுதந்திர மனப்பான்மை.. அனைத்தையும் ரசித்துச் சிரிக்கும் குழந்தைத்தனம் என்று அவளது அனைத்து செயல் பாட்டிலும் அவனை ஈர்த்தாள்..

“ஸோ.. உனக்கு கம்மாண்ட் பண்ணினாப் பிடிக்காது..” சிந்தனையுடன் அவன் கேட்டான்..

“ஒருவகையில் அப்படித்தான் சார்..” மறுக்காமல் அவள் ஒப்புக் கொண்டதில் ஒரு நேர்மை பளிச்சிட்டது..

“எனக்குக் கம்மாண்ட் பண்ணித்தான் பழக்கம்..” அவளையே பார்த்தபடி சொன்னான்..

சடுதியில் உற்சாகம் தொலைத்தவளாக அவள் மலங்க மலங்க விழித்தாள்.. ஒரு கண்ணாடிப் பாத்திரம் போல இவளைக் கையாள வேண்டும் போல என்று நினைத்துக் கொண்டான் ரவிச்சந்திரன்..

ஒரு சிறு அதட்டலைக்கூடத் தாங்க முடியாதவள் எந்த தைரியத்தில் மாநிலம் விட்டு மாநிலம் பயணம் செய்ய துணிந்திருக்கிறாள்..?

'அந்த அளவுக்கு இவளுக்காக நிச்சயிக்கப் பட்டிருக்கும் மாப்பிள்ளையை வெறுக்கிறாள்.. பிடிக்காத மேரேஜிலிருந்து தப்பிக்க தலைமறைவாகும் அளவுக்கு அவன்மேல் வெறுப்பிருக்கிறது..'

அது வெறுப்பா..? பயமா..?

“இரண்டும்தான்..” என்றாள் நந்தினி... அவள் விழிகளில் மிதந்த உற்சாகமும், சந்தோஷமும் காணாமல் போயிருந்தன.. ரயிலின் வெளிப்புறத்தில் தென்பட்ட மழையிருட்டை வெறித்தபடி கம்மிய குரலில் பேசினாள்..

“அவன் எவன்னே எனக்குத் தெரியாது சார்.. என் போட்டோவைப் பார்த்தானாம்.. பிடிச்சிருக்குன்னு சொல்லிட்டானாம்.. பதிலுக்கு அவன் போட்டோவைத்

தரனும்ங்கிற அறிவுகூட அவனுக்கு இல்லை பாருங்க..” முறையிட்டாள்..

“இப்ப அவன் போட்டோவை உனக்குத் தரலைங்கிறதுதான் உன் பிரச்னையா..? அதுக்காகவா ஸ்டேட் விட்டு ஸ்டேட் ஓடி வருகிற..?”

“ஐ அப்ஜெக்ட் யுவர் ஹானர்..”

“எதுக்கு இந்த அப்ஜெக்ஷன்..?”

“நான் ஒண்ணும் ஓடி வரலை.. டிரெயினில் டிராவல் பண்றேன்..”

“ஓகே.. டிரெயினில டிராவல் பண்ற.. பட், வாட் ஃபார்..? போட்டோவைப் பார்க்க முடியலைங்கிறது சின்ன ரீசன்..”

“என்ன சார் நீங்களும் உத்ராவைப் போலவே பேசறீங்க.. போட்டோவைப் பார்க்க முடியாதது சின்ன ரீசனா..? என் வாழ்க்கையை அவன் கூடத்தான் நான் வாழ்ந்தாகனும் சார்.. அப்படி என் வாழ்க்கையைச் சொந்தமாக்கிக்கப் போகிறவனோட மூஞ்சி எப்படி யிருக்கும்ன்னு தெரியாமலே அவன் கட்டற தாம்புக் கயிறுக்கு நான் கழுத்தை நீட்டனுமா..?”

“தாம்புக் கயிறா..? மேரேஜில் தாலிக் கயிறைத்தானே கழுத்தில் கட்டுவாங்க..?”

“எனக்கு அது தாம்புக் கயிறுதான் சார்..”

அவள் மூக்கை உறிஞ்சியதைப் பார்க்ப் பார்க்க அவனுக்குள் பிரவாகமாய் பிரியம் பொங்கி எழுந்தது.. அறிமுகமற்றவன் என்ற தயக்கமின்றி சில நிமிடங்களில் சிநேகமாகி அவளது மனக்குமுறலை அவனுடன் பகிர் ந்து கொள்ளும் அவளது நம்பிக்கையில் அவன் மனம் கரைந்தான்..

“நீ சொல்கிறதைப் பார்த்தா அவர் போட்டோவைக் கொடுத்திருக்கனும்னுதான் தோணுது..”

“அது மட்டும் போதுமா சார்..?”

“அதுவும் போதாதா..? வேற என்ன செய்திருக்கனும்..?”

“நேரில் வந்திருக்கனும்.. போட்டோவைப் பார்த்து மட்டும் முடிவு சொல்லி விடமுடியுமா என்ன..? ஆள் எப்படின்னு நேரில் பார்த்தாத்தானே தெரியும்..?”

“அவர் பார்க்கலைன்னு சொன்னியே.. உன் போட்டோவைப் பார்த்தே ‘ஓகே’ சொல்லிட்டாருன்னு சொன்னியே..”

“அவன் அப்படியிருந்தா நானும் அப்படியிருக்கனுமா..?”

“இருக்க முடியாதுதான்..”

“உங்களுக்குத் தெரியற இந்த நியாயம் என் அப்பாவுக்குத் தெரியலையே சார்.. போட்டோ அவசியமான்னு கத்தினார் சார்.. அம்மா அதுக்கும் மேலே கிடைக்காத சம்பந்தம் கிடைச்சிருக்கு.. ராணி போல வாழப் போகிறவ போட்டோ அது இதுன்னு பினாத்தலாமான்னு தலையிலே குட்டு வைச்சாங்க சார்..”

தன்னிச்சையாய் தலையைத் தடவிக் கொண்டாள் நந்தினி.. அவள் குட்டு வாங்குவதைப் போல மனதுக்குள் கற்பனை பண்ணிப் பார்த்த ரவிச்சந்திரனுக்கு அவள் தலையில் செல்லமாய் ஒரு குட்டு வைக்க வேண்டும் போல இருந்தது.. கூடுதலாக ஒரு காதைத் திருகுதல்..

அவன் மனதின் ஆசைகளை அவளிடம் சொன்னால் என்ன ஆகும் என்று நினைத்துப் பார்த்த ரவிச்சந்திரனுக்கு

வேடிக்கையாக இருந்தது.. இடுப்பில் ஒரு கையை வைத்து, மறுகையை நீட்டிச் சண்டைக்கு வந்து விடுவாள்..

தேவதை சிரித்தாலும் அழகு..! சினந்தாலும் அழகு..!

# அத்தியாயம் 21

“அப்படி அவனென்ன பெரிய ராஜாதி ராஜனா..? அவன் ராஜாவா இருந்தாத்தானே நான் ராணியாக முடியும்..?”

“நீ கேட்கிறதும் சரிதான்..”

“இதைத்தான் சார் கேட்டேன்.. உடனே அம்மா தாம் தூம்ன்னு குதிக்க ஆரம்பிச்சுட்டாங்க..”

எண்ணையில் போட்ட அப்பம் போலதான் குதித்தாள் வெண்ணிலா.. ஊரில் உள்ள பெண்களெல்லாம் நந்தினியைப் போலதான் இருக்கிறார்களா என்று கேள்வி கேட்டாள்... பதிலுக்கு ஊரில் உள்ள அப்பாம்மாக்கள் இப்படியா எவனோ ஒரு ஊர், பேர் தெரியாதவனுக்குத் தங்களின் மகளைத் திருமணம் செய்து கொடுக்கிறார்கள்..? என்று நந்தினி கேள்வி கேட்டாள்.. இப்படி ஒரு மக்குப் பெண் வெண்ணிலாவின் வயிற்றில் பிறந்து தொலைத்து விட்டாளே என்று வெண்ணிலா ஏகத்துக்கும் கவலைப்பட்டாள்.. ஆமாம் என்று அதை வழிமொழிந்து நந்தினியின் வயிற்றெரிச்சலை மேகநாதன் கொட்டிக் கொண்டார்.. அறிவு என்ற ஒன்று நந்தினியிடமிருந்திருந்தால் அவள் இப்படியெல்லாம் பினாத்த

மாட்டாள் என்று அவர்கள் இருவரும் ஏகமனதாக ஒரு முடிவுக்கு வந்தார்கள்.. அதில் நூற்றுக்கு நூறு சதவிகிதம் கலப்படமில்லாத அக்மார்க் உண்மை பொதிந்திருப்பதாக நந்தகுமார் சந்தோசித்தான்.. நந்தினியின் போராட்டத்தை எவருமே லட்சியம் செய்யவில்லை..

“இப்பச் சொல்லுங்க சார்.. இப்படியெல்லாம் இம்சை பண்ணினா நான் வீட்டை விட்டுக் கிளம்பாம என்ன செய்வேன்..?”

ரவிச்சந்திரன் பதில் சொல்லவில்லை.. அவளது ஆதங்கத்திலும் ஒரு நியாயம் இருப்பதாக அவன் மனதுக்குப் பட்டது.. பெரும்பாலான இந்தியத் திருமணங்களில் பெண்ணின் விருப்பம் கேட்கப் படுவதேயில்லை.. அதற்கு மதிப்பும் இல்லை.. அடக்கி வைக்கப்படும் எரிதணல் ஒரு கட்டத்தில் எரிமலையாக வெடித்துச் சிதறிவிடும் என்ற நிதரிசனத்தை எவருமே நினைத்துப் பார்ப்பதில்லை..

“என்ன சார், பேசாம இருக்கீங்க..?”

“என்னத்தைச் சொல்லச் சொல்ற..? நீ சொன்னதுக்கு ஆமாம்ன்னு நான் பதில் சொன்னா, நீ செய்கிறதை என்கரேஜ் பண்றதா ஆயிடும்.. ஆயிரம்தான் உன் பக்கம் நியாயம்

இருந்தாலும் நீ இப்படி ஃபேமிலிக்குத் தெரியாம கேரளாவுக்குக் கிளம்பினது சரியில்லைன்னு தோணுது..”

“ஆம்பளையில்ல.. இப்படித்தான் நியாயம் பேசுவீங்க.. முன்னே பின்னே தெரியாத ஒருத்திக்கு மூஞ்சியைப் பார்க்காம தாலியைக் கட்டனும்னு உங்ககிட்டச் சொல்லியிருந்தா தெரிஞ்சிருக்கும்.. என் வேதனை எப்படியாப்பட்டதுன்னு.. நீங்களா இருந்தா இப்படியாப்பட்ட மேரேஜுக்கு சம்மதம் சொல்லியிருப்பீங்களா..?” நெற்றியடியாய் கேட்டாள் நந்தினி..

“மாட்டேன்தான்..” தலையை ஆட்டினான் ரவிச்சந்திரன்..

“உங்களுக்கு வந்தா மட்டும் அது ரத்தம்.. எனக்கு வந்தா தக்காளிச்சட்னியா..? வாரே வாஹ்..! எப்படியாப்பட்ட நியாயவான்கிட்ட நான் வேலை பார்க்கப் போகிறேன்..! கொடுத்து வைத்தவ சார் நான்..”

அவள் சிலாகித்ததில் அவனது கண்கள் ஒளிர்ந்தன..

துடிப்பு மிக்க இந்தக் குறும்புக்காரியை அவனுக்கு அறிமுகப் படுத்திய காலத்துக்கு அவன் நன்றி சொன்னான்.. வாழ்க்கையின் எந்தத் திருப்பத்தில் பூங்கொத்துக் காத்திருக்குமென்று எவர் அறிவார்..? விதி வகுக்கும்

வாழ்க்கையின் ஓட்டத்தில் இதுபோன்ற இனிய நிகழ்வுகளும் தென்படத்தான செய்கின்றன..

“உன்னை மேரேஜ் பண்ணிக்க நினைச்ச மாப்பிள்ளை சரியான மாங்காய் மடையனா இருப்பார் போல.. ஆசைப்பட்ட பெண்ணை நேரில் பார்க்க சான்ஸ் கிடைச்சிருக்குன்னு கிளம்பி வந்து உன்னை மீட் பண்ணியிருக்கலாமில்ல.. ஒருவேளை நீ கேள்வி கேட்டே அவரை ஓட வைச்சிருவன்னு உன் வீட்டில் பயந்துட்டாங்களோ என்னவோ..”

சிரிக்காமல் படு தீவிரமாக முகத்தை வைத்துக் கொண்டுச் சொன்னவனைக் கழுத்தைச் சாய்த்துப் பார்த்தாள் நந்தினி..

“என்னைப் பத்தி எத்தனை உயர்வான அபிப்ராயம் சார் உங்களுக்கு..” என்றாள்..

அவன் உதட்டை மடித்துக் கொண்டு அவளது குழந்தைத்தனமான கோபத்தை வேடிக்கை பார்த்தான்..

நந்தினிக்கு கோபம் கோபமாக வந்தது.. அவன் கண்களில் சுவராஸ்யம் அவளை அவன் வேடிக்கை பார்க்கிறான் என்று கட்டியம் கூறி அறிவித்தது.. இதில் கொடுமை என்னவென்றால் அவள் வீட்டிலும் அவன் சொன்னதைத்தான் சொன்னார்கள்.. மேகநாதன் அதில்

மாறாத நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார்.. மற்ற எல்லாவற்றிலும் கணவரின் கருத்துக்கு எதிர் கருத்தைக் கொண்டிருக்கும் வெண்ணிலா இக்கருத்தில் ஒன்றுபட்ட மனதுடன் உடன்பட்டாள்..

“இவ சொல்றான்னு உன் சொந்தக்கார தோழிகிட்ட மாப்பிள்ளையை அனுப்பி வையுங்க.. என் மக ஒருதரம் நேரில் பார்க்கனும்னு சொல்றான்னு சொல்லிராதே வெண்ணிலா..”

“சொந்தக்காரத் தோழியா..?”

“உன் சொந்தக்காரப் பெண் தோழியாய் இருந்த ங்கன்னு நீதானேடி சொன்ன..”

“சொந்தக்காரப் பெண்ணா..? அவளுக்கு என்ன பதினாறு வயசா ஆகுது..?”

“அறைஞ்சேன்னா செவிளு பிய்ஞ்சுரும்.. அறிவு கெட்டவளே.. இப்ப அதுவாடி முக்கியம்..? சம்பந்திகாரம்மாகிட்ட மாப்பிள்ளையை அனுப்பி வையுங்கன்னு சொல்லிராதே..”

“இப்படிப் பேசிப் பழகுங்க.. சம்பந்திகாரம்மான்னு சொன்னா எம்புட்டு அழகா இருக்கு..?”

“நந்தினிகிட்ட இருக்கிற அழிச்சாட்டியம் அத்தனையும் உன்கிட்ட இருந்துதான் வந்திருக்குடி..”

“உங்களுக்கு மட்டும் குறைச்சலா இருக்குதாக்கும்.. வீறாப்பு, கோபம், ரோஷம்ன்னு உங்களோட ஒட்டு மொத்த குணங்களுக்கும் மொத்த வாரிசா அவ நிக்கிறா.. அதை விட்டுட்டு என்னைச் சொல்ல வந்துட்டாரு..”

“எப்படியோ இருந்து தொலைக்கட்டும்.. இவ சொன்னான்னு மாப்பிள்ளையை வர வைச்சோம்ன்னு வைய்யி.. நம்மளை விடப் பைத்தியக்காரங்க யாரும் இருக்க மாட்டாங்க..”

“அதைச் சொல்லுங்க.. வார மாப்பிள்ளைகிட்ட இவ பதவிசாப் பேசுவான்னா நினைக்கறீங்க..?”

“அதெப்படி நினைப்பேன்.. உன் வயித்தில பிறந்தவளாச்சே.. கட்டிக்கப் போறவக்கிட்டப் பதவிசாப் பேசினா அவ எப்படி வெண்ணிலா வயித்தில பொறந்தவாள ஆவா..?”

“தகப்பன் குணம்தானே மகளுக்கும் வரும்..? அடக்க, ஒடுக்கமா பேசிட்டா அவ எப்படி உங்க மகளா ஆவா..?”

“தெரிஞ்சாச்சரி.. இவளை மாப்பிள்ளைகிட்டப் பேசக் கூடாது.. ஏடாகூடமா எதையாவது கேட்டு வைச்சுக் கல்யாணத்தையே நிறுத்தித் தொலைச்சிருவா..”

“சரியாச் சொன்னீங்க.. அவர் நேர் கோட்டில நடக்கிறவராம்.. இவ கோட்டை அழிக்கிறதில மன்னாதி மன்னி.. இங்கிட்டு இருக்கிற துரும்பை அங்கிட்டு நகத்தி வைக்க மாட்டா.. அத்தச் சோம்பேறி..”

“அதுக்கு எதுக்குடி என் தங்கச்சியை கரிச்சுக் கொட்டற..? உன் அண்ணன் மட்டும் பெரிய இவனா..? மாமா சோம்பேறின்னு சொல்ல வேண்டியதுதானே..”

“வீட்டுக்குள்ளே நீங்க பேசற இந்த மேதாவிப் பேச்ச தஞ்சாவூரு மக்க மனுச கேட்டா மெச்சிப் போயிருவாங்க.. மேகநாதன் பெரிய அறிவாளி.. நாலும் தெரிஞ்சவர்.. நல்லவர், வல்லவர்ன்னு அப்புறம் ஒருத்தங்க வாயைத் திறக்க மாட்டாங்க..”

“ஏண்டி..?”

“அத்தச் சோம்பேறின்னா படு சோம்பேறின்னு அர்த்தம்.. நந்தினிக்கு அத்தை சோம்பேறின்னு அர்த்தமில்ல.. ம்ஹூம்.. இவருக்கும் வாழ்க்கைப்பட்டு இரண்டு பிள்ளைகளைப் பெத்து வளர்த்திருக்கேன்..”

“அதில ஒண்ணும் குறைச்சலில்ல.. நீ நல்லாத்தான் வாழ்ந்துக்கிட்டு இருக்க.. பெரிய இடத்துச் சம்பந்தம் வாய்ச்சிருக்கு.. நம்ம பொண்ணு திருவாயைத் தொறந்து அதைப் பத்தி விடாம இருக்கனும்னா மாப்பிள்ளையை இவ நேரில் பார்த்து நாலு வார்த்தை பேசவே கூடாது..”

“அப்படியே என் மனசில இருக்கிறதைப் பேசறிங்க அத்தான்..”

இப்படி நான் பேச நினைப்பதை எல்லாம் நீ பேசி விட்டாய் என்று கணவனும் மனைவியும் மையலாகி மரத்தைச் சுற்றாமலே டூயட் பாடும் அளவிற்கு நந்தினி அவளுக்காக நிச்சயிக்கப் பட்டிருக்கும் மாப்பிள்ளையைச் சந்தித்துப் பேசி விடக் கூடாது என்பதில் நந்தினியின் பெற்றோர் ஈருடல் ஓருயிராக ஒருமித்த மனதோடு இருந்தார்கள்..

அவர்கள் அந்த முடிவை எடுத்ததிலும் ஓர் அர்த்தம் இருந்தது.. பெற்ற மகளின் நலனில் அவர்கள் காட்டும்

அக்கறை இருந்தது.. நியாயம் இருந்தது.. அதை நந்தகுமார் சுட்டிக் காட்டவும் செய்தான்..

“பாருக்கா.. ஊரெல்லாம் ராத்திரியில கண்ணசந்தா, நீ அப்பத்தான் முழிச்சுக்கிட்டு கண்ணிமை கொட்டக் கொட்ட கண்ணை அகலமா முழிச்சுக்கிட்டு டிவியைப் பார்ப்ப.. இல்லேன்னா புத்தகம் படிப்ப.. அப்படிப் பாக்கிற சேனலும் டிஸ்கவரியா இருக்கும்.. படிக்கிற புத்தகமும் கதைப்புத்தகமா இருக்கும்.. விடிய விடிய கொட்டக் கொட்ட வெட்டியா முழிச்சுட்டு, விடியக்காலையில போர்வையை இழுத்துப் போர்த்திக்கிட்டுத் தூக்கம் போடுவ.. பத்தரை மணிக்கு எழுப்பி விட்டாலும் என்னமோ கருக்கலில எழுப்பி விட்டுட்டதைப் போல குய்யோ, முறையோன்னு கூப்பாடு போட்டு ஊரைக் கூட்டுவ..”

“இதையெல்லாம் ஏண்டா சொல்லிக் காட்டற..?”

“சொல்லிக்காட்டாலை.. இதையெல்லாம் உனக்கு வரப் போகிற மாப்பிள்ளைகிட்டச் சொல்லிப்புடு வியோன்னுதான் அம்மாவும் அப்பாவும் பயப்படறாங்க..”

“அப்படிங்கற..?”

இப்படியும் ஒரு இடியாப்பச் சிக்கல் இருக்கிறதா என்று நந்தினி திருதிருத்தாள்.. தம்பியைப் பரிதாபமாக ஏறிட்டாள்..

"அப்படிப் பார்க்காதே.. இம்சையாய் இருக்கு.." என்று தலையில் அடித்துக் கொண்டான் அவளது அன்புத் தம்பி..

"என்னை ஏண்டா கோவிச்சுக்கற..?"

"கோவிச்சுக்காம என்ன செய்யறது..? நீதான் வாயைக் கிளறினா உள்ளதையெல்லாம் உளறிக் கொட்டிருவியே.. உன்னோட ஹாபி என்னன்னு அவர் கேட்டு வைச்சார்ன்னா விடிய விடியப் புத்தகம் படிப்பேன், டிவி பார்ப்பேன், சான்ஸ் கிடைச்சா வீட்டுக்கு கடுக்காய் கொடுத்துட்டுப் ஃபிரண்ட்ஸோட ஊர் சுத்துவேன்.. கண்ணில படற துணிமணிகளை வாங்கிக் குவிப்பேன்னு பெருமையா அடுக்கித் தள்ளித் தொலைப்பியே.. அத்தோடும் விட்டு வைப்பியா..? உனக்கு என்னென்ன பிடிக்கும்ன்னு அவர் கேட்டு வைச்சா வானம் பிடிக்கும், நிலா பிடிக்கும், நட்சத்திரம் பிடிக்கும்ன்னு கதையளக்காம, விடியக்காலையில இழுத்துப் போர்த்திக்கிட்டு மதியம் வரைத் தூங்கப் பிடிக்கும், சிக்கன் வறுவலும் மட்டன் பிரியாணியும் பிடிக்கும்ன்னு சொல்லித் தொலைப்ப.. இப்படி ஒரு சாப்பாட்டு ராமி சோம்பேறியையா தலையில கட்டப் பார்க்கிறாங்கன்னு

அந்த பெல்ட் மன்னன் தலைதெறிக்க ஓடிற மாட்டாரா..? அதுக்குத்தான் முன்னெச்சரிக்கை நடவடிக்கையா அவரோடு உன்னைப் பேச விடாம அடைகாத்து கல்யாணம் பண்ணிக் கொடுத்துறனும்னு பறக்கறாங்க..''

''அதுக்காக என் மனசை கொஞ்சம் நினைத்து பார்க்க வேண்டாமாடா நந்து..?''

''நம்மளப் பெத்தவங்க மனசை நீ கொஞ்சம் நினைத்துப் பார்த்தன்னா இப்படிக் கண்ணீரில கப்பல் விடமாட்ட..

உருப்படியாய் ஒரு வெந்நீர் போடக்கூட உனக்குத் தெரியாது.. காபி கலக்கச் சொன்னா அதைப் பாலில கலக்கனுமா, எண்ணையில பொறிக்கனுமான்னு கேட்டு வைப்ப.. பாலிலதான்னு சொன்னா உப்பு எத்தனை ஸ்பூன் போடனும்னு அடுத்த கேள்வியைக் கேட்டு அரள வைப்ப.. இந்த ரோதனைக்குத்தான் உன்னை அடுப்படி பக்கமே விடாம அம்மாவே எல்லாத்தையும் பார்த்துக்கிறாங்க..''

''அவங்களா பார்த்துக்கிறாங்க..? சமையல்காரம்மா தானே சமைச்சுக் கொட்டறாங்க..? வீட்டு வேலைக்கு வேற ஆளை வைத்திருக்காங்களே.. அது போக தோட்ட வேலைக்கு தனி ஆளு..''

“உன்னைப் போல மகளிருந்த ஊருப்பட்ட ஆளுகளை வேலைக்கு வைத்துத்தானே ஆகனும்..? உன் ரூமைப் பார்த்தாலே உன் லட்சணம் என்னன்னு தெரிஞ்சிருமே..

ரூமாவா வைச்சிருக்க..? ஒரு பக்கம் அழுக்குத் துணி.. கட்டில் மேல ஈர டவல்.. அலமாரியில அம்மா பார்த்துப் பதனமா மடிச்சு, அயர்ன் பண்ணி அடுக்கி வைச்சிருக்கிற துணிகள இழுத்துப் பரத்தி போட்டு வைச்சிருப்ப.. படிக்கிறேன் பேர்வழின்னு புத்தகங்களை குவிச்சு வைச்சுட்டு, அதில ஒரு புத்தகத்தை தலைக்கு கொடுத்து, இன்னொரு புத்தகத்தை டெட்டி பியர் பொம்மையைக் கட்டிப் பிடிக்கிறதைப் போலக் கட்டிப் பிடிச்சுக்கிட்டுக் கும்பகர்ணியா குறட்டை விட்டுத் தூக்கம் போடுவ.. அது எப்படிக்கா.. கதைப் பத்தகத்தை மட்டும் விடிய விடிய கண் முழிச்சுப் படிக்கிற.. அதுவே பாடப் புத்தகமா இருந்து தலைக்கு வைச்சுக்கிட்டுத் தூக்கம் போடற.. என்ன டிசைன்க்கா நீ..?”

கேள்வி என்று வந்து விட்டால் நந்தகுமார் தயவு தாட்சண்யமே பார்க்க மாட்டான்..

# அத்தியாயம் 22

“**நீ**யும்தானேடா இப்படி இருக்க..?”

தாள மாட்டாமல் கேட்டு விட்டாள் நந்தினி.. அது என்ன பெற்ற பிள்ளைகளில் ஆண்பிள்ளை, பெண்பிள்ளை என்று பாராபட்சம் பார்ப்பது..? நந்தகுமாரனுக்கு மட்டும் காபி போடத் தெரியுமா..? அசைவச் சமையல் செய்தால் அவனும்தான் நொட்டை விட்டுக் கொண்டு சாப்பிடுகிறான்.. அவனுடைய அறையிலம் அழுக்குத் துணிகள் இறைந்துதான் கிடக்கின்றன.. அலமாரியில் அயர்ன் பண்ணி மடித்து அடுக்கி வைத்திருக்கும் துணிகளை அவனும்தான் இழுத்துப் பரத்திப் போடுகிறான்... அவனுடைய புத்தகங்களும்தான் குவியலாக கிடக்கின்றன.. நந்தினியாவது ஒரு புத்தகத்தை தலைக்குக் கொடுத்து மறுபுத்தகத்தைக் கட்டிப் பிடித்துத் தூக்கம் போடுவாள்.. அவன் அதையும் செய்ய மாட்டான்.. பாடப் புத்தகங்களுக்கும் அவனுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லையென்று புத்தகங்கள் ஒரு புறமிருக்க இவன் மறுபுறம் மெத்தையை இழுத்துப் போட்டுக் கும்பகர்ணத் தூக்கம் போடுவான்.. இவை அத்தனையையும் தாண்டிக் கூடுதலாக ஊரைச் சுற்றுவான்..

இதையெல்லாம் ஏனென்று கேட்காத மேகநாதனும் வெண்ணிலாவும் நந்தினியை மட்டும் கரித்துக் கொட்டுவார்கள்..?

“நான் இப்படியெல்லாம் சேம் பேறியா, சாப்பாட்டு ராமனா, ஊர் சுத்தியா இருந்தாலும் யாரும் அதைக் கண்டுக்க மாட்டாங்க.. அதுவே நீயாய் இருந்தா கண்டுக்குவாங்க.. கண்டிப்பாங்க..”

“அதுதான் ஏன்..?”

“ஏன்னா நான் ஆண்பிள்ளை.. ஹா.. ஹா..”

“அடங்குடா.. ஆண்பிள்ளைன்னா கொம்பு முளைச்சிருக்கா..?”

“ஆமாம்க்கா.. நீ இன்னொரு வீட்டுக்கு வாழ்க்கைப் பட்டுப் போக வேண்டிய ஆளு.. நான் அப்படியில்லை .. என் வீட்டில ராஜா மாதிரி நானிருக்கலாம்.. இன்னொரு வீட்டிலிருந்து எவளாவது ஒரு ஏமாந்த சோணகிரி எனக்கு வாழ்க்கைப் பட்டு வருவா.. இப்பப் புரியுதா..? ஏன் உன்னை பெல்ட் மன்னனோடு பேச விட மாட்டேங்கிறாங்கன்னு..?”

‘பெல்ட் மன்னன்..!’

# எண்ணியிருந்தது ஈடேற... 1

நந்தினிக்கு குலை நடுங்கியது.. தம்பி பேண்டைச் சுற்றி அலங்காரமாக இறுக்கியிருந்த பெல்ட்டைப் பயத்தோடு பார்த்தாள்.. பள பளவென இருந்த அது பயமுறுத்தியது..

“ஏண்டா.. பெல்ட்டாலே அடிச்சா வலிக்குமாடா..?” தம்பியிடம் சந்தேகம் கேட்டாள்..

“வலிக்குமாவா..? சதையை பிய்ச்சுக்கிட்டு வந்திரும்..” இரக்கமில்லாமல் அவன் பயமுறுத்தினான்..

நந்தினி நடுங்கிப் போனாள்.. அந்த நடுக்கத்தை ரயிலிலும் அவள் பிரதிபலித்ததில்..

“குளிருதுன்னு தெரியுதில்ல.. எதுக்காக இங்கே நிற்கனும்..? ஃபர்ஸ்ட் கிளாஸ் கோச்சுக்கு டிக்கெட் வாங்கிட்டு வாசல்பக்கம் நின்னுக்கிட்டே டிராவல் பண்ணனும்னு நேர்த்திக்கடன் ஏதும் இருக்கா..?” என்று அவளை கடிந்து கொண்டான் ரவிச்சந்திரன்..

‘குளிரால் நடுங்கினேன்னு நினைச்சுட்டான் போல..’

எதுவாக இருந்தாலும் அவன் காட்டிய அக்கறை அவளுக்கு இதமாக இருந்தது.. பாசமான குடும்பத்தின் சிறகுகளுக்கடியில் பத்திரமாக இருந்தவளுக்கு திடிரென்று

வந்து விட்டத் தனிமையில் துயரமாக இருந்தது.. வேறு வழியில்லையென்று வேகத்துடன் கிளம்பி விட்டாலும் இருண்ட கானகத்தில் தொலைந்து விட்டக் குழந்தையைப் போல அடி மனதில் மிரண்டு கொண்டிருந்தாள்..

எதிர் சீட்டில் பிரயாணிக்கப் போவதாக 'டூப்ளிகேட் ரவிச்சந்திரன்..' சொன்னபோது இவன் ஜொள் மன்னாயிற்றே என்ற தயக்கத்தையும் மீறித் தெரிந்தவன் ஒருவன் ரயிலில் பயணத்துணையாக வருகிறான் என்ற மெல்லிய தைரியம் வந்தது...

ஒரிஜினல் ரவிச்சந்திரன் தென்பட்டவுடன் அந்த டூப்ளிகேட் ரவிச்சந்திரனும் ஓடித் தொலைந்து விட்டான்.. கையில் துப்பாக்கி வைத்திருப்பவனைப் போன்ற என்கவுண்டர் தோற்றத்துடன் இருந்த ஒரிஜினல் ரவிச்சந்திரன் நந்தினியின் மெல்லிய தைரியத்தைத் துரத்தி விட்டு அச்சத்தை அதிகப் படுத்தினான்.. வேலை செய்யப் போகும் முதலாளியிடம் பேசினாலாவது தைரியம் கிடைக்காதா என்று பேசினால் அந்த முதலாளியே அவனாக இருந்தான்..

'என்னடா இது..!..' என்று நந்தினி அரண்டு போனது என்னவோ உண்மைதான்..

பெல்ட் மன்னனுக்குப் பயந்து அவள் வீட்டை விட்டு ஓடிவந்தால் வேலை கொடுப்பவன் அவனுக்கும் மேலே..

'என்கவுண்டர்' ஆக இருந்து வைக்கிறானே..

அவன் முன்னால் உட்கார்ந்திருப்பது கூட மூச்சை முட்ட வைத்ததில் அதிலிருந்து தப்பக்க வாசல்பக்கம் ே பானால் அங்கும் அவன் வந்து நின்று கடுப்பேற்றினான்.. போடா நீயுமாச்சு, உன் வேலையுமாச்சு என்று வீட்டுக்குத் திரும்பி விட முடியாத துன்பத்தோடுதான் அவனுடன் கடுகடுவெனப் பேச ஆரம்பித்தாள் நந்தினி.. போகப் போக பேச்சின் திசை மாறி அவனும், அவளும் இணக்கமாக பேச ஆரம்பித்து விட்டதில் அவள் மனதில் மீண்டும் தைரியம் வந்து சேர்ந்திருந்தது..

மழையும், குளிரும் அதிகரித்ததில் அவள் ரவிச்சந்திரனின் பேச்சுக்கு கட்டுப்பட்டு பதில் பேசாமல் உள்ளே நடந்தாள்.. சீட்டுக்குத் திரும்பும்வரை பேசாமல் இருந்த ரவிச்சந்திரன் எதிரெதிர் சீட்டுகளில் அமர்ந்ததும் லேசாக சிரித்துக் கொண்டான்..

"என்ன..?" என்றாள் நந்தினி..

“ஒண்ணுமில்லை..” அவன் சொன்ன விதமே ஏதோ ஒன்று இருக்கிறதென அறிவித்து வைத்ததில் அவள் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டாள்..

“என்ன..?” என்று புருவங்களை உயர்த்தினான் அவன்..

“ஒண்ணுமில்லை..” அவனைப் போலவே பதில் சொன்னாள் நந்தினி..

“பதிலுக்குப் பதில்.. ம்ம்ம்..?”

“அப்படித்தான் வைத்துக்கங்களேன்..”

பயமற்ற இளங்கன்றாய் அவள் சிடுசிடுத்ததில் அவன் மனம் லயித்தது..

“இப்ப நான் சிரிச்சதுக்கு உனக்கு ரீசன் வேணும்..?”

“யெஸ் யுவர் ஹானர்..”

“ஹா.. ஹா..”

“மறுபடியும் சிரிப்பா..? புன்னகை மன்னன்னு மனசுக்குள்ள நினைப்பு போல.. சான்ஸ் கிடைச்சுட்டாப் போதுமே.. வில்லனைப் போல.. ‘ஹா, ஹா..’ சிரிப்புத்தான்..”

“ஊஹூம்..? என்னைப் பாத்தா வில்லனைப் போல இருக்கா..?”

அப்படித்தான் இருக்கிறான் என்று சொல்ல மனம் வரவில்லை.. அவனைப் பார்த்த முதல் பார்வையில் இவன் வில்லன் என்றுதான் நந்தினி நினைத்தாள்.. அவன் வில்லனில்லை என்று நிரூபணம் ஆனாலும் கண்டிப்பு மிக்க கம்மாண்டராக தோன்றினான்.. இரண்டாவது கருத்தில் அவளுக்கு மாற்றமில்லயென்றாலும் அவனை வில்லனாக நினைக்க முடியவில்லை..

அதைச் சொன்னால் அவனுக்கு உச்சி குளிர்ந்து விடாதா..?

ஒரு நேரம் சிரிக்கிறான்.. ஒருநேரம் முகத்தை கடுமையாக வைத்துக் கொண்டு அரட்டுகிறான்.. அவனுடைய உச்சியை ஏன் குளிர வைக்க வேண்டும்..? சில்லென்ற பேச்சு வேண்டுமானால் அவன் அனைத்துப் பொழுதுகளிலும் சில் மன்னனாக இருக்க வேண்டுமே..

‘இவன் சில் மன்னனோ இல்லையோ.. அந்த டூப்ளிகேட் ரவிச்சந்திரனைப் போல ஜொள் மன்னனில்லை..’

இப்போது அவளுக்குச் சிரிப்பு வந்தது.. அதன் காரணத்தைத் துருவ முயல்வது போல அவளை ஊடுறிவிப் பாய்ந்தது அவன் பார்வை.. அவளது மேனி சிலிர்த்தது..

‘இவன் இப்படிப் பார்க்க வேண்டாமே..’ தவித்துப் போனாள்..

அவன் யாரோ, எவரோ..? அவளுடைய நெருக்கடியான நிலையில் அவனிடம் வேலை செய்யக் கிளம்பி வந்திருக்கிறாள்.. சில, பல மாதங்களில் அவளுடைய நெருக்கடி மாறி விடும்.. அவளுடைய குடும்பம் அவள் திரும்பி வந்தால் போதும் என்ற மனநிலைக்கு வந்து உன் மனம் போல மாங்கல்யம் கிடைக்கச் செய்கிறோம், மன்னித்துத் திரும்பி வா என்று கெஞ்ச ஆரம்பித்து விடும்.. அவளும் பெல்ட் மன்னனிடமிருந்து தப்பித்து விட்ட நிம்மதியோடு குடும்பத்திற்குத் திரும்பி விடுவாள்..

அதற்குப் பின்பு அவன் யாரோ.. அவள் யாரோ.. இடைப்பட்ட நாள்களில் இளைப்பாறுதல் வந்து விடக் கூடாது.. ரயிலில் ஆரம்பித்திருக்கும் இந்த அறிமுகம் நிலைத்து நிற்க வாய்ப்பில்லை.. ரயில் சிநேகிதமும் இவன் சிநேகிதமும் ஒன்றுதான்..

அவனைப் போல முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டாள் நந்தினி.. முடியவில்லை ..

“டிரை பண்ணாதே.. சுட்டுப் போட்டாலும் உனக்கு அது வராது..” சீட்டில் சாய்ந்து கால்களை நீட்டி மார்போடு கைகளை மடித்துக் கட்டி அவளை வேடிக்கையாக பார்த்தபடி சொன்னான் அவன்..

‘இவன் பார்வைதான் நொடிக்கொருதரம் எப்படியெல்லாம் மாறித் தொலைக்கிறது..’ அவளுக்கு வியப்பாக இருந்தது.. அவனைப் போல அவளால் இருக்க முடியாது.. கோபமோ, சந்தோஷமோ.. சட்டென்று மாறி விடும் மனநிலையல்ல அவளது மனநிலை..

உணர்வுகளைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க இரும்பு மனிதனால்தான் முடியும்.. எதிரிலிருந்து ஒரிஜினல் ரவிச்சந்திரன் இரும்பு மனிதனாக இருந்தான்.. நந்தினி பாவம்.. சாதாரண மனுஷி.. சிரிப்பு வந்தால் சிரித்து, கோபம் வந்தால் முறைத்து என்று மனதிலிருப்பதை மறைக்காமல் பிரதிபலித்து விடுபவள்..

தன் உணர்வுகளை மட்டும் இரும்புத்திரை கொண்டு மறைத்து எதிராளியின் உணர்வுகளைத் துளைக்கும்

பார்வையோடு தூண்டித் துருவி வெளிக் கொணரும் இரும்பு மனிதனின் பார்வையை எதிர்கொள்ள அவளால் முடியவில்லை..

அதை மறைக்க அவனுடன் சண்டைக்குப் போனாள் நந்தினி..

“எனக்கு எது வராது..?”

“சீரியஸாப் பார்க்கிறது..”

“வாட்..?”

“என்ன வாட்..? ஆழமா சிந்திக்கிறதைப் போல எல்லாம் பார்த்து வைக்காதே.. சிரிப்புச் சிரிப்பா வருது.. சீரியஸான மெண்டாலிட்டிக்கும் உனக்கும் ரொம்ப தூரம்..”

கால்களை சுவாதீனமாக ஆட்டியபடி அவளது குணாதிசியத்தை அவன் விமரிசித்ததில் அவளுக்கு சுருசுருவென இருந்தது.. அவன் யார் அவளைப் பற்றிக் கணித்துச் சொல்ல என்று கோபம் வந்தாலும்..

‘எவ்வளவு கரெக்டாச் சொல்றான் பாரு..’ என்ற எண்ணமும் வந்து தொலைத்தது..

“ஸோ.. நீங்க மட்டும்தான் சீரியஸா இருக்கனும்.. உங்ககிட்ட வேலை பார்க்கிறவங்க பேக்கு மாதிரி இருக்கனும்.. அப்படித்தானே..?”

“அப்படித்தான்னு நான் சொன்னா நீ சும்மா விட்டிருவியா..?”

குறும்பாக அவன் கண்களைச் சிமிட்டியதில் தன் வயமிழந்தாள் நந்தினி.. அவளும் உத்ராவும்தான் கண்ணடித்துப் பேசிக் கொள்வார்கள்.. அந்தப் பழக்கம் எப்படி அவனிடம் தொற்றிக் கொண்டது..?

அவனைப் பார்த்தால் மற்றவரின் பழக்க வழக்கங்களைத் தொற்ற வைத்துக் கொள்கிற ஆள் மாதிரித் தெரியவில்லை.. இவன்தான் கண்ணடித்தானா என்பதைப் போல இறுக்கமான முகபாவத்திற்கு அதற்குள் மாறி விட்டிருந்தான்..

“அதுதானே பார்த்தேன்..” என்றாள் நந்தினி..

“எதைப் பார்த்தாய்..?”

உன் முகத்தை என்று சொல்ல வாய் வரை வார்த்தை வந்து விட்டது.. அடிப்பாவி நந்தினி..! எதிரில் இருப்பவன் உன் முதலாளி.. நீ எதையாவது சொல்லப் போய் அவன் உனக்கும்

எனக்கும் சரிப்படாது.. ஊரைப் பார்த்துப் போய்ச் சேர் என்று நடுவழியில், அர்த்த ராத்திரிஜாமத்தில், பனி பொழியும் மழையிரவில் இறக்கி விட்டுப் போய் விட்டால் உன் கதி என்ன ஆவது என்று அவளது மனச்சாட்சி எச்சரித்ததில் வாயை அடக்கிக் கொண்டாள்.. அதை அறிந்து வைத்திருப்பவனைப் போல குறுஞ்சிரிப்பு சிரித்து வைத்தான் ரவிச்சந்திரன்..

‘என்னைப் பார்த்தா இவனுக்குச் சிரிப்பு வருகிறதாமா..?’ மனதுக்குள் வெகுண்டாள் நந்தினி..

இன்னும் அவன் எதற்காக நந்தினியைப் பார்த்து மர்மமாக சிரித்து வைத்தான் என்று அவனது முதல் சிரிப்புக்கான காரணத்தையே கூறவில்லை என்பது அவளது நினைவில் இடித்தது.. முதல் சிரிப்புக்குக் காரணம் தெரிந்தால்தானே அடுத்தடுத்த சிரிப்புகளுக்கான காரணத்தைக் கேட்க முடியும்..?

மறுபடியும் அவன் சிரித்து வைத்தான்.. ஏனோ அவளுக்குக் கோபம் குறைந்தது.. அவன் சிரிப்பு அவன் மீதான பயத்தைக் குறைத்தது..

“எதுக்குச் சிரிச்சீங்க..?” விடாமல் அவள் கேட்டாள்.

“எப்போச் சிரித்ததைக் கேட்கிற..?” புரியாததைப் போல அவன் கேட்டான்..

“இதுக்குத்தான் அடிக்கடிச் சிரிக்கக் கூடாதுன்னு சொல்கிறது..”

“அப்படியா..?”

“அப்படித்தான்.. நீங்க முதல்ல சிரிச்ச சிரிப்பைப் பத்தித்தான் கேட்கிறேன் பாஸ்.. போதுமா..?”

“பாஸா..?” அவன் விழுங்கி விடுவதைப் போல பார்த்து வைத்ததில் அவளுக்குள் என்னென்னவோ ஆகித் தொலைத்தது.. அதை அறிந்து விட்டதைப் போல அவன் குறுகுறுவென்று பார்த்து வைத்ததில்..

‘ஊஹூம்.. இவன் முகத்தைப் பார்த்தா மாட்டிக்குவேன்..’ என்று ஜன்னல் பக்கமாக திரும்பி உட்கார்ந்து கொண்டாள் நந்தினி..

“எதுக்குச் சிரிச்சேன்னு சொல்லவா..?” அவன் ரகசியம் பேசுவதைப் போல.. ரகசியக் குரலில் வினவினான்.. இப்படியாகப்பட்ட தொனியில் சொல்வதானால் நீ எதையுமே சொல்ல வேண்டாம் போ என்ற தினுசில் நந்தினி உக்கிரமாக

அவனைப் பார்த்து விட்டு ஜன்னலைப் பார்ப்பதைத் தொடர்ந்தாள்..

“பெரிசா தைரியசாலியைப் போல பேசற.. ஆனா.. பெல்ட் வைத்திருக்கார்ங்கிற ஒரே காரணத்துக்காக பெஸ்ட் மாப்பிள்ளையை கோட்டை விட்டுட்டு பயந்து ஓடி வர்ற.. அதை நினைத்தேன்.. சிரித்தேன்..”

ரவிச்சந்திரன் உரக்கச் சிரித்ததில் நந்தினிக்கு வெட்கமாகி விட்டது.. இவனுக்கு எனது பயத்தை நினைத்தால் விளையாட்டாகத்தான் இருக்கும் என்று பல்லைக் கடித்தாள்.. இவன் ஆண்பிள்ளையாயிற்றே.. மற்றவர்களைத்தான் ஓட வைப்பான்.. இவன் பயந்து ஓட மாட்டான்..

உணர்வுகளுக்கு மதிப்பில்லாத இடத்தில் பேச்சுக்கு வேலையில்லை.. அவன் அவளது மன உணர்வுகளைப் புரிந்து கொள்ளாமல் கேலி செய்து பேசும் போது அவளால் எப்படி அவனிடம் தன் மன உணர்வுகளை பகிர்ந்து கொள்ள முடியும்..?

# அத்தியாயம் 23

**வா**காக ஜன்னலோரம் சாய்ந்து கால்களை நீட்டி மடியில் லேப்டாப்பை வைத்துத் தட்டிக் கொண்டிருந்த ரவிச்சந்திரன் ஓரக்கண்ணால் நந்தினியை நோட்டம் விட்டான்.. புத்தகம் படிப்பவளைப் போல புத்தகத்தை விரித்துப் பிடித்து அதில் தன் முகத்தை மறைந்திருந்தவள் நிச்சயமாக புத்தகம் படிக்கவில்லையென்று அவனுக்குத் தெரிந்திருந்தது..

எந்த ஊரில் புத்தகத்தை தலைகீழாகப் பிடித்துப் படிக்கிறார்கள்..?

நந்தினி அந்த வேலையைத்தான் செய்து கொண்டிருந்தாள்.. புத்தகத்தை தலைகீழாகப் பிடித்து அதில் ஒளிந்த தப்பித்து விளையாடிய அவளது விளையாட்டில் நெருப்புக்கோழி மணலுக்குள் தலையைப் புதைத்துக் கொண்டு தப்பித்து விட்டதாக நினைக்கும் செயல்தான் அவன் நினைவுக்கு வந்தது..

‘எத்தனை நேரம்தான் இப்படி ஒளிந்து விளையாடுவான்னு பார்க்கலாம்..’ அவனுக்கு விளையாட்டாக இருந்தது..

அவன் நினைத்ததுதான் நடந்தது.. புத்தகத்தை கீழே இறக்கி.. புத்தகத்தின் மேல்புறம் மூக்கின்மீது படிய அவள் அவனைத் திருட்டுப் பார்வை பார்த்தாள்..

‘இவ என்ன என்னோடு கண்ணாமூச்சி விளையாடுகிறாளா..?’

ரவிச்சந்திரனுக்குச் சிரிப்புத்தான் வந்தது.. அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் தீவிரமாக லேப்டாப்பில் ஆழ்ந்திருப்பதைப் போல பாசாங்கு செய்தான்.. அவனது பாசாங்கில் தைரியம் வரப் பெற்றவளாக அவள் குறுகுறுவென அவனைப் பார்த்து வைத்தாள்..

ஆறடிக்கும் மேல் உயரமும்.. அடங்க மறுக்கும் சிகையுமாக தேக்குமரம் போன்ற விரிந்த மார்புடன் செதுக்கி வைத்த முகத் தோற்றத்துடன் இருந்தவனைப் பார்த்து..

‘அடேங்கப்பா.. பெரிய ஹீரோதான்..’ என்று உதட்டைப் பிதுக்கி அழகு காட்டினாள்..

மிகச் சரியாக அந்த நொடியில் அவன் அவளைப் பார்த்து விடத் தடுமாறிப் போனவள் அவசரமாக புத்தகத்தை மேலே தூக்கிப் பிடித்து அதில் முகத்தை மறைத்துத் தப்பித்தாள்..

அவன் உதடுகளில் புன்னகை அரும்பியது.. சிறு குழந்தையின் சேஷ்டையை ரசிக்கும் மனோபாவம் அவனிடம் ஏற்பட்டிருந்தது.. புன்னகையுடன் மீண்டும் லேப்டாப்பைப் பார்க்கும் பாசாங்கைத் தொடர்ந்தான்.. அடிப்பார்வை அவள் செய்யும் கூத்தைக் கண்காணித்துக் கொண்டிருந்தது..

‘ஒன், டு, த்ரீ.. இப்பப் பார்த்திருவா..’

மனதுக்குள் அவன் எண்ணி முடிப்பதற்குள் அவள் கையிலிருந்து புத்தகம் மெதுவாக இறங்கியது.. ரவிச்சந்திரன் சிரிப்பை மறைத்துக் கொண்டு லேப்டாப்பை உற்றுப் பார்த்தான்..

‘நிஜமாவே வேலைதான் செய்கிறானா.. இல்லை.. நடிக்கிறானா..?’

சந்தேகத்துடன் அவனை ஆராய்ந்தாள் நந்தினி.. காபிக்கொட்டை வண்ணத்தில் இருந்த சட்டையும்.. வெளிர் நீல நிற ஜீன்ஸும் அவளது ஆராய்ச்சிப் பார்வையில் பட்டு எதிரிலிருக்கும் ரவிச்சந்திரன் ‘படு ஹேண்ட்சம் மேன்’ என்று ஜொள்ளின..

‘செம அட்ராக்டிவ்வா இருக்கானே..’ அவள் மனம் வியந்தது..

அவளுக்கு வேலை கொடுக்கப் போகும் முதலாளி இப்படிப்பட்ட ஆணழகனாக இருப்பான் என்று உத்ரா ஏன் சொல்லவில்லை..?

‘அவளுக்குத் தெரிந்திருக்காது.. வினித்தானே இந்த வேலையை ஏற்பாடு பண்ணினார்..? எந்த மாங்கா மடையனாவது தான் கல்யாணம் பண்ணிக்கப் போகிற பெண்கிட்ட அவனைவிட வேற ஒருத்தன் ஹேண்டசம்மா இருப்பான்ங்கிறதைச் சொல்வானா..?’

வினித் மாங்காய் மடையனில்லை என்ற முடிவுக்கு வந்தாள் நந்தினி.. எதிரிலிருப்பவனின் கம்பீரம் நிறைந்த கவர்ச்சிகரமான அழகு அவளைக் கிறங்கடித்து திணறடித்தது.. இப்படிப்பட்ட வசியம் நிறைந்த வசியக்காரனிடம் வசியமாகாமல் எப்படி வேலை செய்வது என்று அவள் திகைத்தாள்..

கன்னி மனதை சலனப்படுத்தும் கவர்ச் சி நிறைந்தவனாக இவன் இருந்து தொலைக்க வேண்டுமா..?

அவள் ஆதங்கப்பட்ட அதே நொடியில் சட்டென அவன் அவனைப் பார்க்க.. அவள் மாட்டிக் கொண்டவளாக

திருதிருவென விழித்தாள்.. அவன் பார்த்த வேகத்தில் அவளால் பார்வையைத் திருப்பிக் கொள்ள முடியவில்லை..

ரவிச்சந்திரன் அடக்க மாட்டாமல் கடகடவென்று சிரித்து வைத்ததில் அவளுக்கு வெட்கமாகி விட்டது.. அவனைக் கண்ட நொடி முதல் அடிக்கடி வெட்கப் படுகிறாள் என்பதை நினைத்துக் கொண்டாள்.. இதுபோன்ற வெட்கமும், மூச்சுத் திணறலும் அவளுக்குப் புதிது..

‘என்னாங்கடா இது.. எனக்கு வந்த சோதனை..’

திரும்பவும் புத்தகத்துக்குள் ஒளிந்து கொள்ள முடியாமல் அவள் முகத்தில் குடம் குடமாக அசடு வழிந்தது.. அவன் லேப்டாப்பை மடக்கி வைத்து விட்டு அவள் பக்கமாக திரும்பி அமர்ந்தான்..

‘இது என்னாத்துக்கு..?’

அவளுக்குள் குளிர் பரவியது.. அவளது கள்ளப் பார்வையை அவன் கண்டு கொண்ட பின்னால் அலட்சியமாக இருப்பதைப் போல எப்படி அவள் வேடம் புனைவது..?

“என்ன்..ன..?” என்றான் ரவிச்சந்திரன்..

“என்ன.. என்ன..?” என்றாள் அவள் விட்டுக் கொடுக்காமல்..

“நீயென்ன கே.பி.சுந்தராம்பாளா..?” இடக்காக கேட்டான்..

நந்தினிக்கு கே.பி. சுந்தராம்பாளை அவ்வையார் வேஷத்தில் நடித்தவர் என்பது வரைக்கும்தான் தெரியும்.. அவர் வெங்கலத் தொண்டையில் ‘கணீர்..’ என்ற குரலில்..

‘என்ன.. என்ன.. என்ன..?’ என்று பாடியிருப்பதைப் பற்றித் தெரியாது.. அதனால் வயதான மூதாட்டியுடன் அவளை இணை கூட்டி விட்டானே என்று மனம் புழுங்கினாள்.. அவனை சும்மா விடக்கூடாது என்று ரோஷமாகி விட்டது..

‘வேலை கொடுக்கப் போகிற முதலாளியா இருந்தா எனக்கென்ன..? எப்படி என்னை இவன் கிழவின்னு சொல்லலாம்..?’

அவளது முகம் ஜிவுஜிவுத்ததை சுவராஸ்யமாக அவன் வேடிக்கை பார்த்தான்.. அவளது குழந்தைத்தனமான கோபத்தைக் கிளறி தீமூட்டி அதில் குளிர்காய அவனுக்குப் பிடித்திருந்தது..

பெரிதாக எதையோ சொல்லப் போகிறாள் என்று அவன் எதிர்பார்த்திருக்க அவள் வேக மூச்சுக்களுடன்..

“நீங்க என்ன இந்தியன் தாத்தாவா..?” என்றாள்..

“என்னது..?” அவன் திகைத்துப் பின் சிரித்து விட்டு..

“இது எதுக்கு..?” என்றான்..

“பின்னே..? என்னைக் கிழவின்னு சொன்னா இப்படித்தான்..”

என்னவோ அவன் மனதைப் பாதிக்கும் வகையிலான மிகப்பெரிய வசவைச் சொல்லி விட்டதைப் போல அவள் முகத்தை வைத்துக் கொண்டதில் அவனது சிரிப்பு வலுத்தது..

‘தாத்தான்னு சொல்றேன்.. சிரிக்கிறானே.. கிழவனா இருந்தாலும் ஹேண்ட்சம்மான கிழவன்ங்கிற திமிரு போல..’

வேறு என்ன சொன்னால் அவன் பாதிப்படைவான் என்று அவள் யோசிக்க ஆரம்பிக்க..

“அறிவுக் களஞ்சியம்..!” என்றான் ரவிச்சந்திரன்..

“அறிவுக் களஞ்சியமா..? நானா..?” சந்தேகத்துடன் கேட்டாள் நந்தினி..

“உனக்கே தெரியுது.. நீ அறிவாளியில்லைன்னு..” அதற்கும் கிண்டல் செய்தான் அவன்..

‘எப்படியெல்லாம் வாருகிறான்..! கிடைக்கிற எந்த சான்ஸையும் மிஸ் பண்ணாம கேட்ச் பிடிச்சு யூஸ் பண்ணிக்கிறானே..’ நந்தினிக்கு ஆற்றாமையாக இருந்தது..

இல்லையில்லை நான் அறிவாளிதான் என்று எப்படிச் சொல்வது..? அவன் அதற்கும் கேலி செய்வானே.. அதனால்..

“என்ன செய்கிறது சார்.. உங்களைப் போல அறிவுத்திருக்கடல் முன்னாலே உக்காந்திருக்கேனில்லையா.. அதனால என்னோட அறிவைப் பத்திப் பேச வாய் வர மாட்டேங்குது..” என்று போலிப் பணிவுடன் சொன்னாள்..

“ஊஹும்..?” அவன் மெச்சுதலாகப் புருவங்களை உயர்த்தினான்..

“அஃதே சாரே..” அவள் மலையாள பாஷை பேசும் பாணியில் பேசினாள்..

அவன் விழிகள் மின்னின.. அவளைப் பேசவிட்டு அவன் வேடிக்கை பார்ப்பதை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.. அதற்காக பேசாமல் இருக்கவும் முடியவில்லை.. எதிரில்

இருப்பவனை கள்ளப்பார்வை பார்த்த குற்றத்திற்காக அவளை அவன் கிழவியாக்கினால் எப்படி வாய் மூடி சகித்துக் கொள்வது..?

இதற்கு பெல்ட் அடியே தேவலாம் என்றிருந்தது நந்தினிக்கு.. பெல்ட் மன்னன் எப்படிப்பட்டவனோ என்னவோ.. நிச்சயமாக எதிரிலிருக்கும் கம்மாண்டரைப் போல அவளைக் கிழவியாக்கி இருக்க மாட்டான்..

“ஆக, நான் உன்னைக் கிழவின்னு சொன்னதா நீ கம்ப்ளெயிண்ட் ஃபைல் பண்ற..?” நிதானமாக அவன் வினவ.. “என்னது..!” என்று அவள் திகைத்துப் போனாள்..

அவள் இருப்பது ஓடும் ரயிலின் முதல் வகுப்புப் பெட்டியா..? இல்லை போலிஸ் ஸ்டேஷனா..?

“எந்தா சாரே.. எது பறயறதா இருந்தாலும் தெளிவாய் பறயனும்.. உங்கள் அளவுக்கு ஞான் அறிவாளியில்லா.. மனசிலாயி..!” படபடத்தாள்..

“இப்படி மலையாளம் பேசினேன்னு வைய்யி.. கேரளா மக்கள் உன்னை வீடு கட்டி அடிக்காம விட மாட்டாங்க.. ” சிரித்தபடி அறிவுறுத்தினான் ரவிச்சந்திரன்..

“அவங்க சும்மாயிருந்தாலும் செங்கலையும் சிமிண்டையும் வாங்கிக் கொடுத்து நீங்க தூண்டி விட்டுற மாட்டிங்களா..?” சிரிக்காமல் பதிலுக்கு கேட்டு வைத்தாள் நந்தினி..

“ஹா.. ஹா..”

“ஹப்பா.. அப்படியே வில்லன் சிரிப்பு..”

“என்னை வில்லனாக்கறதிலேயே குறிக்கோளாய் இருக்கிற..? ம்ம்ம்.. நான் வில்லனாகிறதில உனக்கு அவ்வளவு விருப்பமா..?”

அவன் பூடகமாக கேட்டதைப் போல இருந்தது அவளுக்கு.. அவள் மேனிமீது படிந்து பரவி இறங்கிய அவனது மேய்ச்சல் பார்வையில் உடல் கூச நடுநடுங்கிப் போனாள் நந்தினி..

‘இதென்ன இப்படிப் பார்த்து வைக்கிறான்..’

தொண்டை வறண்டது.. தண்ணீர் பாட்டிலைத் தேடியெடுத்து தொண்டையில் சரித்தாள்.. தெம்பு மீண்டது.. அவன் தண்ணீர் குடிப்பதையும் உற்றுக் கவனித்ததில் எரிச்சல் வந்தது..

‘இவன் பெண்களையே பார்த்ததில்லையா..?’

அவன் பெண்களை அறிந்தவன்தான் என்று தெரியாத பேதமையோடு அவள் பல்லைக் கடித்தாள்..

“ஆமாம்ன்னு சொன்னா என்ன செய்கிறதா உத்தேசம்..?” கோபத்துடன் கேட்டு விட்டாள்..

வில்லன் என்ன செய்வான்..? தனியாக அகப்பட்டு விட்டப் பெண்ணைக் கதறக் கதற சூறையாடுவான்..

‘அப்படின்னா இவன் என்னை ரேப் செய்ய உத்தேசித்திருக்கிறானா..?’

அவள் விழிகள் சுழன்று கதவைப் பார்த்தன.. தப்பியோட அவள் வழி தேடுவதைப் புரிந்து கொண்டவன் பகபகவென சிரித்தான்..

“போதும்..” அவள் காதுகளைப் பொத்திக் கொண்டாள்..

“தப்பியோடப் பிளான் போடறதைப் போல இருக்கு..?”

“வில்லன்கிட்டத் தனியா மாட்டிக்கிட்ட ஹீரோயின் என்ன செய்வா..? தப்பித்துச்சத்தானே ஓடுவா..?”

“யாரு ஹீரோயின்..? நீ..? ஹீரோயினா..? ஹா.. ஹா..” ஏனாம்.. அவளைப் பார்த்தால் அவனுக்கு ஹீரோயின்

போலத் தெரியவில்லையா..? ஹீரோ மாதிரி இருக்கும் திமிரா..? அவளுக்குப் பற்றிக் கொண்டு வந்தது..

“அதிகமாச் சிரிக்காதீங்க.. பல்லு சுளுக்கிக்கும்..” என்று முகத்தைக் கோணினாள்..

“பல் தான் சுளுக்கிக்குமா..? முகம் சுளுக்கிக்காதா..?” என்றவன்..

“நான் வேண்டுமானால் சுளுக்கெடுத்து விடவா..?” என்று எழுந்து கொள்வதைப் போல நடித்தான்..

அவ்வளவுதான்.. அவள் பாய்ந்து எழுந்து கதவோரமாக நின்று கொண்டாள்..

“இவ்வளவு பயந்தாகுளியா நீ..” அவனது சிரிப்பு அதிகரித்தது..

“எதுக்கெடுத்தாலும் சிரிப்புத்தானா..?” அவள் அலுத்துக் கொண்டாள்..

“நீ பண்ற அட்டூழியம் அப்படியிருக்கு.. உன்னால பெல்ட் மன்னனுக்கு கழுத்தை நீட்ட முடியாதுதான்..” ஒப்புதலாகச் சொன்னான்..

“தெரிஞ்சாச் சரி.. அப்பாடி..”

# எண்ணியிருந்தது ஈடேற... 1

என்னவோ நின்று நின்று கால்கள் இற்று விடுவதைப் போல வலித்ததைப் போல ஆசுவாசமாக உட்கார்ந்து கால்களைப் பிடித்து விட்டுக் கொண்டாள் நந்தினி.. அவளுடன் கழிக்கும் பொழுது நொடிக்கு நொடி சுவராஸ்யம் கூடி உயிர்ப்பளிப்பதை உணர்ந்தான் ரவிச்சந்திரன்.. இதுபோன்ற உல்லாச மனநிலையில் இதற்கு முன் அவன் இருந்ததில்லை.. அவளைச் சீண்டுவதும், அவள் சிணுங்குவதை வேடிக்கை பார்ப்பதும் உற்சாகமானதாக அவனுக்கு இருந்தன..

“ஓ.. இதனாலதான் சண்டைக்கு வந்தியா..?” மொட்டையாக எதனால் என்பதைச் சொல்லாமல் புருவங்களை உயர்த்தினான்..

அவன் எதைச் சொல்கிறான் என்று தெரியாமல் அவள் விழித்தாள்..

“எதுக்கு இந்த முழிப்பு..?” என்றான் அவன்..

“அதுவா சார்.. நீங்களோ மெத்தப் படிச்ச மேதாவி..! நானோ பரிட்சை எழுதிட்டு பாஸா பெயிலான்னு கூடத் தெரியாத அப்பாவி..! நீங்க சொல்கிறதப் புரிஞ்சுக்கிறதுக்கு ஞானியா இருக்கனும்.. நான் அந்த ரேன்ஜுக்கெல்லாம் கிட்டக்கூட வரமாட்டேன்.. அதனால்தான் உங்களோட

ஞானப்பேச்சுப் புரியாம முழிக்கிறேன்..” அவள் பவ்யமாக விளக்கம் சொன்னாள்..

அவனது இதழ் மடிந்து வளைந்தது.. அவள் பேச்சை ரசித்தபடி.. “என்னது..? பாஸா பெயிலான்னு தெரியாதா..? நீ கட்டாயமா பாஸ் பண்ணிருவேன்னு வினீத் சொன்னாரே.. அதை நம்பி வேலை கொடுத்திருக்கேனே.. நீ என்னடான்னா சந்தேகக் கேஸா இருக்கியே...” என்று வரவழைத்துக் கொண்ட அதிகாரத்துடன் அதட்டினான்..

“சந்தேகக் கேஸ்..? நானு..?”

“யெஸ்.. யு ஆர்..”

“தேங்க்ஸ் ஃபார் யுவர் காம்ளிமெண்ட்.. அதுக்கு இப்ப என்னாங்கறிங்க.. ஓடுகிற டிரெயினில இருந்து இறக்கி விட்டிரப் போறீங்களா..?”

அவன் பதில் சொல்லாமல் அவளைக் கூர்ந்து பார்த்த விதம் அவளுக்கு பயத்தை அளித்தது.. செய்தாலும் செய்து விடுவானோ என்று அஞ்சினாள்.. அவள் விழிகள் அந்த அச்சத்தை பிரதிபலித்ததில் அவன் சிரித்து வைத்தான்..

‘ஆஹா.. இவன் வேண்டும்ன்னே என்னை பயமுறுத்தியிருக்கான்..’

அவன் கைகளில் அவள் விளையாட்டு பொம்மையாக மாறியிருக்கிறாள் என்பதில் அவளுக்கு ஆத்திரம், ஆத்திரமாக வந்தது..

‘என்னை என்னன்னு நினைச்சிருக்கான்..’ ரோஷப்பட்டு முடிவதற்குள்..

‘கிழவின்னு நினைச்சிருக்கான்..’ என்று அவளது மனம் பதிலளித்து தன் பங்குக்கு ‘கி,கி,’யென சிரித்து கடுப்பேற்றியது..

இவனை என்ன செய்தால் தேவலாம் என்ற யோசனையுடன் அவள் பார்க்க ஆசையுடன் அவன் பார்த்து வைத்தான்.. அத்துடனும் நின்று தொலைக்காமல் அவள் நெஞ்சைப் பிடித்துக்கொண்டு தூக்கிவாரிப் போட உட்காரும்படி கேள்வியொன்றையும் கேட்டு வைத்தான்..

# அத்தியாயம் 24

“என்ன்.. ன..? என்னை சைட் அடிக்கிறயா..?”

குறும்புடன் அவள் கேட்ட கேள்வியில் நிலை குலைந்து தூக்கி வாரிப் போட நெஞ்சைப் பிடித்தபடி கண்கள் நிலைகுத்த அமர்ந்து விட்டாள் நந்தினி..

“என்ன..?..?..?”

அப்போதுதான் சற்று நேரத்திற்கு முன்னால் அவன் கேட்ட..

‘என்ன்..ன..?’ விற்கு என்ன அர்த்தம் என்று அவளுக்கு உறைத்தது..

‘இதைத்தான் ‘என்ன்ன்..ன..’ன்னு கேட்டு வைச்சானா..?’

“மறுபடியும் கே.பி.சுந்தராம்பாளா..?”

‘இவன் மறுபடியும் என்னை கிழவியாக்கறானா..?’ அவள் பொங்கினாள்..

“ஹலோ சார்.. நீங்க இந்தியன் தாத்தாவா இருக்கிறதாலே உங்களை சைட் அடிக்கிறவ கிழவியாத்தான் இருக்கனும்னு அவசியமில்ல..” என்று பொரிந்து விட்டாள்..

அவன் கண்கள் மின்னின..

‘இது எதுக்கு..?’ அவள் நிதானித்தாள்..

“அப்போ என்னை சைட் அடித்ததை நீ ஒப்புக்கிற. .?” என்று அவன் கேட்டபோதுதான் யோசிக்காமல் வாய் விட்டுவிட்ட அவளின் தவறு புரிந்தது.. நாக்கைக் கடித்துக் கொண்டாள்..

‘இப்படியா பேசி வைப்பேன்..?’ அவள் முகம் செவ்வானமானது..

அதை ரசித்த அவன் பார்வையில் மனம் படபடத்தது..

“உன்னை கிழவியாக்கறதுக்காக கே.பி. சுந்தராம்பாளான்னு கேட்கலை.. அவங்க ‘என்ன, என்ன..’ன்னு ஒரு பாட்டுப் பாடியிருக்காங்க.. அதெல்லாம் உனக்கு எங்கே தெரியப் போகுது..?” மட்டம் தட்டுவதைப் போல அவளைச் சீண்டினான் ரவிச்சந்திரன்..

அதற்கு கைமேல் பலன் கிடைத்தது..

“ஆமாமாம்.. என்னைப் போல சின்னஞ்சிறுசுகளுக்கு அது தெரியாதுதான்... தடியூண்டற கிழவனான

உங்களுக்குத்தான் அது தெரியும்..” உதட்டைச் சுழித்து அழகு காட்டினாள் நந்தினி..

அந்த உதட்டுச் சுழிப்பில் அவன் பார்வை வட்டமிட்டது.. செம்பவள வாய் என்று நினைத்துக் கொண்டான்.. இயற்கையான சிகப்பழகுடன் இருந்த இதழ்களின் மீது முத்தமிடும் ஆசை அவனுக்குள் வந்தது.. அதை அறியாமல் ஒரு முழ நீளத்துக்கு முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு விரோதியைப் போல அவனை முறைத்தாள் அவள்..

“வாவ்..!” அவளது முக பாவனையை ரசித்தான் அவன்.. இதற்கு அவன் நான்கு மொத்து மொத்தி விடலாம் என்று அவளுக்குத் தோன்றியது.. இந்த இன்பமான இம்சையை அவளால் தாங்க முடியவில்லை.. அவள் ரத்தமும் சதையுமான மனுஷி..! உணர்ச்சிகள் இல்லாத ஜடமில்லை.. எவனோ ஒரு பெல்ட் மன்னனைத் திருமணம் செய்து கொள்ள அஞ்சி எவருக்கும் தெரியாமல் கேரளாவில் தலைமறைவாய் வேலை பார்க்க ஓடிக் கொண்டிருப்பவளுக்கு வழித் துணையாக அவளுக்கு வேலை கொடுக்கப் போகும் முதலாளியே வருவதில் அவளுக்கு சந்தோஷம்தான்..

ஆனால் அந்த முதலாளி ஆளை அயர வைக்கும் ஆணழகனாக.. காந்தமென ஈர்க்கும் பார்வை கொண்டவனாக.. கன்னி மனதை சலனப் படுத்தும் வசீகரம் நிறைந்த வசியக்காரனாக.. அவள் மனதை புயலில் சிக்கிய பட்டம் போல அலைக்கழிப்பதில் துளிகூட சந்தோஷமில்லை.. பயமாக இருந்தது..

அவனது ஆண்மைத்தனம் நிரம்பிய கம்பீர கவர்ச்சிகரமான அழகில் அவள் மனம் மயங்கினாள்.. அவனைக் கள்ளப் பார்வை பார்த்து மாட்டிக் கொண்டாள்.. அவன் அதை கண்டு பிடித்து விட்டபோது ஆமாம், அப்படித்தான் என்று ஒப்புக் கொள்ளும் தெம்பு அவளிடம் இல்லை.. எப்படித் தெம்பு வரும்..?

அவனோ அவளின் முதலாளி..! அவள் நினைத்துப் பார்க்கக் கூட முடியாத உயரத்தில் இருக்கும் கோடிஸ்வரன்.. அவளுடைய நெருக்கடியான நிலையில் உதவிக் கொண்டிருக்கும் தொழிலதிபன்..

அவனைச் சற்றுப் பொழுதிற்கு முன்புதான் அவள் சந்தித்திருக்கிறாள்.. சந்தித்த வேளையில் சிந்திக்கவே இல்லாமல் அவனை ‘யார் நீ’ என அரட்டி வைத்தாள்..

அலட்டிக் கொள்ளாமல் அவன் தான் யார் என்பதைத் தெரியப்படுத்தி விட்டு பதிலுக்கு அவளைப் பாடாய்ப் படுத்திக் கொண்டிருக்கிறான்..

பார்த்தவுடன் அவன் மேல் 'ஓர் இது..' வராவிட்டாலும்.. அவனைப் பார்க்கப் பார்க்க 'ஓர் இது..' வருவதை அவளால் தடுக்க முடியவில்லை.. அழகான பெண்களை ஆண்கள் உற்றுப் பார்த்து 'செம ஃபிகர்..' என்று மனதுக்குள் சொல்லிக் கொள்ள உரிமையிருக்கும் போது.. அழகான ஆண்களை அவர்கள் பார்க்காத போது பார்த்து 'செம ஹேண்ட்சம்' என்று பெண்கள் மனதுக்குள் ஜொள்ளிக் கொள்ள உரிமையில்லையா..?

நந்தினி மனதுக்குள் உரிமைக்குரல் எழுப்பிக் கொண்டிருந்தபோது..

"தடியூண்டற கிழவனையா அந்தப் பார்வை பார்த்த..?" என்று பரிகாசமாகக் கேட்டு அவளைப் பதற வைத்தான் ரவிச்சந்திரன்..

"இங்கே பாருங்க.." நந்தினி சமரசம் பேச முயல..

"நீ என்னை சைட் அடித்ததைப் போல நானும் உன்னை சைட் அடிக்கலாம்ங்கறியா..? வெரிகுட்.." என்று மெச்சிப்

போனவனாக அவளை மேய்ச்சல் பார்வை பார்த்து அரள வைத்தான் ரவிச்சந்திரன்..

“ஹையையோ..” அவள் பதறினாள்..

“என்ன ஆச்சு..?” கரிசனத்துடன் அவன் வினவினான்..

“எந்தா சாரே இது..! இங்கே பாருங்கன்னு சொல்லிட்ட கொடுமைக்கு இப்படிப் பார்த்து வைக்கறிங்களே.. தாங்க மாட்டேன் சாரே..” அழ மாட்டாத குறையாக அவள் மன்றாடினாள்..

அவனது குசும்பைத் தாள முடியாத அந்த குழந்தை மனதுக்காரியை அலற வைத்துப் பார்ப்பதில் அவனுக்கு ஆனந்தம் உண்டானது.. அவன் டாவடிக்கிறான் என்று அறியாமல் முகம் சிவக்கக் கெஞ்சிக் கொண்டிருந்தவளை விழியோடு விழிகலக்க ஆழமாக ஓர் பார்வை பார்த்து வைத்தான்..

“வேண்டாம் சாரே..” அவள் கையெடுத்து கும்பிடு போட்டாள்..

“அது என்ன ‘சாரே..’ன்னு விளிக்கிறது..? ஒழுங்கா மலையாளத்தில சம்சாரிக்கிறதுன்னா சம்சாரிக்கனும்..

இல்லைன்னா சம்சாரிக்காம இருக்கனும்..” வேண்டுமென்றே அடுக்கினான்..

“என்னது..? சம்சாரமா..?” அரண்டு விட்டாள் நந்தினி..

“அட..! இந்த சம்சாரிக்கிறதுங்கிறது வேற.. பேசறதுன்னு அர்த்தம்.. வொய்ஃபுன்னு அர்த்தமில்ல..” சிரிக்கும் கண்களுடன் விளக்கம் சொன்னான்..

“அப்பாடி..” நிம்மதிப் பெருமூச்சு விட்ட நந்தினியை கூர்ந்து பார்த்தான்..

‘இவன் பார்வையே சரியில்லையே..’

அடுத்து என்ன சொல்லப் போகிறாளோ என்ற திகில் நந்தினிக்குள் பரவியது..

“வொய்ஃபுன்னு சொன்னா இப்படி அலறுகிறயே.. காலம் பூராவும் கல்யாணம் பண்ணிக்காமலே இருக்கப் போகிறயா..? யாராவது ஒருத்தருக்கு வொய்ப் ஆகித்தானே ஆகனும்..?” நிதானமாக வினவினான்..

“அதுக்கு..?”

“எதையுமே வேணாம்ன்னு நினைச்சா வேணாம்ன்னுதான் தோணும்.. அதுவே அடிமனசில

ஆழப்பதிஞ்சு போயி விலக்கி வைச்சிரனும்ங்கிற முடிவு உண்டாகிரும்..”

“இப்ப நீங்க தெளிவாய் பேசக் கூடாதுங்கிற முடிவோட இருக்கீங்களா..? சொல்கிறதைத் தெளிவாச் சொல்லுங்க பாஸ்..”

“பாஸ்..?”

“யெஸ்.. பாஸ்..”

“கொள்ளைக் கூட்டத் தலைவனாக்கறதிலேயே குறியாய் இருக்க..”

“நீங்க மட்டும் என்னவாம்.. உங்ககிட்ட வேலை பார்க்கக் கூடாதுன்னு நான் டிரெயினை விட்டுக் குதிச்சு ஓடிரனும்ங்கிறதிலேயே தானே குறியாய் இருக்கீங்க..”

அவள் சிணுங்கினாள்.. அந்தச் சிணுங்கலில் வெளிப்பட்ட சிருங்காரத்தில் மனம் லயித்தான் ரவிச்சந்திரன்.. எதிரிலிருந்த அந்தச் சின்னப் பெண்ணின் ஒவ்வொரு அசைவும் அவனை வசீகரித்தன.. அவள் உதிர்க்கும் ஒவ்வொரு வார்த்தைகளும் துடிப்புடன் இருந்தன.. குறும்புத்தனம் மிக்க அந்த துறுதுறுப்புக்காரி அவனை ஈர்த்தாள்.. அந்த வசீகரியுடன்

பேசிக் கொண்டிருந்தாலே போதும் என்று இருந்தது அவனுக்கு.. அங்கே ஓர்விதமான ரம்யம் பரவியிருந்தது.. அதை உணராமல் அவள் தலையைத் தலையை ஆட்டிப் பேசியபோது கூடவே ஆடிய ஜிமிக்கிகளின் அழகு அவனைக் கிறங்கடித்தது.. அடிக்கடி ஒய்யாரமாக தலை சாய்த்து அவள் பார்க்கும் பார்வை எவராலும் வீழ்த்த முடியாத அந்த இரும்பு மனிதனை வீழ்த்த யத்தனித்தது..

அவளையே குறுகுறுவென்ற பார்த்த அவனது பார்வை அவளை என்னவோ செய்து தடுமாற வைத்தது.. ஒரு ரோமானியப் பேரரசனைப் போன்ற கம்பீர வனப்புடன் இருப்பவன் எதிரில் அமர்ந்து இப்படிக் குறுகுறுவெனப் பார்த்துக் கொண்டிருந்தால் இளம் வயதுப் பெண்ணானவள் எவ்விதச் சலனமுமின்றி இயல்பாக கலந்துரையாட முடியுமா..?

அவளென்ன முற்றும் துறந்த துறவியா..?

என்னவோ அவளின் போதாத காலம்.. சர்வாதிகாரத் தகப்பனுக்கும் சிந்திக்காமல் வாக்குக் கொடுக்கும் தாய்க்கும் மகளாக ஜனித்து விட்டாள்.. கூடப் பிறந்த குறும்புக்காரன் இருக்கப் போய் பெல்ட் மன்னனைப் பற்றிய விவரங்களை

அறிந்து தப்பித்து வந்திருக்கிறாள்.. இல்லையென்றால் அவள்கதி என்னவாகியிருக்கும்..? வாழ்நாள் முழுவதும் பெல்ட்டை எங்கே ஒளித்து வைப்பது என்ற தேடுதலிலேயே காலம் கழிந்திருக்காதா..?

மற்றபடி அவளென்ன திருமணமே பண்ணிக் கொள் மாட்டேன் என்று சபதமா செய்திருக்கிறாள் ..?

‘எல்லாம் இந்த அம்மாவாலே வந்தது.. சைல்டுட் ஃபிரண்டுகூட மணல் வீடு கட்டி விளையாடக் கண்டிருக்கோம்.. கண்ணாமூச்சி விளையாட்டை விளையாடக் கண்டிருக்கோம்.. இன்னும் கிச்சுக்கிச்சுத் தாம்பாலம், பாண்டின்னு எத்தனை விளையாட்டு இருக்கு.. அது அத்தனையையும் விட்டு விட்டு நீயும் நானும் சம்பந்திகளா ஆவோம்ன்னு சத்தியமா பண்ணக் கண்டிருக்கோம்..?’

வெண்ணிலாவை மனதுக்குள் தாளித்துக் கொட்டினாள்.. தாய் செய்துவிட்ட சதியை நினைத்துப் பொருமிக் கொண்டிருந்தவளை அவன் உற்று உற்று பார்த்து வைத்தான்.. அவளுக்கு தொண்டை உலர்ந்தது..

‘இருக்கிற இம்சையில இவன் வேற புது இம்சையைக் கிளப்பறானே..’ அவளுக்கு முகத்தைப் பொத்திக் கொள்ள வேண்டும் போல இருந்தது..

அந்த இம்சை சுகமான இம்சையாக இருந்து வைத்ததில் அவளுக்குள் பயம் கிளர்ந்தது..

இது இப்படியே நீடித்தால் அவள் என்ன ஆவாள்..?

“என்ன சாரே..? இப்ப நீங்க என்னை சைட் அடிக்கறீங்களா..?” என்று கேட்டு விட்டாள்..

அவன் விழிகள் ஒளிர்ந்தன.. தீட்சண்யம் மிக்க அவன் விழிகளை நேருக்கு நேர் பார்க்கத் திராணியில்லாமல் திணறிக் கொண்டிருந்தவளுக்கு அவனது விழிகளின் ஒளிர்வைக் கண்டதும் நடுக்கம் வந்தது..

‘இது எதுக்கு..?’

அவன்தான் அடுக்கடுக்காய் அடுத்தடுத்து இது எதுக்கு என்ற கேள்விகளை முன்னிருத்தி அவளைத் தாக்கிக் கொண்டிருக்கிறானே..

“சார்..” அவள் அழமாட்டாத குறையாக கெஞ்சினாள்..

“ம்ம்ம்..?” அவன் கேள்வியாக புருவங்களை உயர்த்தி அவளை வசியம் செய்தான்..

“நான் உங்களை நம்பி வீட்டை விட்டுக் கிளம்பி வந்திருக்கும் அபலை சார்.. அதை நினைவில வைத்துக்கங்க சார்..”

அவள் நினைவூட்டிய விதத்தில் அவனுக்கு சிரிப்பு வந்தது.. அவள்தான் அவனைச் சிரிக்க வைப்பதையே குறிக்கோளாய் வைத்திருக்கிறாளே.. அவளுடன் அவன் ஆடும் அந்தக் கண்ணாமூச்சி விளையாட்டு அலாதியானதொரு நுட்பம் நிறைந்த நுண்ணிய உணர்வுகளைக் கொண்டு வடிவமைக்கப் பட்டதாக இருந்தது..

அவளுடன் விளையாடும் அந்த உணர்வு பூர்வமான விளையாட்டை அவன் விரும்பினான்.. வசந்தகாலத்தை தன்னுடன் அழைத்து வந்தவளைப் போல அவள் அறியாமை நிரம்பிய பேரழகுடன் அவனைக் கண்ணி வைத்துக் கவர்ந்திழுத்தாள்.. வெடி வைத்த பூமிபோல அவன் மனது தடதடத்தது.. எவராலும் திறக்க முடியாத இரும்புக் கோட்டையான அவன் மனக் கதவை அவள் அநாசியமாக ஆட்டித் திறந்தாள்.. புயல் போன்றவனின் மனதில் தென்றலாய்

நிரம்பினாள்.. இச்சைகள் ஊடாடிய மனதில் அன்றில் பறவையாய் சிறகடித்து யாழின் இசையென மையம் கொண்டாள்.. இவை அனைத்தையும் ஏதுமறியாத அப்பாவியாக, சூட்சுமம் தெரியாத சிறு மழலையாக அவள் செய்து கொண்டிருந்ததில்தான் அவன் ஈர்க்கப்பட்டான்.. அவள் முகத்திலிருந்த கள்ளம் கபட மற்ற தன்மையே அவனை அவள் பால் ஈர்த்து ஆகர்ஷித்தது..

“ஸோ.. நீ என்னை நம்பி என் பின்னால் வந்துக்கிட்டு இருக்க..?” வேண்டுமென்றே வார்த்தைகளில் அழுத்தம் கொடுத்து

ஒரு மார்க்கமாக அவன் கேட்டதில் அவள் அரண்டு போனாள்..

“என்ன சார் இப்படி அரட்டறிங்க..?”

“நீ சொன்னதைத்தான் நான் சொன்னேன்.. மாற்றி யோசிச்சிருந்தா நீ ஏன்னு கேட்கறதில ஓர் அர்த்தமிருக்கு..”

“நான் இப்படியா சொன்னேன்..?”

அவள் திருதிருவென விழித்ததைப் பார்க்க அவனுக்கு வேடிக்கையாக இருந்தது.. சிரிக்காமல் அவன் முகத்தை

படுதீவிரமாக வைத்துக் கொண்டான்.. குழப்பத்துடன் அவனைப் பார்த்தவளிடம் புருவங்களை உ யர்த்தினான்..

“இப்படிச் செய்யாதீங்க சார்..” அவள் வேண்டிக் கேட்டுக் கொண்டாள்..

“ஏன்..?” மறுபடியும் அவன் புருவங்களை உயர்த்தினான்.. ஹையோ என்றிருந்தது அவளுக்கு.. ரவிச்சந்திரன் புருவங்களை உயர்த்தும்போது அவளை அயர வைக்கும் கவர்ச்சியோடு மனதைக் கலங்கடிக்கிறான் என்ற உண்மையை எப்படி அவனிடம் சொல்வது..?

சாதாரணப் பேச்சே இங்கே வில்லங்கமாக ஆகிக் கொண்டிருக்கிறது.. இதில் உன்னிடம் மயங்குகிறேன் என்பதை அப்பட்டமாக ஒப்புக் கொள்ளும் பேச்சைப் பேசினால் என்ன ஆவது..?

‘நந்தினி.. யோசிச்சுப் பேசுடி..’ அவளது மனம் கிடுகிடுத்தது..

“பாருங்க சார்..” அவள் மறுபடியும் வாய் விட்டுத் தொலைக்க அவன் கண்கள் மின்னின..

“அச்சச்சோ..” அவள் தவறை உணர்ந்து கைகளை உதற ஆரம்பிக்கும் போதே அவன் அவளை சுண்டியிழுக்கும் பார்வையைப் பார்க்க ஆரம்பித்திருந்தான்.

அவளை பயமுறுத்தி அலற வைக்கும் விளையாட்டை அவன் விளையாடிக் கொண்டிருந்தபோது அவன் எதிர்பாராத காரியத்தைச் செய்து வைத்தாள் நந்தினி..

ரயிலின் மரச்சுவரின் பக்கமாக திரும்பி தலையை ‘ணங், ணங்..’ கென்று அவள் முட்டிக் கொள்ள..

“ஹேய்.. என்ன செய்கிற..?” என்று ஆச்சரியப் பட்டான் ரவிச்சந்திரன்..

“பார்த்தாத் தெரியலையா..? முட்டிக்கறேன்..” திரும்பிப் பார்க்காமல் சொன்னாள் நந்தினி..

“முட்டாளா நீ..? டிரெயினில முட்டிக்கற..?”

“வேற என்ன சார் செய்யறது..? இதுக்குன்னு மொட்டைச் சுவரைத் தேட டிரெயினை விட்டுக் குதிக்கவா முடியும்..?”

அவள் அளித்த விளக்கத்தில் அவன் “ஹா.. ஹா..” வென சிரிக்க ஆரம்பித்தான்.. அந்தச் சமயம் பார்த்துக் கேபின் கதவைத் திறந்து உள்ளே வந்த டி.டி.ஆர்

அவனையும் அவளையும் ஒரு மார்க்கமாக பார்த்து வைத்தார்..

# அத்தியாயம் 25

**டி**.டி.ஆர் பார்த்த அந்தப் பார்வையில் நந்தினிக்கு இன்னும் கொஞ்சம் முட்டிக் கொள்ளலாம் போல இருந்தது.. ரவிச்சந்திரனோ டி.டி.ஆரின் பார்வையில் பாதிக்கப் படாதவனாக இயல்பான பார்வையுடன் அவனுடைய டிக்கெட்டை எடுத்துக் கொடுத்தான்.. இப்படியுமா ஒருவன் இருப்பான் என்ற மனக் குமுறலுடன் இருந்த நந்தினியைப் பார்த்து என்னவென்று வினவும் விதமாக புருவங்களை உயர்த்தித் தொலைத்தான்..

‘டேய்ய்.. ஏற்கனெவே டி.டி.ஆர் ஒரு மார்க்கமாகப் பார்த்துக்கிட்டு இருக்காண்டா.. இப்படிப் பண்ணித் தொலைக்காதே..’

நந்தினி வெளிப்படையாகத் தலையில் அடித்துக் தொலைக்க அவளை விசித்திரமாக பார்த்த டி.டி.ஆர் ரவிச்சந்திரனைக் கேள்வியாக பார்த்து வைத்தார்..

‘இந்தாளுக்கு இருக்கிற குசும்பைப் பாரேன்.. நான் தலையில அடிச்சுக்கிட்டா.. என்கிட்ட என்னன்னு கேட்காம அவனைப் பார்த்து வைக்கிறாரு..’ நந்தினி வெகுண்டாள்..

ரவிச்சந்திரன் வெகு சுவாதீனமாக வலது கையின் ஆள்காட்டி விரலை அவனது நெற்றிக்கு அருகே கொண்டு சென்று காற்றில் வட்டமிட்டுக் காண்பித்தான்.. நந்தனி கொதித்துப் போனாள்..

‘எப்படி சமிக்ஞை காட்டறான் பாரு.. எனக்குப் புத்தி சரியில்லையா..? புத்தி சுவாதீனம் இல்லாதவளுக்குத்தான் இவன் வேலை கொடுத்திருக்கிறானா..?’

கோபத்துடன் அவனை அங்கம் அங்கமாகக் கழற்றிக் கடாசிவிடும் வசவு வார்த்தைகளை பேசிவிட வேண்டும் என்று அவள் வாயைத் திறந்தால் காற்றுத்தான் வந்து தொலைத்தது.. உணர்ச்சிக் கொந்தளிப்பில் அவளால் பேச முடியவில்லை..

“பாவம்..”

அவள் படும் பாட்டைப் பார்த்து விட்டு திருவாய் மலர்ந்தருளினார் டி.டி.ஆர்.. நந்தினியின் கோபம் அவர் பக்கம் திரும்பியது..

‘இந்த ஆளெல்லாம் பாவம் பார்க்கும் நிலைமையிலா நானிருக்கேன்..?’

வார்த்தைகள் வராமல் அவள் தவித்துக் கொண்டிருக்க..

“டிக்கெட்..” என்று அவளிடம் கை நீட்டினார் டி.டி.ஆர்.. அவள் இருந்த இருப்பில் டிக்கெட்டைத் தேடியடுக்க முடியவில்லை.. டி.டி.ஆரையும், ரவிச்சந்திரனையும் ஓர சேர முறைத்தபடி அவள் ஹேண்ட்பேகைத் தலைகீழாக பிடித்தபடி ஜிப்பைத் திறக்க முயல.. அங்கு இல்லாத ஜிப் அவள் கைக்கு அகப்படுவேனா என்று போக்குக் காட்டி அலைக்கழித்தது..

“அறிவாளி..!”

அவள் தலையில் குட்டு வைத்தான் ரவிச்சந்திரன்..

‘என்னது..!’ நம்பமுடியாத திகைப்புடன் தலையைத் தடவியபடி அவனை ‘ஙே..’ என்று பார்த்து வைத்தாள் நந்தினி..

“புத்தகத்தைத்தான் தலைகீழா பிடித்துப் படிக்கிறேன்னா ஹேண்ட் பேகையும் தலைகீழே பிடித்துக்கிகிட்டு ஜிப்பைத் தேடறியே.. இங்கே கொடு..”

வெகு சுவாதீனமாக அவள் பக்கத்தில் உட்கார்ந்து ஏறக்குறைய ஹேண்ட் பேகை அவளிடமிருந்து பறித்துத் திறந்து அதிலிருந்த டிக்கெட்டை எடுத்து டி.டி.ஆரின் கையில் கொடுத்தான்.. அவர் வந்த வேலையைக் கவனிக்காமல்

டிக்கெட்டை விட்டுவிட்டு நந்தினியை ஆராய்ச்சிப் பார்வை பார்த்துக் கொண்டிருந்தாள்..

“புத்தகத்தைத் தலைகீழா பிடிச்சுப் படிச்சாங்களா..?”

“ஆமாம் சார்..”

“பத்திரமாப் பார்த்துக்கங்க சார்..”

“அதுக்குத்தானே கூட இருக்கேன்..”

ரவிச்சந்திரன் கூறியதில் சமாதானம் அடைந்தவராக நந்தினியின் டிக்கெட்டையும் அவளையும் மாறி மாறிப் பார்வையிட்டு விட்டு அந்த இடத்தை விட்டு அகன்றார் டி.டி.ஆர்..

அவர் போனதும் ரவிச்சந்திரனைப் பிலுபிலுவென பிடித்துக் கொண்டாள் நந்தினி.. எப்படி அவன் ‘ஹா..ஹா..’ வெனச் சிரிக்கலாம்..? அதனால்தானே டி.டி.ஆர் அந்தப் பார்வை பார்த்தார்.. அவரிடமும் என்னவென்று கேட்காமல் எதுவுமே நடக்காததைப் போல எப்படி டிக்கெட்டை எடுத்துக் கொடுக்கலாம்.. அதனால்தானே அவள் தலையில் அடித்துக் கொள்வதைப் போல ஆனது..? அதற்கும் அவள்.. புத்தி சுவாதீனமில்லாதவள் என்று அவன் பட்டம் கட்டுவதா..?

“கூல்.. கூல்..” சிரித்தவன்..

“நீ பண்ணி வைக்கிற வேலைக்கு என்ன சொல்லச் சொல்கிற..?” என்று கேட்டான்..

“என்ன பண்ணி வைத்தேன்..?” ரோஷத்துடன் மூச்சிரைத்தாள் நந்தினி..

“என்ன பண்ணி வைக்கலேன்னு கேளு.. பெட்டியில் தலையை மோதிக்கிற.. டி.டி.ஆர் பார்த்துக்கிட்டு இருக்கிறப்பவே தலையில அடிச்சுக்கிற.. அந்த மனுஷனுக்கு என்னன்னு விளக்கம் சொல்றது..?”

“சும்மாதான்னு சொல்ல வேண்டியதுதானே..”

“சும்மாதான்னு சொன்னா அவர் வேறவிதமா அர்த்தப் படுத்திக்குவார்.. பரவாயில்லையா..?”

“வேற விதம்ன்னா..?”

அவள் புரியாமல் கேட்டு வைத்தாள்.. ஏதுமறியாத அவளது சுபாவத்தில் அவன் மனம் பூவின் வாசனையை நுகர்ந்தது.. அவளைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் போல இருந்தது.. பார்த்தான்.. அவள் முகம் சிவந்தாள்.. அவன் மனதுக்குள் சந்தோஷத்தின் சாரல் விழுந்தது..

“வேற விதம்ன்னா என்ன விதம்ன்னு உனக்குப் புரியலையா..?”

ஊடுறுவும் பார்வையுடன் கேட்டான்.. ஊடுறுவிய அவனது பார்வையில் அவள் வயிற்றில் பட்டாம் பூச்சிகள் பறந்தன.. வெகு அருகில் அவளை ஒட்டி அவன் அமர்ந்திருந்ததில் திணறிப் போனாள்.. தள்ளி இருக்கும் போதே அவளை மயக்கிய அவனது கம்பீ ர அழகு.. பக்கத்தில் ஒட்டி இருந்ததில் பாடாய் படுத்தி எடுத்தது.. அலையில் சிக்கிய துரும்பைப் போல அலைக்கழிந்தது அவளது மனது.. அவனது அருகாமையில் மனம் மயங்குவதை வெளிப்படுத்தாமல் இருப்பதற்கு வெகுவாக அவள் சிரமப்பட்டாள்.. பெருத்த சோதனையாக இருந்தது.. அவன் விழிகளை நேருக்கு நேர் சந்திக்கும் தெம்பு வரவில்லை..

“புரியலை..” அவள் விழிகளைத் தாழ்த்திக் கொண்டாள்.. படபடக்கும் இமைகளுடன் சித்திரம் போல அமர்ந்திருந்தவளைக் கட்டிப் பிடித்து உதடுகளில் முத்தம் பதிக்க வேண்டும் போல அவனுக்குள் உணர்வுகள் கிளர்ந்தன.. அவன் விழிகளில் தெரிந்த வேட்கையில் அவள் நடுங்கி விட்டாள்.. இப்படி அவன் பார்த்தால் அவள் என்னாவாள் என்று அவன் யோசிக்க வேண்டாமா..?

அவனுக்கென்ன.. பார்த்து விடுவான்.. பற்றிக் கொள்ளும் சருகாக பலவீனமடைவது அவளது பெண்மனமல்லவா..?

தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டு அவள் நகர்ந்து உட்கார முயன்றாள்.. ஜன்னலின் ஓரமாக அவள் ஒன்றியிருந்தால் அவளால் நகர முடியவில்லை.. மூலையோடு மூலையாக புதைந்தாலும் இம்மியளவுதான் விலக முடிந்தது..

லேசாக நகர்ந்தாலும் போதும.. அவன் அவளை உராய்ந்து விடுவான்.. அதை அவன் செய்து விடுவான் என்பதை அவன் பார்வையில் உணர்ந்தவளுக்கு இதயம் தடதடத்தது..

ரவிச்சந்திரன் அவளது பயத்தை உணர்ந்திருந்தான்.. முயல் குட்டியின் மருண்ட பார்வையோடு அவள் நடுங்கிய விதம் அவன் மனதுக்குள் இதத்தைப் பரப்பியது.. எந்தவித ஒப்பனையும் இல்லாமல் இயற்கையான பேரழகோடு அவள் இருந்தாள்.. கூடவே அவளது அதீத அழகை அறியாத அறியாமையுடன் இருந்தாள்.. அதுதான் அவனை வசப்படுத்தியது..

கொடி போன்ற உடலும் கச்சிதமான முக அமைப்புமாக அவள் அவனைக் கவர்ந்திழுத்தாள்.. அவள் மீதிருந்து வந்த

பிரத்யேக நறுமணம் அவன் நாசியில் புகுந்து கிறங்கடித்தது.. கட்டுப்பாட்டை இழக்காமல் இருக்க அவன் பிரயத்தனங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது.. இதுவரை எந்தப் பெண்ணும் இந்த அளவுக்கு அவனை பாதித்ததில்லை.

“உனக்குப் போய் கல்யாணம் பேசியிருக்காங்களே..”

வழக்கமான கேலிக்கு அவன் திரும்பி விட்டதில் அவள் நிம்மதியடைந்தாள்.. அவன் கேலியாக அவளை பார்த்தபடி..

“இது கூடப் புரியலைங்கறியே.. மக்கு..! அவர் நம்மை லவ்வர்ன்னு நினைத்திருப்பார்..”

இதைச் சொல்லும் போது அவளையே கூர்மையாக பார்த்தபடி சொல்லி வைத்தான்.. திகைத்து பின் வெட்கிப் போனவளால் அவன் முகத்தைப் பார்க்க முடியவில்லை.. அவள் மனது பலஹீனமானது..

“அதுக்காக இப்படியா சொல்லி வைப்பீங்க..?” அவன் முகத்தைப் பார்க்காமல் முணுமுணுத்தாள்.

“வேற எப்படிச் சொல்கிறது..? நீயே சொல்லு..” மென்மையான மயக்கும் குரலில் கேட்டான்..

அதைத் தாங்க இயலாதவளாய் சலனத்துடன் கண்களை இறுக மூடித் திறந்தாள் நந்தினி.. அவளால் அவளுக்குள் என்ன நடக்கிறது என்று புரிந்து கொள்ளவே முடியவில்லை.. சற்று முன்தான் பார்த்த கண்டிப்பு நிறைந்த கம்மாண்டரிடம் அவள் மனம் மயங்குவதா..? அத்தனை பலஹீனமானவளா அவள்..? அவனோ அகந்தை மிகுந்தவன்.. ஆணவக்காரன்.. அவளே சொன்னதைப் போல வில்லத்தனம் நிறைந்தவன்.. அவன் பொருள் புரியாத அவனது பார்வைகளுக்கும், மயக்கம் தரும் குரலில் அவன் பேசும் பேச்சுக்களுக்கும் அவள் இடம் தருவதா..? அவள் நந்தினிதானா..?

ஆணவமும் திமிரும் நிறைந்த அந்த கோடீஸ்வரனின் முகத்தில் அறைந்து நான் யார் என்று நினைத்தாய் என்று கேட்க வேண்டும் போல அவள் மனதுக்குள் கொதித்தாள்.. அதை செயல்படுத்த அவன் முகம் பார்த்தால் அவனது காந்தப் பார்வை அவளைக் கவ்வியிழுத்து அவள் கரங்களை விரித்து அவன் கழுத்தை வளைத்து அணைத்துக் கொள்ளத் தூண்டியது..

அவளது மனப் போராட்டத்தை அறிந்தவனைப் போல அவன் புருவங்களைச் சுருக்கி ஆழமான ஓர் பார்வையை பார்த்தான்.. அது அவளை சவாலுக்கு அழைத்து அவள்

மனதிடத்தை அசைத்துப் பார்த்தது.. அவள் பார்வையை அவன் பார்வை சிறை பிடிக்க முயன்றது..

‘நீ காதல் வலையிலே விழாமலே இருக்க முடியுமா..?’ என்று கெக்கலி கொட்டிச் சிரிப்பதை போல இருந்தது அவன் பார்வை..

‘காதலா..? இவன்மீதா..? குட்ஜோக்..’

அவன் மீது அவளுக்கு காதல் வந்து விட்டது என்பதே நந்தினிக்கு அபத்தமாக இருந்தது.. அவனைப் பார்த்தால் கொழுத்த பணக்காரனாக, உல்லாச மனப்பான்மை கொண்டவனாக.. அதே சமயத்தில் கறாரும், கண்டிப்பும் நிறைந்தவனாகத் தெரிந்தான்.. அவளோ பிடிக்காத திருமணத்திலிருந்து தப்பிக்க வீட்டை விட்டு ஓடி வந்திருக்கிறாள்.. தலைமறைவாக ஒதுங்கப் போகும் இடத்தில் வேலை கொடுத்திருப்பவனின் மீது காதல் வருமா..?

“ப்ளீஸ்.. நீங்க உங்க சீட்டுக்குப் போய் உட்கார்ந்துக்கங்களேன்..”

தன் சக்தியையெல்லாம் திரட்டி அவள் சொல்லி விட்டாள்..

“ஏன்..?” அவன் ஏதுமறியாதவன் போல கேட்டு வைத்தான்..

“எனக்கு இங்க கம்பர்டபிளா இருக்கு..” என்றும் சொல்லி வைத்தான்..

“பட்.. எனக்கு கம்பர்டபிளா இல்லை..” அவள் எரிச்சலுடன் சொன்னாள்..

“வாட்.. ஃபார்..?” அவன் இதற்கும் புருவங்களை உயர்த்தி அவளை இம்சித்தான்..

“எதுக்காகன்னா கேட்கறிங்க..?” அவளுக்கு பற்றிக் கொண்டு வந்தது..

நான் பஞ்சுடா.. நீ நெருப்புடா.. பக்கத்தில வந்து உரசாதே.. பற்றித் தொலைத்திரும்ன்னு அவனிடம் சொல்லவா முடியும்..?

சொன்னால் அவன் அதற்கும் ஏதாவது வியாக்கினம் பேசி வைப்பான்..

‘என்னத்தைச் சொல்றது..?’ அவள் யோசித்துக் கொண்டிருக்கும் போதே அவன் நிறுத்தி, நிதானமாக, தெள்ளத் தெளிவாக..

“தப்புத் தண்டா நடந்திரும்ன்னு பயப்படறியா..?” என்று கேட்டு அவளை மிரள வைத்தான்..

“தப்புத் தண்டாவா..?” மிரட்சியுடன் அவள் துள்ளி எழுந்து கொள்ளப் போனாள்..

“வெயிட்.. வெயிட்.. நானே போயிடறேன்.. என் பெட்டியும் லேப்டாப்பும் அந்த சீட்டிலதான் இருக்கு.. நீ அங்கே போனா அதையெல்லாம் நான் இங்கே கடத்தனும்.. நீயும் உன் திங்ஸை அங்கே கடத்தனும்.. எதுக்கு வெட்டி வேலை..” என்றபடி அவளைத் தடுக்கும் விதமாக கையைப் பிடித்து விட்டான் அவன்..

அவனது ஸ்பரிசம் அவளுக்குள் மின்சாரத்தைப் பாய்ச்சியது.. அவனது தொடுகையைத் தாங்க முடியாமல் தடுமாறினாள்.. கீழே விழப் போனாள்.. அவன் தாங்கிப் பிடித்துக் கொண்டான்.. அவள் அதிர்ந்தாள்.. அதுவரை உணர்ந்தறியாத ஆணின் அனைப்பை உணர்ந்ததில் செய்வதியாமல் திகைத்து வளைத்த அவன் கைகளில் வளைந்து சரிந்து அவன் முகம் பார்த்தாள்.. இருவரின் பார்வைகளும் கலந்தன.. எப்படி அவனை விட்டு விலகுவது என்ற பரிதவிப்பை அவள் விழிகளில் பார்த்தவன்.. “அப்படியே

தமிழ் சினிமா போலவே இருக்கில்ல..” என்று இமைகளைச் சிமிட்டினான்..

‘அப்பாடி..’ அவளது இதயத் துடிப்பு சீரானது..

அந்த நிகழ்வையும் அவன் கிண்டல் செய்வதைப் போல பேசி வைத்ததில் அவனை விட்டு விலகி நிற்பது அவளுக்கு எளிதானதாக இருந்தது.. ஆழமான மூச்சுக்களை இழுத்து விட்டபடி முகம் சிவக்க அவன் முகத்தைப் பார்க்காமல் நின்றிருந்தவளை ஆழ்ந்து பார்த்தபடி அவன் எதுவுமே நடக்காததைப் போல எதிர்சீட்டுக்குப் போனான்..

தன் சீட்டில் அமர்ந்து கொண்ட நந்தினியின் உடலில் ஏற்பட்டிருந்த நடுக்கம் அடங்க வெகு நேரமானது.. முன்பு போலப் புத்தகத்தை முகத்துக்கு நேராக மறைத்துப் பிடித்தபடி அடிக் கண்ணால் அவனைப் பார்த்தாள்.. இந்த முறை புத்தகத்தைப் பிடிக்கும் போதே அது தலைகீழாக இருக்கிறதா.. இல்லை.. நேர்வாக்கில் இருக்கிறதா என்பதை உறுதிப்படுத்திக் கொண்டாள்.. இயல்பாக லேப் டாப்பை விரித்தவனைப் பார்த்தவளுக்குள் ஏமாற்றம் குமிழிட்டது.. அவளை ஒரு ஆட்டு ஆட்டி வைத்த அந்த அணைப்பு அவனைத் துளியளவும் பாதிக்கவில்லையா..?

பெட்டியின் கதவு தட்டப்படும் ஒலியில் நிமிர்ந்தவள்..

"கதவை யார் பூட்டினது..?" என்று சிடுசிடுத்தாள்..

"நானில்லை.. உன் பக்கத்தில்தானே இருந்தேன்..? எப்ப எழுந்து போய் கதவைப் பூட்டினேன்..?"

'உன் பக்கத்தில்' என்பதை அழுத்தமாக அவள் விழியோடு விழி கலக்க ஊன்றிப் பார்த்தபடி சொன்னவனை என்ன செய்தால் தகும் என்ற கொதிப்பு அவளுக்குள் வந்தது..

'என் பக்கத்தில் உட்கார்ந்துதானே இருந்தான்..? அதை ஒழுங்காச் சொல்லித் தொலைக்கிறதுக்கு என்னவாம்..' வெட்கத்தில் அவள் முகம் கன்றி விட்டது.. அதை மறைக்க..

"திறந்திருக்கிற கதவை ஏன் தட்டறாங்க..?" என்று சிடுசிடுத்தாள்..

"மேனர்ஸ் தெரிஞ்சவங்களா இருக்கும்.. உள்ளே வரலாமாங்கிறதை விரல் நுனியால் கதவில் தட்டி பெர்மிஷன் கேட்கிறாங்க.." என்றான் அவன்..

"அப்ப எனக்கு மேனர்ஸ் இல்லைங்கறிங்களா..?" சொல்லத் தெரியாத கோபத்துடன் மொட்டைத் தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சுப் போட்டுப் பாய்ந்தாள் நந்தினி..

“இப்ப எதுக்காக இந்த கோபம்..? உன்னை எதுவும் சொன்னேனா..?” வசீகரமாக புருவங்களை உயர்த்தி அவளைக் கிறங்கடித்தவன்..

“யெஸ் கமின்..” என்று குரல் கொடுத்தான்..

“ஃபுட் வேணுமா சார்..” ரயில்வே கேண்டினின் ஊழியன் ஒருவன் உள்ளே நுழைந்து மரியாதையுடன் கேட்டான்..

“ம்ம்ம்..” என்ற ரவிச்சந்திரன் அவளுக்கு என்ன வேண்டும் என்று கேட்பான் என்று எதிர்பார்த்தாள்..

ஊஹும்.. அவன் ஒப்புக்குக்கூட அவளுக்கு என்ன வேண்டும் என்று கேட்கவில்லை.. அவள் இருந்த திசைப்பக்கமே திரும்பாமல் வேண்டியதை ஆர்டர் செய்து விட்டு அனைத்திலும் இரண்டு பிளேட் வேண்டும் என்று சொல்லி அனுப்பி வைத்தான்.. கேண்டின் ஊழியன் போகும்வரைத் தாக்குப் பிடித்த நந்தினி, அவன் தலை மறைந்ததும் வெடித்தாள்..

“ஹலோ.. எனக்கு என்ன வேணும்ன்னு கேட்டிங்களா..?”

அவளது கோபத்தில் துளியும் பாதிக்கப்படாதவனாக அவன்..

“உனக்கு என்ன வேணும்ன்னு உனக்குத் தெரியும்ங்கறியா..? சிரிப்பு மூட்டாம சும்மாயிரு.. ருசியான ஃபுட் அயிட்டங்களைத்தான் ஆர்டர் பண்ணியிருக்கேன்.. நல்லாயிருக்கும்.. சாப்பிடு..” என்று லேப்டாப்பை விட்டு பார்வையை விலக்காமல் சொன்னான்..

“வாட்..!”

அவளைப் பற்றிய அவனது மதிப்பீட்டில் அவளது ரத்தம் கொதித்தது..

# அத்தியாயம் 26

'**இ**வன் ஆர்டர் கொடுத்திருக்கிற ஃபுட்டை கையால கூடத் தொடக் கூடாது.. என்னை பப்பா மாதிரி ட்ரீட் பண்றான்..'

மங்கம்மா சபதம், எங்கம்மா சபதம் என்ற பற்பல சபதங்களையும் மீறிய பலமான சபதம் ஒன்றைச் செய்தாள் நந்தினி..

அவள் யார் என்பதை உறுதிப்படுத்திவிட வேண்டும்.. பிடிக்காது என்றால் அவள் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டாள் என்பதைத் தெரியப் படுத்திவிட வேண்டும்.. உணவைக் கூட அவளது விருப்பப்படிதான் தேர்வு செய்வாள் என்பதை அவனுக்கு உணர்த்தி விடவேண்டும்..

இப்படிப் பற்பல வேண்டுதலை மனதுக்குள் அடுக்க அவனது மூக்கை உடைத்து விடவேண்டும் என்று அவள் கருவிக் கொண்டு இருந்தபோது சுவையான உணவின் மனம் அவளது உறுதியை உடைத்து நாசியில் நுழைந்தது..

'ம்ஹா..!' பசித்த வயிறின் ரோதனையை உணர்ந்திருந்த மூக்கு உணவின் வாசனையை கபக்கென்று கபாலிகரம்

செய்து இழுத்து தொண்டைக் குழிக்குள் இறக்கி வயிற்றுக்கு அனுப்பி வைத்தது..

வரிசை கட்டி வந்த தட்டுகளை அடுக்கி விட்டு கேண்டின் வேலையாள் போய்விட அவள் பக்கமாக தட்டுக்களை நகர்த்தினான் ரவிச்சந்திரன்..

“சாப்பிடு..”

‘வேண்டாம்..’ என்று சொல்லத்தான் வாய் திறந்தாள் நந்தினி..

வாயை விட்டு வார்த்தை வெளி வருவதற்குள் கை படுவேகமாக உணவு வகைகளை உள்ளே தள்ளினால் அவள் என்ன செய்வாள்..?

வீட்டுக்குத் திரும்பப் போவதில்லை.. தலை மறைவாக கேரளாவுக்குப் போகப் போகிறாள் என்ற உத்ராவின் ஏற்பாட்டை அறிந்ததிலிருந்து நந்தினி உருப்படியாக சாப்பிடவில்லை.. உத்ரா கவனித்தால் ஒரு இட்லியை பிய்த்து வாயில் போடுவாள்.. அவள் கவனிக்கவில்லையென்றால் அதுவும் உள்ளே போகாது.. கேரளாவுக்குக் கிளம்பும் நேரம் நெருங்க நெருங்க அதுவும் குறைந்து போனது.. என்னதான் வலுக்கட்டாயமாக சிரிப்பை வரவழைத்துக் கொண்டு

உத்ராவுடன் அளவளாவினாலும் அடிவயிறில் பயப்பந்து உருண்டு கொண்டே இருந்ததில் சாப்பாடு உள்ளே இறங்க வில்லை..

உத்ரா திருமண நாளை நெருங்கிக் கொண்டிருப்பவள்.. அனைத்து தெய்வங்களின் அனுகிரகத்தினால் மனம் போல் மாங்கல்யம் கிடைக்கப் பெற்றவள்.. அவளை விரும்பும் அவள் விரும்பும் வினித் அவளுக்குத் தாலி கட்டப் போகிறான்.. எதிர்காலக் கணவனுடன் நிகழ்காலக் காதலியாக அவள் ரகசிய சம்பாஷைனைகளும் கள்ளப் பார்வைகளுமாக சந்தோஷத்தில் மிதந்து கொண்டிருக்கிறாள்..

அந்த சந்தோஷத்தைக் கெடுக்கும் வகையில் நந்தினி அவள் தலைமீது பாரமாக ஏறி அமரக் கூடாது.. இது மட்டுமே நந்தினியின் மனதில் இருந்தது.. அதனால்தான் உத்ரா கை நீட்டிய இந்தப் பாதையில் துணிந்து நடைபோட ஆரம்பித்தாள்..

மற்றபடி பெல்ட் மன்னனுக்குப் பயந்து நடுங்கும் நந்தினி கேரள மலையின் எஸ்டேட்டில் வேலை பார்க்கப் போகிறேன் என்று கிளம்பி விடுவாளா என்ன..?

அந்த அளவுக்கு நந்தினி தைரியசாலியில்லை..

# எண்ணியிருந்தது ஈடேற... 1

மனதில் கிடுகிடுக்கும் பயத்தை மறைத்துக் கொண்டு தோழிக்காக சிரிப்பதைப் போல பாவனை செய்தபடி டாட்டா காண்பித்து விட்டு ரயிலில் ஒடுங்கிக் கொண்டு கிளம்பியிருக்கும் நந்தினிக்கு பசி வயிற்றைக் கிள்ளியதுதான்..

அதை உணராமல் அவள் டூப்ளிகேட் ரவிச்சந்திரனுடன் கலந்துரையாடி.. அவன் ஓடி மறைந்ததும் நியாயம் கேட்கிறேன் பேர்வழியென்று ஒரிஜினல் ரவிச்சந்திரனுடன் போராடி.. அது சொதப்பியதும் ஹி, ஹியென அசடு வழிந்து வெளிநடப்பு செய்து.. வாசலுக்குப் போய் காற்றாட மூச்சு வாங்கி.. அங்கும் தொடுத்து வந்த ரவிச்சந்திரனுடன் ஒரு இதுவாகி.. அது என்னவென்று தெரியாமல் இருக்கைக்கு திரும்பி வந்து.. இனம் புரியாத மயக்கத்திற்கு ஆளாகி.. அதை மறைக்க ரவிச்சந்திரனிடம் அவளுக்குப் பிடிக்கின்றதா என்று கேட்காமல் எப்படி உணவு வகைகளுக்கு ஆர்டர் கொடுக்கலாம் என்று போர்க்கொடி தூக்கி.. அதன் தொடர்ச்சியாக அவன் வரவழைக்கும் உணவு வகைகளை திரும்பியும் பார்க்க மாட்டேன் என்று மனதுக்குள் சூளுரைத்து.. என்று ஏகத்துக்கும் களைப்பாகி யிருந்தவளின் முன்னிலையில் ருசியை உணர்த்தும் வாசனையுடன் உணவு வகைகள் வரிசை கட்டித் தட்டுக்களில் வந்தால் சூளுரையைக்

காப்பாற்றவா தோன்றும்..? பாய்ந்து தட்டுக்களில் உள்ள உணவு வகைகளை காலி பண்ணத்தானே தோன்றும்..?

“பார்த்து.. தட்டுக்களையாவது மிச்சம் வை..”

ரவிச்சந்திரன் கேலியாகச் சொன்னான்..

‘இவன் வாங்கிக் கொடுத்தச் சாப்பாட்டை ரோஷமில்லாம இந்த வெட்டு வெட்டினா இப்படித்தானே சொல்வான்..’

அவளுக்காக கொடுக்கப் பட்டிருந்த அத்தனை உணவு வகைகளும் காலியான பின்பு அவளுக்குள் கோபம் மீண்டது.. அவனை சீற்றத்துடன் பார்த்தாள்..

“ஹப்பா..!” பயந்தவனைப் போல அவன் தோள்களைக் குலுக்கினான்.. கண்களில் மட்டும் மாறாத சிரிப்பு இருந்தது..

“அப்படியே அனல் பறக்குது.. ஏஸி கோச்சா இருந்ததினால தப்பிச்சேன்.. பட், எதுக்கு இந்த கோபம்..? டேஸ்ட்டான ஃபுட் வெரைட்டிஸுக்கு தேங்க்ஸ் சொல்ல வேணாம்.. முறைக்காம இருக்கலாமில்ல..”

“என் முறைப்பைக் கண்டு பயந்தவர்தான்.. ஃபிலிம் காட்டாதீங்க..”

“ஊஹும்..”

வழக்கமான அவனது டயலாக்கைச் சொல்லிவிட்டு வாய் விட்டுச் சிரித்தான்.. சிலிர்த்துக் கொண்டு சண்டை போடக் கிளம்பிய நந்தினி தட்டுக்களை எடுத்துப் போக கேண்டின் ஆள் வந்து விட்டதால் தன்னை அடக்கிக் கொண்டு காத்திருந்தாள்.. அவன் போனதும் எகிறினாள்..

“எதுக்கெடுத்தாலும் சிரிக்கறிங்க..?”

“ஏன்..? அதில் உனக்கு என்ன பிரச்னை..?”

“ஆயிரம் பிரச்னை இருக்குங்க..”

“ஃபார் எக்ஸாம்பிள்..?”

“நீங்க என்னை பப்பா போல ட்ரீட் பண்ற மாதிரி இருக்கு..”

“நீ ‘பப்பா..’ இல்லையா..?”

அவன் கண்கள் மேய்ச்சல் நிலத்தைக் கண்டுவிட்ட காளை போல அவள் மேனியின் மேய்ந்தன.. அவளது உடல் நடுக்கத்தை உணர்ந்தது.. அவனது பார்வை கிளப்பி விட்டக் கிளர்ச்சியைத் தாங்க முடியாமல் அவளது தளிருடல் நடுங்கியது.. உணர்வுகளின் வீச்சைத் தாங்க முடியாமல் அவள் தவித்தாள்.. ஏஸி கோச்சின் குளிரும், நிசப்தம் நிரம்பிய

அந்த அழகான இரவுப் பயணமும், அவனும் அவளும் மட்டும் தனித்திருக்கும் அந்தப் பொழுதும், அவளது இளம் மனதை ஆட்டிப் படைத்தன.. அவன் மீது பொங்கியெழும் மயக்கத்தை உணர்ந்த நந்தினி..

‘என்ன இது..’ என்று திடுக்கிட்டுப் போனாள்..

அவள் என்ன காரணத்திற்காக இந்தப் பயணத்தை மேற்கொண்டிருக்கிறாள் என்பதை மறந்து போனாளா. .?

‘எதுக்குக் கிளம்பிட்டு என்ன வேலை பார்த்துக்கிட்டு இருக்கேன்..’

விசுக்கென பார்வையைத் திருப்பிக் கொண்டவளுக்கு மனது படபடத்தது.. அவன்மீது குற்றமில்லை.. மேயும் அவன் பார்வையை எதிர்க்காமல் உடலில் ஜிவ்வென்ற உணர்வை ஏற்று நடுங்குவது அவளது தவறு.. அவனை எதிர்க்கும் திராணி அவள் மனதுக்கு ஏன் இல்லாமல் போனது.. அவனது கவர்ச்சிகரமான அழகு ஏன் அவளை கலங்கடிக்கிறது..?

‘இவன் ஆள் மயக்கி..!’

அவளுக்கு பயமாக இருந்தது.. அவளைப் போல அவன் விவரம் தெரியாதவனாக இருக்கவில்லை.. அனைத்தும்

அறிந்தவனாய் ஆழ்ந்த பார்வையில் அதை வெளிப்படுத்துகிறவனாக இருந்தான்.. அவளின் அறியாமையை கேலி செய்து ‘பப்பா..’ என்கிறான்..

அவளை அடித்து வீழ்த்தும் கவர்ச்சி நிரம்பிய ஆணழகனிடம் சலனங்களை துரத்தி விட்டு அவளால் வேலை பார்த்து மீள முடியுமா..?

அவளது நடுக்கத்தை அவதானித்தவனைப் போல மெல்லிய சிரிப்புடன் லேப் டாப்பை மூடி வைத்து விட்டு.. குனிந்து நீள வாக்கில் இருந்த லெதர் பேக்கை எடுத்து மடியில் கிடத்தி ஜிப்பைத் திறந்தான்..

‘என்ன செய்யப் போகிறான்..?’ குறுகுறுப்புடன் அவனை நோட்டமிட்டாள்..

படுபாவி..! அவன் குனிந்திருக்கிறான்.. அவள் நோட்டமிடுவதைக் கவனிக்க மாட்டான் என்ற நம்பிக்கையுடன் அவள் பார்வையிட்டால் அதை உடைக்கும் விதமாக..

“புத்தகத்தால முகத்தை மூடிக்கிட்டுத்தானே என்னை சைட் அடிப்ப..? இப்ப என்ன.. நேரடியா சைட் அடிச்சு வைக்கிற.. புத்தகத்தை எடுத்துக்கனும்ங்கிறதை மறந்துட்டியா..?” என்று கேட்டு வைத்தான்..

‘கண்டுட்டானே..’ அவளுக்கு மூச்சை அடைத்தது..

‘அதெப்படி குனிந்துக்கிட்டு இருக்கிறப்பவும் நான் என்ன பண்றேன்ங்கிறதை நோட் பண்ணறான்.. இவனுக்கு உடம்பு பூராவும் கண்கள்..!’

போகப் போக அவனுக்கு உடம்பு முழுவதும் மச்சங்கள் என்று பொறுமப் போவதை அறியாதவளாக மனதுக்குள் அங்கலாய்த்தாள் நந்தினி.. குறுஞ்சிரிப்புடன் நிமிர்ந்தவனிடம்..

“சும்மா பார்த்தா, சைட் அடிக்கிறேன்னு பட்டம் கட்டுவீங்களா..?” என்று வெடித்தாள்..

“ஊஹும்..?” நம்பாத பாவனையுடன் அவன் புருவங்களை உயர்த்தினான்..

அவள் ஆத்திரம் அதிமானவளாக சண்டைக்கு கிளம்பி விட்டாள்..

“இவர் பெரிய ஆணழகன்..! நான் சைட் அடிக்கிறேன்..”

“இல்லையா பின்னே..?”

அலட்டிக் கொள்ளாமல் அவன் பதிலளித்து அவளை கொந்தளிக்க வைத்தான்..

“வேணாம்.. இது நல்லதுக்கில்ல.. சொல்லிட்டேன்..” ஆள்காட்டி விரலை உயர்த்தி அவள் எச்சரிக்க..

“யாருக்கு நல்லதில்லை..? எனக்கா.. இல்லை உனக்கா..? எனக்கொன்றும் நல்லதுக்கில்லைன்னு தோணலையே... அழகா, படு ஹேண்ட்சம்மா இருந்தா கேர்ள்ஸ் சைட் அடிக்கத்தான் செய்வாங்க.. நீ தாராளமா என்னை சைட் அடிக்கலாம்.. ஐ ஹேவ் நோ அப்ஜெக்ஷன்..” என்று அவன் தாராளம் காட்டினான்..

“அழகா..? படு ஹேண்ட்சம்மா..?” அவள் பல்லைக் கடித்தாள்..

“யெஸ்.. ஐ ஆம்..” பெருமையுடன் அவன் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டான்.. அது அவளை ஈர்த்துத் தொலைத்தது.. அதை மறைத்து..

“சகிக்கலை..” என்று மனச்சாட்சியில்லாமல் அவள் அறிவித்தாள்..

“எது..?” அவன் விசாரித்தான்..

“உங்க முகம்..” பட்டென அவள் பதில் சொன்னாள்.

“ஈஸிட்..? என் முகம் அட்ராக்ட்டிவ்வா இல்லையா..?”

அவன் நிமிர்ந்து அவள் முகத்தை நேருக்கு நேராக பார்த்துத் தொலைத்தான்.. அவளுக்கு 'பகீர்' என்றிருந்தது ..

'இப்படிப் பார்த்து வைக்கிறானே..'

சர்வ ஜாக்கிரதையாக அவன் முகம் பார்ப்பதைத் தவிர்த்தாள்.. அவன் விழிகள் சிரிப்பதை உணர்ந்தாள்.. மறுபடியும் மறுபடியும் அவனிடம் தோற்றுக் கொண்டிருப்பதில் தொய்ந்து போனாள்..

"நினைப்புத்தான் உங்களுக்கு.." வெடுவெடுத்தாள்.

"யார் நினைப்பு..?"

நிதானமான அவன் கேள்வி அவளை நிலை குலைய வைத்தது.. இப்படி மலர்க்கணைகளைத் தெ ாடுக்கும் மன்மதனாக அவனிருந்தால் அவள் எப்படி நிம்மதியாக அவனிடம் வேலை செய்ய முடியும்..?

"யார் நினைப்புன்னு எனக்குத் தெரியாது சார்.. ஆனா.. சாப்பாட்டுக்கு வழியில்லாம உங்ககிட்ட வேலை பார்க்க வந்துக்கிட்டு இருக்கேன்னு மட்டும் நினைத்து விட வேண்டாம்.. எங்கப்பா தஞ்சாவூரில பெரிய பணக்காரர்.. எங்க வீட்டுக்கு நான் இளவரசி..!"

அவள் கண்களில் நீர் நிரம்பி விட்டது.. தேம்பலான அவளது குரலில் அவன் அவளை உற்றுப் பார்த்தான்.. அவனது விளையாட்டுப் பேச்சுகளில் அவள் மனம் அச்சம் கொண்டிருப்பதை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது.. கலங்கிச் சிவந்திருந்த அவள் முகத்தைப் பரிவுடன் பார்த்தான்..

‘இவள் மோப்பக் குழையும் அனிச்சம்..’

அரிதான ஒன்றைப் பிரியத்துடன் பார்ப்பதைப் போல மயிலிறகாய் அவள் மனதை வருடியது அவனது பார்வை..

“நிச்சயமா நீ இளவரசிதான்..”

வார்த்தைகளுக்கு வலிக்குமோ என்ற வகையில் மென்மையாக உச்சரித்தான்.. நந்தினி புரியாமல் பார்த்தாள்..

“நாளைய மகாராணி..!”

‘அடப்போடா..! நீயும் உன் ஆருடமும்..’ அசட்டையாக.. “ம்ப்ச்..” கொட்டினாள் நந்தினி..

“என்ன..?”

“எனக்கு மகாராணியாக வேணாம்.. நந்தினியா இருக்க முடிஞ்சா அதுவே போதும்.. தொட்டதுக்கெல்லாம் குற்றம் கண்டு பிடித்து பெல்ட்டாலே விளாசும் பெல்ட் மன்னன்கிட்ட

அகப்பட்டு என் சுயம் தொலைந்து போகாமல் நானாக நானிருந்தால் போதும்..”

பரிவு கலந்த அவன் பார்வை பரிகாசப் பார்வையாக மாறியது..

‘இது எதுக்கு..?’ என்று புரியாமல் அவள் குழம்பினாள்..

“பெல்ட் மன்னனைக் கல்யாணம் பண்ணிக்கப் பிடிக்கலைன்னு தப்பிச்சு வந்திருக்க.. இருந்தாலும் பேச்சுக்குப் பேச்சு அவனைப் பற்றியே பேசிக்கிட்டு இருக்க.. அவரை நினைக்காமல் இருக்க முடியலைல்ல..?”

‘இதில இப்படி ஒண்ணு இருக்கா..?’ அவள் திருதிருத்தது அவனுக்கு வேடிக்கையாக இருந்தது..

“இப்படியெல்லாம் சொல்லாதீங்க..” அவள் குழந்தை போல மருண்டபடி அவனிடம் வேண்டுகோள் வைத்தாள்..

“தோணிச்சு.. சொன்னேன்..”

“உங்க மனசுக்குத் தோணினதையெல்லாம் பேசிற வேணாம்.. எதிரே இருக்கிறவங்க மனசைப் புரிஞ்சுக்கிட்டுப் பேசுங்க..”

“எனக்கு எதிரே நீதான் இருக்க.. உன் மனசைப் புரிஞ்சுக்கச் சொல்றியா..?”

அவன் கண்களில் மின்னிய குறும்புத்தனத்தில் எப்படிப் பேசினாலும் இவன் இதே ரூட்டில்தான் வருவானா என்று மனம் சோர்ந்து போனாள் நந்தினி..

சற்றேனும் அவள் மனதைப் புரிந்து கொள்கிறானா என்ற ஆயாசம் மேலிட்டபோதே அவன் அதைத்தானே குதர் க்கமாக அர்த்தப் படுத்திக் கொண்டு பேசுகிறான் என்பதை அவள் மனம் நினைவுறுத்தி எச்சரித்தது..

“என்ன யோசனை..?” என்றான் அவன்..

“ம்ம்ம்.. முட்டிக்கொள்ள மொட்டைச் சுவரு எம்புடாம, டிரெயினில, ஃபர்ஸ்ட் கிளாஸ் கோச்சில, வகையா உங்ககிட்ட மாட்டிக்கிட்டேனேன்னு யோசிக்கிறேன்..” அவள் விலாவாரியாக எடுத்துரைத்தாள்..

“வேணும்னா அடுத்த ஸ்டேஷனில இறங்கி மொட்டைச் சுவரைத் தேடிப் போறியா..?” அக்கறையுடன் அவன் கேட்டான்..

“அதுதானே உங்க பிளான்..” சீற்றத்துடன் அவளும் கேட்டாள்..

“என் எண்ணமே வேற..”

அவன் நீண்டிருந்த பேக்கில் இருந்த பொருளை நிதானமாக உருவி வெளியில் எடுத்தான்.. அப்படி என்னத்தைத் துழாவுகிறான் என்ற எரிச்சல் கலந்த ஆவலுடன் அவனைக் கண்காணித்துக் கொண்டிருந்த நந்தினி வெளிப்பட்ட பொருளைக் கண்டதும் விழிகளை விரித்தாள்..

நீண்டிருந்த அந்தப் பொருள் வேறு எதுவுமில்லை..

கிடார்..! அந்தக் கிட்டாரைக் காதலியைக் கையாள்வதைப் போல பிரியத்துடன் எடுத்து மடியில் இருத்தி மார்பில் சாய்த்துக் கொண்டான் ரவிச்சந்திரன்..

# அத்தியாயம் 27

**பி**ரியமான காதலியை வருடிக் கொடுப்பதைக் போலக் கிடாரின் கம்பிகளை அவன் வருடிக் கொடுப்பதை வியப்புடன் பார்த்தாள் நந்தினி..

‘இவன் கிடார் வாசிப்பானா..?’

ரவிச்சந்திரனைப் போன்ற கோடிஸ்வரன்.. நிற்கப் பொழுதில்லாமல் பறந்து கொண்டிருக்கும் இளந்தொழிலதிபன்.. இசையின் மீது காதல் கொண்டிருப்பான் என்பதை அவளால் நம்பவே முடியவில்லை..

“நீங்க கிடார் வாசிப்பீங்களா..?” ஆவலுடன் அவள் கேட்டாள்..

“ம்ம்ம்..” விவரிக்க முடியாத மென்மையுடன் அவன் தலையசைத்தான்..

“இப்ப வாசிக்கப் போறிங்களா..?”

“வாசிக்கவா..?”

“ஹை.. வாசியுங்களேன்..”

குழந்தைத்தனமான சந்தோஷத்துடன் அவள் கை கொட்டி ஆர்ப்பரித்தபடி அவன் இசைப்பதைப் பார்க்கத் தோதாக திரும்பி அமர்ந்து கொண்டாள்.. அவனது குறும்புகளாலும் மறைபொருள் விளையாட்டுப் பேச்சுக்களாலும் மனத்தாங்கல் கொண்டிருந்தவள் சடுதியில் அதை மறந்து குதூகலப்பட்ட விதம் அவனை ஈர்த்தது..

'நியூட்டனின் ஈர்ப்பு விதி என்பது இதுதான் போல..'

மனதுக்குள் சிரித்தபடி அவன் கிடாரை மீட்டினான்.. மெலிதான ரீங்காரத்துடன் கூடிய இசை அந்த முதல் வகுப்புப் பெட்டியை நிறைத்தது.. நந்தினி கண்களை மூடி ஆழ்ந்து அந்த இசையை ரசித்தாள்.. அவளுக்கு 'வாரணம் ஆயிரம்' திரைப்படம் நினைவுக்கு வந்தது..

நினைவு கூர்தல் சுகமானதாக இருந்தது.. அவன் நெஞ்சுக்குள் பெய்திடும் மாமழை எனப் பாடுவான் என்று எதிர்பார்த்தாள்.. அவனும் பாடினான்.. நெஞ்சுக்குள் பெய்திடும் மாமழையைப் பற்றியல்ல.. அவளது கணிப்பைத் தவிடு பொடியாக்கி அந்தக்கால பழமையான பாடல் ஒன்றை ரசித்துப் பாடிவைத்தான்..

**"நான் பாடும் பாடல்**

**நலமாக வேண்டும்..**

**இசைவெள்ளம் நதியாக ஓடும்**

**அதில் இளம்நெஞ்சம் படாக ஆடும்..”**

காதில் விழுந்த பாடல் வரிகளில் திகைத்துப் போன நந்தனி கண்களைத் திறந்து அவனைப் பார்த்தாள்.. அவளையே பார்த்தபடி அவன் பாடிக் கொண்டிருந்தான்.. எதிர்பார்த்த பாடலை அவன் பாடாததில் ஏமாற்றம் உண்டானாலும் அவனது துளைக்கும் பார்வை அவள் மனதை சலனப்படுத்தியது.. மனதுக்குள் மீண்டும் நடுக்கத்தை உணர்ந்தாள்.. சும்மா பார்த்தாலே கதி கலங்கிப் போவாள்.. இதில் கிடாரை மீட்டியபடி அவளைத் துளைக்கும் பார்வையோடு பாடி வைத்தாள் என்ன ஆவாள்..?

அவளது நடுக்கத்தை அவன் கண்டு கொள்ளவே இல்லை.. அவனது கண்கள் மயக்கத்தை பிரதிபலித்தன.. ஏதோ ஒரு மாய உலகில் சஞ்சரிப்பவனாக போதை நிரம்பிய விழிகளுடன் அவன் பாடிக் கொண்டிருந்தான்.. அந்த போதை நந்தினியையும் ஆக்ரமிக்க ஆரம்பித்தது.. பாடலின் வரிகள் அவளை மயக்கத்தில் ஆழ்த்த ஆரம்பித்தன..

**“தாழம்பூவில் காணும்**

**பொன் வண்ணம்..**

**நாளும் வாழும்**

**தோகைப் பூங்கன்னம்..**

**எங்கே.. நானென்று**

**தேடட்டும் என்னை..**

**சிந்தாத முத்தங்கள் சிந்த..”**

நந்தினியின் மனம் கிளர்ந்தது.. தேடும் பார்வை தந்த தகிப்பு அவள் உடலைச் சுட்டது.. அவனைத் தேடச் சொன்னது.. குளிர் நிரம்பிய மழையிரவும், ஏஸி கோச்சும், என்னவோ ஏதோ என்று அவளுக்குள் இனம் புரியாத உணர்வலைகளைத் தட்டி எழுப்பி பாடாய் படுத்தின..

**“அவள் எந்தன் மணமேடை..**

**தவழ்கின்ற பனிவாடை..**

**காலம் கொண்டாடும்**

**கவிதைமகள்..!**

**கவிதை மகள்..!”**

# எண்ணியிருந்தது ஈடேற... 1

அவன் பார்வையில் தன்னைக் கவிதையைப் போல உணர்ந்தாள் நந்தினி.. இப்படிக்கூட ஒருவனால் தன் காதலியைக் கொண்டாட முடியுமா என்று அவளுக்கு பிரமிப்பாக இருந்தது.. ரவிச்சந்திரன் காதலிக்கும் பெண் கொடுத்து வைத்தவள் என்று நினைவு எழுவதை அவளால் தடுத்து நிறுத்த முடியவில்லை..

ஏனோ தெரியவில்லை.. முகம் தெரியாத.. இருக்கிறாளா, இல்லையா என்றும் தெரியாத அவனுடைய காதலியின் மீது நந்தினிக்கு பொறாமை உண்டானது..

**“நாதத்தோடு கீதம் உண்டாக..**

**தாளத்தோடு பாதம் தள்ளாட..**

**வந்தால் பாடும்**

**என் தமிழுக்குப் பெருமை..**

**வாராதிருந்தாலோ தனிமை...”**

கண்களை மூடிப் பாடலில் லயித்திருந்தவனின் கு ரலில் இருந்த குழைவில் நிச்சயமாக இவன் யாரையோ

காதலிக்கிறான் என்று நந்தினிக்கு தோன்றியது.. அவனிடம் கேட்டு விடலாமா என்று நினைத்தால்.. அப்படிக்

கேட்டு வைத்தால் அவன் அவளிடம் உண்மையைச் சொல்லி விடுவானா என்ன..? ஆமாம்.. உன்னைத்தான் காதலிக்கிறேன் என்று வம்பிழுத்தாலும் இழுப்பான்.. அவன்தான் அவளை சீண்டி விளையாடுவதிலேயே குறியாய் இருக்கிறானே.. அவளைக் குழந்தையாய் பாவிக்கிறானே..

**“நிழல் போலும் குழலாட..**

**தளிர்மேனி எழுந்தாட..**

**அழகே..! உன் பின்னால்**

**அன்னம் வரும்..**

**அன்னம் வரும்..”**

அன்னப்பறவை தொடர்ந்து வர நடை பயின்று வரும் அந்தப் பேரழகி எத்தகைய அழகுடன் இருப்பாள் என அறிய அவள் மனம் துடித்தது.. தாள மாட்டாமல் அவனிடம் கேட்டு விட்டாள்..

“யாரை நினைத்து இந்தப் பாட்டைப் பாடினீங்க..?”

அவள் நினைத்ததைப் போலவே அவன் சுட்டு விரலால் அவளைச் சுட்டிக் காட்டி..

“உன்னை நினைத்துத்தான்..” என்று கண்களை சிமிட்டினான்..

“உங்ககிட்ட போய் கேட்டேனே..” அவள் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டாள்..

“என்னிடம் கேட்காம வேற யார்கிட்டக் கேட்ப...?”

என்னவோ.. என்னை விட்டால் யாருமில்லை, கண்மணியே உன் கையணைக்க என்பதைப் போல அவன் பேசி வைத்தான்.. இவனிடம் பேசினால் இப்படித்தான் பேசி வைப்பான் என்று தெரிந்திருந்தும் மாட்டிக் கொள்கிறோமே என்று நந்தினி வாய்க்கு பூட்டுப் போடாத குறையாக மௌனம் சாதித்தாள்.. ரவிச்சந்திரன் கிடாரை உறைக்குள் வைத்து பேக்குக்குள் நுழைத்து ஜிப்பை இழுத்து மூடிப் பத்திரப் படுத்தும் போது.. பையிலிருந்து போட்டோ ஒன்று கிழே விழுந்தது..

விழுந்த போட்டோ ரவிச்சந்திரனின் காலடியில் விழுகாமல் துள்ளிக் குதித்து நந்தினியின் காலடியில் விழுந்ததில் அவள் விடுவேனா என்று பாய்ந்து அந்தப் போட்டோவைக் கைப்பற்றி ஆவலுடன் உற்றுப் பார்த்தாள்..

போட்டோவில் தேவதையைப் போன்ற அழகுடன் ஒரு பெண் ரவிச்சந்திரனின் பக்கத்தில் கைகோர்த்து

நின்றிருந்தாள்.. அவளது அதீதமான அழகில் வசீககரிக்கப்பட்ட நந்தினி..

“யார் இவங்க.. ரொம்ப அழகாயிருக்காங்களே..” என்று குழந்தைத்தனமாக வினவினாள்..

நிதானமாக அவளைப் பார்த்த ரவிச்சந்திரன்..

“அதிசயம்தான்..” என்று சிலாகித்தான்..

“என்ன அதிசயத்தை கண்டுட்டீங்க..” அவள் சிணுங்கினாள்..

“ஒரு பெண் இன்னொரு பெண்ணை அழகுன்னு ஒப்புக்கிறது..”

“அடேங்கப்பா.. நாங்க அழகா இருந்தா மத்தவங்க அழகா இருக்கக் கூடாதுன்னு நினைப்போமா என்ன..? அதென்ன ஆண்குலமெல்லாம் கூட்டணி போட்டுக்கிட்டு இதையே சொல்கிறீங்க.. நீங்க மட்டும் மத்த ஆண்கள் ஹேண்ட்சம்மா இருந்தா அப்ரிசியேட் பண்ணிட்டுத்தான் வேற வேலையைப் பார்ப்பீங்களாக்கும்..”

நொடித்தாள் நந்தினி. ரோஷத்துடன் அவள் நொடித்த அழகில் மனம் லயித்தான் ரவிச்சந்திரன்.. புன்னகையுடன்

அவள் கையிலிருந்த போட்டோவை வாங்கிய வன் அதைப் பத்திரமாக பேக்கில் வைத்து விட்டு நிமிர்ந்தான்..

“நாங்க அப்ரிஷியேட் பண்றது இருக்கட்டும்.. நீ அழகுன்னு நான் எப்பச் சொன்னேன்..? ஒரு பெண் இன்னொரு பெண்ணை அழகுன்னு ஒப்புக்கிறது அதிசயம்ன்னுதானே சொன்னேன்..? ஒரு அழகான பெண்ணுன்னு சொல்லவே இல்லையே.. நீயாய் வார்த்தைகளை கூடப் போட்டுச் சொல்லிடறதா..” என்று வம்பிழுத்தான்..

“நான் ஒண்ணும் அழகான பொண்ணுங்கிற அப்ரிசியேஷனுக்கு ஏங்கிக்கிட்டு இருக்கலை பாஸ்.. நான் அழகில்லாதவளாகவே இருந்துட்டுப் போறேன்.. அதனால ஒண்ணும் நான் குறைஞ்சிர மாட்டேன்..” நந்தினி அறிவித்தாள்..

“ஊஹூம்..?” வழக்கமான அவனது வசீகர புருவ உயர்த்துதலை அவன் செய்து வைத்தான்..

“இந்தக் கித்தாய்ப்பெல்லாம் இருக்கட்டும்.. உங்க சேட்டையை கொஞ்சம் மூட்டை கட்டி வைச்சுட்டு யார்

அவங்கன்னு சொல்லுங்க..” அவள் பிடிவாதமாக அடம் பிடித்தாள்..

“யாராய் இருக்கும்ன்னு நீ நினைக்கிற..?” அவன் கேட்டான்..

“உங்க லவ்வர்..?”

ஏதோ பெரிய கண்டு பிடிப்பைச் சொல்வதைப் போலக் கண்களை மலர்த்தியவளுக்கு மனம் வலித்துத் தொலைத்தது.. அது ஏனென்று புரியவில்லை.. அவளையே பார்த்தபடி இருந்தவனின் விழிகளில் ஏதோ வந்து போனது.. அது என்னவென்றும் புரியவில்லை..

“அவள் என் அத்தை மகள்..”

அவள் காதலியா இல்லையா என்று சொல்லாமல் வெகு இயல்பாக பேச்சின் போக்கை மாற்றி விட்டான் ரவிச்சந்திரன்..

“உனக்கு மியுசிக்கில இண்ட்ரெஸ்ட் இருக்கா..?”

“உங்களுக்கே இருக்கிறப்ப எனக்கு இருக்காதா..?”

“அது என்ன உங்களுக்கேன்னு ராகம் போடற..? ஏன்..? எனக்கு மியுசிக்கில இண்ட்ரெஸ்ட் இருக்கக் கூடாதா..?”

“நீங்களோ கொழுத்த பணக்காரர்..”

“பணக்காரன்னு சொல்லு.. கொழுத்த பணக்காரன்னு சொல்லாதே.. உனக்கு கோபமிருந்தா நாம பேசித் தீர்த்துக்கலாம்.. இப்படி நிக் நேமெல்லாம் வைச்சு பழிவாங்காதே..”

“டீல் ஓகே.. வெறும் பணக்காரர்.. போதுமா..?”

“போதும்..”

“கோடீஸ்வரர்.. எஸ்டேட், ஸ்டார் ஹோட்டல்ன்னு எக்கச்சக்க பிஸினெஸ்.. உங்களோட ஒவ்வொரு செகண்டும் பணமாமே.. உத்ரா சொன்னா.. நேரத்தைக் கணக்குப் பார்த்து செலவளிக்கிறவர் மியுசிக்கில நேரத்தை செலவு செய்வாராங்கிற ஓர் கால்குலேஷன்தான்..”

“கால்குலேஷனுக்கு அப்பாற்பட்ட சில உணர்வுகளும் இருக்கின்றன..”

அவள் விழிகளுக்குள் உற்றுப் பார்த்தபடி இதைச் சொன்னான் ரவிச்சந்திரன்.. ஏன் அப்படிச் செய்கிறான் என்று புரியாமல் தவித்துப் போனாள் நந்தினி.. ஒருவேளை அது அவளது கற்பனையாகவும் இருக்கக் கூடுமோ..

அப்படித்தான் இருக்கும் என்ற நினைவுடன் படபடத்த மனதை அடக்க முயன்றாள்..

“நானிருக்கிறது கேரளா..”

என்னவோ அவளுக்குத் தெரியாத ஒன்றைத் தெரிவிப்பதைப் போல அறிவித்து வைத்தான் அவன்..

“அதனாலதான் நான் உங்ககிட்ட வேலை பார்க்காலாம்ங்கிற விபரீத முடிவுக்கு வந்திருக்கேன் சார்..”

சலனப்படுத்தும் அவனது பார்வையைத் தவிர்த்தபடி சொன்னாள் நந்தினி.. ரவிச்சந்திரன் புன்னகைத்தான்..

‘என் நிலைமை இப்படியா சிரிப்பா சிரிக்கனும்..?’ நந்தினி நொந்து போனாள்..

“விபரீத முடிவு..?”

“யெஸ் பாஸ்..”

“எப்படியோ சொல்லிக்க.. நான் சொல்ல வந்தே வேற..”

“என்னன்னு நீங்க சொல்கிறதைப் போலத் தெரியலை பாஸ்.. இந்த டிராவல் முடியறதுக்குள்ள சொல்லிருவீங்கள்ல..”

“ஹா.. ஹா..”

“இதுக்கும் சிரிப்பா..?”

“முடியலை..”

“இதை நான் சொல்லனும்..”

“சேர, சோழ, பாண்டிய நாடுகளில கேரளா சேர நாடா இருந்தது..”

பாடம் நடத்தும் பாவனையில் ரவிச்சந்திரன் பேச ஆரம்பிக்க நந்தினிக்கு கொட்டாவி வந்தது.. பசித்திருந்த வயிற்றை நிரப்பிய உணவு வகைகள் அவள் கண்ணைச் சுழற்றித் தூக்கத்தை வரவைத்தன.. அதை உணராமல் ரம்பம் போடும் ரவிச்சந்திரனை என்ன செய்தால் தேவலாம் என்று யோசித்தாள் நந்தினி..

‘கிடார் வாசிச்சான்.. பாட்டெல்லாம் பாடினான்.. அதை அப்ரிசியேட் பண்ணிட்ட கொடுமைக்காக இப்படியா மொக்கை போடுவான்..?’

அவன் போடும் மொக்கையைத் தாங்க மாட்டாத துயரத்துடன்..

“ம்ஹா..” என்று நீண்ட கொட்டாவியை வெளிப் படுத்தினாள் நந்தினி..

“இப்ப உனக்கு தூக்கம் வந்திருச்சுன்னு நான் நம்பனும்..?”

“மணியைப் பாருங்க பாஸ்.. மிட்நைட்டைத் தொட்டுக்கிட்டு இருக்கு.. உலகத்தில இருக்கிற அத்தனை ஜீவராசியும் குறட்டை விட்டுத் தூங்கற நேரம் இது..”

“நீ தூங்க வேண்டியதுதானே..?”

“நீங்க தூங்க விட்டாத்தானே..?”

பேச்சுக்குப் பேச்சுப் பதில் சொல்லும் வேகத்தில் இயல்பாக சொன்ன பின்புதான் நந்தினி யோசித்தாள்..

‘இவன் ஏடாகூடமானவனாச்சே.. இதுக்கு எக்குத் தப்பா பதில் சொல்வானே..’

அனுபவசாலியான அவள் அதற்கு முன்னால் ஏற்பட்டிருந்த முன் அனுபவங்களால் நிதானித்தாள்.. என்ன நிதானித்து என்ன செய்ய.. காலம் கடந்து விட்டிருந்தது.. ரவிச்சந்திரனின் விழிகளில் மேய்ச்சல் பார்வை வந்திருந்தது.. ஒரு மார்க்கமாக அவளைப் பார்த்தான்..

# அத்தியாயம் 28

"**தூ**ங்க விடமா நான் உன்னை என்ன செய்தேன்..?"

அவளையே குறுகுறுவென பார்த்தவண்ணம் அவன் கேட்ட கேள்வியில் ஆடிப்போய் விட்டாள் நந்தினி.. இதற்கு என்ன பதிலைச் சொல்வாள்..? கிடுக்கிப் பிடி போட்ட அவனது பார்வையில் தெரிந்த மின்னலும், சுவராஸ்யமும் நந்தினியைப் பேச விடாமல் கிறங்கடித்தன.. அவனைப் பார்த்தால் ஏற்படும் இது போன்ற ஆபத்துகளினால்தான் நந்தினி கூடுமானவரை அவன் முகத்தைப் பார்க்காமல் பேச முயன்று கொண்டிருந்தாள்.. எவ்வளவு நேரம்தான் அவன் முகத்தைப் பார்ப்பதைத் தவிர்த்துக் கொண்டிருக்க முடியும்..?

'திருடன்..! என்னமாய் பார்த்து வைக்கிறான்..? அப்படியே லேசர் பார்வை..! மனதிலிருப்பதை பிடுங்கி எடுப்பதைப் போல பார்க்கப் பழகி வைத்திருக்கிறான்.. கொஞ்சமாவது இவனிடம் வேலை பார்க்க வந்திருக்கிற மூன்றாம் மனுஷியைப் பார்ப்பதைப் போல பார்த்துத் தொலைக்கிறானா..? பெண் பார்க்க வந்திருக்கிற மாப்பிள்ளை சிங்கம் மாதிரி பார்த்துத்

தொலைக்கிறான்.. இவனிடம் போய் யோசிக்காம வாய் விட்டு மாட்டித் தொலைப்பேனா..?'

நந்தினி குனிந்து ஹேண்ட் பேகை எடுத்து அதில் எதையோ தேடுவதைப் போல பாவனை செய்ய ஆரம்பித்தாள்.. பாசாங்கு செய்தவள் அதை மட்டும் செவ்வனே செய்திருக்க வேண்டும்.. அதை விட்டுவிட்டு அவன் என்ன செய்கிறான் என்று அடிப் பார்வையாய் கள்ளப் பார்வையை பார்த்து வைத்தாள்..

அவன்தான் எப்போது எப்போது என்று காத்திருப்பானே.. வாய்ப்புக் கிடைத்தால் நழுவ விடுவானா..? அவளது கள்ளப் பார்வைக்காக காத்திருந்த அவன் பார்வை அவளது பார்வையை சந்தித்த மறுநொடியில் பாய்ந்து அதைக் கவ்விக் கொண்டது.. அவனது கண்சிமிட்டலில் அதிர்ந்து போனவள் ஹேண்ட் பேகை நழுவவிட அவன் சுவாதீனமாக குனிந்து அதையெடுத்து அவள் கையில் கொடுத்தான்.. அதை வாங்கும் நினைவின்றி ஸ்தம்பித்து உட்கார்ந்திருந்தவளின் முன்னால் குனிந்து பார்த்து விரல் சொடுக்கி..

“என்ன்..ன..?” என்றான்..

அவனது கிண்டலும் கேலியுமான 'என்ன்..ன..?'வில் தடபுடா என தண்ணுணர்விற்கு மீண்டவள் அவனிடம் ஆத்திரம், ஆத்திரமாக..

"யு..யு..யு.." என்று திக்கித் திணறினாள்..

"ஐ..ஐ..ஐ...ம்ம்ம்..? வொய்..?"

அவனது புருவங்கள் வசீகரமாக உணர்ந்து இறங்கின.. அதில் அவள் மனம் ஊசலாடியது..

"இப்படியா பேசி வைப்பீங்க..?" படபடத்தாள்..

"எப்படி பேசி வைத்தேன்..?"

ஆழ்ந்த, ரகசியப் பார்வையுடன் அவன் கேட்டு வைத்ததில் கன்னம் சிவக்க, உடல் சூடேற அவள் பதில் சொல்ல முடியாமல் தடுமாறினாள்.. அவளது தடுமாற்றத்தை ரசனையுடன் வேடிக்கை பார்த்தான் ரவிச்சந்திரன்..

அவனுக்கு ஒளிந்து விளையாடும் இந்த கண்ணாமூச்சி விளையாட்டைப் பிடித்திருந்தது.. அவனது பார்வையையும், சங்கேதப் பேச்சையும் வெளிப்படையாக சுட்டிக் காட்ட முடியாமல் அவள் படும் அவதியில் அவனுக்கு சிரிப்புச் சிரிப்பாக இருந்தது..

கைகளை முன்புறம் மடித்துக் கட்டிச் சரிந்து அமர்ந்திருந்தான் ரவிச்சந்திரன்.. ஆறடிக்கும் மேல் உயரமானவனின் கால்கள் இரண்டும் நீண்டு நந்தினியின் பாதங்களைத் தொட யத்தனித்தன.. உரசும் அவனது முழங்கால்களின் ஸ்பரிசத்தில் தீச்சுட்டதைப் போலத் துள்ளி தள்ளி அமர்ந்தாள் நந்தினி..

“என்ன ஆச்சு..?” வெகு அக்கறையாக அவன் விசாரித்தான்..

அவனது கம்பீரமான அழகில் அவளது கன்னி மனம் துடுப்புக்களற்ற படகு போல தத்தளித்தது..

‘என்னத்தைன்னு சொல்றது..?’

இப்படியுமா ஒருவன் அவளது உணர்வுகளுடன் விளையாடி அதில் குளிர்காய முனைவான்..? அவனுக்கென்ன.. நினைத்ததைப் பேசுவான்.. நந்தினி பெண்.. அவனைப் போல மனதில் உள்ளதைப் பேசித் தள்ளிவிட முடியுமா..?

அவனைப் பார்க்கும் வரை அவள் இப்படியிருந்ததில்லை.. மனதில் தோன்றுவதை மறைக்காமல் பேசி விடுவாள்.. அவனிடமும் அப்படித்தான பேசி வைத்தாள்.. கிடைத்தது

வாய்ப்பென்று அவன் அவளை உற்று உற்றுப் பார்த்தபடி ஒரு மார்க்கமாக பேசி வைக்கிறானே..

‘இவனிடம் யோசிக்காம பேசி மாட்டித் தொலைச்சிருக்கேன்.. இதையே தாங்க முடியலை.. இதுக்கும் மேலே வாய் விட்டா ஒரு வழியாக்கிருவான்.. வாயைத் திறக்கவே கூடாது..’

எங்கே..? என்னதான் அவள் வாய்மூடி பேசா மடந்தையாக ஆனாலும் ஊடுறுவும் அவனது பார்வை அவள் மனதைத் துளைக்கிறதே.. இனம் விளங்காமல் எதையெதையோ உணர்த்துகிறதே..

**‘இனம் விளங்கவில்லை - எவனோ..**

**என்னகம் தொட்டு விட்டான்...’**

மனதில் ஓடிய கவிதை வரிகளில்..

‘நானென்ன தூண்டில் புழுவா..?’ என்று திகைத்தாள் நந்தினி..

எதற்காக எட்டயபுரத்து முண்டாசுக் கவியின் கவிதை வரிகள் அவளுக்கு நினைவில் வரவேண்டும்..?

**‘நீண்ட பொழுதாக - என்**

நந்தினியின் உள்ளம் விம்மியது.. ஏன் வீட்டை விட்டு வெளியேறினோம் என்று ஏங்கினாள்.. அடைக்கலம் கொடுத்திருப்பவனின் அண்மை அவளைப் பாதுகாக்குமா..? இல்லை.. சுட்டெரிக்குமா..?

அவன் தீயைப் போல இருந்தான்.. தன்னை விட்டில் பூச்சியாய் உணர்ந்தாள்.. தீயைத் தேடும் விட்டில் பூச்சியின் வேட்கை.. தன் உடலில் நிரம்பி விட்டதோ என்று பயந்து தவித்தாள்.. வந்த வழியில் திரும்பி விடலாமா என்று யோசித்தாள்.. காத்திருக்கும் கட்டாயத் திருமணமும், ெ பல்ட் மன்னனைப் பற்றிய பயமும் ஒன்று சேர்ந்து அந்த யோசனையைக் கைவிட வைத்தன..

"முழிச்சுக்கிட்டேத் தூங்கறியா..?"

ரவிச்சந்திரன் முன்னால் சரிந்து அவள் முகத்தைப் பார்த்தான்.. அவனது கால்கள் மறுபடியும் நெருங்கியதில் நந்தினி ஜன்னலின் மூலையில் அட்டைபோல ஒட்டி சுருண்டு விட்டாள்..

"அதுக்கும் மேலே நீ ஒளிய இடமில்ல.."

கேலியான அவனது வார்த்தைகளில் வாயடைத்துப் போனாள் நந்தினி.. வார்த்தைக்கு வார்த்தை அவனுடன் வாயாடிய நந்தினி காணாமல் போய் வார்த்தைகள் வராமல் தவித்துக் கொண்டிருந்த நந்தினி அவன் முன்னால் மருட்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்..

இந்த அளவு அண்மையுடன் எந்த அன்னிய ஆணும் அவளிடம் பேசியதில்லை.. அவனது மூச்சுக் காற்றின் வெம்மையை அவளது முழங்கால்கள் உணர்ந்து சிலிர்த்தன..

அவனது விரல்நுனிகூட அவள்மீது படவில்லை.. அவனது மூச்சுக் காற்று அவளது முழங்கால்களின்மீது பட்டாலும் முகம் படவில்லை.. கால்களின் உராய்வுகூட இயல்பானதாக இருந்தது.. வேண்டுமென்று அவன் உராயவில்லை.. அவனளவில் அவன் கண்ணிய வானாகத்தான் இருந்தான்.. அவளால்தான் தாக்குப் பிடிக்க முடியவில்லை..

அவன் மேலிருந்து வந்த இதமான நறுமணம் அவளது நாசியில் நுழைந்து மனதை மயக்கியது.. அவனது மூச்சுக்காற்றின் வெப்பம் ஏஸி குளி ருக்கு இதமானதாக இருந்து தொலைத்தது.. அவளால் அசைய முடியவில்லை.. அசைந்தால் அவன் முகத்தின்மீது அவளது முழங்கால் பட்டு

விடும்.. அவளது மடிமீது அவன் முகம் வைத்திருப்பதைப் போன்ற தோற்றம் உருவாகி விடும்..

‘ஒருவேளை.. இதுதான் இவனோட திட்டமோ.. இவனாக என் மடிமீது விழாமல் நான் விழுக வைப்பதைப் போல விழுந்து விடலாம்ன்னு பிளான் பண்ணியிருக்கானோ..’

கண்டதையும் நினைத்து அல்லாடினாள் நந்தினி.. கண்களில் நீர் ததும்ப மன்றாடலுடன் அவனைப் பார்த்தாள்.. என்ன நினைத்தானோ அவன் நகர்ந்து, நிமிர்ந்து அமர்ந்து கொண்டான்.. நந்தினியின் சுவாசமும், இதயத் துடிப்பும் சீராகின.. அவள் நிம்மதியாக மூச்சு விட்டாள்.. அப்பாடி என்றிருந்தது.. கண்களை மூடிக் கொண்டாள்..

“இன்னும் என் பல்லியைப் போல அங்கே ஒட்டிக்கிட்டு இருக்க..? நகர்ந்து உட்கார வேண்டியது தானே..?”

கரிசனமாகத்தான் அவன் சொன்னான்.. அவளுக்குத்தான் கோபம், கோபமாக வந்தது..

“என்னது..? பல்லியா..? நானா..?”

பழைய நந்தினியாக போர் முரசு கொட்டியவளை நமட்டுச் சிரிப்புடன் ஆழ்ந்து பார்த்து வைத்தான்.. அவளது மூக்கு நுனி கோபத்தில் சிவந்திருந்தது..

“நீயேதான்.. ரோஷம் வருதில்ல.. அப்புறம் எதுக்காக ஜன்னல் மூலையிலே ஒன்றிக்கிட்டு இருக்க..? இந்தக் கோச்சில நீயும் நானும் மட்டும்தான் இருக்கோம்.. அந்த பெட் முழுக்க முழுக்க உனக்குத்தான் சொந்தம்..”

“பெட்டா..?”

“எதுக்கு அலருகிற..?”

“இது சீட்..”

“ஓகே.. ஓகே.. சீட்..! பெட்டுக்கும் சீட்டுக்கும் என்ன வித்தியாசம்..”

நந்தினியை விட்டிருந்தால் அவள் ஆறிலிருந்து அறுபது வரை வித்தியாசங்களை அடுக்கியிருப்பாள்.. அப்படி விடாமல் குறுகுறு பார்வையில் அவளைத் துறுதுறுப்பாக பார்த்து சோதித்து வைத்தான் ரவிச்சந்திரன்.. யோசிக்காமல் வாய் விடக் கூடாது என்று தீர்மானித்தாள் நந்தனி..

அவள் சொல்லும் ஒவ்வொரு வித்தியாசத்திற்கும் ஏதுமறியாதவன் போல அவன் எகனைக்கு மொகனையாக கேள்வி கேட்டு வைப்பான்.. விளக்கம் சொல்ல முடியாமல் அவள் சங்கடப்படுவதை வேடிக்கை பார்த்து வைப்பான்.. தேவையில்லாத ரோதனைகளை அவள் ஏன் இழுத்துப் போட்டுக் கொள்ள வேண்டும்.. பேச்சை மாற்றி விடுவதுதான் உத்தமம்.. வில்லங்கத்திலிருந்து விலகி நிற்கக் கற்றுக் கொள்ள வேண்டும்..

“எத்தனையோ வித்தியாசமிருக்கு.. அதைத் தெரிஞ்சுக்கிட்டு என்ன செய்யப் போறிங்க..?”

“எவ்வளவோ செய்வேன்.. நீ சொல்ல.. கேப்போம்..”

“கேட்க நீங்க தயாராத்தான் இருக்கீங்க சாரே.. விடியவிடிய கதை சொல்ல நான் தயாரா இல்லை.. தூக்கம் வருது..”

“உன்னைத் தூங்க விடாமல் நான் என்ன பண்ணினேன்..?”

அவளை அலற வைக்கும் கேள்விக்கு அவன் திரும்பி வர.. நந்தினி சுதாரித்தாள்..

‘வாஹ்ரே.. வா.. திரும்பவும் தூண்டில் போடறயா..? இந்தத் தடவை சிக்க மாட்டேன் பாஸ்..’

கவனமாக முகச் சிகப்பை தடுத்து நிறுத்தி.. வெட்கத்தை மறைத்து கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டு இயல்பாக பதில் சொன்னாள்..

“என்ன பண்றீங்களா..? தொணதொணன்னு மொக்கை போடறிங்களே.. அது போதாதா..? இப்படிக் காதோரமா நொய், நொய்யுன்னு ஓட்டைப் பானையிலே நண்டை விட்டதைப் போலப் பேசிக்கிட்டு இருந்தா தூக்கம் எங்கேயிருந்து வரும் சாரே..!”

“தொணதொணன்னு மொக்கை போடறேனா..?”

அவன் கேட்ட விதத்தில் அவன் முகம் அஷ்டகோணலகாப் போகிறது என்றுதான் நினைத்தாள்.. வேண்டும் என்றிருந்தது அவளுக்கு..

‘மகனே..! வேலை பார்க்க வந்திருக்கிறவள சைட்டா அடிக்கிற..? இப்படி நோஸ்கட் கொடுத்தாத்தான் அடங்குவ..’ வன்மத்துடன் மனதுக்குள் கொக்கரித்தாள்..

அப்படி எதுவும் ஆகவேயில்லை.. அஷ்டகோணலாக முகத்தைச் சுருக்குவதை விட்டு அவன் 'ஹா..ஹா' வெனச் சிரித்து வைத்தான்..

'இதுக்கும் சிரிப்பா..? இவனை எந்த கேட்டகிரிழீல சேர்க்கிறது..?'

சிரிக்கும் போது அதிகரித்துத் தொலைக்கும் அவனது கவர்ச்சியில் மனம் ஆட இதமான இம்சைக்கு ஆளானாள் நந்தினி.. எந்த திசையில் பந்தை விட்டெறிந்தாலும் விக்கெட் மட்டும் அவனைத் தேடிச் சென்று வீழ்வதன் தாத்பர்யம் என்னவென்று அவளால் கண்டு பிடிக்க முடியவில்லை..

'சும்மாவா.. இந்த இளம் வயசிலேயே, இவ்வளவு பெரிய பிஸினெஸ் மேக்னெட்டா இருக்கான்..?'

அவனுக்கு என்ன வயதிருக்கும் என்று அடிப்பார்வையில் நோட்டமிட்டு அவதானிக்க முயன்றாள் நந்தினி.. அவளது பார்வையை கண்டு கொண்ட அவனது புருவங்கள் ஏறி இறங்கியதில் பதறிப்போய் அவனுக்கு நூறு வயதாக இருந்தாலும் அவளுக்கென்ன வந்தது என்று தன்னைத் தானே கடிந்து கொண்டு பார்வையைத் தழைத்துக் கொண்டாள்..

“நானாவது உன்னைத் தூங்க விடாம தொணதொணன்னு மொக்கை மட்டும்தான் போடறேன்.. நீ என்ன செய்கிறேன்னு தெரியுமா..?” மர்மக்குரலில் அவன் கேட்டு அவளுக்கு மூச்சுத்திணறலை வரவழைத்தான்..

“என்ன செய்கிறேன்..?” பயந்தபடி கேட்டாள் நந்தினி..

“என்ன.. செய்கிறயா..? சொல்லட்டுமா..?” பூடகமான குரலில் கேட்டு அவளது பயத்தை அதிகப் படுத்தினான ரவிச்சந்திரன்..

“சொல்லுங்க..” கிணற்றிலிருந்து பேசுவதைப் போலப் பேசி வைத்தாள் நந்தினி..

அவள் குரல் அவளுக்கே கேட்கவில்லை.. அவன் மிரட்டினால் இந்த அளவுக்கா பயந்து போவது என்று அவளுக்கு வெட்கமாகத்தான் இருந்தது.. என்ன செய்து தொலைப்பது..? அவன் பேசுகிறவிதம் அவளுக்கு பயத்தை உண்டாக்கித் தொலைக்கிறதே..

இதயம் படபடக்க அவன் என்ன சொல்லப் போகிறானோ என்று காத்திருந்தாள் நந்தினி.. அவள் பயந்ததைப் போலதான் ஆனது..

“என்னை சைட் அடித்துக்கிட்டே இருக்கிற.. சின்னவயதுப் பெண், கண்ணுக்கு முன்னாலே உட்கார்ந்து, கள்ளப்பார்வை பார்த்துக்கிட்டு இருந்தா எந்த மனிதனால நிம்மதியா உறங்க முடியும்..? ம்ம்ம்..?”

‘அடப்பாவி..!’

நந்தினியால் அவன் முகத்தை ஏறெடுத்தும் பார்க்க முடியவில்லை.. அவனது அப்பட்டமான பேச்சில் வெட்கம் பிடுங்கித் தின்ன வேறு பக்கமாகப் பார்த்தாள்.. என்னைப் பார்த்து எப்படி இப்படிச் சொல்லலாம் என்று சண்டைக்குப் போக முடியவில்லை..

அவன் சொல்வதில் ஓரளவிற்கு உண்மை இருந்து தொலைத்ததே..

அவன் அவனறியாமல் அவனைப் பார்வையிட்ட தென்னவோ உண்மைதானே.. அதைக் கள்ளப் பார்வையென்று, ‘சைட்’ என்றும் அவன் விவவரிப்பதுதான் மிகையென்று அவள் முறையிட்டாள்..

“இதெல்லாம் ரொம்பவும் ஓவர் சார்.. சும்மா பார்த்து வைத்தா அதுக்கு கள்ளப் பார்வை, சைட், அது இதுன்னு நீங்க

பேர் வைப்பீங்களா..? இது கொஞ்சம் கூட நல்லாயில்லை சார்..”

“எது நல்லாயில்லை..?”

“நீங்க பேசறது..”

“நீ பேசறது மட்டும் நல்லாயிருக்கா..?”

“பதிலுக்கு நீங்களும் என்னை மொக்கை போடறது நீதான்னு சொல்லியிருக்கலாமில்ல..?”

“நீ சொன்னதையே நானும் சொல்லனுமா..?”

“ஓகே சார்.. நாம ஒரு டீலுக்கு வருவோம்.. நான் சொன்னதுக்கும் நீங்க சொன்னதுக்கும் பதிலுக்குப் பதில் சரியாப் போயிருச்சு.. இனிமே நீங்க இதை கண்டினியூ பண்ணவே கூடாது..”

“நீ கண்டினியூ பண்ணாம இருந்தாச் சரி.” அர்த்தமலாக அவன் சொன்னான்..

‘என்னடா இது.. பிடி கொடுக்காம பேசி வைக்கிறானே.. நிறுத்துவானா, மாட்டானா..?’ என்று மனதில் சந்தேகப் பட்டபடி அவள் அவனைக் கள்ளப் பார்வை பார்த்து வைத்த அதே நொடியில் அவனும் பார்த்து வைத்தான்..

# அத்தியாயம் 29

**‘க**டவுளே..!’

ஏஸிப் பெட்டியின் குளிர் கால மழையிரவுப் பொழுதிலும் நந்தினிக்கு வியர்த்துப் போனது.. கலவரத்துடன் அவள் பார்க்க அவனோ கடகடவென்று சிரித்து வைத்தான்..

“நான் சொல்லலை..?”

வசீகரமாக அவன் புருவங்களை உயர்த்தியபோது அவளுக்கு முகத்தை மூடிக் கொள்ள வேண்டும்போல இருந்தது..

“உன்னால என்னைப் பார்க்காமல் இருக்க முடியாது..”

அவன் வார்த்தைகளில் கர்வம் இல்லைதான்.. சிரித்துக் கொண்டே சொன்னான்தான்.. ஆனாலும் அதில் இருந்த உண்மை அவளை உசுப்பியது..

“வெறும் பார்வையெல்லாம் சைட்டடிக்கிற பார்வையாவும், கள்ளப்பார்வையாவும் ஆகிடாது சார்.. ரொம்பவும் கனவு காண வேணாம்..” என்று பட்டென்று சொல்லி விட்டாள்..

“ஊஹும்..?” கேலிக் குரலில் கேட்டாலும் அவன் அந்தக் கேலியை தொடர முற்படவில்லை..

‘விட்டுட்டான்..’ நிம்மதியாக இருந்தாலும் இந்த நிம்மதி எவ்வளவு நேரம் நீடிக்கும் என்று நந்தினிக்கு சந்தேகமாக இருந்தது..

‘என்னவோ சேர, சோழ பாண்டியர்ன்னு ஆரம்பிச்சானே.. அதை மொக்கைன்னு சொன்னதினால தான இந்தப் பேச்சுக்கே வந்தான்..? போய்த் தொலையுதுன்னு இவன் என்னதான் சொல்ல வந்தான்னு கேட்டுத் தொலைஞ்சா இவன் டிராக் மாறி இந்த சைட்டு, கள்ளப் பார்வையையெல்லாம் கடந்து மூவேந்தர்களின் பாராயணத்துக்கு போயிடுவான்ல்ல.. ஐடியா.. அதான் கரெக்ட்.. இல்லேன்னா இந்தப் பேச்சில இருந்து எஸ்கேப் ஆக முடியாது.. கிரேட் எஸ்கேப் நந்தினி.. சூப்பரோ சூப்பர்..’

சவுண்டு வாய்சில் பேசாமல் மைண்ட் வாய்ஸில் பேசியவள் விரல்களைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும்.. அதில் அவள் சொதப்பியதில் உற்சாகவயப்பட்ட அவளது விரல் சொடக்குப் போட்டு அவளைக் காட்டிக் கொடுத்து விட்டது..

“என்னைக் கார்னர் பன்ன மனசுக்குள்ள என்ன பிளான் பண்ணிக்கிட்டு இருக்க..? சொடக்கெல்லாம் தூள் பறக்குது..?”

ரவிச்சந்திரனின் விசாரணை ஆரம்பமாகி விட்டது..

‘நீ ஒரு அவசரக் குடுக்கை நந்தினி..’ மானசீகமாக தன் தலையில் தானே கொட்டிக் கொண்ட நந்தினி அவனைப் பார்த்து..

“ஹி.. ஹி..” என்று மழுப்பலாக சிரித்து வைத்தாள்..

“இது எதுக்கு..?” அவன் விசாரித்தும் வைத்தான்..

“இல்ல..”

“எது இல்ல..?”

“நான் இருந்தாலும் அப்படிப் பேசியிருக்கக் கூடாது..”

“உன்னைக் கண்ட நொடி முதல் இந்த நொடி வரை நீ எப்படியெப்படியோ பேசிக்கிட்டு இருக்க.. அந்த எப்படியெப்படியோவில நீ சொல்ற ‘அப்படி’ எப்ப வந்துச்சு..?”

“அதுவா சார்..? நீங்க மூவேந்தரைப் பத்தி லெசன் எடுத்தீங்கள்ல..”

“லெசனா..?”

“அதான் சார்.. நான்கூட கொட்டாவி விட்டேனே..”

“ஆ.. ஆ.. ஞாபகம் இருக்கும்.. நீ கொட்டாவியா விட்ட..? என்னவோ யசோதைகிட்ட கிருஷ்ணன் என் வாய்க்குள்தான் உலகம் இருக்கு, பார்த்துக்கோம்மான்னு காட்டினதைப் போல ஒட்டு மொத்த வாயையும் திறந்த.. ஹப்பா.. வாயா இது..? ஊருப்பட்ட பேச்சைப் பேசினா உன் வாயைப் போலதான் இருக்கும் போல..”

அவன் அடுக்கியதில் அவள் அயர்ந்து போனாள்.. ஊர்பட்ட பேச்சைப் பேசும் வாயைப் பற்றி யார், யாரிடம் சொல்வது..? வாயைத் திறந்தால் பேச்சு, பேச்சு, பேச்சுத்தான்.. அவனைக் கண்ட நொடி முதல் இந்த நொடி வரை கலங்கடித்துக் கொண்டிருக்கிறான்.. என்ன ஒன்று.. அவளைப்போல அமெச்சூராகப் பேசி மாட்டிக் கொண்டு திருதிருத்து வழியாமல்.. கெட்டிக்காரத்தனமாக பேசி வைக்கிறான்.. அதனால் அவன் அமைதியின் சிகரம், அவள் வாயாடி என்று ஆகிவிடுமா..?

“யாரு..? நானு..? ஊருப்பட்டப் பேச்சைப் பேசறேன்..?”

“அதைத்தானே சொல்லிக்கிட்டு இருக்கேன்..?”

அவள் வாயில் நல்ல நல்ல வார்த்தைகளெல்லாம் முட்டி மோதின.. நல்லா வந்திரும் வாயில என்று ஒரு ஆட்டு ஆட்டி வைக்கும் வெண்ணிலாவின் மணி வயிற்றில் உதித்த மாமணி அவள்.. எதிரில் இருப்பவனை ஒரு ஆட்டு ஆட்டி வைத்தால்தான் அவளது மனம் ஆறும் போல இருந்தது.. பேசி விடத்தான் துடித்தாள்.. அவனது கண்களில் மின்னிய மின்னலில் சுதாரித்தாள்..

'இவன் என்னைச் சீண்டி வாயைக் கிண்டிக் கிளறி உளர வைக்க நினைக்கிறானோ..'

சந்தேகத்திற்கிடமின்றி அவளது எண்ணம்தான் உண்மை என்பதை அவள் பேச்சை வேடிக்கை பார்க்கத் தோதாக அவன் முழங்காலில் முழங்கையை வைத்து உள்ளங்கையில் கன்னத்தை தாங்கிக் கொண்ட விதம் நிருபித்தது..

'என்னை பப்பான்னே நினைச்சுக்கிட்டு இருக்கான்..'

வெறும் நினைவு மட்டும் இல்லை.. அதில் உறுதியாக இருக்கிறான் என்பதை அவன் பார்த்த பார்வை சொல்லியது..

"நீங்க சொன்னதைப் போலவே இருக்கட்டும் சார்.."

அவள் ஒப்புக்கொண்டு ஜகா வாங்கியதில் அவன் முகத்தில் அப்பட்டமான ஏமாற்றம் வந்தது..

“என்ன இப்படி பொசுக்குன்னு சரண்டர் ஆகிட்ட..?”

“எதுக்கு சார்..? எனக்காவா ஊர்ப்பட்ட வாய்.. உங்களுக்கு உலகப்பட்ட வாய்.. பேச ஆரம்பிச்சா நிறுத்தவே மாட்டிங்க.. ஊரும் உலகமும் வாயடிச்சா இந்த மங்களூர் எக்ஸ்பிரஸ் தாங்காது சார்.. மற்ற பேசன்ஜர்ஸ் பிழைத்துப் போகனுமில்ல.. அதான்.. வாரை ஸ்டாப் பண்ணிட்டு சரண்டர் ஆகிட்டேன்..”

தாள முடியாமல் அவள் விளக்கம் கொடுத்ததில் அவன்.. “ஹா.. ஹா..” என சிரித்து மகிழ்ந்தான்..

‘இப்புடியே சிரிச்சுக்கிட்டே தூங்கிருப்பா.. நான் வேணும்னா ஜுஜு பாடறேன்.. தாச்சிக்கோ ராசா..’ அவள் பேராசைப் பட்டாள்..

அவனாவது.. தூங்குகிறதாவது.. மடியில் தலையணையை வைத்துக் கொண்டு கதா காலேட்சம் பண்ணுவதைப் போல நிமிர்ந்து உட்கார்ந்து அவள் ஆசையை தவிடு பெ ாடியாக்கி வைத்தான்.. இப்படித் தூங்காமல் படுத்தி

வைக்கிறானே என்று அவளுக்கு அழுகை, அழுகையாக வந்தது..

“சேர, சோழ, பாண்டியரில விட்டேனில்ல..?”

அவன் கதா காலேட்சபத்தை ஆரம்பிக்க அவளுக்கு யாரை விட்டாய் என்று கேட்க வேண்டும் போல இருந்தது.. கேட்டால் உன்னைத்தான் விட்டேன் என்று ஜொள்ளுவான்.. பேச்சு பழையபடி டிராக் மாறி எங்கெங்கோ பயணித்து கடைசியில் அவள் அவனை கள்ளப் பார்வை பார்த்தாள், சைட் அடித்தாள் என்பதில் வந்து நின்று வைக்கும்..

‘தேவையா..?’

அது தேவையில்லை என்பதால் அவள் விதியை நொந்தபடி கடனே என்று ‘உம்’ கொட்டினாள்..

‘இந்த வாழ்க்கைதான் எத்தனை இம்சைகளை முன்னிருத்துகிறது.. காலமாவது கருணை காட்டியிருக் கலாம்.. அதுவும் கூட்டுச் சேர்ந்துக்கிட்டு கும்மியடிக்குதே..’

அவள் தூங்குவதற்குத் தோதாக ஜன்னலோரமாக தலையணைகளை அடுக்கி அதில் சாய்ந்து கொண்டாள்..

அரைத் தூக்கமும், ரயிலின் ஆட்டமுமாக ஆடி விழுந்தபடி கதை கேட்க ஆரம்பித்தாள்..

“கேரள நாடுதான் சேர நாடு..”

“அதான் தெரியுமே..”

“அதுக்கு மேலே என்ன தெரியும்..?”

“ஒண்ணுமே தெரியாது..”

“தெரியாதில்ல.. அப்ப வாயை மூடிக்கனும்.. குறுக்கே பேசக் கூடாது..” அவன் அதட்ட அவள் பூம்பூம் மாடு போல தலையாட்டினாள்..

“சேர நாடு மன்னர்களில ரவிவர்மா, ரவிவர்மான்னு ஓர் அரசர்..”

“டிவின்ஸா சார்..?”

அவள் தன் அறிவை வெளிப்படுத்தியதில் அவன் பற்களை நறநறத்தான்..

‘எதுக்கு கோபப்படறான்..?’ அவளுக்கு ஒரு மண்ணும் விளங்கவில்லை..

“எதுக்கு டிவின்ஸான்னு கேட்கிற..?”

“நீங்கதானே ரவிவர்மா, ரவிவர்மான்னு சொன்னீங்க..? பட்சார் டிவின்ஸ் ஒரே மாதிரி இருந்தாலும் வேற வேற பேருதானே வைப்பாங்க.. இந்த ராம், லட்சுமண், அஜய், அஜித்.. இப்படி வைக்காம ஒரே பேரை வைச்சா குழப்பம் வராதா..?”

“ஆனாலும் நீ இந்த அளவுக்கு அறிவு ஜீவியா இருக்கக் கூடாது.. உனக்கும் வேலை கொடுத்து, டிக்கெட் போட்டு ஏஸி கோச்சில டிராவல் பண்ண வைச்சு கேரளாவுக்கு கூப்பிட்டுக்கிட்டுப் போறேன் பாரு.. என் தைரியத்த நீ பாராட்டியே ஆகனும்..”

“அதுக்கென்ன சார்.. பாராட்டிட்டா போச்சு.. பட், டிக்கெட் நீங்களா போட்டிங்க..? வினித் போடலை..”

“இல்லை..”

“அவர் சொல்லவே இல்லை.. பார்த்தீங்களா..?”

“இப்ப இதுதான் முக்கியமா..?”

“முக்கியமில்லை சார்.. முக்கியமே இல்லை.. உங்க சேர வளநாட்டு டிவின்ஸ் பிரதர்ஸ்தான் முக்கியம்..”

"அடிச்சேன்னா பாரு.. ரவிவர்மாங்கிறது ஒ ருத்தர்தான்.. டிவின்ஸ் இல்லை.. பேச்சுவாக்கில பேரை ரெண்டு தடவை சொல்லிட்டா நீ டிவின்ஸ் பிரதர்ஸ்ன்னு சொல்லிருவியா..? தத்தி..! ஹிஸ்டரி தெரிஞ்சவங்களுக்குத்தான் அவரைத் தெரியனும்னு இல்லை.. ரவிவர்மான்னு எவ்வளவு பெரிய ஹீரோ.. கலா ரசிகர்ன்னு உலகத்துக்கே தெரியும்.. உனக்கு மட்டும் தெரியலை.. மக்கு.."

தத்தி, மக்கு என்று அவன் அடுக்கிக் கொண்டே போன வசுகளில் விழி விரிய உட்கார்ந்து விட்டாள் நந்தினி..

அவனிடம் வேலை பார்க்க வந்து விட்டாள் என்பதற்காக இப்படியெல்லாம் திட்டுவானா..?

'ஒரு பெல்ட் மன்னனின் பெல்ட்டடிக்குப் பயந்து என்ன துயரத்தையெல்லாம் அனுபவிக்க வேண்டியிருக்கு..' அவனும் அதையேதான் சொல்லி சோதித்து வைத்தான்.. "வினித் சொன்னபோதே யார் அந்த பெல்ட் மன்னன்னு

விசாரித்து அவர் கையில் உன்னை ஒப்படைத்திருக்கனும்..

அதை விட்டுட்டு பாவம் பார்த்து வேலை கொடுத்தேனில்ல.. அதான்.. உன்னோடு லோல் படறேன்.."

இதற்கு மேல் தாங்காது என்று அவள் எழுந்து விட்டாள்.. பேகையும் ஹேண்ட் பேகையும் தூக்கிக் கொண்டு ரயிலை விட்டுக் கீழே குதிக்கப் போகிறேன் என்று கிளம்பி விட்டாள்..

“ஸ்ஸ்ஸ்..”

ஆள்காட்டி விரலை வாயில் வைத்து அவன் எச்சரித்தான்.

“அடங்கி சீட்டில உட்காரு..” என்றான்..

“இல்லேன்னா..?” அவள் விசும்பினாள்..

“நிஜமாவே அந்த பெல்ட் மன்னன் எங்கேயிருக்கான்னு சர்ச் பண்ணிக் கண்டு பிடிச்சு அவர் கையில உன்னைப் பிடிச்சுக் கொடுத்திருவேன்..” பயமுறுத்தினான் ரவிச்சந்திரன்..

சிறு குழந்தைக்கு பூச்சாண்டி பயம் காட்டுவதைப் போல அவன் பயம் காட்டியதில் நந்தினிக்கு வாழ்க்கையே வெறுத்துவிட்டது..

அவள் கதி இப்படியா ஆக வேண்டும்..? நொந்து போன நந்தினியை அவனது பரிகாசப் பார்வை இம்சித்தது.. அவன் வேண்டுமென்றே அவளை சீண்டி விட்டு வேடிக்கை பார்ப்பதைப் புரிந்து கொண்டவளுக்கு தலை தெறிக்க ஓடி விட வேண்டும் போல இருந்தது..

“ஏற்கெனவே நீ பெல்ட் மன்னன் தலையில் கட்டி விடுவாங்களோன்னு பயந்து வீட்டை விட்டு ஓடி வந்திருக்க.. ஸோ.. புதுசா ஓட டிரை பண்ண வேணாம்.. அண்டர்ஸ்டாண்ட்..?” அவள் மனதைப் படித்ததைப் ே பால அமர்த்தலாக அவன் அதட்டினான்..

எனக்குப் புரியவில்லை போடா என்று சொல்ல வேண்டும் போல இருந்தது நந்தினிக்கு.. இப்படியொரு தலை வேதனையா..?

“எதுக்கெடுத்தாலும் இதுகளை கண்டு பிடிச்சு வைச்சிருக்கான்.. ஒண்ணு புருவங்களை படுஸ்டைலா உயர்த்தி ஒரு மார்க்கமா பார்த்து வைச்சு ஆளை மயக்குவான்.. இல்லேன்னா முகத்தில முள்ளைக் கட்டினதைப் போல சிடுசிடுன்னு வைச்சுக்கிட்டு அண்டர்ஸ்டாண்ட்ன்னு அதட்டுவான்..”

இதழ் பிரியாமல் வாய்க்குள் அவள் முணுமுணுத்தது காதில் விழாமல் அவன் நந்தினி குறிப்பிட்ட முதல் செயலான புருவ உயர்த்துதலையும் ஒரு மார்க்கப் பார்வையினையும் செய்து வைத்தன..

“ம்ஹும்..” தலையில் அடித்துக் கொண்டாள் நந்தினி..

“என்னைப் பத்தி உயர்வா உன் வாய்க்குள் முணுமுணுப்பா புகழ்ந்துக்கிட்டு இருக்க போல...” கூர்மையான பார்வையுடன் கேட்டான் அவன்..

“ஆமாம் சார்..” படு வினயமாக பதில் சொன்னாள் நந்தினி..

“என்னன்னு நான் தெரிஞ்சுக்கலாமா..?”

“நீங்க தெரிஞ்சுக்காமலா..? இப்பக் கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே, பாடினீங்களே ஒரு பாட்டு..!”

“அந்தப் பாட்டுக்கு என்ன..?”

“அந்தப் பாட்டில் ஒரு குறையுமில்லை சார்.. சொற்குற்றம், பொருள் குற்றம்ன்னு எதுவுமே இல்லாம பாட்டுசிறப்பா இருக்கு.. பாடின ஆள்கிட்டத்தான் அத்தனை குறையும் இருக்கு.. அது நீங்க பாட வேண்டிய பாட்டே இல்லை சார்.. உங்க லெவலே வேற.. அதுக்குத் தகுந்தப் பாட்டைத்தான் நீங்க பாடியிருக்கனும்..”

“ஓஹோ..”

அவன் தாடையைத் தடவியபடி குறுகுறுவென அவளைப் பார்த்தான்.. எதுக்குடா இந்தப் பார்வை பார்க்கிற என்று மனதுக்குள் அவள் திட்டிப் பார்த்தாள்..

‘எனக்கு வேலை கொடுக்கத்தானே அழைத்துக் கிட்டுப் போறான்..? என்னவோ தாலி கட்ட அழைத்துக் கிட்டு போறதைப் போலயில்ல பார்த்து வைக்கிறான்.. ராஸ்கல்..!’

“என் லெவலுக்கான பாட்டு என்னவா இருக்கும்ன்னு நீ நினைக்கிற..?”

“நான் மட்டுமில்ல சார்.. உங்ககிட்ட வேலை பார்க்கிற இனி பார்க்கப் போகிற அத்தனை தொழிலாளர் வர்க்கமும் இந்தப் பாட்டைத்தான் நினைப்பாங்க.. உங்களுக்குன்னு எழுதினதைப் போல அம்புட்டுப் பொருத்தமா உங்களுக்குப் பொருந்திப் போகிற பாட்டு சார் அது..”

ஆஹா, என்ன பொருத்தம்..! உனக்கும் அந்தப் பாட்டுக்கும் உள்ள பொருத்தம் என்ற ரீதியில் நந்தினி வர்ணனை செய்து கொண்டே போக.. அவள் விரிக்கும் வலை எதுவாக இருக்கும் என்று அனுமானிப்பவனைப் போல அவளை ஆழ்ந்து பார்த்தான் ரவிச்சந்திர ன்..

பறவைகள் பலவிதம் என்று ஒரு திரைப்படப் பாடலை நந்தினி கேட்டிருக்கிறாள்.. அதைப் பார்வைகள் பலவிதம்ன்னு மாற்றிப் பாடினால் என்ன என்று நந்தினிக்கு எரிச்சலாக இருந்தது..

‘சிச்சுவேஷன் பாட்டுக்களைப் பத்தித்தான் கேள்விப் பட்டிருக்கேன்.. சிச்சுவேஷன் பார்வைகளைப் பத்தி இப்பத்தான் நேரில பார்க்கிறேன்.. செகண்டுக்கு ஒருதரம் மாத்தி மாத்திப் பார்த்து வைக்கிறான்..’

இனம் காண முடியாத உணர்வுகளை அள்ளித் தெளிக்கும் இனம் விளங்காத அவனது பார்வைகளை புரிந்து கொள்ள முடியாமல் திணறிப் போனாள் நந்தினி..

தூண்டில் போடும் பார்வை..! தூண்டித் துருவும் பார்வை..! ஆளை மயக்கும் பார்வை..! அவளிடம் மயங்கும் பார்வை..! சீண்ட விழையும் பார்வை..! சீண்டி விடும் பார்வை..! ரசிக்கத் துடிக்கும் பார்வை..! ரசிக்க வைக்கும் பார்வை..! வம்பை இழுக்கும் பார்வை..! வம்பைத் தூண்டும் பார்வை..! வசீகரிக்கும் பார்வை..! வசியமாகும் பார்வை..! ஏக்கம் கொள்ளும் பார்வை..! மையல் விதைக்கும் பார்வை..!

# எண்ணியிருந்தது ஈடேற... 1

ஈர்த்து இழுக்கும் பார்வை..! ஈர்ப்பை உணர்த்தும் பார்வை..! கவர்ச்சி ததும்பும் பார்வை..! கவர வைக்கும் பார்வை..!

அப்பப்பா..! பார்வை எத்தனை பார்வையடி என்று பாடலே பாடி விடலாம் போல எத்தனை விதமா ன பார்வைகள் உண்டோ, அத்தனை விதமான பார்வைகளை அள்ளி வீசி அவளைச் சலனப் படுத்தி அதில் சுகம் கண்டு கொண்டிருந்தான் அவன்..

இனம் பிரித்தவை கொஞ்சம்.. இனம் பிரிக்காதது நிறைய என்ற வகையில் பற்பல பார்வைகள் பார்த்து அவளைக் கலங்கடித்துக் கண்களால் வலைவீசி அவன் சிறை பிடிக்கச் செய்யும் யத்தனங்களைக் கடந்து மீண்டும் வர முடியாமல் சிந்தா நதிச் சுழலில் சிக்கி விட்டதைப் போல மூச்சுத் திணறி தவித்துப் போனாள் நந்தினி..

அவளுக்கான வலை விரிக்கும் பார்வையை விடுத்து அவளை அவன் நான்கு மொத்துக்கள் மொத்தி விட்டால் கூடத் தேவலை என்று களைத்துப் போனது அவள் மனது.. ஓய்ந்து போன அவள் மனதுக்கு ஓய்வு கொடுக்கலாம்.. என்ற பெருந்தன்மையோடு ஆழ்ந்த பார்வையை மாற்றி இயல்பாக பார்த்தபடி..

“நீ சொல்லச் சொல் எனக்குப் பொருத்த மான அந்தப் பாட்டைத் தெரிஞ்சுக்கனும்னு எனக்கு ஆவலா இருக்கு.. என்னப் பாட்டுன்னு சீக்கிரமா சொல்லிரும்மா.. இல்லேன்னா டபால்ன்னு என் தலை வெடிச்சிரும்.. கமான்.. குவிக்..”

ரேஸில் ஓடும் குதிரையைக் கூப்பிடுவதைப் போல அவன் சொல்லி வைக்க..

“நான் என்ன குதிரையா..? முதலில் அம்மான்னு சொன்னீங்க.. இப்ப என்னடான்னா குதிரையாக்கறிங்க..” என்று சிலிர்த்துக் கொண்டு சண்டைக்குப் போனாள் நந்தினி..

“ஆக.. பாட்டு எதுன்னு கடைசிவரைக்கும் சொல்லவே மாட்ட..? வெறும் பிலிம் ஓட்டிடலாம்ன்னு பிளான் பண்ணியிருக்க போல..” என்று அவளை வம்புக்கு இழுத்தான் ரவிச்சந்திரன்..

“பிலம் ஓட்டறதெல்லாம் வேற ஆளுக சாரே.. நான் அந்த கேட்டகிரி இல்லை.. சொன்னதைச் செய்வேன்.. செய்வதைத்தான் சொல்வேன்..” மிதப்பாக அறிவித்தாள் நந்தினி..

“அடேங்கப்பா.. டயலாக்கெல்லாம் தூள் பரக்குது.. அட்டகாசம்தான் போ... இவ்வளவு தைரியமான பெண் பெல்ட்

மன்னனுக்குப் பயந்து வீட்டை விட்டு ஓடி வந்துட்டதைத்தான் என்னால நம்ப முடியலை..” பாராட்டுவதைப் போல அவன் சீண்டினான்..

அவன் எதிர்பார்த்தபடியே நந்தினியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன.. கோபத்தில் மூக்கு நுனி சிவந்ததைப் பார்க்க அவனுக்கு வேடிக்கையாக இருந்தது..

‘பச்சைக் கிளி..!’ என்று நினைத்துக் கொண்டான்.. தொட்டால் சிணுங்கும் அவள் குணம் அவனை ஈர்த்தது..

அவளை சீண்டி விட்டு வேடிக்கை பார்க்கும் விளையாட்டில் அவன் இன்பம் கண்டான்.. அவளது குழந்தைத்தனமான கோபம் அவனை வசீகரித்தது..

“அதென்ன எதுக்கெடுத்தாலும் பெல்ட் மன்னனையே இழுக்கறீங்க..?” எரிந்து விழுந்தாள் நந்தினி..

“உன்னை இழுக்கச் சொல்றியா..?” ஆழ்ந்த குரலில் கேட்டு அரள வைத்தான் ரவிச்சந்திரன்..

“மைண்ட் யுவர் வொர்ட்ஸ்..” நந்தினியின் உடல் நடுங்கியது..

“என் வெர்ட்ஸை மைண்ட் பண்றது இருக்கட்டும்.. முதலில் உன் வெர்ட்ஸை நீ மைண்ட் பண்ணு.. நீதானே பெல்ட் மன்னனையே எதுக்கெடுத்தாலும் இழுக்கறிங்கன்னு கம்ப்ளெயின்ட் பண்ணின..? வேற யாரை இழுக்கச் சொல்லப் போகிற..? அது நீயாத்தான் இருக்கும்ன்னு நினைச்சுக்கிட்டேன்.. இதை எப்படி நீ மிஸ்டேக் பண்ணிக்கலாம்..?” அலட்டிக் கொள்ளாமல் பதிலைச் சொல்லி அவளை அயர வைத்தான் ரவிச்சந்திரன்..

“இந்தக் கள்ள விளையாட்டுக்கு நான் வரலை சார்..” சிடுசிடுத்தாள் நந்தினி..

“கள்ள விளையாட்டு..?” கேள்வி கேட்ட ரவிச்சந்திரனின் புருவங்கள் உயர்ந்து இறங்கிய போதே..

‘போச்சுடா.. ஒரு மார்க்கமா பார்க்கப் போகிறான்..’ என்று மானசீகமாக தலையில் அடித்துக் கொண்டாள் நந்தினி.. இம்மியளவும் அவளது கணிப்பு பிசகாமல் அவன் ஒரு மார்க்கமாகத்தான் அவனை பார்த்து வைத்தான்.. அவனது பேச்சுக்களினால் உண்டாகும் கோபம் அவனது பார்வையில் சிக்கி, சின்னாப் பின்னமாகி, மாயமாகி விடுவதன் மாயம் புரியாமல் மருண்டாள் நந்தினி..

‘இவன் வேற பேச்சுக்கு, போடா நீயுமாச்சு, உன் வேலையுமாச்சுன்னு டாட்டா காண்பிச்சுட்டு நான் டிரெயினை விட்டுக் குதிச்சிருக்கனும்.. அதை விட்டுட்டு இவன்கிட்ட அட்ராக்ட் ஆகி உட்கார்ந்துக்கிட்டு இருக்கேன்.. மெஸ்மரிசம் எதுவும் செய்து தொலைக்கிறானா..?’

நந்தினிக்கு சந்தேகமாக இருந்தது.. அவன் கண்களை நேருக்குநேர் பார்க்க முடியாமல் அவள் தடுமாறுவதன் காரணம் எதுவாக இருக்கக்கூடும்..?

இதற்கு முன்னால் அவளுக்கு இப்படி ஆனதே இல்லையே..

**‘இப்படி நான் ஆனதில்ல..**

**புத்தி மாறிப் போனதில்ல..**

**முன்னேப் பின்னே நேசமில்ல..**

**மூக்கு நுனி வேர்த்ததில்ல..’**

எங்கிருந்தோ பாடல் ஒன்று அசரீரி போல அவள் மனதில் ஒலித்து வைத்ததில் ‘அடி.. ஆத்தாடி..!’ என்று அவள் அரண்டு போனாள்..

“பேசற பேச்சுக்கெல்லாம் வேற அர்த்தம் எடுத்தா எப்படி சார் நான் பேசறது..?” அவனிடம் வெள்ளைப் புறாவை பறக்க விட்டாள்..

அவள் சமாதானப் புறாவை பறக்க விட்டதில் சமாதானம் ஆகலாமா வேண்டாமா என்று ஆழ்ந்து யோசிப்பதைப் போல அவன் அவளை ஆழ்ந்து பார்த்து வைத்தான்.. அந்தப் பார்வையின் வேகத்தைத் தாள மாட்டாமல்..

“அம்பேல்..” என்று இரு கைகளையும் தூக்கி விட்டாள் நந்தினி..

“பாருடா.. அதுக்குள்ள சரண்டர் ஆகிட்ட.. இதுதானா உன் வீரம்..?”

“இம்புட்டுத்தான் என் வீரம் சார்..”

“அதைச் சொல்லு.. பெல்ட் மன்னனுக்கு பயந்து ஓடி வந்திருக்கிற ஆளுதானே நு..?”

“அந்த பெல்ட் மன்னனே வேணாம்ன்னுதான் உங்ககிட்ட வந்து நான் மாட்டியிருக்கேன்.. அவன் பேச்சு மட்டும் எதுக்கு சார்..?”

“வேணாமா..? விட்டிருவோமா..?”

“அதே.. அதே.. சார்..”

“வேற என்ன செய்யலாம்..?”

ஆழ்ந்து யோசிப்பதைப் போல பாவனை செய்தவன் கண்கள் மின்னியதில் நந்தினிக்கு அடி வயிற்றில் யாரோ கத்தியைச் செருகியதைப் போல பகீர் என்று ஆனது.. அவளது பயத்தை உறுதி படுத்துபவனைப் போல..

“கள்ளாட்டம் ஆடலாமா..?” என்று அவன் கேட்டு வைத்தான்..

‘இது வேலைக்கே ஆகாது..’ என்று தீர்மானித்த நந்தினி பதில் பேசாமல் பைகளைத் தூக்க யத்தனித்தாள்..

“பார்த்தியா.. ஆன்னா, ஊன்னா ஓடறதிலேயே குறியாய் இருக்கியே.. அவர்தான் பெல்ட் மன்னன்.. நான் அப்படியில்லையே..” ரவிச்சந்திரன் அவள் பைகளைப் பறித்து இருந்த இடத்தில் வைத்தான்..

“உங்ககிட்ட வேலை பார்க்கிறதுக்குப் பதில் அந்த பெல்ட் மன்னன்கிட்ட பெல்ட் அடி வாங்கறது பெட்டர்ன்னு தோணிப் போச்சு சார்..” வார்த்தைகளை மென்று துப்பினாள் நந்தினி..

“ஊஹூம்..?”

வழக்கமான குசும்பு ஊஹுமோடு வசீகரமாக புருவங்களை உயர்த்தி இறக்கி அவளை துயரம் கொள்ள வைத்தான் அவன்..

“நீங்க ஒரு முடிவோடதான் இருக்கீங்க போல..” ஆற்றாமையுடன் சொன்னாள் நந்தினி..

“என்ன முடிவு..?”

“என்னைத் தூங்க விடவே கூடாதுன்னு..”

“தூங்க விடாம நான் என்ன பண்ணினேன்..?”

“ப்ளீஸ்.. இதுபோல பேசறதை அவாய்டு பண்ணுங்க.. நீங்க நினைக்கிற மாதிரிப் பெண் நானில்லை.. அதுக்கு வேற ஆளைப் பாருங்க..”

“வேற ஆளைப் பார்க்கலாம்ன்னுதான் இருந்தேன்.. எஸ்டேட்டை மேனேஜ் பண்ண வேண்டிய பொறுப்பை.. எக்ஸ்பீரியன்ஸ் இல்லாத.. இப்போதுதான் எக்ஸாமை முடிச்சுட்டு பாஸா, பெயிலாங்கிற ரிசல்ட் கூடத் தெரியாத சிறுபெண்கிட்ட ஒப்படைக்க எனக்குக் கொஞ்சம் கூட விருப்பமில்லை.. பட்.. வினித்தின் ஃபிரண்ட் என் பெஸ்ட் ஃபிரண்டுக்கு ஃபர்ஸ்ட் ஃபிரண்ட்.. ஸோ.. நோ அதர்

வேன்னு உனக்கு வேலை கொடுக்க வேண்டியதாகிப் போச்சு.. ஆமாம் எக்ஸாமில பாஸ் பண்ணிருவ இல்ல..?”

அவன் கேட்ட கேள்வியில் உதடுகள் துடிக்க அவனை உறுத்துப் பார்த்தாள்..

“என்ன இப்படிப் பார்க்கிற..? ஃபெயிலாகிருவியா..?” என்று கேட்டு அவளை அவன் சோதித்து வைத்தான்..

“தப்புச் செய்திட்டேன் சார்..” தலை வேதனையுடன் சொன்னாள் நந்தினி..

“நீ எத்தனையோ தப்புக்களைச் செய்து வைத்திருக்க.. இந்தத் தப்பு, எந்தத் தப்பு..?” அவன் விசாரித்தான்..

“உங்களை நம்பி டிரெயினில ஏறினேன் பாருங்க.. அந்தத் தப்புத்தான் இந்தத் தப்பு..” வெடித்தாள் நந்தினி..

“ஓ..” உதடுகளைக் குவித்தவன்..

“வேற என்ன செய்திருக்கனும்னு நினைக்கிற..?” என்று துருவினான்..

“தண்டவாளத்தில தலையைக் கொடுத்திருக்கனும்..” பொருமினாள் நந்தினி..

“ஆக சூசைட் பண்ற எண்ணத்தை இன்னும் நீ கை விடல.. உன்னை கூட வைத்துக்கிறது டேன்ஜர்ன்னு நான்தான் ஃபீல் பண்ணனும்.. நீ என்னவோ ஃபீல் பண்ணிக்கிட்டு இருக்க..?”

“பேசாம வரப்போறிங்களா இல்லையா..?”

“இல்லேன்னா என்ன செய்வ..? கத்தியாலே குத்துவியா..?”

“கத்திக்கு இங்கே எங்கே போகிறது..? கழுத்தை நெறித்து விடுவேன்..”

“அச்சச்சோ.. பயமாய் இருக்கே.. ஹா.. ஹா..”

அவன் உரக்கச் சிரித்ததில் ஆவேசம் மேலிட்ட நந்தினி கோபம் கொந்தளிக்க எழுந்து விரல்களை விரித்த அவன் கழுத்தில் பதித்து நெரிக்க ஆரம்பித்தாள்.. அவன் சிரித்தபடி அவளது விரல்களை விலக்கித் தன் கைகளுக்குள் அடக்கிக் கொண்டான்.. கதவு திறந்து உள்ளே வந்த டி.டி.ஆர் அவர்கள் இருவரையும் பொறாமையுடன் பார்த்தார்..

# அத்தியாயம் 30

‘**எ**ல்லாம் இவனால வந்தது..’

ரவிச்சந்திரனின் பக்கமே திரும்பாமல் ஜன்னல் மீது சாய்ந்து கண்ணாடிக் கதவில் கன்னங்களைப் பதித்தபடி மனதுக்குள் பொருமிக் கொண்டிருந்தாள் நந்தினி.. கண்ணாடிக் கதவின் ஜில்லிப்பு அவள் கன்னங்களில் ஊடுருவி அவளது உடலில் குளிரைப் பாய்ச்சி தூக்கத்தை விரட்டியது.. தடதடத்த ரயிலின் லயத்துடன் கூடிய ஆட்டம் அவள் மனதை அமைதிப் படுத்தவில்லை.. பல்லை நொறுக்கி விடும் முடிவுடன் இருப்பவளைப் போல நறநறத்துக் கொண்டிருந்தாள்..

‘எல்லாம் இவனாலே வந்தது..’

அவனிடம் சொன்னால் நான் இருக்கும் இடத்தை விட்டு நகரவே இல்லையே என்று சொல்வான்.. நீதானே உன் இடத்தை விட்டு எழுந்து என்னிடம் வந்தாய் என்பான்.. அதுதான் உண்மை என்பதால் நந்தினியால் வாதாடவே முடியாது.. ஏன் என் விரல்களைப் பிடித்தாய் என்றால் விட்டு வைத்தால் நீ என் கழுத்தை நெறித்துக் கொன்று விடுவாயே என்று அச்சப்படுவதைப் போல பாவனை செய்வான்..

‘அவனைப் போய் அட்டாக் பண்ணனும்னு எழுந்து போனேன் சார்.. என்னைச் சொல்லனும்.. எப்படி அவன் கழுத்தை நெறிக்க முடியும்ன்னு நினைச்சேன்.. அவன் ஒற்றைக் கையிலே என் குரல்வளையைப் பிடித்து உச்சத்தில் தூக்கிருவானே.. ஹி மேனைப் போல இருக்கான்.. நானோ ஒல்லிக் குச்சி உடம்புக்காரி.. இவனை நான் அட்டாக் பண்ணப் போறேனாம்.. இப்படியிருந்தா இவன் என்னை மக்குன்னும் தத்தின்னும் சொல்லாம என்ன பண்ணுவான்..?

சென்னையில என்னென்னத்தையோ ஷாப்பிங் பண்ணினேனே.. கொஞ்சம் பஞ்சை வாங்கித் தொலைத்தேனா.. பஞ்சிருந்தா காதில அடைச்சுக்கிட்டு இவன் பேசறது காதில விழாம நிம்மதியா தூங்கித் தொலைக்கலாம்.. இவன் பேசறதைக் கேட்கிறதினாலதான் ரத்தம் கொதிக்குது..?’

நெற்றிப் பொட்டு விண்விண் என்று தெறித்தது.. நந்தினி நெற்றிப் பொட்டுக்களில் விரல்களை வைத்து அழுத்திக் கொடுத்தாள்.. வலி குறைவேனா என்று மல்லுக் கட்டியது.. அவளையே பார்த்துக் கொண்டிருந்த ரவிச்சந்திரன் அதட்டினான்..

“உள்ளே ஏஸி.. வெளியே மழை... இந்த சிச்சுவேஷன்ல யாராவது கண்ணாடிக் கதவில சாய்ந்துக்கு வாங்களா..? சில்லுன்ன குளிர் அட்டாக் பண்ணாதா..? அப்புறம் தலை வலிக்காம என்ன செய்யும்..? முட்டாள்ன்னு சொன்னா மட்டும் கோபம் வருது.. என் கழுத்தைப் பிடித்து நெறிக்க வர்ற..”

“உங்க கழுத்தை நெறிச்சுட்டாலும்..”

“முடியாதுன்னு தெரியுதில்ல.. அப்புறம் எதுக்காக அதை டிரை பண்ணப் பார்த்த..?”

“விதி..! வேறென்ன சொல்ல..? காலக் கொடுமை..! உங்க கழுத்தை நெறிக்க வந்தவளை ரொமான்ஸ் பண்ண வந்ததா நினைச்சுக்கிட்டு அந்த டி.டி.ஆர் பொறாமைப் படறார்..”

“பாவம்.. ரொமான்டிக்கான வாழ்க்கைன்னா என்னன்னே தெரியாம வாழ்ந்துக்கிட்டு இருப்பவரா இருக்கும்.. இந்த டிரெயினிலேயே அவரோட முக்கால்வாசி வாழ்க்கை கழிந்துக்கிட்டு இருக்கு..”

“கடுப்பைக் கிளப்பாதீங்க.. உங்களை யார் கதவை திறந்து வைக்கச் சொன்னது..? ஒரு பிரைவசி வேணாம்..? கதவு திறந்திருந்ததினாலதான் அவர் மேனர்ஸே இல்லாம

உள்ளே நுழைஞ்சிட்டார்..? நம்மையும் அந்த நிலைமையில பார்த்துவிட்டார்..”

அவளது கோபமான கேள்வியில் விழிகள் மின்ன அவன் அவளை உல்லாசமாக பார்த்த போதுதான் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறோம் என்பதை உணர்ந்து உதட்டைக் கடித்தபடி பேச்சை நிறுத்தி விட்டாள் நந்தினி.. அவள் சொல்ல வந்தது என்ன..? இப்போது சொல்லிக் கொண்டிருப்பது என்ன..? அவன் முன்னிலையில் இப்படித்தான் ஆகித் தொலைக்கிறது என்று நொந்து போனாள் வெட்கத்தில் அவளது முகம் குங்குமமானது..

அவன் முகத்தில் வார்த்தைகளால் சொல்ல இயலாததொரு மென்மை விரவியது.. அவன் மனதில் குளிர் தென்றல் பரவுவதை உணர்ந்தான்.. ஏதுமறியாத பேதமையும் துடிப்புமாக இருந்த அந்த சிறு பெண்ணின் அறியாமையுடன் கூடிய வார்த்தைகளும், அதைத் தொடர்ந்த அவளின் வெட்கமும் அவனை ஆகர்ஷித்தன.. இன்னதென்று விளங்காத இனம் புரியாத இதமான உணர்வுகளின் ஆளுமைக்குள் அவர்கள் இருவருமே சிக்கிக் கொண்டார்கள்..

அவன் எழுந்து அந்தப் பெட்டியின் கதவை மூடித் தாழ்ப்பாள் போட்டான்.. தடுக்க முடியாமலும்.. அதை ஏற்றுக் கொள்ள முடியாமலும் அவள் தவித்தாள்... ஒளிர்ந்து கொண்டிருந்த விளக்கை அணைத்து மெலிதான இரவு விளக்கைப் போட்டு விட்டான்.. அதையும் அவளால் ஆட்சேபிக்க முடியவில்லை.. கேட்டால் தூங்க வேண்டாமா என்று பதிலுக்கு கேட்டு வைப்பான்.. அந்தச் சூழலில் தூங்க முடியுமென்று நந்தினிக்குத் தோன்றவில்லை..

மெலிதான விடி விளக்கின் வெளிச்சத்தில் அவளின் வடிவம் கோட்டோவியம் போல போதையூட்டுவதாக இருந்தது.. அவனது மனதில் கிறக்கம் உண்டானது.. அவனது உணர்வுகள் கிளிர்ந்தெழுந்தன.. சற்று முன் அவனது கைகளுக்குள் சிறை பட்டிருந்த அவளது விரல்களின் மென்மையான ஸ்பரிசம் அவன் நினைவுக்கு வந்து உடலை சூடேற்றியது.. பஞ்சின் மென்மை என்று நினைத்துக் கொண்டான்..

அவளும் அதைத்தான் நினைத்துக் கொண்டிருந்தாள்.. வலிமையான அவனது விரல்கள் கிடைத்த வாய்ப்பைத் தவற விடாமல் அவளது விரல்களின் மீது அழுந்திப் படிந்து நீவி விட்டதை நினைத்துப் பார்த்தவளுக்கு ஜிவ்வென்று இருந்தது..

இன்னமும் அந்த உணர்வு நீடிப்பதை உணர்ந்தவள் அதைத் தவிர்க்க விரும்பியவளாக..

“தற்காப்புக் கலைன்னா இப்படித்தான் இருக்கும்ன்னு இப்போத்தான் பார்க்கிறேன்.. கழுத்தை நெறிக்க வந்தவளை தள்ளி விடனும்.. அதை விட்டுட்டு அவ கை விரல்களை பிடிச்சுக்கிட்டு கொஞ்சக் கூடாது..” என்று வெடித்தாள்..

“கொஞ்சினேனா..? நானா..? அபாண்டமாய் பேசக் கூடாது.. விரல்களைப் பிடித்தேன்ங்கிறது உண்மைதான்.. அதுக்கு மேலே என்ன பண்ணினேன்..?” அவன் அவள் பக்கமாக திரும்பிப் படுத்து கேள்வியை எழுப்பினான்..

“அதுக்கும் மேலே என்ன பண்ணனும்..?”

“எவ்வளவோ பண்ணலாம் ஃபார் எக்ஸாம்பிள்ஸ்.. விரல்களில் முத்தம் கொடுக்கலாம்.. இன்னும்..”

“பஸ்.. பஸ்.. இதுவே போதும்..”

“வேணாம்ங்கறியா..”

“அதே.. அதே..”

“அதென்ன பஸ்.. பஸ்.. இது டிரெயின்..”

“‘பஸ்’ன்னு சொன்னா போதும்ன்னு அர்த்தம்..”

“அப்படியா..?”

“உங்களுக்குத் தெரியாதாக்கும்..?”

“தெரியவே தெரியாது..”

“பொய்..”

“மெய்..”

“நம்பிட்டேன்..”

“நம்பித்தான் ஆகனும்..”

முடிவடையாமல் உரையாடல் நீண்டது.. அந்த இரவு முடிவுறாத இரவாக அமைந்தால் தேவலை என்று ரவிச்சந்திரனுக்குத் தோன்றியது.. அந்தப் பயணமும் முடிவடையக் கூடாது.. இப்படியே அவளும், அவனும் மட்டும் ரயிலின் முதல் வகுப்புப் பெட்டியில் தன்னந் தனிமையில் அழகான அந்த தனிமையை ரசித்து அனுபவித்தபடி பயணித்துக் கொண்டே இருக்க வேண்டும்.. அவன் அவளைச் சீண்டிக் கோபத்தை தூண்டிவிட்டு அதில் குளிர் காய வேண்டும்.. அவனது ரகசியப் பார்வைகளும் அவளது கள்ளப் பார்வைகளும் மோதிப் பிறக்கும் தீப்பொறிகளில் உருவாகும் ரம்யத்தில் மூழ்கிக் கொண்டிருக்க வேண்டும்.. அவனது அத்து

மீறலான பேச்சுக்களை அறியாதவன் போல் அவன் பேச, அவள் கொதிக்க என்று இளமை கொழுந்து விட்டு எரியும் யுத்தத்தை அவளும் அவனும் மேற்கொண்டு கொண்டே இருக்க வேண்டும்..

அவனது ஆசைகளை அவள் அறியாமல் ஒயிலாக நொடித்து அவனை சோதித்து வைத்தாள்.. அவன்மீது ஆசை கொள்ளும் பெண்களிடம் அவனைக் கவரும் பாவனைகள் இருக்கும்.. நந்தினியோ பாவனைகளற்ற பொற்சித்திரமாக

இருந்தாள்.. சற்று முன் டி.டி.ஆர் உள்ளே வந்த போது அவள் பேசி வைத்ததை நினைத்துப் பார்த்தவனுக்கு சிரிப்புச் சிரிப்பாக வந்தது..

அவன் கழுத்தை நெறித்தவளின் விரல்களை வெகு இலகுவாக அவன் பற்றித் தன் கைகளுக்குள் சிறை வைத்து விட்டதில் தடுமாறிப் போனவள் அவன் மீது சரிந்து விழுவதைப் போல சாய்ந்து நின்று விட்டாள்..

அவன் விழிகளும் அவள் விழிகளும் கலக்க.. அவன் கைகளுக்குள் விரல்களை ஒப்படைத்து சிலையாக நின்றிருந்தபோது கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்த

டி.டி.ஆர் ‘ஆ’ வென வாய் பிளந்து அவர்களைப் பொறாமையாக பார்த்து வைத்தார்..

நந்தினி என்ன செய்திருக்க வேண்டும்..? தன் கைகளை உறுவிக் கொண்டு நகர்ந்திருக்க வேண்டும்.. அதை விட்டு விட்டு அவள் டி.டி.ஆர் பார்த்த பார்வையில் கோபம் கொண்டவளாக..

“எப்படி சார் நீங்க உள்ளே வரலாம்..” என்று சீறினாள்.. ரொமான்ஸையே உணராத அந்த மனிதர் ரொமான்டிக்கான அந்தச் சூழலில் தாக்கப்பட்டவராக பொறாமை கொழுந்து விட்டு எரிய வயிற்றெரிச்சலுடன் பதிலுக்கு சீறினார்..

“இந்த டிரெயினில் எல்லாக் கம்பார்ட்மென்டுக்கும் நான் போவேன்.. அது என்னோட ரைட்ஸ்.. ஐ ஆம் எ டி.டி.ஆர்..”

“ஓ.. நீங்க டி.டி.ஆர்ன்னா பெர்மிஷன் இல்லாம உள்ளே வரலாமா..?”

“லுக் மேம்.. இது டிரெயின்.. ஃபைவ் ஸ்டார் ஹோட்டலில்லை.. இங்கே டிராவல் பண்ணத்தான் நீங்க வந்திருக்கீங்க.. ரொமான்ஸ் பண்ண இல்லை.. புரியுதா..

பெர்மிஷனைப் பத்திப் பேசாம அவரை விட்டுக் கொஞ்சம் நகர்ந்து நிற்கறிங்களா..?”

எனக்கு எரியுது என்பதை மனதில் சொல்லிக் கொண்ட டி.டி.ஆரை.. உன்னை நானறிவேன் என்பதைப் போல பொருள் பொதிந்த பூடகமான பார்வையை பார்த்து புன்னகை பூத்தான் ரவிச்சந்திரன்..

‘இப்படியொரு ஃபிகர் கையைக் கொடுத்துக்கிட்டு மடியில சாயத் தயாரா நின்னா உன்னைப் போல நானும் புன்னகை மன்னனாத்தான் இருந்திருப்பேன்.. என் தலைவிதி..! என்னை வெட்டவா குத்தவான்னு கொலை வெறியோட பார்க்கிற ராட்சசி வந்து வாய்ச்சிருக்கா.. வீட்டில இருக்க முடியாம ஓடற டிரெயினில வாழ்க்கையைத் தொலைச்சுக்கிட்டு இருக்கேன்..’ டி.டி.ஆர் விட்ட அனல் பெருமூச்சில் அந்தப் பெட்டி பற்றி எரிந்து விடும் போல தகிக்க ஆரம்பித்தது.. அப்போதும் ரவிச்சந்திரன் நந்தினியை கை விடாமல் விரல்களைப் பற்றியிருக்க, அவற்றை உறுவிக் கொண்டு விலகும் எண்ணமில்லாமல் நந்தினி டி.டி.ஆரை முறைத்துக் கொண்டிருந்தாள்..

“நான் வேணும்னா இந்தப் பெட்டிக்கு வெளியே காவலா நிற்கட்டுமா..? உங்க ரொமான்ஸை நீங்க கண்டினியு

பண்ணத் தோதாவும் இருக்கும்.. மத்தவங்களாலே உங்களுக்கு டிஸ்டர்ப் வராமலும் இருக்கும்..”

பவ்யமாக டி.டி.ஆர் கேட்ட பின்புதான் நந்தினிக்கு தான் நின்றிருக்கும் நிலை நினைவுக்கு வந்தது.. சடுதியில் கைவிரல்களை உறுவிக் கொண்டு அவள் சீட்டில் உட்கார்ந்து தலையைப் பிடித்துக் கொண்டாள்.. இப்படியுமா பேச்சை வாங்கித் தொலைப்பேன் என்று அவளுக்கு ரோதனையாக இருந்தது..

‘இந்த டி.டி.ஆர் என்னையும் இவனையும் கனெக்ட் பண்ணிப் பேசித் தொலைக்கிறதை கேட்டுத் தொலைக்க வேண்டியதாப் போச்சே..’

அவளுக்கு வெட்கம் பிடுங்கித்தின்றது.. அதை இடையூறினால் அவள் எரிச்சல்படுவதாக தப்பர்த்தம் பண்ணிக் கொண்ட டி.டி.ஆர்..

“ஜஸ்ட் ஃபைவ் மினிட்ஸ்தான்.. சம் கிளாரிஃபிகேஷன் மட்டும் தான் என் வேலை முடிஞ்சதும் போயிருவேன்..” என்று முறைத்தார்..

“விடுங்க சார்.. அவங்க வேற டென்ஷனில இருக்காங்க..” ரவிச்சந்திரன் நடுவே வந்து டி.டி.ஆரின் கவனத்தை திருப்பினான்..

“நான் டிஸ்டர்ப் பண்ணிட்டேங்கிற டென்ஷன் தானே..?” டி.டி.ஆர் விடாமல் நந்தினிக்கு கொலை வெறியை வரவைத்தார்..

ஏற்கனெவே ரவிச்சந்திரனின் குரல்வளையை நெறிக்க முனைந்தவள் டி.டி.ஆரிடமும் அந்த தாக்குதலை பிரயோகித்து விட்டால் என்ன செய்வது என்ற கவலையில் ஆழ்ந்தான் ரவிச்சந்திரன்.. நந்தினியின் விழிகளில் மிகுந்து கொண்டிருந்த கொலைவெறி அவனது கவலையை ஊர்ஜிதம் செய்ததில்..

“உங்களுக்கு என்ன கிளாரிஃபிகேஷன்ஸ் வேண்டும் சார்..” என்று கேட்டபடி அவருக்குத் தெரியாமல் நந்தினியிடம் அமைதி காக்கும்படி சமிக்ஞை செய்தான்..

அந்த சமிக்ஞையை கவனித்து விட்ட டி.டி.ஆர்..

“ஜாடை கொடி கட்டி பறக்குது.. நடத்துங்க.. நடத்துங்க..” என்று அதற்கும் வயிற்றெரிச்சல் பட்டார்..

‘அவ நினைக்கிறதை நடத்திட்டா நீங்க தொலைந்தீங்க..’

தப்பிப் பிழைக்கும் எண்ணமில்லாமல் வாய் வளர்க்கும் டி.டி.ஆரை அங்கிருந்து அப்புறப்படுத்துவதற்குள் ரவிச்சந்திரனின் தாவு தீர்ந்தது.. என்ன சொன்னாலும் நகராமல் நந்தினியையே முறைத்துக் கொண்டிருந்த டி.டி.ஆரின் பிரச்னை என்னவாக இருக்க முடியும் என்று ஓரளவிற்கு ரவிச்சந்திரன் யூகித்திருந்தான்தான்..

‘வேற என்னவா இருக்கும்..? எனக்கும் ஒருத்தி வாய்ச்சிருக்காளேங்கிற வயிற்றெரிச்சலாத்தான் இருக்கும்.. உலகம் முழுக்க இருக்கிற அத்தனை ஆம்பளைகளையும் மாற்றான் தோட்டத்து மல்லிகையின் மணம்தான் காந்தம்போல இழுத்துக் தொலைக்குது.. சொந்தத் தோட்டத்து மல்லிகையின் மணம் கசக்குது..’

சற்றுமுன் அவன் மீது சரிவதைப் போல நின்றிருந்த நந்தினியின் மீதிருந்து மல்லிகையின் மணம் வந்ததை நினைவு கூர்ந்தான் ரவிச்சந்திரன்.. அப்போதும் மல்லிகையின் மணம் வருவதைப் போல இருந்ததில் ஆழ்ந்து சுவாசித்தான்..

‘ம்ஹா..!’

மல்லிகையின் மணம் அவனை மயக்கியது..

‘இவ மல்லிகைப்பூ வைச்சிருக்காளா என்ன..?’

நந்தினியை நோட்டமிட்டான்.. உத்ராவுக்காக வினித் வாங்கிக் கொடுத்த பூவில் கொஞ்சத்தைக் கிள்ளி, நந்தினி மறுக்க மறுக்க அவள் தலையில் வைத்து விட்டிருந்தாள் உத்ரா.. அந்தப் பூவை சூடியிருக்கும் உணர்வு நந்தினிக்கும் இல்லை.. ரவிச்சந்திரனும் அதைக் கவனிக்கவில்லை.. அறை முழுவதும் நிரம்பியிருந்த மல்லிகையின் வாசனையை அப்போதுதான் முகர்ந்தான்..

அவன் நோட்டமிடுவதை நோட்டமிட்டு விட்ட டி.டி.ஆர் காதுகளில் புகை விட.. அவர்கள் இருவரையும் நோட்டமிட்டு விட்ட நந்தினி பத்ரகாளியாகி ‘பத்திரம்’ என்பதைப் போல ரவிச்சந்திரனை எச்சரித்தாள்..

அந்த எச்சரிக்கையை ரவிச்சந்திரன் விடுத்த சமிக்ஞைக்கு பதில் சமிக்ஞையாக தப்பர்த்தம் பண்ணிக் கொண்ட டி.டி.ஆர். “இதோ.. இப்போ இடத்தைக் காலி பண்ணிடறேன்.. நீங்க விட்டதைக் கண்டினியூ பண்ணுங்க..” என்று ரவிச்சந்திரனுக்கு சிரிப்பையும், நந்தினிக்கு ஆவேசத்தையும் வரவைத்தார்.

‘யோவ்..! ஓடியே போயிரு.. இங்கே நின்னு இதுபோல அபத்தமா உளறிக்கிட்டு இருந்தே.. சட்னிதான்..’

நந்தினி நம்பியாரைப் போலக் கைகளைப் பிசைய ஆரம்பித்தாள்..

‘சப்பாத்திக்கு மாவு பிசைகிறதைப் போல பிசைய ஆரம்பிச்சாட்டாளே..’ சுதாரித்த ரவிச்சந்திரன் எதற்கும் இருக்கட்டுமென்று எழுந்து நந்தினிக்கும் டி.டி.ஆருக்கும் நடுவே நின்று கொண்டான்..

“இதுக்குன்னே ஏ.ஸி.கோச்சை புக் பண்றாங்க..” டி.டி.ஆர் பொருமித் தவித்ததில்..

“அதில உங்களுக்கு என்ன சார் பிரச்னை..?” என்று எரிச்சலனான் ரவிச்சந்திரன்..

“அப்போ.. அதில உங்களுக்கு ஏதும் பிரச்னையில்லையா..?” நந்தினி டி.டி.ஆரை விட்டுவிட்டு ரவிச்சந்திரனிடம் போர் தொடுத்தாள்..

“ம்ப்ச்.. இப்ப உனக்கு என்ன பிரச்னை..?”

“நீங்கதான் பிரச்னை..”

“ஏம்மா..? இவர் என்னை வெளியே துரத்தாம நிறுத்தி வைத்துப் பேசிக்கிட்டிருக்காரே.. அதைத்தானே பிரச்னைன்னு சொல்கிறீங்க..”

“நீங்க வேற.. விஷயம் தெரியாம பேசிக்கிட்டு.. சும்மா இருங்க சார்.. இது எங்களுக்குள்ள நடக்கற பேச்சு வார்த்தை..”

“நான் இண்டர்ஃபியர் ஆகக் கூடாதுங்கறிங்க..?”

“புரிஞ்சாச் சரி..”

“என்ன புரிஞ்சாச்சரி.. அப்ப அவர் சொல்கிற எல்லாத்தையும் நீங்க ஏத்துக்கறிங்க..?”

“அப்படியில்லை நந்தினி.. இவர் டி.டி.ஆர்.”

“வாட் ஃபார்..?”

“ரொமான்ஸை டிஸ்டர்ப் பண்ணிட்டேன்னு மேடம் செம காண்டில இருக்காங்க சார்.. நீங்க ஏன் வாயைக் கொடுத்து மாட்டிக்கறிங்க..?”

“அதை நீங்க சொல்கிறிங்க பாருங்க.. இதுதாங்க விதி..!”

“அவர் என்ன சொல்கிறார்ன்னு கேட்டிங்கள்ல..”

“கேட்டுக்கிட்டுத்தானே இருக்கேன் நந்தினி..”

“கேட்டும் ஈன்னு பல்லைக் காட்டிக்கிட்டு பேசிக்கிட்டு இருக்கீங்க..”

“இது அபாண்டம் நந்தினி.. இப்ப இருக்கிற சிச்சுவேஷன் சிரிக்கிறதைப் போலவா இருக்கு..?”

“உங்களுக்கு இருக்கும்..”

“விடுங்க சார்.. இப்ப நான் கிளம்பிப் போயிட்டேன்னா மேடம் ‘கூல்’ ஆகிருவாங்க.. அப்படி ‘கூல்’ ஆகலைன்னாலும் ‘கூல்..’ ஆக்கற வித்தை உங்களுக்குத் தெரியாதா என்ன..?”

“மிஸ்டர் டி.டி.ஆர்..!”

“யெஸ் மேம்..”

“நீங்க தேவையில்லாம எதையெதையோ பேசறிங்க..”

“ஷ்யூர், ஷ்யூர்.. இது எனக்குத் தேவையில்லைதான்.. கர்மம், கர்மம்.. நீங்க சொன்னதைப் போலக் கதவைத் தட்டிட்டு உள்ளே வந்திருக்கலாம்.. அப்படி வராம கண்டதையும் பார்த்துட்டு..”

டி.டி.ஆர் தலையில் அடித்துக் கொண்டார்.. பொறுக்க முடியாமல் நந்தினி கையில் உள்ள ஹேண்ட் பேகை டி.டி.ஆரின் நெற்றிமீது குறி வைத்துத் தாக்குதல் நடத்த உத்தேசித்து கண்ணகி காற்சிலம்பை உயர்த்தியதைப் போல கையிலிருந்த ஹேண்ட் பேக்கை உயர்த்தி விட்டாள்..

அதற்கு இடம் கொடுப்பேனா என்று ரவிச்சந்திரன் தனது ஆகிருதியான முழு உடலையும் நந்தினிக்கு முன்னால் நிறுத்தி டி.டி.ஆரை மறைத்து அவரைக் காப்பாற்றினான்.. அது தெரியாத டி.டி.ஆர் நந்தினியின் முகத்தைப் பார்த்து வாக்குவாதம் செய்யத் தோதாக இந்தப் பக்கமும் அந்தப் பக்கமுமாக தலையை நீட்டி எட்டிப் பார்த்து நந்தினியின் குறிபார்த்தலுக்கு தனது நெற்றியை இலக்காக்கி ரவிச்சந்திரனைச் சோதித்து வைத்தார்..

“நீங்க இந்தப் பக்கமா வாங்க சார்..”

எரிச்சலுடன் டி.டி.ஆரை மறைவாக இழுத்து நிறுத்தி அவள் கேட்ட விவரங்களை மடமடவென ஒப்பித்து அனுப்பிவைத்தான் ரவிச்சந்திரன்.. அவன் அவரைக் காப்பதில் அக்கறை காட்டுவதைப் புரிந்து கொள்ளாமல் அவனை ஒரு மார்க்கமாக பார்த்தபடி..

“அம்புட்டு அவசரம்..?” என்று அர்த்தம் பொதிந்த வார்த்தைகளைச் சொன்னார்..

‘ஹைய்யோ..! இந்த ஆள் அடங்கவே மாட்டேங்கிறாரே..’ ரவிச்சந்திரன் வராத சிரிப்பை வலிய வரவழைத்து இதழ்களில் ஒட்ட வைத்துக் கொண்டான்..

“அப்புறம்..?” என்று கேட்டு டி.டி.ஆர் வந்த வேலை முடிவடைந்து விட்டதை நினைவுறுத்தினான்..

“இதோ போயிடறேன் சார்..”

“எங்கே..? போறேன்.. போறேன்னு சொல்லிக் கிட்டுத்தான் இருக்கீங்க.. நகர மாட்டேங்கறிங்களே..”

ரவிச்சந்திரனின் ஆதங்கத்தில் நந்தினிக்கு சிரிப்பு வர யத்தனித்தது.. அவன் சொன்னதை டி.டி.ஆர் என்ன அர்த்தத்தில் எடுத்துக் கொள்வார் என்று நினைத்துப் பார்த்ததில் ‘பகீர்’ என்று நெஞ்சடைத்து வந்த சிரிப்பு பாதியிலேயே உறைந்தது..

“மறக்காம கதவைச் சாத்திக்கங்க.. ”

கடைசி அஸ்திரத்தை எய்து விட்டு டி.டி.ஆர் காணாமல் போனார்..

# அத்தியாயம் 31

**மெ**லிதான வெளிச்சம் அந்த முதல் வகுப்புப் பெட்டியை நிரப்பியிருந்தது.. இதமான மல்லிகையின் நறுமணம் ரவிச்சந்திரனின் நாசிகளில் நுழைந்து போதைக்கு ஆட்படுத்தியது.. இவள் இத்தனை அழகாக இருந்து தொலைத்திருக்க வேண்டாம் என்று அவன் நினைத்துக் கொண்டான்..

இவ்வளவு அண்மையில் கை தொடும் தூரத்தில் அவன் மனதை மயக்கும் நளினத்துடன் ஒய்யாரமாக ஒருத்தி படுத்திருந்தால் எதிரில் இருக்கும் ஆண்மகனின் கதி என்னாவது என்பதை அவள் நினைத்துப் பார்க்கிறாளா..? என்று பொருமிப் போனான்..

நந்தினி நினைத்துப் பார்த்துக் கொண்டுதான் இருந்தாள்.. அவள் முதன் முதலாக சந்தித்தபோது அவளது விழிகளை உயர வைத்த நெடியோனான அவனது உயரத்தை.. செதுக்கி வைத்த ரோமானியச் சிற்பம் போன்ற அவனது முக அமைப்பை.. நீளமான கை, கால்களை.. அகன்ற தோள்களை.. முரட்டு ஜீன்ஸ், காட்டன் சர்ட் என்று

கவர்ந்திருக்கும் அவனது நேர்த்தியான உடையை.. முன் நெற்றியில் சிலும்பி விழுந்து மறைக்கும் முரட்டுத்தனமான அவனது முடியை.. அதில் நுழைந்து விளையாடி வெளிப்படும் அவனது வலிமையான விரல்களை.. என்று நினைத்தபடியே அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்..

அவள் பக்கமாக திரும்பிப் படுத்திருந்தவனின் முடி அப்போதும் சிலும்பி அவன் நெற்றியில் படிந்து வைத்தது.. இவன் முடி இவனைப் போலதான் சிலும்பிக் கொண்டிருக்கும் என்று அவள் அழகு காட்டினாள்.. மெலிதான வெளிச்சத்திலும் அதை கண்டு கொண்டவன்..

“என்ன..?” என்று விசாரித்தான்..

“ஒண்ணுமில்லையே..” அவள் நாக்கைக் கடித்துக் கொண்டாள்..

“ஒன்றுமே இல்லாததிற்கா நாக்கைக் கடித்துக்கிற..?” விடாமல் விசாரணையைத் தொடர்ந்தபடி முன் நெற்றியில் விழுந்த முடியை விரல் கோதி சரி செய்தான்.. ஒரு நாள் ஒன்றுக்கு ஆயிரம் முறையாவது இதைச் செய்து கொண்டிருப்பானாக இருக்கும் என்று அவள் நினைத்துக் கொண்டாள்.. அவளது விரல்களை பற்றியிருந்த அவனது

விரல்களின் தொடுகை சுகம் நினைவுக்கு வந்து அவளை இம்சித்தது..

இருளிலும் தெரிந்த அவனது முக வடிவம் வசீகரமானதாக இருந்தது.. அதுவரை அவனைப் போன்ற கவர்ச்சிகரமான ஆணழகனை அவள் பார்த்ததில்லையென்று அவளுக்குத் தோன்றியது.. இத்தனை அழகாகவும் ஓர் ஆண் இருப்பான் என்று அவள் நினைத்தும் பார்த்ததில்லை.. பெண்கள்தான் அழகாகவும், கவர்ச்சிகரமாகவும் இருப்பார்கள்.. ஆண்கள் முரட்டுத்தனமாக ஏதோ துளியூண்டு அழகோடு பார்ப்பதைப் போல இருந்து வைப்பார்கள்.. அதற்கே ஆணழகன் போல அலட்டிக் கொள்வார்கள் என்றுதான் நினைத்திருந்தாள்.. அந்த நினைவிற்கேற்பத்தான் அவளது தந்தையும், தம்பியும் இருந்தார்கள்.. மேகநாதன் லட்சணமனவர்தான்.. ஆனால் வெண்ணிலா படு லட்சணமாக அழகியாக இருந்தாள்.. நந்தகுமார் மேகநாதனைக் கொண்டு பிறந்திருக்க நந்தினியோ அவனை முந்திக் கொண்டு வெண்ணிலாவை விடவும் படு அழகாக பேரழகியாக பிறந்திருந்தாள்.. அதை ஒரு பொருட்டாகக் கருதாமல் தான் ஆண்பிள்ளையாக பிறந்திருப்பதே பேரழகு என்று பீற்றிக் கொள்வான் நந்தகுமார்..

அவளைத் திருமணம் செய்து கொள்வதாக இருந்த ‘பெல்ட் மன்னன்..’ எப்படியிருப்பான் என்று கற்பனை செய்து பார்த்தாள் நந்தினி.. சிவந்த விழிகளும், தடித்த புருவங்களும், கையில் பெல்ட்டுமாக ராட்சஸத்தனமான ஓர் தோற்றம் மனதில் எழுந்ததில் அரண்டு போனவளாக அந்தக் கற்பனையைக் கலைத்துவிட்டு..

‘அம்மாடி.. நினைச்சாலே மனம் நடுங்குதே..’ என்று நெஞ்சில் கை வைத்து ஆசுவாசப் படுத்திக் கொண்டாள்..

“தூங்காமலே கனவு காணறியா..?”

அவளையே அவன் பார்த்துக் கொண்டிருப்பதை உறுதி படுத்தினான் ரவிச்சந்திரன்.. ஆழ்ந்த அவனது குரலில் சிலிர்த்தாள் நந்தினி... எதிரிலிருந்தவனின் கம்பீரமான வடிவழகு அவள் உடலுக்குள் ஏதோவொரு ரசாயன மாற்றத்தை உண்டு பண்ணிக் கொண்டிருந்தது..

கிளர்ந்தெழும் உணர்வுகள் இனம் புரியாத பரபரப்பை ஏற்படுத்தியதில் ஓர் சுகானுபவத்தை உணர்ந்தாள்..

தமிழோ, ஆங்கிலமோ.. அவன் பேசிய விதம் அலாதியானதொரு அழகோடு இருந்தது.. ஆக்ஸ்ஃபோர்ட்டில் படித்தவனைப் போல வெகு சரளமான ஆங்கிலத்தில் அவன்

பின்னிப் பெடலெடுத்தான்.. கேரளாவாழ் கோடிஸ்வரன் கேம்பிரிட்ஜில்தான் படித்திருப்பான்.. அவன் அந்த அளவுக்கு இல்லையே.. தஞ்சையில் பிறந்து சென்னையில் பொறியியல் படித்தவள்.. ஏதோ அவள் அளவிற்கு ஆங்கிலத்தை மென்று துப்புவாள் என்றாலும் அவனது மிரட்டும் ஆங்கிலத்திற்கு முன்னால் அவளது ஆங்கிலம் மண்டி போட்டு வைத்து அவளை மருளாடித்தது..

அவனது பேசும் தோரணை மேல்தட்டு வர்க்கத்தை பிரதிபலித்தது.. சின்னச் சின்ன அசைவுகளிலும் அவன் அதை பிரதிபலித்தான்.. நந்தினி பணக்கார வீட் டில் பிறந்தவள்தான்.. கிராமிய மணம் கமளும் பணக்கார வீடு அவளுடைய வீடு.. இப்படி வெள்ளைக்காரத் துரையைப் போன்ற சுற்றம் சூழ கொண்டவளில்லை.. இவனே இப்படியென்றால் இவன் வீடு எப்படியிருக்கும் என்று நினைத்துப் பார்த்தவளுக்கு பிரமிப்பாக இருந்தது.. அவனைப் பார்த்த போது இப்படியொருவனுக்கு காதலியாக இருக்கப் பெண்கள் எதையும் செய்வார்கள் என்ற எண்ணம் வந்தது..

‘நீ செய்வாயா..?’ மனதில் குரல் எழுந்ததில்..

‘ஆத்தாடி..’ என்று அதிர்ந்து போனாள் நந்தினி..

எப்படி அவளிடமிருந்து வந்த நறுமணம் அவனை மயக்கிக் கொண்டிருந்ததோ.. அதேபோல அவனிடமிருந்து வந்து கொண்டிருந்த பிரத்யேகமான எழுமிச்சையின் வாசனை கொண்ட ஆப்டர் ஷேவ் லோஷனின் நறுமணம் அவளைக் கவர்ந்திழுத்து ஏதோ செய்தது.. அதைப் புறக்கணித்து அவனுடன் இயல்பாக உரையாட அவள் பிரயத்தனங்களை மேற்கொள்ள வேண்டி இருந்தது.

பெல்ட் மன்னனைப் பற்றிய வெறுப்பு அவளை மிரட்டிக் கொண்டிருந்தைப் போல.. எதிரே சயனித்திருந்த கம்மாண்டரைப் பற்றிய அவளது மனதின் விருப்பு அவளை அரட்டிக் கொண்டிருந்தது..

இப்படிப்பட்ட மன்மதனிடம் மயங்கித் தொலைத்து விடாமல் அவள் வேலை செய்து பிழைத்திருக்க முடியுமா என்ற பயம் அவளைப் பற்றிக் கொண்டது..

தஞ்சைக்கு அவளாக அவள் திரும்பி விட வேண்டும் என்று மனதுக்குள் பிராத்தித்துக் கொண்டாள்.. “என்ன.. மனசுக்குள்ள பாடறியா..?”

இந்தக் கேள்வியைக் கூட அவளை மயக்கும் விதத்தில் ரகசியக் குரலில் அவன் கேட்டு வைத்தான்..

‘சோதிக்காதேடா..’

அவள் கண்களை மூடி உணர்வுகளை ஒருமுகப் படுத்தினாள்..

“பாடனும்னா மனசுக்குள்ளதான் பாடனுமா என்ன..? நீங்க மனசுக்குள்ளேதான் பாடினீங்களா..?”

“எனக்கு மியுசிக்ன்னா பிடிக்கும்..”

“ஹலோ.. உங்களுக்கே மியுசிக் பிடிக்கறப்ப எனக்குப் பிடிக்காதான்னு ஏற்கனெவே கேட்டாச்சு..”

“அதென்ன உங்களுக்கேன்னு ஒரு அழுத்தம் கொடுக்கறேன்னு நானும் கேட்டாச்சு..”

“சார் கொழுத்த பணக்காரர்.. அப்படி, இப்படின்னு சாரைப் பத்தின புராணத்தை நானும் சொல்லி.. இப்பேற்பட்ட மியுசிக்கில டைமை ஸ்பெண்ட் பண்ணுவாரன்னு நானும் சொல்லியாச்சு..”

“கொழுத்த பணக்காரன்ங்கிற நிக்நேம் எனக்குப் பிடிக்கலைன்னு நானும் வார்ன் பண்ணியாச்சு..”

“மைண்டில இதை ஸ்டோர் பண்ணிக்கிட்டு நான் வேலையில ஜாயின் பண்ணினவுடனே வார்னிங் லெட்டரைக் கொடுத்திருங்க..”

“வேலையில சேர்ந்த அடுத்த செகண்டிலேயே வார்னிங் லெட்டரை வாங்கிறனும்னு ஆசைப்படற.. விளங்கிரும்.. நல்லா வருவ நீ..”

“உங்க ஆசிர்வாதத்துக்கு ரொம்ப நன்றி.. பணக்காரங்க மியுசிக்கை ரசிக்கிறதுக்கும் சேர, சோழ, பாண்டியர்க்கும் என்ன கனெக்ஷன்னுதான் புரிஞ்சு தொலைக்க மாட்டேங்குது.. சாரும் அதைப் புரிய வைக்கப் போகிறதா தெரியலை.. ம்ஹாவ்..”

விரல் சொடுக்கி அவள் கொட்டாவி விட்டாள்.. பாசாங்கில்லாத அவளது இயல்பான செயல்களில் அவன் ஈர்க்க மாட்டான்.. அவனை ஈர்க்க நினைக்கும் பெண்க ள் அவன் முன்னால் நளினமாக பேச முனைவார்கள்.. ஒவ்வொரு அசைவிலும் நாகரிகப் பூச்சை வெளிப் படுத்துவார்கள்... ஒயிலான பார்வை, பேச்சு என்று அனைத்திலும் ஒப்பனை விரவிய பாசாங்குத் திரையின் பின்னால் ஒளிந்திருப்பார்கள்..

‘இவள் அப்படியில்லை..’

கொட்டாவியை மறைக்காமல்.. கலைந்திருக்கும் தலைமுடியை ஒழுங்கு செய்து கொள்ளாமல்.. கசங்கிய உடையும், தீற்றிய மையும்.. பிய்ந்து தொங்கும் தலைமுடியுமாக சட்டமாக பேசிக் கொண்டிருந்தவளின் அந்தப் பாசாங்கில்லாத இயல்புதான் அவனை ஈர்த்தது..

“புரிய வைக்க ஆரம்பிக்கிறப்பதான் நீ ரவிவர்மாங்கிறது டிவின்ஸ் பிரதர்ஸான்னு கேட்டு உன் அறிவின் லெவலைக் காட்டிட்டயே..”

“மறுபடியும் முதல்ல இருந்து ஆரம்பிச்சா நான் தாங்க மாட்டேன் சார்.. அங்கே மட்டும் என்ன..? சின்னப் பிள்ளையை பூச்சாண்டிகிட்டப் பிடித்துக் கொடுத்துடுவேன்னு பயமுறுத்தறதைப் போல பெல்ட் மன்னன்கிட்டப் பிடிச்சுக் கொடுத்திக்கனும்னு நீங்க பயமுறுத்தலை..? இதுல நான் பாடும் பாடல் நலமாக வேண்டும்ன்னு பாட்டு வேற.. நீங்க பாடவேண்டிய பாட்டு எது தெரியுமா..?”

“எது..?”

“வாரான்.. வாரான்.. பூச்சாண்டி.. ரயிலு வண்டியிலே..”

நந்தினி பாடிக்காட்ட அவன் "ஹா.. ஹா.." என ரசித்துச் சிரித்து வைத்தவன்..

"இதை அப்பவே பாடிக் காட்டாம என் கழுத்தை நெறிக்க வந்தியே.. டி.டி.ஆர் எண்ட்ரியாகி கதை கந்தல கோலமா ஆகிருச்சு போ.." என்று கண் சிமிட்டினான்..

உடலில் மின்சாரம் பாய்ந்த உணர்வை அனுபவித்தவள்.

"இப்படிக் கண்ணடிக்காதீங்க சார்.." என்று சிடுசிடுத்தாள்..

"கண்ணடிக்கிறேனா.. சைட் அடிக்கிறேனா..?"

"பெரிசா ரவிவர்மாவைப் பத்தியெல்லாம் பேசறிங்க.. இப்படிப் பேசி வைக்கறிங்க.. உங்க ரவிவர்மா இப்படித்தான் பேசுவாரா..?"

"ஊஹும்.."

அவன் குரல் மிருதுவானது.. வழக்கமான 'ஊஹும்..' மைப் போல கேள்வியாக இல்லாமல் மென்மையான மறுப்பாக அவனது இந்த 'ஊஹும்..' இருந்ததில் ஆச்சரியப்பட்டுப் போனாள் நந்தினி..

“ரவிவர்மா மாவீரன்..! அவர் காலத்தில சேர நாடு விரிவான ராஜ்யமா மாறியது.. அவரோட ஆட்சிக்காலம் சேரர்களின் பொற்காலமாக இருந்ததுன்னு சொல்லாம்.. மத்த மன்னர்கள் போல யுத்தம், கத்தின்னு இருக்காம அதுக்கும் மேற்பட்ட காலரசிகரா அவர் இருந்தார்.. ஓவியம் வரைவார்.. யாழ் மீட்டுவார்.. பாட்டுப் பாடுவார்.. கவிதையும், காவியமும் எழுவார்.. நடனத்தை ரசிப்பார்.. இப்பச்சொல்லு.. அவரை விடவா நான் பெரிய பணக்காரன்..?”

“இல்லைதான்..” மெதுவான குரலில் சொன்னாள் நந்தினி..

உணர்வு பூர்வமான அவனது விவரிப்புக்கு மரியாதை செய்ய வேண்டும் போல தோன்றியது அவளுக்கு.. சப்தமானகுரல் கூட அவனது உணர்வுகளை தடை செய்து விடக் கூடும்.. நிசப்தம் நிரம்பிய.. குரல்தான் அவனது உணர்வு நிறைந்த விவரிப்புக்கான மரியாதை..

“ரவிவர்மாவின் மனதில் தேடல் இருந்தது.. அது அவளுடைய ரசனைக்கு ஈடு கொடுக்கும் விதத்தில் கலாரசிக மனம் கொண்ட மனைவி வேண்டும் என்ற தேடல்.. அவரது

தேடலுக்குகேற்ற மனைவி கேரளத்தில் கிடைக்கவில்லை.. தமிழ்நாட்டில்தான் கிடைத்தாள்.. எங்கே தெரியுமா..?

‘தமிழகத்தின் நெற்களஞ்சியம்..’ என்று சொல்லப்படும் தஞ்சாவூரில்..”

“ஹை.. எங்க ஊர்..”

நிசப்தத்தைக் கைவிட்டு உற்சாகத்துடன் சொல்லி விட்டு உரத்த குரலில் பேசிவிட்டோமோ என்று நாக்கைக் கடித்துக் கொண்டு அவன் முகத்தைப் பார்த்தாள் நந்தினி.. அவளது சப்தம் நிரம்பிய பதிலால் பாதிக்கப் படாதவனாக புன்னகையுடன் அவன் தலையை அசைத்தபடி அதை ஆமோதித்தான்..

“யெஸ்.. உங்க ஊரிலதான் ரவிவர்மாவுக்கு விருப்பமான மனைவி கிடைத்தாளாம்..”

“ஓ...”

“ரவிவர்மாவின் ராணிகளில் ஒருத்தியாக இருந்தாலும் அந்த ராணி ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவங்களா இல்லையாம்.. அதனால சேர நாட்டு அரண்மனைக்கு அவங்களாலே வர முடியலை.. அவங்களுக்காகவே நாட்டில

தனி அரண்மனையைக் கட்டிக் கொடுத்து வாழ வைத்தாராம் ரவிவர்மா.. அந்த ராணி மூலமா பிறந்த அவரோட வாரிசுகள் வே நாட்டை தங்களோட ராஜ்யமா வைத்துக்கிட்டு தனி சமஸ்தானமா ஆட்சி புரிய ஆரம்பித்தாங்க.. காலப் போக்கில மன்னராட்சி மறைந்து ஆங்கிலேய ஆட்சி வந்தது... அதுக்கப்புறம் இந்தியா சுதந்திரம் வாங்கி சுதந்திர இந்தியாக ஆனது.. ஆனாலும் ராஜ குடும்பங்களுக்கான பாரம்பர்யமும், மதிப்பும், மரியாதையும் இன்னமும் அப்படியேதான் இருக்கு.. அந்தப் பாரம்பர்யத்திலே பிறந்தவன் நான்.. கேரளத்து ராஜ குடும்பங்களிலே என் குடும்பமும் ஒன்று..”

“நிஜமாவா..?”

‘ஆ’வென வாய் பிளந்தாள் நந்தினி.. இப்பேற்பட்ட பாரம்பர்யப் பின்புலம் கொண்டவனுடன் சரிக்குச் சரியாக அவள் வாயடித்துக் கொண்டிருக்கிறாள் என்பதில் பிரமிப்பாக உணர்ந்தாள்..

“நிஜமாவே அட்மைர் பண்றியா..? இல்ல.. இதுவும் ஒரு கள்ளத்தனம்தானா..?”

வம்பிழுத்த அவன் குரலில் ‘சுர்’ரென பிரமிப்பு இறங்கிப் போக சண்டைக் கோழியாய் சிலிர்த்தாள் நந்தினி..

“கள்ளத்தனம்.. கள்ளாட்டம்.. வாஹ்ரே வா.. ரவிவர்மாவோட ராஜ பரம்பரையிலே வந்தவர் பேசற கலா ரசிகப் பேச்சில புல்லரிச்சுப் போயிட்டேன் சார். . கீப் இட் அப்.. உங்க குலப் பெருமை கொடிகட்டிப் பட்டொளி வீசிப் பறந்து எங்கேயோ போயிரும்..”

“கீப்பா..?”

“நினைச்சேன்.. வில்லங்க ராஜாதி ராஜா இப்படித்தான் சந்தேகம் கேட்டு வைப்பாருன்னு... இந்த ‘கீப்’ அந்தக் ‘கீப்..’ இல்லை சார்.. மெயின்டெயின் பண்ணுங்க அப்படிங்கிற மீனிங்கில வர்ற ‘கீப்..’ ஆளைப் பார்த்தா ஆக்ஸ்போர்டில படிச்சவரைப்போல இருக்கீங்க.. நுனி நாக்கு இங்கீலிஷைக் கேட்டா கேம்பிரிட்ஜ் யுனிவர்சிட்டி போல இருக்கு.. ‘கீப்’புக்கு இப்படி விளக்கம் கேட்கறிங்க.. உங்க குலப் பெருமையை எங்கேயோ கொண்டு போயிட்டிங்க சார்.. ஆஹா.. என்னே அறிவு.. என்னே அறிவு..”

“ரொம்பப் புகழாதே..”

“அதுக்கென்ன.. எனக்கும் புகழ்ந்து புகழ்ந்து வாய் வலிச்சுத்தான் போச்சு.. நான் பார்த்தாலும் பார்த்தேன்..

உங்களைப் போல அடாவடி பிடிச்சு ஆளைப் பார்த்ததே இல்லை சார்..''

``ஊஹும்..? பெல்ட் மன்னனை விட்டுட்டியே.. அவரை விடவா நான் அடாவடி..?''

``பெல்ட் மன்னனை விடவே மாட்டிங்களா..?''

``விட முடியலையே..''

``ஏன் சார்..? எனக்கும் அவருக்கும்தானே கல்யாணம் பேசினாங்க..? என்னால விட முடியலைன்னா அதில ஓ ர் அர்த்தமிருக்கு.. உங்களாலே விட முடியலைன்னா எப்படி..? உங்களுக்கு அவனுக்குமா கல்யாணம் பேசினாங்க..?'' எரிச்சலுடன் கேட்டாள் நந்தினி..

``எனக்கும் அவருக்கும் கல்யாணமா..?'' ரசித்துக் கேட்டான் ரவிச்சந்திரன்..

``உங்களுக்கும் அந்தக் குட்டிச் சுவருக்கும்தான் கல்யாணம்..'' பல்லைக் கடித்தாள் நந்தினி..

``குட்டிச்சுவர்..! நீ முட்டிக்கனும்னா மொட்டைச் சுவர்.. நான் கட்டிக்கனும்னா குட்டிச்சுவர்.. சுவர்களில கூட நீ வகை பிரிச்சு வைச்சிருக்கிற போல.. வெரி இண்ட்ரெஸ்டிங்..''

“அடுத்தவங்க கடுப்பைக் கேட்டா இண்ட்ரெஸ்டிங்காத்தான் இருக்கும்..”

“கடுப்பை ஏன் கேட்கணும்..? நான் பாடினதைப் போல நீயும் பாடேன்.. கேட்கிறேன்..”

“எதுக்கு சாரே..! நிண்ட மலையாள நாட்ட நோக்கி தலை தெறிச்சு ஓடறதுக்கா..? ஞான் பாடினா.. சார் மங்களூர் எக்ஸ்பிரஸை விட்டுக் குதிச்சி ஓடிப் போயிருவீங்க.. அதுக்கப்புறம் ஞான் வே நாட்டுக்குப் போகிறதுக்கு ‘வே’ எங்கேன்னு தேடிக்கிட்டு நிற்கனும்.. கோழிக் கோடில எனக்கு ஒரு கோழியைக் கூடத் தெரியாது.. சார் மனசு வைச்சு ஞான் வாயைத் திறக்காம இருக்கிற வரத்தைத் தரனும்..”

“நீ வாயைத் திறக்காம இருக்கிறதா..? நடக்கிற காரியத்தைப் பேசனும்.. நான் வரம் கொடுத்தா நீ வாயைத் திறக்க மாட்டேன்னா, ஒரு வரம் என்ன.. ஆயிரத்தைந்து வரம் கொடுத்துர மாட்டேனா..?”

அமர்த்தலாக அவன் கேட்ட விதத்தில் அவள் கோபப் படத்தான் நினைத்தாள்.. ஆனால் கோபத்துக்குப் பதில் சிரிப்புத்தான் வந்து தொலைத்தது.. உதட்டைக் கடித்து சிரிப்பை அடக்கினாள்.. அந்த மெல்லிய வெளிச்சத்திலும் அதை

அவன் எப்படித்தான் கண்டு கொண்டானோ.. அவனது கண்கள் அவள் மீது படிந்து ஊர்ந்து இறங்க ஆரம்பித்தன.. துளைக்கும் அவனது லேசர் பார்வை அவன் பக்கமாக திரும்பிப் படுத்திருந்தவளின் அங்கங்களில் பதிந்து நிறுத்தி நிதானித்து அளவெடுக்க ஆரம்பித்ததில் அவள் திணறிப் போனாள்..

பார்வையில் தொடுவது என்பது இதுதானா..?

அவளது உடல் முழுவதும் அவனுடைய வலிமையான விரல்கள் தொட்டுத் தடவிக் குடுப்பதைப் போன்ற கிளர்ச்சி அவளுக்குள் ஏற்பட்டது.. சற்று முன் அவளுடை டய விரல்களைப் பற்றியிருந்த அவனது விரல்களின் அழுத்தமான ஸ்பரிசத்தை உடல் முழுவதும் உணர்ந்தாள் நந்தினி.. உடல்

சிலிர்த்தது.. குளிருடன் நடுங்கியது.. இதமான அந்த இம்சையில் புதைவதை அவள் மனம் விரும்புவதில் அதிர்ந்து போனாள்.. இது அவள்தானா..?

பேச்சுக்களற்ற மௌனம் அவளுக்கு அவஸ்தையைக் கொடுத்தது.. அவளுக்கும் அவனுக்கும் நேர்ந்து கொண்டிருக்கும் அந்த வினோதமான இன்ப இம்சையை

குறைக்க வேண்டுமானால் அங்கே அடர்ந்திருக்கும் மௌனத்தை அவள் உடைத்தாக வேண்டும்.

சொல்லில் வடிக்க இயலாத ஆழிப் பேரலையான உணர்வின் அலைகளிலிருந்து தப்பிக்க பேச்சுக்கூட கவசமாகிறது.. ஆக்ரமிக்கும் உணர்வுகளின் தாக்கத்தை அது குறைக்கக் கூடும்.. இயல்புக்கு திரும்ப வழிகாட்டும்..

“ஆக.. என்னை வாயாடின்னே பட்டம் கட்டியாச்சு..?”

நந்தினி மௌனத்தை உடைத்து விட்டாள்.. பேச்சை அரணாக்கி அதன் பின்னால் ஒளிந்து கொண்டு கண்ணாமூச்சி விளையாட்டை விளையாடும் உணர்வின் தாக்குதலிருந்து தப்பிக்க முனைந்தாள்.. அதை உணர்ந்தவன் போல அவன் மெல்லச் சிரித்து வைத்தான்..

“பின்னே..? வாயாடிதானே நீ..?”

வலது கையை முட்டுக் கொடுத்து தலையை அதில் சாய்த்து அவளை வம்பிழுத்தான்.. நந்தினியின் மூச்சுத் திணறல் குறைந்தது.. இயல்பாக அவன் வாயாட ஆரம்பித்ததில் நிம்மதியானாள்.. இப்படியே அவன் இருந்து விட்டால் அவளது நிம்மதிக்கு உத்திரவாதம் கிடைக்கும்.. இருப்பானா..?

அவனது மேயும் பார்வை அவன் அடங்கி இருப்பான் என்ற நம்பிக்கையை அவளுக்குத் தரவில்லை.. இருந்தாலும் முதலில் பார்த்த அளவுக்கு பார்வையின் தீவிரம் இல்லாமல் குறைந்திருந்ததால் அதைக் கண்டு கொள்ளாததைப் போல பேச ஆரம்பித்தாள்..

“அதை நீங்க சொல்லக் கூடாது சாரே..”

“ஏனாம்..?”

“என் வாயை பீட் அடிக்கிற வாயில்ல உங்க வாய்..?”

“அப்படிங்கற..?”

“ஆமாங்கறேன்..”

“ஊஹும்..? அப்ப என் பாட்டை பீட் பண்ற மாதிரி ஒரு பாட்டுப் பாடேன்.. கேட்போம்..”

பாடினால்தான் என்ன என்று நந்தினிக்குத் தோன்றியது.. உசுப்பி விடும் குரலில் அவன் கேட்க வில்லைதான்.. சவாலுக்கு அழைக்கும் தொனியில் பேசவில்லைதான்.. அதனால் என்ன..? பாட்டுத்தானே.. பாடுவதற்கு என்ன தடை..?

# அத்தியாயம் 32

**"உ**ன்னை ஒன்று கேட்பேன்.." நந்தினி பாட ஆரம்பித்ததும்..

"கலக்கிற போ.." என்று சிலாகித்தான் ரவிச்சந்திரன்.

பாடிக் கொண்டிருந்தவள் அவனைப் போலவே புருவங்களை கேள்வியாய் உயர்த்தியதில்..

"அப்படியே குயில் பாடறதைப் போல இருக்குன்னு சொன்னேன்.." என்றவன் அவளை மேலும் கீழும் பார்த்தபடி.. "குரல் மட்டும்தான் குயில்.. ஆளைப் பார்த்தா தோகைமயில்.." என்று ஜொள்ளினான்..

அவள் பாடலை நிறுத்தாமல் ஒற்றை விரலை உயர்த்தி 'பத்திரம்' என அவனை எச்சரிக்கை செய்ததில் கண்கள் மின்ன கள்ளுண்ட சிங்கமானான்..

"உன்னை ஒன்று கேட்பேன்.."

"கேளேன்.."

"உண்மை சொல்ல வேண்டும்.."

"சொல்லிட்டாப் போச்சு.."

அவள் பாடப்பாட இவன் பதில் கொடுத்ததில் அவள் சண்டைக்கு வந்தாள்.. அதற்காகத்தானே அவன் வம்பிழுத்தான்..

“நீங்க பாடறப்ப நான் டிஸ்டர்ப் பண்ணினேனா..?”

“இல்லையே.. என் பாட்டில மயங்கிப் போயில்ல இருந்த..”

அவனிடம் மயங்கியிருந்ததைப் போல அவன் சொன்னதில் அவள் முறைத்தாள்.. அவன் கைகளை உயர்த்திச் சிரித்தபடி எழுந்து அமர்ந்தான்.. நந்தினியும் எழுந்து கொண்டாள்..

“பாட்டிலதான் மயங்கினேன்.. நினைப்பில இருக்கட்டும்..”

“யார் நினைப்பில இருக்கச் சொல்கிற..? உன் நினைப்பிலயா..?”

கேலி போல கேட்டவனின் முகத்தை உறுத்துப் பார்த்தாள் நந்தினி.. கேரளத்து ராஜ வம்சத்தைச் சேர்ந்தவன்.. ரவிவர்மாவின் வம்சாவழியில் வந்தவன்.. கணக்கில்லாத சொத்துக்களுக்கு சொந்தக்காரன்.. உலகம் சுற்றும் வாலிபன்..

அவன் அவள் நினைவில் இருப்பானா..? இருக்கத்தான் முடியுமா..?

‘இருக்க வேண்டும் என்று நீ நினைக்கிறாயா..?’

வழக்கம் போல நந்தினியின் மனச்சாட்சி வரிந்து கட்டிக் கொண்டு கேள்வி கேட்க வந்து விட்டது.. இந்த மனச்சாட்சியை என்ன செய்தால் தேவலாம் என்று கடுப்பானாள் நந்தினி.. ஒருசிலர் சங்கிலியைக் கழட்டி வைப்பதைப் போல மனச்சாட்சியைக் கழட்டி வைத்து விட்டு என்னவெல்லாமோ பேசுகிறார்கள்.. அந்த வித்தை அவளுக்கு வந்து தொலைக்கிறதா..? ‘சரக்’ என்றால் சடுதியில் மனச்சாட்சி கருப்புக் கோட் இல்லாமல் ஆஜராகி குறுக்கு விசாரணை செய்து வைத்தால் அவள்தான் பாவம் என்ன செய்வாள்..? ஏதோ அவளால் முடிந்த செயலாக..

‘அடச்சீ.. அடங்கு..’ என்று மனச் சாட்சியின் தலையில் ஒரு குட்டை வைத்து விட்டு..

“இப்ப பாடட்டுமா..? இல்ல.. தூங்கட்டுமா..?” என்று அவன் மிரட்டினாள்..

“ஹைய்யோ.. பயமாயிருக்கே..” அவளது மிரட்டலை ரசித்தவன்..

“பாடு.. பாடு.. உன்னிடம் நான் மயங்கனுமில்ல..” என்று சொல்லி அவளை..

“என்னது..?” என்று அலறவைத்தான்..

“டங்க ஸ்லிப்பாகிருச்சு.. உன் பாட்டில நான் மயங்கனுமில்ல..?”

வாய்தான் இப்படிச் சொன்னது.. அவளை மயக்கிய அவனது கண்கள் மயக்கத்தை பிரதிபலித்து அவன் முதலில் சொன்னதுதான் உண்மை என்பதை நிரூபணம் செய்தன..

“மயங்கிட்டாலும்..” நொடித்தாள் நந்தினி..

“மயங்க மாட்டேங்கறியா..?” அவனது கண்கள் ‘ஆல்ரெடி.. நான் மயங்கியாச்சு..’ என்று அறிவித்தன.

‘போடா டேய்.. ஆள் மயக்கி..’ மனதுக்குள் கொதித்தாள் நந்தினி.. கவரும் அவனது கம்பீர வடிவழகு அவளுக்கு பெருத்த சோதனையாக இருந்து தொலைத்தது.. பேச்சிலும் வல்லவனாக இருந்தான்.. இவனிடம் வேலை பார்க்க வேண்டுமே என்று நினைக்கும் போதே அவளுக்கு மலைப்பாக இருந்தது..

“என்ன..? என்னை மயக்கற உத்தேசம் இல்லையா..?”

“பார்த்துப் பேசனும்..”

“உன்னைப் பார்த்துக்கிட்டுத்தானே பேசறேன்..”

“கூடவே யோசிச்சும் பேசனும் சாரே..”

“பாட்டில மயக்கற உத்தேசமில்லையான்னு கேட்டேன்..”

“கேட்கிறதை சரியாக் கேட்கனும்..”

“இப்பவும் டங்தான் ஸ்லிப் ஆகிருச்சு.. நம்பு..”

“உங்களைத்தானே..? நம்பற மாதிரி ஆள்தான் நீங்க..”

“என்னை நம்பித்தான் வேலைக்கு வந்திருக்கிற.. அந்த நினைப்பிருக்கட்டும்..”

நந்தினிக்கு ‘சுருக்’ என்று ஆனது.. அவன் என்ன சொல்ல வருகிறான்.. அவனிடம் அவள் வேலை செய்ய வந்தவள் என்பதை நினைவுறுத்துகிறானா..? அவளுடைய எல்லை எது என்பதை சுட்டிக் காட்டுகிறானா..? மனம் கலங்கியது.. சட்டென சுதாரித்தாள்.

‘இருக்கட்டுமே.. நான் ஒண்ணும் அதை மறைத்துட்டு தூண்டில் போடற பேச்சைப் பேசலையே.. இவன்தானே அதை மறந்துட்டு இம்சை படுத்தற பார்வையை பார்க்கிறான்..

கிளப்பி விடற பேச்சைப் பேசறான்.. ஆள் மயக்கி..! நினைப்பில வைச்சுக்க வேண்டியவன் இவன்தான்.. நானில்லை..'

"என்ன பதிலைக் காணோம்.."

"நினைப்பில வைச்சுக்க வேண்டியது நீங்கதான் சாரே.. நானில்லை.. அதை மறந்துட்டுப் பேசறிங்களேன்னு யோசிச்சுக்கிட்டு இருந்தேனா.. வாயில வார்த்தை வரலை.."

"ஊஹும்.?"

அவன் வசீகரமாக புருவங்களை உயர்த்தியபடி நெற்றியில் படிந்திருந்த முடியை ஒதுக்கி விட்டான்.. இந்த 'ஊஹும்..' மையும் புருவம் உயர்த்துதலையும் இவனால் விடவே முடியாது என்று அலுத்துக் கொண்டாள் நந்தினி.. ஒட்டிப் பிறந்த இரட்டைப் பிறவிகள் போல அவை ஒன்றுகூடி வந்து நந்தினியின் மனதை அலைக்கழிக் கின்றனவே.. போதாக்குறைக்கு முன்னுச்சி முடியில் விரல் விட்டுத் தள்ளி அவள் மனதை பாடாய் படுத்துகிறான்..

இதுபோன்ற அதீத கவர்ச்சி ஆண்களுக்கு வேண்டியதில்லை என்று பொருமினாள் நந்தினி.. ஓரளவுக்கு முக லட்சணமும், உயரமும் இருந்தால் போதாதா..?

மாநிறத்தில், ஆறடி உயரமும், வாட்ட சாட்டமான தோற்றமுமாக இருந்தால் போதுமே.. வாட் எ ஹேண்ட்சம் என்று இளம் பெண்கள் ஜொள்ளுவார்களே..

இவனோ சுண்டி விட்டால் ரத்தம் வரும் நிறத்தில் கவர்ச்சியான அழகுடன் ஆறடிக்கும் மேல் உயரத்தில் கம்பீரமான தோற்றத்துடன் இருந்து வைக்கிறான்.. இப்படியாப் பட்ட அழகுடன் இருப்பவனின் பக்கத்தில் மனதை அலைபாய விடாமல் வேலை செய்ய என்ன பாடுபட வேண்டுமோ..

ஒரு மனிதன் பயங்கரத் தோற்றத்துடன் கர்ண கடூரமாக இருந்தால் பயப்படலாம்.. அழகான தோற்றத்துடன் யட்ஷனின் அழகும் கந்தவர்வனின் கவர்ச்சியும் கொண்டவனாக இருப்பதற்கு பயப்படுவதா..?

நந்தினிக்குத் தலையில் அடித்துக் கொள்ள வேண்டும் போல இருந்தது.. அவனது பார்வையின் சுவராஸ்யத்தில் நினைத்ததை செய்து விட்டதை அவள் உணர்ந்தாள்..

‘கடவுளே..!’

இப்போதே கண்ணைக் கட்டினால் போகப் போக எப்படியோ என்று அவள் கலவரம் கொண்டாள்..

'இப்படியா இவன் கண் முன்னாலே உட்கார்ந்துக்கிட்டு இருக்கான்ங்கிறதை மறந்துட்டு தலையில அடிச்சுக்குவேன்..?'

"பாட்டுப் பாடச் சொன்னா.. தலையில அடிச்சுக்குவியா..? என்ன..? அந்த ரெண்டுவரி மட்டும்தான் தெரியுமா..? முழுப் பாட்டும் தெரியாதா..? இதிலயும் நீ அரைகுறைதானா..?" சீண்டினான் ரவிச்சந்திரன்..

"வேற எதில நான் அரைகுறையா இருக்கேன்..?" ரோஷத்துடன் எகிறினாள் நந்தினி..

"ஒண்ணா.. ரெண்டா..?"

"ஓராயிரம் இருந்தாலும் ஐ டோன்ட் கேர்.. கேட்க ரெடியாத்தான் இருக்கேன்.. யு கேன் புரொசீட்.."

"ஓகே யுவர் ஹானர்.. தாங்கள் படிப்பிலும் அரைகுறை.. இன்னும் ரிசல்ட் வரலை.. அதுக்குள்ளே வேலைக்கு கிளம்பியாச்சு.. கல்யாணப் பேச்சிலயும் அரைகுறை.. தங்கள் வீட்டில் பேச்சை ஆரம்பித்ததும் எஸ்கேப் ஆகிட்ட.. இப்பப் பாட ஆரம்பிச்ச பாட்டும் அரைகுறையா நிற்குது.."

"படிப்பை முடித்து ஃபைனல் இயர் எக்ஸாம் வரையும் எழுதியாச்சு.."

“இன்னும் ரிசல்ட் வரலையே..”

“ரேங்க் எடுத்துப் பாஸ் பண்ணுவேன் சார்..”

“அதை நீ சொல்லக் கூடாது.. ரிசல்ட் சொல்லனும்..”

அமர்த்தலாக அவன் கைகளை கட்டிக் கொள்ள.. தடிகொண்டு அவன் மண்டையைப் பிளந்தால் என்ன என்று கொலை வெறியானாள் நந்தினி.. அவளை சீண்டி விட்டு வேடிக்கை பார்ப்பவனை ஏதும் செய்ய இயலாதென்பதால்..

“உங்ககிட்ட வேலை பார்க்க இந்த குவாலிபிகேஷனே அதிகம் சார்..” என்று அவனுக்கு ஒரு ‘ஷொட்டு..’ வைத்தாள்..

“ஊஹும்..?” அவன் ஆரம்பிக்கும் போதே..

‘அடுத்ததா புருவத்த உயர்த்துவான்.. முன்னுச்சி முடியை படு ஸ்டைலா விரலால கோதித் தள்ளுவான்.. ஆள் மயக்கி..’ என்று மனதுக்குள் தாளித்தாள் நந்தினி.

அவளது தாளிதத்தை அறிந்தவனைப் போல அவளை ஆழ்ந்து பார்த்து மூச்சுத் திணற வைத்தபடி அவள் அனுமானித்ததை எல்லாம் செய்து முடித்தான் அவன்.

“என்னிடம் வேலை பார்க்கிற ரிசப்ஷனிஸ்ட்டுக்குக் கூட உன்னைவிட அதிகமான குவாலிபிகேஷன் இருக்கு..”

அழுத்தமான அவனது குரலில் காயப்பட்டாள் நந்தினி.. வேலை கொடுக்க ஒப்புக் கொள்வதற்கு முன்னால் இதையெல்லாம் அவன் நினைத்துப் பார்த்திருக்க வேண்டும் என்று மனதுக்குள் கொந்தளித்தாள்..

மட்டம் தட்டும் அவனது பேச்சில் ரோஷப்பட்டாள்.. இது போன்ற பேச்சுக்களை அவள் கேட்டதேயில்லை.. அதனால் புயலடிக்கும் மனதுடன் வெகு அமைதியாக..

“இப்பவும் ஒண்ணும் கெட்டுப் போயிடலை சார்.. அடுத்த ஸ்டேஷனில் இறங்கி நான் சென்னைக்கு ரிட்டர்ன் ஆகிக்கறேன்.. நீங்க என்னைவிட அதிகமான குவாலிபிகேஷன் இருக்கிறவங்களைத் தேடிப் பிடிச்சு அவங்களுக்கு வேலை கொடுங்க..” என்று சொன்னாள்..

“நான் தேடிப் பிடிக்கனும்னு அவசியமில்லை.. என்னைத் தேடி அவங்களே வந்து சேர்வாங்க..”

அவன் சொன்னது வேலையைப் பற்றித்தானா என்று தனக்குள் கேட்டுக் கொண்டாள் நந்தினி.. வேலையைப் பற்றி மட்டும் பேசுவதைப் போல அவன் பேச்சு இல்லையென்பதால் அவன் போக்கிலேயே..

“அதுக்கென்ன சார்.. உங்களைத் தேடி வரத்தான் கோடானு கோடி ஆள்கள் இருக்காங்களே.. நான் எதுக்கு தேவையில்லாம..?” என்று கேட்டபடி பையைக் கையில் பிடித்தாள்..

அவன் முகம் மாறியது.. புருவங்கள் முடிச்சிட அவளை உறுத்துப் பார்த்தான்.. அவன் விழிகளின் தீட்சண்யத்தில்..

‘நான் என்ன தப்புச் செய்தேன்னு இப்படிப் பார்க்கிறான்..?’ என்று மனம் புழுங்கினாள் நந்தினி..

பேசுவதெல்லாம் அவன்.. முறைப்பது அவளையா..? எந்த ஊர் நியாயம் இது..? கேரளத்தின் நியாயம் இப்படித்தான் இருக்குமா..?

ரவிச்சந்திரனின் பார்வையில் குற்றச்சாட்டு இருந்தது.. அவள் என்னவோ செய்யக் கூடாத காரியத்தை செய்யப் போவதைப் போல..

“பையை விடு..” என்று அதட்டினான்..

‘இவன் என்ன என்னை அதட்டுவது..? நான் என்ன இவனுக்கு அடிமையா..?’ என்ற கோபம் நந்தினியிடம்

மீண்டும் வந்தது.. ரவிச்சந்திரனின் சீண்டலை அவளால் தாங்க முடியவில்லை..

“இது என் பை சார்..” அறிவித்தாள்..

“இல்லேன்னு யார் சொன்னது..? எனக்கு உன் பை வேண்டாம்.. வேண்டவே வேண்டாம்.. லேடிஸ் டிரஸ் இருக்கிற பையை அபேஸ் பண்ணி நான் என்ன பண்ணப் போறேன்..! எனக்கு லெக்கின்ஸ் போட்டுப் பழக்கமில்லை..”

அவன் விவரித்ததில் அவளுக்கு சிரிப்பு வந்து விட்டது.. அவனும் சிரித்தான்.. சிரிக்கும் போது கூடிய அவனது அழகில்..

‘இது வேறா..?’ என்று அவள் மருண்டாள்..

சும்மாவே படு அழகாய் இருந்து தொலைத்து ஆளை மயக்கித் தொலைக்கிறான்.. இதில் அழகு கூடினால் அவள் என்ன ஆவாள்..?

“உனக்கு தொட்டாச் சிணுங்கின்னு பெயர் வைத்திருக்கனும்.” செல்ல கோபத்துடன் சொன்னான்.

“உங்களுக்கு பூச்சாண்டின்னு பெயர் வைத்திருக்கனும்..”

நிஜ கோபத்துடன் அவள் சொன்னாள்.

“பூச்சாண்டிக்கு பயப்படற ஆள்தான் நீ..! பெல்ட் மன்னனுக்கு வேணும்ன்னா பயப்படுவ..” மறுபடியும் அவளைச் சீண்டினான்..

அவள் முறைத்ததும் “அனல் பறக்குது..” என்று சிரித்தான்.. உன்னிடம் எனக்கென்ன பேச்சு என்று அவள் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டதும் சமாதானத்துக்கு வந்தான்..

“ஓகே.. ஓகே.. பாவம்.. பெல்ட் மன்னனே உன்கிட்ட இருந்து தப்பிச்சுட்டதில நிம்மதியா தூங்கிக்கிட்டு இருப்பார்.. நம்ம பேச்சில அவரைத் தட்டி எழுப்ப வேணாம்..”

“ஆஹா.. அக்கறை கொடி கட்டி பறக்குதே..”

“ஆயிரம்தான் இருந்தாலும் உனக்கு வுட்பியா வர இருந்தவர்.. அதை மறக்கலாமா..?

“என்னைக் கூட்டுச் சேர்க்க வேணாம்..”

“தனியாவே மரியாதை கொடுத்துக்கறேன்.. போதுமா..?”

அவள் உம்மென்று இருந்தாள்.. அவனுடன் கொண்ட மனத்தாங்கலை வெளிப்படுத்தும் விதமாக அவன் முகத்தைப் பார்ப்பதைத் தவிர்த்தாள்.. சிறு குழந்தையின் பிடிவாதம் போன்ற அவளது செய்கை அவனை ஈர்த்தது..

‘இவளிடமிருக்கும் குழந்தைத்தனமான குணங்களில் எதுதான் என்னை ஈர்க்கவில்லை..?’ என்று மனதுக்குள் கேட்டுக் கொண்டான்..

“நந்தினி..” மென்மையாக அழைத்தான்..

“ம்ம்ம்..” பிடிவாதத்தைக் கைவிடாமல் அவள் முணுமுணுத்தாள்..

“பாடு நந்தினி..” கரகரத்த குரலில் கோரிக்கை வைத்தான்..

‘எதனால் இந்தக் கரகரப்பு..?’

வியப்புடன் விழிகளை உயர்த்தி அவனைப் பார்த்தாள் நந்தின.. அதற்காகவே காத்துக் கொண்டிருந்ததைப் போல அவன் பார்வை அவள் பார்வையைக் கவ்விக் கொண்டதில் அவளுக்கு மூச்சுத் திணறுவதைப் போல இருந்தது.. பார்வையை விலக்க முடியாமல் சிலை போல சமைந்து

விட்டாள்.. ஒப்பனையில்லாத அவளின் இயற்கை அழகு அவனை மயக்கியது.. மயக்கத்தில் ஆழ்ந்த அவனது பார்வை அவளை மயக்கியது.. அவள் மனதைத் துளைக்கும் அவனது பார்வையில் அவளுக்குள் குளிர் பரவியது.. கதகதப்பை அவனது பார்வை தந்தது.. குளிர் காய யத்தனித்தாள் நந்தினி.. ஆளை விழுங்கும் அவனது ஆழ் ந்த பார்வையின் சுழலில் மூழ்கி மூச்சுத் திணறினாள்.. அது விடுபட விரும்பாத போராட்டமாக இருந்தது.. இளமையின் யுத்தமாக இருந்தது.. மலர்க் கனைகளின் இடைவிடாத தாக்குதல் அவளை நிராயுதபாணியாக்கி மண்டியிட வைத்தது.. நந்தினியின் உடல் நடுங்கியது.. வேட்கையைத் தூண்டும் வேட்கை நிரம்பிய அவனது பார்வையில் அவள் பதறினாள்.. அவளைத் தொட அவன் முயன்றால் எதிர்க்க இயலாமல் அவன் கைகளில் சரணடைந்து விடுவாளோ என்று திகிலானாள்..

**‘தன்னை மறந்து..**

**மண்ணில் விழுந்த**

**இளமை மலரின் மீது..**

**கண்னை மறந்த வண்டு..**

**தேக சுகத்தில் கவனம்**

## காட்டு வழியில் பயணம்..'

மனதுக்குள் பாடல் ஒலித்தது.. தடக் தடக்கென பயணித்த ரயில் பயணம் இருள் நிரம்பிய காட்டு வழியில் பயணிப்பதைப் போலவே இருந்ததில் முகம் வெளுத்துப் போனாள்..

நந்தினியின் முக அசைவுகளையே கவனித்துக் கொண்டிருந்த ரவிச்சந்திரன் இலகுவாக புன்னகைத்ததில் அவளது பயம் குறைந்து வெட்கமாகிவிட்டது..

“என்ன..?”

“நத்திங்..”

“ஊஹூம்..?”

அவன் புருவம் உயர்த்துவதைப் பார்க்காமலிருக்க அவள் பெரும்பாடு பட வேண்டியிருந்தது.. அவன்தான் அந்த மேனரிசத்தில் படு அழகாய் இருந்து தொலைக்கிறானே..

“நெர்வஸா இருக்க போல.. ரிலாக்ஸ்..”

இதமாக அவன் பேசியதில் அமைதியடைந்தாள்..

‘ச்சே..! கொஞ்ச நேரத்துக்குள் என்னவெல்லாம் நினைத்து விட்டேன்..? மனசுக்குள்ள அசரீரி போல பாட்டு வேற.. தேக சுகத்தில் கவனம், காட்டு வழியில் பயணம்ன்னு..

இவன் நேச்சரே இதுதான்னு தெரிஞ்சுக் கிட்ட பின்னாலே இவன் பேசறதுக்கெல்லாம் வேற அர்த்தத்தை கண்டு பிடிச்சு பயந்துக்கிட்டு இருந்தா வேலைக்கு ஆகுமா..? தப்புத் தண்டா பண்றவன், கேலி பேசி கிண்டலடித்துக்கிட்டா இருப்பான்..? இவன் மேலேயே பூராத் தப்பையும் தூக்கிப் போட முடியுமா..? இவன் மேல எனக்குள்ள ஒரு ‘இது’ தோணித் தொலைக்குதே.. அதனாலதான் பிரச்னை..’

அவளை மனதுக்குள் பேச விட்டு அதைக் கலைக்காமல் ஆழ்ந்து பார்த்தபடி பேசாமல் இருந்தான் ரவிச்சந்திரன்.. ரயிலின் ‘தடக் தடக்’ சப்தம் கேட்கா விட்டாலும் அன்னையின் தொட்டில் தாலாட்டுவதைப் போல ரயில் இதமான குலுக்கலுடன் விரைந்து கொண்டிருந்தது..

நிசப்தம் நிரம்பிய அந்த இரவுப் பொழுது அற்புதமானதாக இருந்தது.. மங்களூர் எக்ஸ்பிரஸில் ஏறும் வரை ஒருவரையொருவர் அறியாதவர்களாக இருந்தவர்கள் இப்போது ஒருவருடன் ஒருவர் பேச்சும், சிரிப்பும் சண்டையுமாக பயணித்துக் கொண்டிருக்கிறார்கள்.. நினைத்துப் பார்க்கும் போது நந்தினிக்கு விசித்திரமாக இருந்தது.. படிப்பு முடிந்து தஞ்சைக்குத் திரும்பிய போது சில

நாள்களில் இப்படியொரு பிரயாணத்தை மேற் கொள்வாள் என்று அவள் நினைத்துப் பார்த்திருப்பாளா..?

எதிரிலிருப்பவனைப் பார்த்தாள்.. எந்தப் பெண்ணின் மனதிலும் சலனத்தை உண்டு பண்ணும் அதீத கவர்ச்சியுடன் புன்னகைத்தான்.. அவசரமாக பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.. அவனைக் கண்டு அவள் பயப்படவில்லை.. அவனிடம் அவள் மயங்கி விடுவாளோ என்ற பலவீனத்தில் அவளை நினைத்தே அவள் பயப்படுகிறாள் என்பதை மிகத் தெளிவாக அவள் புரிந்து வைத்திருந்தாள்..

‘இவன் யார்..? நான் யார்..? எப்படி இவ்வளவு பெரிய தாக்கத்தை எனக்குள் ஏற்படுத்துகிறான்..? வெடி வைத்த பூமியாக என் மனம் தடதடப்பது ஏன்..? எவரையும் நேருக்கு நேராகப் பார்க்கும் என் பார்வை இவன் பார்வையைச் சந்திக்கப் பயப்படுவது ஏன்..? ஏதோ ஒரு ‘இது’ எனக்குள் ஏற்படுவது போல நான் உணர்வது ஏன்..?’

ஏன், ஏன், ஏன்..? விடை கிடைக்காத வினாக்கள் நந்தினியின் தலைக்குள் சுழன்று கிறுகிறுக்க வைத்தன.. இருகோடுகள் தத்துவம் போல.. பிடிக்காத திருமணத்திற்குப் பயந்து வீட்டை விட்டு வெளியேறி, தலைமறைவாக வாழ

ஒளிந்து கொள்ள இடம் தேடி ஓடிக் கொண்டிருக்கும் நிராதரவான நிலை மறந்து போனது.. அவன் மீதான அவளது உணர்வுகளைப் பற்றிய பயம் மட்டுமே தலைக்குள் வட்டமிட்டுக் கொண்டிருந்தது..

ஆழ்ந்த அமைதியில் அவர்கள் இருவரும் பொதிந்தார்கள்.. ரவிச்சந்திரன் அவள்மீது பதித்த பார்வையை விலக்காமல் பார்த்துக் கொண்டே இருந்தான்.. நந்தினியால்தான் அது முடியவில்லை.. அவனைப் பார்ப்பதும் இமைகள் படபடக்க பார்வையை விலக்கிக் கொள்வதுமாக இருந்தாள்.. அவர்களின் பார்வைகள் சந்திக்கும் போதெல்லம் தனக்குள் ஓர் சிலிர்ப்பு ஓடுவதை உணர்ந்தான் ரவிச்சந்திரன்..

அவனது உணர்வுகளைத் தட்டியெழுப்பும் பெண்ணொருத்தியை முதன் முதலாக சந்தித்திருப்பதை அவனது மனம் அறிவுறுத்தியது.. பெண்களிடம் அவன் பொழுதைக் கழித்த தருணங்களில் அவனது உணர்வுகள் தட்டி எழுப்பப் பட்டதுண்டு.. அவை வேறு வகையான உணர்வுகள்.. வேட்கை மிகுந்த காமத்தைத் தூண்டும் உணர்வுகள்..

இது அப்படியல்ல.. அவளுடன் கழிக்கும் அந்தப் பொழுதில் ஓர் உன்னதம் நிறைந்திருப்பதைப் போல உணர்ந்தான் அவன்.. காமமில்லா காதல் உணர்வை முதன் முறையாக உணர்ந்தான்.. அவனை நேருக்கு நேர் பார்க்க அஞ்சும் பேதமை கொண்ட அந்தப் பெண் அவனை வசீகரித்தாள்..

**- இரண்டாம் பாகத்தில் தொடரும்..**


லட்சுமி பாலாஜி பதிப்பகம்